# பெரியார் பல்கலைக்கழகம்

**(NAAC 'A++' Grade - State University - NIRF Rank 56 – State Public University Rank 25)**

**சேலம் - 636 011**

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்விமையம்

## முதுகலைத்தமிழ்

**முதலாமாண்டு - இரண்டாம் பருவம்**

## தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

**(Candidates admitted from 2025 onwards)**

# PERIYAR UNIVERSITY

## CENTRE FOR DISTANCE AND ONLINE EDUCATION (CDOE)

## M.A தமிழ் 2025 admission onwards

## CORE IV

தொல்காப்பியம் - சொல்

Prepared by:

வெ. அஜித்குமார்
கௌரவ விரிவுரையாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம்-11

Scrutinized & Verified by:

BOS Members,
Centre for Distance and Online Education (CDOE)
Periyar University
Salem - 636011

# பாடத்திட்டமும் பொருளடக்கமும்

## தொல்காப்பியம் - சொல்லதிகாரம்


| இயல் எண் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | கிளவியாக்கம் | 6-41 |
| 2. | வேற்றுமையியல், வேற்றுமைமயங்கியல், விளிமரபு | 42-106 |
| 3. | பெயரியல், வினையியல் | 107-162 |
| 4. | இடையியல், உரியியல், எச்சவியல் | 163-242 |
| 5. | தொல்காப்பியம் - நன்னூல் வினையியல் ஒப்பீடு | 243-292 |

# தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

தமிழில் உள்ள நூல்கள் அனைத்திலும் காலத்தால் முற்பட்டது தொல்காப்பியம். இதனை இயற்றியவர் தொல்காப்பியனார். இவர் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு எனக் கருதப்படுகின்றது. தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டது. தொல்காப்பியத்தில் மொத்தம் 1611 நூற்பாக்கள் உள்ளன.

**சொல்லதிகாரத்தின் அமைப்பு:**

எழுத்துக்களால் ஆகிய சொல்லின் இலக்கணத்தைக் கூறுவது சொல்லதிகாரம், இதில் மொத்தம் 463 நூற்பாக்கள் உள்ளன. அவை: 1.கிளவியாக்கம் 2.வேற்றுமையியல்,3.வேற்றுமைமயங்கியல்,4.விளிமரபு, 5.பெயரியல், 6.வினையியல், 7.இடையியல், 8.உரியியல், 9.எச்சவியல் ஆகியனவாம்.

**சொல்லதிகார உரைகள்:**

தொல்காப்பியம் என்ற பேரிலக்கண நூலை விளங்கிக் கொள்ள உரையாசிரியர் பலரின் உரைகள் பெரிதும் துணைபுரிகின்றன. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் பதினாறாம் நூற்றாண்டு வரை உரையாசிரியர் பலரால் தொல்காப்பியத்திற்கு உரை எழுதப்பட்டது. தொல்காப்பியம் முழுமைக்கும் உரைகண்டவர் இளம்பூரணர். இவரே தொல்காப்பியத்திற்கு முதலில் உரை வரைந்தவர் என்பதால் இவரை "உரையாசிரியர்" என்றே ஏனைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர், பெயர் அறியப்படாத ஒருவர் ஆகிய நால்வர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியுள்ளனர். நச்சினார்க்கினியர் எழுத்து, சொல் ஆகிய இரண்டு அதிகாரங்களுக்கும் பொருளதிகாரத்தில் அகத்திணையியல்,புறத்திணையில், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல் ஆகிய ஆறு இயல்களுக்கும் உரை வரைந்துள்ளார். பேராசிரியர் பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியல், உவமைவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டும் உரை வகுத்துள்ளார். எனவே மற்ற

அதிகாரங்களைக் காட்டிலும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கே மிகுதியான உரைகள் எழுதப்பட்டுள்ளன என்பது புலனாகிறது. பாவலரேறு பேராசிரியர் ச. பாலசுந்தரம் உரைச்சிறப்பு : பாவலரேறு பேராசிரியர் ச. பாலசுந்தரம் தமிழ்ப் பல்கலைக்கழகச் சங்க இலக்கிய அகராதித்திட்டத்தில் பணிபுரிந்தவர். தஞ்சைத்தரணியில் பல ஆண்டுகள் மாணவர்க்குப் பாடம் சொல்லிக் கொடுத்தவராவார். தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத்துறை போகியவர். “யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்” என எண்ணும் சிந்தனையாளர். தான் கற்றதைக் கேட்டதை அனுபவத்தில் பிறரும் அறிய வேண்டும் என்ற அவாவினால் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கண நூலுக்குப் புதிய உரை எழுதி வளம் சேர்த்துள்ளார். அறிவிலும் ஆராய்ச்சியிலும் கண்ட பல நுணுக்கமான செய்திகளைத் தம் உரையில் கூறியுள்ளார். இப்பெரும் இலக்கணத்தைப் பல கோணங்களில் பார்ப்பதற்கு இவருடைய உரை பயன்படும். உரையாசிரியர்கள் கருத்துக்களோடு தன்னுடைய எண்ணத்தையும் பல இடங்களில் பாவலர் பாலசுந்தரம் தந்து சொல்கிறார்.

## அலகு - 1

## கிளவியாக்கம்

**இயலின் நோக்கங்கள் :**

- தமிழ்ச் சொற்களின் அமைப்பு முறைகளினைத் தெளிவுறக் கற்பித்தல்
- சொல்லிணக்கக் கோட்பாடுகளை மாணவர்கள் தெரிந்துகொள்ளுதல்.
- சொல்லிலக்கண வரலாற்றைக் கிளவியாக்கத்தின்கண் இடம்பெறுகின்ற செய்திகளின் மூலம் அடையாளப்படுத்துதல்.
- திணை, பால், எண், இடம் உள்ளிட்டவை குறித்த தெளிவைக் கற்போருக்கு கிடைக்கச் செய்தல்.

**திணை அடிப்படையில் சொல் பாகுபாடு:**

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே. ------- 1

மக்களாகிய கருத்து நிலைபெறும் பொருளை உயர்திணை என்று கூறுவர் தொல்லாசிரியர். மக்கட் சுட்டுடையரல்லாத பொருளையும் பிற பொருளையும் உயர்வல்லாதனவாகிய திணை என்று கூறுவர். அங்ஙனம் அவர் கூறும் இவ்விரு திணைப் பொருள்கள் மேலும் நிலைபேறுடையவாகிய சொற்கள் தோன்றி இசைக்கும்.

**எடுத்துக்காட்டு**.

நம்பி வந்தான், நங்கை வந்தாள் இவை உயர் திணைச் சொற்கள்.

குழந்தை நகைத்தது, மழை பெய்தது, யானை சென்றது இவை

**அஃறிணைச் சொற்கள்**

**பால் அடிப்படையில் சொல்பாகுபாடு:**

**அ. உயர்திணை முப்பால் சொற்கள்:**

ஆடுஉ வறிசொல் மகடூஉ வறிசொல்

பல்லோ ரறியுஞ் சொல்லோடு சிவணி

அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே ---- 2

ஆண்மகனை அறிவிக்கும் சொல்லும் பெண்மகளை அறிவிக்கும் சொல்லும் அவர்தம் தொகுதியாகிய பல்லோரை அறிவிக்கும் சொல்லோடு பொருந்தி அம்மூன்று கூறாய சொற்களும் உயர்திணையினவாகும்.

**ஆ. அஃறிணை இருபால் சொற்கள்:**

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று

ஆயிருபாற்சொல் அஃறிணை யவ்வே. ----- 3

ஒன்றனை அறிவிக்கும் சொல்லும் பலவற்றை அறிவிக்கும் சொல்லும் என அவ்விரு கூறாகிய சொற்களும் அஃறிணையவாகும்.

**திணை பாலுள் அடங்காத சொற்கள்:**

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்

தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்

இவ்வென அறியும் அந்தந் தமக்கிலவே

உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைக்கும் ----- 4

பெண்மையைச் சுட்டியதும் ஆண்மை திரிந்ததுமாகிய மக்கட் சுட்டுடைய பெயர்நிலைச் சொல்லும் தெய்வத்தன்மையைக் கருதிவரும் பெயர்நிலைச் சொல்லும் இன்ன பால் என அறியப்படும் பயனிலை பற்றிய ஈறுகள் பெற்று வாரா. ஆதலின் அவை உயர்திணையிடத்துப் பால் அறிவிக்கும் ஈறுகளோடு பிரிந்து இசைக்கும்.

**எடுத்துக்காட்டு:**

பேடி வந்தாள், பேடியர் வந்தனர், பேடு வந்தாள், பேடர் வந்தனர் என்றும் தேவன் வந்தான், தேவி வந்தாள், தேவர் வந்தனர் என்றும் வரும்.

முருகன், இந்திரன், நாராயணன், மாரி என்றாற் போல வரும் தெய்வப் பெயர்கள் தெய்வஞ்சுட்டாமல் மக்களுக்கும் அ∴றிணைப் பொருள்கட்கும் இருபெயராகவும் தெய்வஞ்சுட்டிய வழி உயர்திணை மருங்காயும் இசைக்கும்.

திருமால், பரமசிவம், பெருமாள், இலக்குமி எனப் பெயர்நிலையான் பால் பிரிந்திசையாவழிப் பயனிலை முடிப்பான் பாலுணரப்படும்.

**பால்காட்டும் ஈறுகள்:**

**அ. ஆண்பால் ஈறு:**

ன∴கான் ஒற்றே ஆடூஉ வறிசொல் --- 5

னகர ஒற்றினை ஈறாகக் கொண்டிசைப்பதுவே ஆடூஉவை அறிவிக்கும் சொல்லாகும்.

எடுத்துக்காட்டு:

உண்டனன். உண்ணாநின்றனன், உண்ணுவன எனவும் உண்டான், உண்ணா நின்றான்,உண்பான் எனவும் கரியன், அகத்தன், பொன்னன்னன் எனவும் வரும்.

**ஆ. பெண்பால் ஈறு:**

ள∴கான் ஒற்றே மகடூஉ வறிசொல் ---- 6

ளகர ஒற்றினை ஈறாகக் கொண்டிசைப்பதுவே மகடூஉவினை அறிவிக்கும் சொல்லாம்.

எடுத்துக்காட்டு:

உண்டனள், உண்கின்றனள், உண்பள் எனவும், உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள் எனவும், கரியள், செய்யள், கரியாள், எனவும் வரும்.

ஆண்டாள் இவள், மலையாள் வந்தாள் எனச் சிறப்புப் பெயரோடும் வினையொடும் கூடிப் பெயர்க்கண் வருதலும் கொள்க.

**இ. பலர்பால் ஈறுகள்:**

ர.்.கான் ஒற்றும் பகர இறுதியும்

மாரைக் கிளவி உளப்பட மூன்றும்

நேரத் தோன்றும் பலரறி சொல்லே ---- 7

ரகர ஒற்றாகிய இறுதியும், பகர உயிர்மெய்யாகிய இறுதியும், மார் என்னும் இடைச்சொல்லிறுதி உட்பட அம்மூன்றும் பலரறி சொல்லாதற்கு ஒப்பத்தோன்றி இசைக்கும்.

எடுத்துக்காட்டு: உண்டனர், உண்ணா நின்றனர், உண்குவர் எனவும், உண்டார், உண்ணா நின்றார், உண்ணுவார் எனவும் கரியர், கரியார் எனவும் கூறுப, வருப, காண்ப எனவும், காண்மார், கொண்மார் எனவும் வரும்.

**ஈ. ஒன்றன் பால் ஈறுகள்:**

ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த

குன்றிய லுகரத் திறுதி யாகும் ----- 8

ஒன்றனை அறிவிக்கும் சொல் தறட என்னும் மெய்களை ஊர்ந்து நின்ற குற்றியலுகரத்திறுதியாகும்.

எடுத்துக்காட்டு:

உண்டது, உண்ணா நின்றது, உண்பது எனவும், கரியது எனவும், கூயிற்று தாயிற்று எனவும் கோடின்று. குளம்பின்று எனவும், குண்டுகட்டு குறுந்தாட்டு எனவும் வரும்.

**உ. பலவின்பால் ஈறுகள்:**

அஆ வஎன வரூம் இறுதி

அப்பால் மூன்றே பலவறி சொல்லே ----- 9

அ ஆவ எனச் சொல்ல வரும் அக்கூறுபட்ட மூன்று இறுதிகளே பலவறி சொல்லாக இசைக்கும்.

**எடுத்துக்காட்டு:**

உண்டன, உண்ணா நின்றன, உண்பன எனவும், கரியன, கரிய எனவும் உண்ணா, திண்ணா வாரா எனவும், வருவ, செல்வ, உண்குவ, தின்குவ எனவும் வரும்.

**ஈறுகள் வினையில் தவறாது வருதல்:**

இருதிணை மருங்கின் ஐம்பா லறிய
ஈற்றினின் றிசைக்கும் பதினோ ரெழுத்தும்
தோற்றந் தாமே வினையொடு வருமே. ----- 10

மேற்கூறிய இருதிணைகளிடமாக இசைக்கும் ஐம்பாற் சொற்களை இருவகை வழக்கின் கண்ணும் அறிதற்கு அச்சொற்களின் ஈற்றின் நின்று இசைக்குமெனக் கூறப்பெற்ற பதினோரெழுத்துக்களும் தோன்றுவது படர்க்கை வினைச்சொல்லோடு தோன்றி வரும்.

எடுத்துக்காட்டு:

உண்டான், உண்டாள், உண்டார், உண்ப, உண்மார், உண்பது, குண்டுகட்டு, உண்டன, உண்ணா, உண்குவ என வரும்.

**திணை, பால் இயைபு**

வினையிற் றோன்றும் பாலறி கிளவியும்
பெயரிற் றோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடாத் தம்மர பினவே ------ 11

வினை இடமாகத் தோன்றும் பாலறிவிக்குஞ் சொற்களும் பெயரிடமாகத் தோன்றும் பாலறிவிக்கும் சொற்களும் ஒன்றனோடு ஒன்று தொடருங்கால் மயங்குதலைப் பொருந்தா, தத்தம் இலக்கணத்தனவாகும்.

எடுத்துக்காட்டு:

அவன் வந்தது, அது வந்தான் என்பவை திணை மயங்கிய தொடர்மொழி வழுவாம். அவன் வந்தாள், அது வந்தன என்பவை பால் மயங்கிய வழுவாம். யான் வந்தான், நீ வந்தேன் என்பவை இடம் மயங்கிய வழுவாம். நாளை வந்தான், நேற்று வருவான் என்பவை காலம் மயங்கிய வழுவாம்.

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி

ஆண்மை அறிசொற் காகிட னின்றே ------ 12

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி வினையோடு முடியுங்கால் ஆடூஉவறி சொற்குரிய ன.ஃகான் ஒற்றொடுவதற்கு ஆகும் இடனின்று.

எடுத்துக்காட்டு:

பேடி வந்தாள், பேடியர் வந்தனர் என வரும்.

**செப்பும் வினாவும் அமையும் வகை:**

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல் ----- 13

செப்புதலையும் வினாவுதலையும் வழவாமற் போற்றுக.

செப்பாவது யாதேனும் ஒரு பயன் விளைவைக் கருதிக் கருத்தை வெளிப்படுத்தலும், வினாவியவழி அதற்கு விடையாகக் கூறுதலுமாம். வினாவாவது யாதானும் ஒன்றை அறிந்து கொள்ளும் விருப்பினைப் புலப்படுத்துவதாகும். வினா எனினும் கடா எனினும் ஒக்கும்.

எடுத்துக்காட்டு:

“மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்”

புசிநலிகின்றது சோறிடுக என்றாற் போல்வன ஒரு பயன் கருதிக் கருத்தை வெளிப்படுத்த செப்பாம்.

வினாவிற்கு விடையாக வரும் செப்பு இருவகைப்படும் ஒன்று செவ்வன் இறை. பிறிதொன்று இறை பயப்பது. சாத்தா உண்பையோ? ஏன்று வினாயவிழி உண்பேன்

அல்லது உண்ணேன் எனக்கூறல் செவ்வனிறை உண்ணேனோ? நெய்யோடு கூட்டி இடுக, இலையிடுக என்றாற்போல வருவன உண்பேன் என்னும் கருத்தையும்: உண்பேனோ? நீ உண், பசியின்று, வயிறு நொந்துள்ளேன் என்றாற்போல வருவன உண்ணேன் என்னும் கருத்தையும் பயந்து நிற்றலின் இறைபயத்தலாம்.

**வினா அறியாமை வினா, ஐயவினா,**

அறிவுறூஉ வினா என மூவகைப்படும்.

இச்சூத்திரத்தின் பொருள் யாது? உயிர் எத்தன்மைத்து? என வருவன. அறியாமை வினா. ஆண்டுப் பாய்ந்து ஓடுவது புலியோ புல்வாயோ? குற்றியோ மகனோ ஆண்டுத் தோன்றா நிற்கும் உரு? என வருவன ஐயவினா.

பாலைக்கலியைக் பாடியவர் யார்? பறம்பினை ஆண்ட வள்ளல் யார்? என வருவன அறிவுறூஉ வினா மாணவன் வினாவாயின் அறியாமை வினாவுள் அடங்கும்.

ஒரு விரல் காட்டிக் குறிதோ நெடிதோ? எனவும் இவன் தாய் மலடியோ? எனவும் வினாவுதல் வினா வழுவாம்.

**வினாவே விடையாக வருதல்:**

வினாவும் செப்பே வினா எதிர் வரினே ---- 14

வினாவிய இடத்து அதறக் மறுதலையாக அவ்வாய்ப்பாட்டானே எதிர்வரும் வினாவும் செப்பேயாகும்.

எடுத்துக்காட்டு:

சாத்தா உண்பையோ? என்று வினாயவழி, உண்ணேனோ? உண்பேனோ என்னும் வினா வாய்பாட்டான் வருபவை உண்பேன், உண்ணேன் என்னும் பொருள் பயந்து நின்றவாறு காண்க.

**செப்பு வழுவி வருதல்:**

செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே

அப்பொருள் புணர்ந்த கிளவி யான ---- 15

செவ்வன் இறையாகாமல் செப்பு வழுவினும் செவ்வனிறைக்குரிய பொருள் புணர்ந்த சொல்லாக வருமிடத்து வழுவென்று நீக்கும் நிலையில்லை.

தெரிபு வேறு நிலையிலும் குறிப்பிற் தோன்றலும் ஆகிய இருவகைப் பொருண்மை நிலையுள் இவ்வகைச் செப்புக் குறிப்பிற் தோன்றலாய் அடங்கலின் வழா நிலையாகக் கொள்ளப்படும் என்பது கருத்து.

எடுத்துக்காட்டு:

சாத்தா உண்பையோ? என்ற வழி வயிறுகுத்திற்று என வரும். வயிறு குத்திற்று என்னும் செப்பு வயிறு நன்றோ என்னும் வினாவிற்குரிய செப்பாயினும் உண்ணேன என்னும் பொருள் புணர்ந்து நிற்றலின் வரைநிலையினறாயிற்று.

**செப்பு வழுவி வருதல்:**

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு

அப்பொருளாகும் உறழ்துணைப் பொருளே ----- 16

சிறப்பும் உயர்வும் கருதி ஒன்றனொடொன்றை உறழ்ந்து கூறுமிடத்தும் வினை, பயன், மெய், உரு முதலியவற்றான் ஒன்றனொடு ஒன்றை உவமித்துக் கூறுமிடத்தும் செப்பின் கண்ணும் வினாவின் கண்ணும் ஆக்கமுறும் தொடர்கள் சினைப் பொருளுக்குச் சினைப் பொருளும் முதற் பொருளுக்கு முதற் பொருளுமாகவே வரும்.

எடுத்துக்காட்டு:

இவள் கண்ணினும் அவள் கண் பெரிது. அது செப்பு, பெரிதோ? இது வினா. இவள் கண்ணினும் செவி அழகிது, அழகிதோ? தாமரை மலரினும் முல்லை மலர் நறிது. நறிதோ? இவை சினைக்குச் சினையே வந்த உறழ்ச்சிப் பொருள்.

சாத்தனின் கொற்றன் வலிநன்- வலியனோ? ஆவூர் யானையினும் கோவூர் யானை கொடியது – கொடிதோ?. இவன் வேலினும் அவன் வாள் மாண்டது – மாண்டதோ? இவை முதலுக்கு முதலே வந்த உறழ்ச்சிப் பொருள். இவ்வாறின்றி இவள் கண்ணினும் அவள் மேனி அழகு – அழகோ? ஏன்றும் சாத்தனின் கொன்றன் தோள் வலிது – வலிதோ? என்றும் முதலும் சினையும் மயங்கி வருதல் வழுவாம்.

இவள் வலியொக்கும் அவள் விழி - ஒக்குமோ? தாமரை மலரொக்கும் இவள் முகம் ஒக்குமோ? இவை சினைக்குச் சினையே வந்த துணைப்பொருள். சாத்தன் ஒப்பான் கொற்றன் - ஒப்பனோ? இவன் செங்கோல் ஒக்கும் அவன் செங்கோல் ஒக்குமோ? இவை முதலுக்கு முதலே வந்த துணைப்பொருள்.

**தகுதியும் வழக்கும்:**

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்

பகுதிக் கிளவி வரைநிலை யினரே ----- 17

உறழ்ச்சியாகவும் ஒப்பாகவும் செப்பும் வினாவும் பற்றிவரும் தொடராக்கத்தின் கண் சினைப் பொருளும் முதற் பொருளும் தகுதியினையும் வழக்கினையும் தழுவியனவாய் மயங்கி நிகழும் ஒரு கூற்றுச் சொற்கள் நீக்கப்படும் நிலையிலவாகும்

அவை தகுதிபற்றியும் வழக்குப்பற்றியும் வருதலின் வழா நிலையாக ஆக்கம் பெறும் என்றவாறு.

எடுத்துக்காட்டு: கூற்றினும் கொடிதவள் கூர்விழி – கொடிதோ? அவன் கோலினும் தண்ணிய தடமென்றோளே – தண்ணியவே?.

இவை தகுதி பற்றி முதலும் சினையும் மயங்கி வந்து ஆக்கம் பெற்றன. இவை உறழ்ச்சிப் பொருள், கயலொக்கும் இவள் கண் - ஒக்குமோ? மதியொக்கும் இவள் முகம் - ஒக்குமோ?. கார்புரையும் இவள் கூந்தல், புரையுமோ? துளிதலைத் தலைஇய தளிரன்னோளே – அன்னளோ?.

இவை வழக்குப் பற்றி முதலும் சினையும் மயங்கி வந்து ஆக்கம் பெற்றன. இவை துணைப்பொருள்.

தகுதியாவது பயன் விளைத்தற்கண் ஒப்ப நிகழ்வது.

வழக்காவது வினை, பயன், மெய், உரு முதலிய உவமை நிலைக்களன்களாகச் சான்றோர் வழங்கும் வழக்கு.

**இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை:**

இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை

வழக்கா றல்லாச் செய்யு ளாறே ----- 18

இனஞ்சுட்டும் பிரிவு இல்லாத பொருள்கட்குப் பண்புகொள் பெயர் கொடுத்தல் வழக்கு நெறியல்லாத செய்யுள் நெறியாம் ஏகாரம் தேற்றம்.

இனமுள்ள பொருட் பெயருக்கு அடை கொடுப்பது அதனைப் பொதுவினின்றும் பிரித்துணர்த் தற்கேயாம். தாமரைக்குச் செந்தாமரை என அடை

கொடுப்பது வெண்டாமரையினின்று பிரிப்பதற்காம். இஃது இனஞ்சுட்டும் பண்புகொள் பெயராகும்.

அங்ஙனம் இனமில்லாத ஞாயிறு, திங்கள் போன்றவற்றிற்குப் பண்புகொள் பெயர் கொடுத்தலும் உண்டு. அதனை இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர் என்பர்.

இவ்விரண்டனுள் முன்னையது இருவகை வழக்கிற்கும் ஆகும். பின்னையது உலக வழக்கிற்கு ஆகாது. செய்யுள் வழக்கிற்கு மட்டுமே ஆகும் என்பது இச்சூத்திரத்தான் வலியுறுத்தப் பெறுகிறது. "செஞ்ஞாயிற்றுள் நிலவு வேண்டினும் வெண் திங்களுள் வெயில் வேண்டினும்" எனவும் „செவ்வழல் கொளிஇ" எனவும் வரும். இவை இனத்தைச் சுட்டி வேறுபடுத்தாமையான் அப்பொருளை அணிநயத்தொடு சிறப்பித்து நிற்றலாம்.

**இயற்கைப் பொருளைக்கூறும் முறை:**

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல் ----- 19

பிறிதொன்றால் திரிக்கப்படாமல் தத்தம் இயல்பொடு நிற்கும் பொருளைக் கிளந்து கூறுங்கால் இத்தன்மைத்து என்னும் வாய்ப்பாடு படக் கூறுக.

எடுத்துக்காட்டு:

நிலம் வலியதன்மைத்து, நீர் ஒழுகும் தன்மைத்து தீ அழலுந்தன்மைத்து, உயிர் உணருந்தன்மைத்து, உடம்பு இயங்குந்தன்மைத்து என வரும்.

நிலம் வலிது, வளி உலரும் எனக் கூறின் அவை ஒருசார் வேற்றுமையையும் காலத்தையும் காட்டி நிற்றலின் பொருந்தாவாம்.

**செயற்கைப் பொருளைக்கூறும் முறை:**

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல் ---- 20

பிறிதொன்றாற்றிரிபுற்றுச் செயற்கை எய்திநின்ற பொருளை ஆக்கச் சொல்லோடு கூட்டிக் கூறுக. "ஆக்கம்" என்றது பொருள் பற்றிய சொல்லையாதலின் ஆன, ஆய, ஆயின, ஆகிய என அதன் திரிபாக வருவனவெல்லாம் கொள்க.

எடுத்துக்காட்டு: மருந்து உண்டமையான் உடம்பு நலமாயிற்று, களை கட்டமையான் பயிர் செழிப்பாயிற்று, கல்வி கற்றமையான் அறிவு பெருகலாயிற்று, தீச்சார்ந்த மையான் நீர் வெய்தாயிற்று, நீர் கலந்தமையான் நிலம் மெலிதாயிற்று என வரும்.

**காரணத்தொடு ஆக்கம் கூறல்:**

ஆக்கந் தானே காரண முதற்றே ----- 21

இயற்கைப்பொருள் செயற்கைப் பொருளாக ஆகும் அவ்ஆக்கம் காரணத்தை அடிப்படையாக உடையதாகும். எனவே, அக்காரணத்தைக் கூறி ஆக்கம் கூறுக என்றவாறு.

செயற்கைப் பொருளை ஆக்கமும் காரணமும் கொடுத்துக் கூறுக என ஒருங்கு விதியாது பிரித்தோதினார். வழக்கின்கண் காரணத்தைத் தொகுத்துக் கூறினும் இழுக்கின்று என உணர்தற் பொருட்டு மருத்துவரிடம் மருந்துண்டு வருவான் ஒருவனை அறிந்தான் உடம்பு நலமா என வினாய வழி நலமாயிற்று

எனக்கூறும். அவ்வழி அவன் காரணத்தைத் தொகுத்துக் கூறினும் கேட்பான் அதனை உணர்ந்திருத்தலின் எனக்.

**காரணம் இன்றியும் ஆக்கம் கூறல்:**

ஆக்கக் கிளவி காரண மின்றியும்

போக்கின்றெனப் வழக்கி னுள்ளே ------ 22

செயற்கைப் பொருட்கண் காரணமுதற்றாய் வருதல் மரபெனக் கூறப்பெற்ற ஆக்கச்சொல் வழக்கின்கண் காரணக்கிளவியின்றியும் வருதல் குற்றமின்று எனக்

கூறுவர் புலவர். எனவே, செய்யுட்கண் காரணக்கிளவியோடு வருதல் யாப்புடைத்தென்றவாறாம்.

ஈண்டு வழக்கென்றது பேச்சு வழக்கினையாம். அவ்வழக்கின்கண் வினாவுவானும் செப்புவானும் காரணத்தை உணர்ந்திருத்தலின் காரணக்கிளவியை வெளிப்படக் கூறாவிடினும் குற்றமின்று என்றார்.

எடுத்துக்காட்டு:

உடம்பு நலமாயிற்று, நிலம் மெலிதாயிற்று எனவரும். செய்யுள் வழக்கின்கண் காரணக்கிளவி தோன்ற வரும்.

**பால் பற்றிய ஐயவினா:**

பால்மயக் குற்ற ஐயக் கிளவி

தானறி பொருள்வயின்பன்மை கூறல் ---- 23

திணை தெரிந்து பால் தெரியாமல் மயக்குதலுற்றவிடத்து ஐயக்கிளவியைத் தானறிந்ததிணைப் பொருளிடத்துள்ள பன்மைப் பாலாற் கூறுக. “பால்” என மேல் நின்றமையின் பொருள் என்றது திணையையாம். “தானறிபொருள்” என்றதனான் திணை துணிந்தமை பெறப்படும்.

எடுத்துக்காட்டு:

ஆண்மகன் கொல்லோ பெண்மகள் கொல்லோ ஆண்டுத் தோன்றா நின்றார்? எனவும், ஒன்று கொல்லோ பலகொல்லோ இச்செயபுக்கன்? எனவும் வரும். “பால்” எனப் பொதுப்படக் கூறினமையின் ஆடூஉ அல்லது மகடூஉ எனத் துணிந்து ஒருமை பன்மை துணியாதவழியும் பன்மை கூறுதலாகும்.

ஒருவன் கொல்லோ பலர் கொல்லோ ஆவினைக் கவர்ந்த கள்வர். ஒருத்தி கொல்லோ பலர் கொல்லோ இக்காவின் மலர் கொய்த மகளிர் என வரும்.

ஆண்மகன் கொல்லோ பெண்மகள் கொல்லோ என்பது காட்சிக்கண் நிகழும் ஐயமாயின் இறந்தகாலச் சொல்லானும் கூறுக. ஒருமைப் பன்மை ஐயம் காணா வழியே நிகழும் எனக்.

**திணையும் பாலும் பற்றிய ஐயவினா:**

உருவென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்

இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை ------ 24

தொடராக்க மரபினைக் கருதுமிடத்து, உரு என வரும் சொல்லிடத்தும் அஃறிணை இயற்பெயரிடத்தும் என அவ்விரு பிரிவின் கண்ணும் ஐயக்கிளவி கூறற்கு உரியதாகும்.

எடுத்துக்காட்டு:

குற்றியோ மகனோ ஆண்டுத் தோன்றா நின்ற உரு? இது திணை ஐயம். ஆண்மகனோ பெண்மகளோ ஆண்டுத் தோன்றா நின்ற உரு? இது உயர்திணைப்பால் ஐயம். ஒன்றோ பலவோ இச்செய்புக்க உருபு? இது அஃறிணைப்பால் ஐயம். ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம்? ஒன்றோ பலவோ இக்குடம்மையுளிருக்கும் குரீஇ? இவை அஃறிணை பிரிப்பு. “உரு” என்பது உயர்திணை ஒருமைப் பன்மைப் பால் ஐயத்தின்கண் வாராதென்பதும் இவ்விரு வகைச் சொற்களும் செப்பின்கண் வருதற்கும் உரிய என்பதும் கருதி உணரச், சுட்டுங் காலை என்றார் என அறிக.

**ஐயம் நீங்கி விடையிறுக்கும் முறை:**

தன்மை சுட்டலும் உரித்தென மொழிப

அன்மைக் கிளவி வேறிடத்தான ----- 25

அன்மைத் தன்மையைக் சுட்டிச் செப்பு நிகழத் துங்காலை மறுதலையாய பொருளிடத்து அன்மைத் தன்மையைச் சுட்டிக் கூறலும் உரித்தென்று கூறுவர் புலவர்.

ஊம்மை எதிர்மறை ஆகலின் துணிந்து தேறப்பட்ட பொருளிடத்து அன்மைத் தன்மையைச் சுட்டிக் கூறுதலே பெரும்பான்மை என்பது பெறப்படும்

எடுத்துக்காட்டு:

வேறிடத்தான அன்மைத் தன்மை சுட்டி வருங்கால் துணியப்பட்ட பொருள் ஆண்மகனாயின் ஆண்டுத் தோன்றுமவன் பெண்மகள் அல்லள் ஆண்மகன் எனவும், ஆண்டுத்தோன்றும் உருக்குற்றியன்று ஆண்மகன் எனவும், பெண்மகளாயின் ஆண்டுத்தோன்றுமவள் ஆண்மகன் அல்லன் பெண்மகள் எனவும், ஆண்டுத்தோன்றும் உருக்குற்றியன்று பெண்மகள் எனவும் துணியப்பட்ட பொருள் குற்றியாயின் ஆண்டுத்தோன்றும் உருமகனல்லன் குற்றி எனவும், மகளல்லள் குற்றி எனவும் துணியப்பட்ட பொருள், ஒன்றாயின் இச்செய்புக்க உருபு பல அல்ல ஒனறு எனவும், இச்செய்புக்க பெற்றம் பல அல்ல ஒனறு எனறும், பலவாயின் இச்செய்புக்க உருபு ஒன்றன்று பல எனவும் இச்செய்புக்க பெற்றம் ஒன்றன்று பல எனவும் வரும்.

**வழக்கில் வண்ண சினைச்சொல்:**

அடைசினை முதல்என முறைமூன்றும் மயங்காமை

நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல் ------ 26

வண்ணச்சினைச் சொல்லின் உறுப்பு மூன்றும் அடை சினை முதல் என்னும் முறைமை மயங்காமல் வழங்குப் பெற்று இயலும். வண்ணச் சினைச்சொல் என்பது அதன் இலக்கணந் தோன்ற நின்றது.

எடுத்துக்காட்டு:

செங்கால் நாரை, பெருந்தலைச் சாத்தன், செங்கண் மறவர், செஞ்சொற்றொடர் என வரும்.

செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவர

வாய்வன் காக்கையும் கூகையும் கூடி

என்று செய்யுளுள் மயங்கி வந்தனவால் எனின், செய்யுள் பொருள் கோளுக்குரியதாகலின் அவை சுண்ணம் என்னும் பொருள்கோள் வகையால் மாற்றிக் கொள்ளப்படும் எனக்.

**உயற்சொற் கிளவி:**

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்

ஒனற்னைக் கூறும் பன்மைக் கிளவியும்

வழக்கி னாகிய உயர்சொற் கிளவி

இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல ---- 27

ஒருவனையும் ஒருத்தியையும் பற்றிக் கூறுமிடத்து வரும் பன்மைச் சொல்லும் ஒன்றனைப் பற்றிக் கூறுமிடத்து வரும் பன்மைச் சொல்லும் உயர்த்துச் சொல்லும் சான்றோர் வழக்கினான் ஆகிய சொல்லாகும். இவை இலக்கண நெறியாற் சொல்லும் முறைமையின அல்ல. என்றது இத்தகையன சான்றோர் வழக்குப் பற்றிப் பயின்றுவருதலின் அவை இலக்கணத்தை நோக்கி வழுவென்று களையப்படா “தம்மரபினவே” எனக் கொள்ளப்படும் என்றவாறு.

எடுத்துக்காட்டு:

ஒருவன் அல்லது ஒருத்தி தன்மை, யாம் வந்தேம் எனவும் ஒருவன் அல்லது ஒருத்தியை, நீயிர் வந்தீர் எனவும் அவர் வந்தார் எனவும் அவர் பெரியவர், அவர் நல்லர் எனவும் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி வரும்.

நாலடி பற்றிவரும் நூலை நாலடியார் எனவும், பாக்களைக் கோவை செய்த நூலைக் கோவையார் எனவும், காக்கை, குருவி, கிளி, முதலியவற்றைக் காக்கையார். குருவியார், கிளியார் எனவும் ஒன்றைக் கூறும் பன்மைக் கிளவி வரும்.

அஃறிணை இயற்பெயர் அஃறிணை பன்மைச் சொல்லான் வருதல் இலக்கண நெறியே ஆதலின் ஈண்டுப் பன்மைக் கிளவி என்றது உயர்தணைப் பன்மைச் சொல்லை என்று அறிக.

ஒப்பு. உருவகம், காதல், சிறப்பு, வெகுளி முதலியன பற்றி வருவன செய்யுள் மரபு பற்றியளவாதலின் அவற்றை ஈண்டுக் காட்டுதலும் வழுவமைதி என்றலும் தொல்காப்பிய நெறிக்கு ஒத்தவையல்ல.

இவர் மிகப் பெரியவர், நீவிர் பெரிதும் அறிதிர் என இழித்தற்கண்ணும் வருமால் எனின் அவை சொல்லுவான் இழித்தற் குறிப்புத் தோன்ற சொல்லப்பட்டவையன்றி உயர்சொல்லாதலினின்று திரிந்தவையல்ல.

**வினைச்சொற்கள் மூவிடம் பற்றி வரும் மரபு:**

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற்சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூவிடத்தும் உரிய என்ப ---- 28

செல்லுதல், வருதல், தருதல், கொடுத்தல் என்னும் தொழிற்றன்மை நிலைபெறத் தோன்றும் அந்நால்வகைச் சொற்களும்,ஈற்றானன்றித் தாமே தன்மை முன்னிலை படர்க்கை என வகைப்படும். அம்மூவிடத்தின் கண்ணும் தோன்றிவரற்குரியவை என்று கூறுவர் புலவர்.

செலவு முதலாய சொற்கள் பொருள் பற்றி ஓதப்பட்டமையான் போதல், நீங்குதல் இரிதல் முதலியன செலவின் கண்ணும், புகுதல், அடைதல் வரவின் கண்ணும்,ஈதல். வீசுதல் முதலியன கொடையின் கண்ணும் மரபிற்கேற்ப அடக்கப் பெறும்.

**தரவும் வரவும் பற்றிய சொற்கள்:**

அவற்றுள்,
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்தே ---- 29

மேற்கூறியவற்றுள் தருதல், வருதல் பற்றிவரும் அவ்விரு சொற்களும் தன்மை, முன்னிலை என்னும் அவ்விரண்டிடத்திற்கும் உரியவாம்.

எடுத்துக்காட்டு:

எனக்குத் தந்தான், நினக்குத் தந்தான் எனவும் என் பால் வந்தான் நின்னுழை வந்தான் எனவும் ஈங்கு வந்தான் எனவும் வரும்.

**செலவும் கொடையும் பற்றிய சொற்கள்:**

ஏனை இரண்டும் ஏனை இடத்த ---- 30

தரவும் வரவும் அல்லாத ஏனைச் செலவுச் சொல்லும் கொடைச் சொல்லும் ஆகிய இருவகைச் சொற்களும் படர்க்கை இடத்திற்கு உரியவாம்.

எடுத்துக்காட்டு:

அவன் கட் சென்றான், ஆங்குச் சென்றான் எனவும் அவற்குக் கொடுத்தான் எனவும் வரும். “யாது” எவன் என்னும் வினாக்கள்:

யாது எவன் என்னும் ஆயிரு கிளவியும்

அறியாப் பொருள்வயின் செறியத் தொன்றும் ------ 31

யாது, எவன் என்றும் அவ்விரு சொற்களும் அறியாத பொருளை வினாவுமிடத்து யாப்புறத் தோன்றும்.

எடுத்துக்காட்டு:

இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது? இச்சூத்திரத்திற்குப் பொருள் எவன்?. இப்பேழையுள் உள்ள பொருள் யாது? எவன்? என வரும். “எவன்” என்பது “என்”எனவும் “என்னை” எனவும் வரும் என்ன என்பது இழிவழக்காம். யா, யாவை, யாவன், யாவள், யாவர் என்னும் வினாச்சொற்கள்

திணைப்பால் இடங்களைச் சுட்டி நிற்றலின் அவை அறிந்த பொருள்வயின் ஐயந்தீர்த்தற்கே வரும் என்பது உய்த்துணரப்படும்.

அவற்றுள்

யாதென வருஉம் வினாவின் கிளவி

அறிந்த பொருள்வயின் ஐயந் தீர்த்தற்குத்

தெரிந்த கிளவி யாதலும் உரித்தே ----- 32

மேற்கூறிய இரண்டனுள் யாது எனச் சொல்ல வரும் வினாப் பொருளையுடைய சொல் அறியாப் பொருள்வயின் ஐயந்தீர்தற்கு வருதலேயன்றி ஓராற்றான் அறியப்பட்ட பொருள்வயின் ஐயந்தீர்தற்குத் தேர்ந்து கொள்ளப்பட்ட சொல்லாதலும் உரித்து.

எடுத்துக்காட்டு:

இம்மரங்களுள் கருங்காலியாது நம் எருதுகளுள் கெட்ட எருது யாது எனவரும்.

**உம்மை வேண்டும் இடங்கள்:**

இனைத்தென அறிந்த சினைமுதற் கிளவிக்கு

வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும் ------ 33

இ∴து இவ்வளவினது என வரையறைப்பட்ட சினைப் பொருளையும் முதற்பொருளையும் உணர்த்தும் சொற்களுக்கு அவை பயனிலை கொள்ளும் தொகுதிக்கண் உம்மை கொடுத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு:

கண்ணிரண்டும் சிவந்தன தமிழ் வேந்தர் மூவரும் வந்தனர். முறை நான்கும் பயின்றவன் என வரும். இவை வினைப் பயனிலை கொண்டன. கண் இரண்டும் குருடு மரம் நான்கும் தேக்கு என வரும் இவை பெயர்ப் பயனிலை கொண்டன.

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே ----- 34

நிலைபேறில்லாத பொருளும் வினைப்படு தொகுதி போன்ற இயல்பிற்றாகும் என்றது இனைத்தென அறிந்தே சினையும் முதலும் வினைப்படு தொகுதிக்கண் உம்மை பெருதல்போல மன்னாப் பொருட்கண் யாதானும் ஒரு பொருளைப்பற்றி உம்மை வரும் என்றவாறு. அதனான் அவ்வியற்றென்னாது அன்னவியற்று என்றார்.

எடுத்துக்காட்டு:

புவி மன்னன் இளமையும் நில்லாது. பெருவணிகன் செல்வமும் நிலையாது. மாமருத்துவன் யாக்கையும் நிலையாது எனவரும். மன்னாப் பொருளும் என்னும் உம்மையான் இல்லாப் பொருளும் இடமுதலாயவற்றொரு கூட்டிச் சொல்லுங்கால் உம்மை பெற்று வருதல் கொள்க.

வணிகர் விடை கூறும் முறை “அல்லது இல்” என்னும் வாய்ப்பாட்டு விடை:

எப்பொரு ளாயினும் அல்லதில் எனின்

அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல் ----- 35

“அல்லதில்” என்னும் வாய்பாட்டான் ஒருவன் செப்பு நிகழ்தத் லுறின். எவ்வகைப்பட்ட பொருளாயினும் வினாவப்பட்ட பொருளல்லாத பிறிதாகிய பொருட்கண் வைத்துக் கூறுக.

எடுத்துக்காட்டு:

பயறுளவோ? என வினாவினாற்குப் பயறு இல்லையாயின் உழுந்த ல்லதில் கொள்ளல்லதில் எனச் செப்புக. “அல்லதில்” என்பது வாய்பாடாதலின் அல்லதில்லை, அன்றியில், அலாதில் அலாலில் என்றாற்போல அப்பொருள் பற்றி வரும் சொற்களெல்லாம் கொள்க.

**இருக்கும் பொருளைச் சுட்டிக் கூறல்:**

அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல் ------ 36

அல்லதில் எனச் செப்புவோ பிறிதாகிய பொருளோடு கூறாமல் வினாவப்பட்ட பொருட்கண் வைத்து அவ்வாய்பாட்டாற் கூறலுறின் சுட்டிக் கூறுக.

எடுத்துக்காட்டு:

பயறுளவோ? என்று வினாவியவழிப் பசும்பயறல்லதில், பெரும் பயறல்லதில் கலம்பத்துவிற்கும் பயறல்லதில் என அப்பொருட்டன் மையைக் கூட்டிக் கூறுக என்றவாறு.

**பொருளொடு புணரச் சுட்டுப்பெயர்:**

பொருளோடு புணரச் சுட்டுப்பெய ராயினும்

பொருள்வேறு படாஅ தொன்றா கும்மே ----- 37

வரையறைபெறப் பொருளொடு புணர்த்து வரும் சுட்டல்லாமல் பொருளொடு புணராத சுட்டுப்பெயராயினும் செப்பினாற் கூறும் வழிப்பொருள் வேறுபடாது பொருந்தி நிற்கும்.

எடுத்துக்காட்டு:

போர்க்களத்துக் கிடந்த கோட்டினைக்காட்டி இ∴து அரசன் யானை எனவும் அதன் அடிச்சுவடுகளைக் காட்டி இ∴து அரசயானை எனவும் கூறினும் பொருள் வேறுபடாது ஒன்றாகும் எனக். இம்மரபு "அல்லதில்" என்னும் வாய்ப்பாடு பற்றியதன்றாகலின் மிகையாற் கொள்ளப்பட்டதென உணர்க.

**இயற்பெயரும் சுட்டுப்பெயரும்:**

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்

வினைக் கொருங்கியலும் காலந் தோன்றின்

சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவா

இயற்பெயர் வழிய என்மனார் புலவர் ----- 38

இயற்பெயராகிய சொல்லும் சுட்டுப் பெயராகிய சொல்லும் பயனிலை கோடற்கு ஒரு பொருளின் கண்ணவாய் நடைபெருங் காலந் தோன்றின் அத்தொடரின் கண் சுட்டுப்பெயர்கள் முற்படக் கிளக்கப்படா இயற்பெயரின் வழியினவாம் எனக்கூறுவர் புலவர்.

ஈண்டு இயற்பெயரென்றது விரவுப் பெயரன்று. பொருளை உணர நிற்கும் குறியீடாகிய எல்லாப் பெயர்களையுமாம். அவற்றுள் சுட்டுப்பெயரை விதந்தமையின் அவை தவிர்ந்த ஏனை எல்லாப் பெயரும் கொள்ளப்படும். வினைக்கு ஒருங்கியலும் என்றதனான் அப்பெயர் வினை முதலாயும் ஏனை வேற்றுமையுற்றும் நிற்பனவெல்லாம் கொள்க.

எடுத்துக்காட்டு:

சாத்தனவன் வந்தான், சாத்தனவன் பெயரியன், சாத்தனவன் கொடை எனவரும். இவை இயற்பெயரும் சுட்டுப்பெயரும் வினைமுதலாய் ஒருங்கியன்று ஒரு பயனிலை கொண்டது.

சாத்தன் வந்தான், அவன் உண்ணுவான், நம்பி வந்தான், அவன் பேசுவான், நங்கை வந்தாள், அவள் பாடுவாள், வீரர் வந்தனர், அவர் போரிடுவார், குதிரை வந்தது, அ∴து உணவுண்ணும், நாரை வந்தன, அவை மீனருந்தும் எனவரும். இவை இயற்பெயரும் சுட்டுப்பெயரும் ஒரு பொருளைச் சுட்டி வெவ்வேறு பயனிலை கொண்டன.

**செய்யுளில் சுட்டுப்பெயரை முற்கூறல்:**

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே ---- 39

இயற்பெயரும் சுட்டுப் பெயரும் வினைக் கொருங்கு இயலுமிடத்துச் சுட்டுப் பெயரை முற்படக் கிளத்தல் செய்யுள் வழக்கிங்குரியதாகும்.

எடுத்துக்காட்டு:

அவன் அணங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன் விறன் முகுதார்ச் சேந்தன், பேர் வாழ்த்தி – முகனமர்ந்து அன்னை அலர் கடப்பந் தாரணியின் என்னை கொல் பின்னையதன்கன் விளைவு எனவரும்.

**சுட்டு முதலாகிய காரணப்பெயர்:**

சுட்டு முதலாகிய காரணக் கிளவியும்

சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும் --- 40

சுட்டெழுத்தினை முதலாக உடையதாய்க் காரணத்தை உணர்த்தும் சொல்லும் மேற்கூறிய சுட்டுப் பெயர்போலச் சுட்டப்படும் பொருளுக்குப் பின்னே வரும்.

எடுத்துக்காட்டு:

சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனான் தந்தை உவக்கும். கொற்றன் வெற்றி பெற்றான் அதனான் அரசன் உவக்கும் எனவரும்.

**சிறப்புப் பெயரும் இயற்பெயரும்:**

சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்

இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார் ---- 41

வினைக்கொருங்கு இயலுமிடத்துச் சிறப்பினான் ஒருவற்கு ஆகிய பெயர்ச் சொற்கும் பிறவகையான் எய்திய பெயர்ச் சொற்கும் முற்பட இயற்பெயர்ச் சொல்லைக் கிளவார் புலவர் பிற்படக் கிளப்பார் என்றவாறு. சிறப்பினாகிய பெயர் அரசர் முதலானோரான் தரப்படுவது. கல்வி. தவம் முதலிய பிறவகை யான் வரும்

பெயர் எய்தப்படுவது. பிறவகையான் வரும் பெயர் என்பது உம்மையாற் கொள்ளப்பட்டது.

எடுத்துக்காட்டு:

ஏனாதி நல்லுதடன் வந்தான் காவிதி கண்ணந்தை வந்தான் எனவரும் அவை சிறப்புப் பெயர். ஒருவினை கொள்ளாத வழி உம்மைத் தொகையாதற்கும் ஏற்றலின் வினைக்கொருங்கியலுதல் தந்துரைக்கபட்டதென்க. முனிவன் அகத்தியன் வந்தான். ஆசிரியன் பேரூர்க்கிழான் வந்தான் சோழன் நலங்கிள்ளி வென்றான். கொல்லன் மருதன் சென்றான் எனவரும் இவை பிறவையான் எய்திய பெயர்களாம்.

**ஒருபொருள் குறித்த பல பெயர்கள்:**

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி

தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடனிலவே --- 42

ஒருபொருளை குறித்து நிற்கும் பலபெயர் சொற்கள் சொல்தோறும் வேறு வேறு தொழில் முடிபாகக் கூறின் அவை ஒரு பொருளாய் ஒன்றுதல் இல.

எனவே அவற்றைத் தொகுத்துக் கூறினும் பிரித்துக் கூறினும் ஒரு தொழிலாற் கிளகக் என்றவாறாம்.

எடுத்துக்காட்டு:

ஆசிரியன் பேரூர்க்கிழான் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் எனவரும். இதுவேறு பெயர்க்கிளவிகள் தொக்கு ஒரு வினை முடிபு கொண்டது. ஆசிரியன்

வந்தான் பேரூர்க்கிழான் வந்தான் இளங்கண்ணன் சாத்தன் வந்தான், இவை பிரிந்து ஒரு வினையே முடிபாகக் கொண்டன. இங்ஙனமின்றி ஆசிரியன் வந்தான் பேரூர்க்கிழான் உண்டான் எனத்தொழில் வேறு கிளப்பின் பொருள் ஒன்றென உணர்தற்கு அரிதாகும்.

**தன்மைப்பெயரும் அ.்.றிணைப் பெயரும்:**

தன்மைச் சொல்லே அ.்.றிணைக் கிளவியென்று

எண்ணுவழி மருங்கின் விரவுதல் வரையார் --- 43

தன்மைப் பெயர்ச் சொல்லும் அ.்.றிணைப் பெயர்ச் சொல்லும் எண்ணப்படுமிடத்தின்கண் விரவிவருதலை நீக்கார் ஆசிரியர். விரவுதல் என்றது விரவி ஒரு முடிபு கொள்ளுதலையாம்.

எடுத்துக்காட்டு:

யானும் என் எ.்.கமும் சாறும் சால்தும், யானும் என்கிள்ளையும் உண்கும் உண்பேம், யாமும் எம்படையும் வெல்வேம், யாமும் எம்யானையும் வலியேம் என வரும். இங்ஙனம் திணைவிராய் எண்ணுதற்காண் ஒன்றற்கு ஒன்று திணைவேறுபட்டு மயங்குமாயினும் எண்ணப்படுதற்கண் பிறிதாறு இன்மையின் இம்மடிபு வழாநிலையாய் மரபாயிற்றெனக்.

**பொதுப்பிரி பால் சொற்கள்:**

ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்

ஒருமைக் கல்லது எண்ணுமுறை நில்லா ---- 44

உயர்திணை ஒருமை சுட்டி வரும் எண்ணுப் பெயர் மூன்றனுள் இருபாற்கும் பொதுவாகாமல் ஒரு பாலுக்குரியதாய்ப் பிரிந்து வரும் ஒருவன், ஒருத்தி என்னும் சொற்கள் ஒருமைக்கு அல்லது இருமை முதலிய எண்ணு முறைக்கண் நில்லா.

நில்லாது எனப்பாடங்கொண்டு பொதுப் பிரிபாற் சொல் என்னும் ஒற்றுமையான் ‘‘நில்லாது’’ என ஒருமையாற் கூறினார் எனப் உரையாசிரியன்மார். பாற்சொல் என்றது பாலுணர்த்தும் ஈறுகளை.

எடுத்துக்காட்டு:

ஒருவன் - ஒருத்தி எனவரும். இருவன் மூவன், இருத்தி, முத்தி என வாரா.

**வியங்கோள் எண்ணுப்பெயர்:**

வியங்கோள் எண்ணுப்பெயர் திணைவிரவு வரையார் ---- 45

வியங்கோள் முடிப்பின் கண் எண்ணப்படும் பெயர்கள் திணை விரவி வருதலை நீக்கார் ஆசிரியர்.

எடுத்துக்காட்டு:

வீரரும் யானையும் வெல்க. ஆவும் ஆயனும் செல்க. யாமும் எந்நாடும் உயர்க. தமிழும் தமிழரும் வாழ்க. கயவரும் தீமையும் ஒழிக என வரும்.

வியங்கோள் வினை இருதிணைக்கும் பொதுவாயினும் விரவுமிடத்து ஒருதிணைப் பொருளை நோக்கின் மாற்றொன்றுக்கு அது பிறிதாகலின் மயங்கிற்றாம். இம்மயக்கம் தம்மரபினவாதலானும் பிறிதாறின்மையானும் வழாநிலையாகக் கொள்ளப்படும்.

**வேறுவினைப் பொதுச்சொல்:**

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார் ---- 46

வேறுபட்ட வினையை உடைய பொருள்கட்குப் பொதுவாகி வரும் சொல்லை அவற்றுள் ஒன்றற்குரிய வினையாற் கிளந்துகூறார் புலவர். சொல் என்றது பொருளை எனவே பொதுவினையாற் கிளப்பார் என்றவாறு, பொதுப் பொருளாவன அடிசில், அணி, இயம், படை முதலாயவை.

அடிசில் என்பது தின்னுவன, பருகுவன, நக்குவன, உரிஞ்சுவனவற்றிற்குப் பொது ஆதலின் அவற்றுள் ஒன்றாற் கூறாமல் அடிசில் கைதொட்டார், அடிசில் உண்டார் எனவும், அணி என்பது கவிப்பன, கட்டுவன, செறிப்பன, என்பனவற்றிற்குப்

பொது ஆதலின் அணியை அணிந்தார், மெய்ப்படுத்தார் எனவும், எழுப்புவன, கொட்டுவன, ஊதுவனவற்றிற்குப் பொதுவாகிய இயத்தை இயம், இயம்பினார், இசைத்தார் எனவும், எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்குப் பொதுவாகிய படையை, படை வழங்கினார், தொட்டார் எனவும் பொது வினையாற் கிளக்க என்றவாறாம்.

எண்ணுங் காலும் அதுவதன் மரபே ---- 47

வெவ்வேறு வினைக்குரிய சொற்களை எண்ணுங்காலும் மேற்கூறியாங்கு அதன் அதன் பொதுச் சொல்லுக்கு ஓதிய இலக்கணமேயாம் என்றது பொதுவினையான் முடிபு கூறுக என்றவாறு.

எடுத்துக்காட்டு:

சோறும் கறியும் நீரும் உண்டார் எனவும் முடியும் மாலையும் கழலும் அணிந்தார் எனவும் யாழும் குழலும் முடிவும் இசைத்தார் எனவும் வாளும் வேலும் கணையும் வழங்கினார் எனவும் வரும்.

**இரட்டைக்கிளவி:**

இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா --- 48

இரட்டையாகத் தோன்றிப் பொருளுணர்த்துஞ் சொற்கள் தாம் இரட்டுதலின்று பிரிந்திசைக்க மாட்டா.

எடுத்துக்காட்டு:

கருகருத்தது, மொடுமொடுத்தது, கலகலத்தது, கொறுகொறுத்தார், முணுமுணுத்தார் என வரும்.

ஒரு காம்பின்கண் பிளவுபட்டுக் கிளைத்த இலையிரட்டைப் பூவிரட்டைகளைப்போலச் சொல்லால் இரட்டையாயினும் பொருளால் ஒன்றே என்பது தோன்ற இரட்டைக்கிளவி என்றார்.

**ஒருபெயர்ப் பொதுச்சொல்:**

ஒருபெயர்ப் பொதுச்சொல் உள்பொரு ளொழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கிலும் அஃறிணை மருங்கிலும் ----- 49

உயர்திணையிடத்தும் அஃறிணையிடத்தும் ஒருபெயர்படுத்துச் சொல்லும் பல்பொருட்குப் பொதுவாகிய சொல்லை அவற்றுள் தலைமையும் பன்மையும் தெரிந்து பிற உள்பொருள் நீங்க ஒரு பெயரான் வேறுபடுத்துக்கூறுக. பொதுச் சொல்லாவது நாடு, சேரி, தோட்டம், காடு முதலியன.

எடுத்துக்காட்டு:

பிறரும் வாழ்வாரேனும் பார்பனச் சேரி என்பது தலைமை பற்றி ஒருபெயர் கொண்டது. எயினர் நாடு என்பது பன்மை பற்றி ஒருபெயர் கொண்டது. இவை உயர்திணைப் பொருள் பிறபுல்லும் மரனும் இருப்பினும் கமுகத் தோட்டம் என்பது தலைமை பற்றி ஒருபொருள் கொண்டது. வாழைத்தோட்டம் என்பது பன்மை பற்றி ஒருபெயர் கொண்டது. இவை அஃறிணைப் பொருள் தலைமைபற்றிக் கூறப்பெற்ற பொருளே பலவாக இருப்பின் அதுபன்மை பற்றியதாகும். பிறவும் அவ்வாறே இனி ஒன்றென முடித்தல் என்னும் உத்தி வகையான் பல்பொருட்டொகுதியன்றிப் பல்பொருட்கு உரியவாய் வரும் பொதுச் சொற்கும் இம்மரபு கொள்க.

**ஒன்றொழி பொதுச்சொல்:**

பெயரினும் தொழிலினும் பிரிபவையெல்லாம்
மயங்கல் கூடா வழக்கு வழிப் பட்டன --- 50

பெயரின் கண்ணும் தொழிலின் கண்ணும் ஒன்றற்குரியவாய்ப் பிரிந்துவரும் ஒருசார் சொற்கள் எல்லாம் வழக்குவழிப் பட்டனவாகலின் அவை மயங்கல் கூடா.

அ∴தவது வினையில் தோன்றும் பாலறிகிளவியும் பெயரில் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடாமைபோல, பாலறிவிக்கும் ஈற்று இடைச்சொல் பெறாமல் செஞ்சொல்லாய், இவை ஆடூஉவிற்குரியன இவை மகடூஉவிற்குரியன என வழக்குப்பற்றி வரும் சொற்கள் தொடர் மொழியாக்கத்தின்கண் மயங்கல் கூடா என்றவாறாம்.

அணி என்பது இருபாற்கும் பொதுவாயினும் தொடி, மேகலை, சிலம்பு முதலியவை மகளிர்க்கே உரியவாயும் கழல், முடி, தோள் வளை முதலியவை ஆடவர்க்கே உரியவாயும் வருதல் வழக்கு வழிப்பட்டவையாம்.

அங்ஙனமே தொழிலின் கண்ணும் வருமாறு, மணந்து கோடல் வினை இருபாற்கும் பொதுவாயினும் வரைதல் ஆடவர்க்குரிய செயலாகவும் வாழ்க்கைப்படுதல் மகளிர்க்குரிய செயலாகவும் கூறுதல் வழக்கு வழிப்பட்டவையாம். எனவே இவ்வீரர் கழல்யாத்தனர் எனவும் வருதல் வேண்டும் அன்றி இவ்வீரர் தொடி செறித்தனர், இம்மகளிர் கழல் யாத்தனர் என வருதல் மரபு மயக்கமாம்.

பெயரினும் தொழிலினும் பால்காட்டிப் பிரிந்து நிற்குமாறு: இவர் தம் மெல்லடி மேலன சிலம்பே, மௌவல் நாறும் கூந்தலார். இவர் குரவைபாடினர், இவர்யாவரும் தைந்நீராடினர், இவர் கோலமிட்டனர் என்பவை பெயரின் பிரிந்து மகளிரைச் சுட்டி நின்றன. இவர் விருந்து கண்டு சமைத்தார் என்பது தொழிலிற்பிரிந்து மகளிரைச் சுட்டி நின்றது.

இ∴தவர் ஏந்தியவாள், அ∴தவர் பகை தடுத்த கிடுகு இன்றிவர் முடி கவித்தார், இவர் துணங்கையாடினார், இந்நால்வரும் மறை ஓதினார் என்பவை பெயரிற் பிரித்து ஆடவரைச் சுட்டி நின்றன. இவர் பகையஞ்சப் போர்மேற் சென்றார் என்பது தொழிலிற் பிரிந்து ஆடவரைச் சுட்டி நின்றது.

அ∴றிணைக்கண் நூறு எருமையுடையன் என்பதில் எருமை பெண்பால் என உணர நிற்பதும் இவ்வரசன் நூறு யானையுடையான் என்பதில் யானை ஆண்பால் உணர நிற்பதும் கொள்க.

**எண்ணுத்திணை விரவுப்பெயர்:**

பலவயினானும் எண்ணுத்தினை விரவுப்பெயர்

அ.ஃ.றிணை முடிபின செய்யு ளுள்ளே ----- 51

எண்ணுதற்கண் திணை விரவி வரும் பெயர்கள் பல இடத்தினும் செய்யுட்கண் அ.ஃ.றிணை முடிபினவாம்.

எடுத்துக்காட்டு:

வடுகர் அருவாளர் வான்கருநாடர் சுடுகாடு பேய் எருமை என்றிவை ஆறும் குறுகார் அறிவுடையார் எனவரும்.

பலவாயினும் அ.ஃ.றிணை முடிபின என்றதனான் சிலவாயினான் உயர்திணை முடிபன என்றவாறாம்.

பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தார், இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட்கு ஆற்ற வழி விலங்கினாரே பிறப்பிடைப்போற்றி எனப்படுவார் எனவும் பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டு எனவும் வரும். செய்யுளுள் அ.ஃ.றிணை முடிபின எனவே வழக்கினுள் இரு முடிபும் கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டு:

அரசனும் யானையும் வீரரும் களம்புக்கனர் எனவும் இவ்வூர் மக்களும் சோலையும் நீரும் யாவும் இனிய எனவும் வரும்.

எண்ணப்படுதற்கண் யாவும் பொருட்பகுதியாய் அடங்கலின் அ.ஃ.றிணை முடிபின எனக் கொண்ட தொல்லோர் மரபினை ஆசிரியர் செய்யுள் முடிபாகக் கூறினார்.

**பலபொருள் ஒருசொல் வகைகள்:**

வினைவேறு படுஉம் பலபொரு ளொருசொல்

வினைவேறு பாடப் பலபொருளொருசெல் என்று

ஆயிரு வகைய பலபொரு ளொருசொல் ---- 52

வினையான் வேறுபடும் பலபொருளொடு சொற்கள் வினையான் வேறுபடாத பலபொருளொரு சொற்கள் என அவ்விரு வகையவாம் பலபொருளொரு சொற்கள்.

எடுத்துக்காட்டு:

திரை பரவிற்று (நீரலை), திரை அவிழ்ந்தது (திரைச்சீலை) இவை வேறுபடுவினை, திரை எழுந்தது, வேறுபடாவினை. மாபூத்தது (மரம்), மாஓடிற்று (விலங்கு) இவை வேறுபடுவினை மாவீழ்ந்தது வேறுபடா வினை.

**வினை வேறுபடும் பலபொருள் ஒருசொல்:**

அவற்றுள்,

வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்

வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்

தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே --- 53

மேற்கூறிய இரண்டனுள் வினையான் வேறுபடும் பலபொருளொரு சொல் அவ்வப் பொருளை வேறுபடுத்தற்குரிய வினையானும் இனத்தானும் சார்பானும் பொருள் தெரியும் நிலைமைக்கண் இதுவாவது இது எனத் தெரியுமாறு பலப்பட நிற்கும்.

எடுத்துக்காட்டு:

மா பூத்தது வினையான் மரமென்பது புலப்பட்டது. மாவும் மருதும் ஓங்கின. இனத்தான் மரபென்பது புலப்பட்டது. வேனில் பிறந்தது இனி மாவிற்குக் காவல் வேண்டும் என்பது சார்பால் மரம் என்பது புலப்பட்டது. அக்காலத்து அது பயன் தருமாகலின் மா பாய்ந்தது விலங்கு வினை மாவும் யானையும் தேரும். இனம் கவசம் பூண்டு வந்தான் மாவைக் கொணர்க என்புழிச் சார்பு. இனமாவது இயற்கையானும் செயற்கையானும் ஒரு குழுவாய் அமைதற்கு இயைபுடைய பொருள். சார்பாவது நிகழ்ச்சியானும் சூழலானும் ஒருவாற்றான் இயைபுடைய பொருள்.

ஒற்றென முடித்தலான்பாற் பொதுவாக நிற்கும் அஃறிணை இயற்பெயர்களும் உயர்திணைப் பன்மைப் பெயர்களும் வேறுபடுவினை முதலியவற்றான் ஒருபாலை வரைந்து சுட்டுதல் கொள்க.

எடுத்துக்காட்டு:

இப்பெற்றம் உழுதது ஆண், இப்பெற்றம் கறக்கும் பெண், இவ்யானை மதங்கொண்டது ஆண், இவ்யானை வயாவுற்றது பெண், இம்மக்கள் வேட்டையாடினர் ஆண், இம்மக்கள் கிள்ளை ஒப்பினர் பெண் என வரும்.

**வினைவேறபடாப் பலபொருள் ஒருசொல்:**

ஒன்றவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங்கியலும் --- 54

ஒன்றுபடும் வினைப்பகுதியான் பலவற்றொடும் பொருத்தி வரும் வினையான் வேறுடாத பலபொருளொருசொல் ஆராயுங்கால் இதுவாவது இது என்று ஆங்குக் கிளக்கப்பட்டு வரும்.

எடுத்துக்காட்டு:

மரமா வளர்ந்தது, பரிமா வளர்ந்தது, முல்லைக்கொடி அசைந்தது, மீன்கொடி அசைந்தது எனவரும். இனி பரவாக்கொக்கு, பாயா வேங்கை, பூவா வேங்கை எனச் சிறப்பு வினையை மறுத்துக் கூறுதலும் கிளந்து கூறுதலாய் அடங்குமென்க.

**தெரித்து மொழி கிளவி:**

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி --- 55

சில பொருட்குப் பொதுவாகிய சொல்லினை ஒருபொருளைக் குறித்துக் கூறுவோன் அக்கூற்றினை இன்னது எனத் தெரிவிக்கும் மொழியோடு கூறுக.

குன்று என்பது யானை, ஆண், மரம், புல் முதலியவற்றின் இளமைப்பெயர் ஆதலின் கன்றினைப் போற்று, கன்றிற்கு நீருட்டுக எனப் பொதுவில் கூறாமல், ஆண்கன்று, மாங்கன்று எனவும் ஏறு வந்து எனப்பொதுவிற் கூறாமல் ஆனேறு வந்தது,

அரியேறு வந்தது எனவும் சேவல் என்பது பறவைகட்குரிய ஆண்பாற் பொதுப் பெயராகலின் சேவலைக் கொணா எனப்பொதுவிற் கூறாமல் கோழிச் சேவல், குயிற் சேவல், அன்னச் சேவல் எனவும் இவ்வாறே கோழிப்பெடை, மயிற்பெடை எனவும் தெரித்து மொழியாற் கிளக்கப்பட்டு வரும்.

**குடிமை முதலான உயர்திணைச் சொற்கள்:**

குடிமை ஆண்மை இளமை மூப்பே

அடிமை வன்மை விருந்தே குழுவே

பெண்மை அரசே மகவே குழவி

தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி

காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று

ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ

அன்ன பிறவும் அவற்றொரு சிவணி

முன்னத்தின் உணரும் கிளவியெல்லாம்

உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்

அ்.றிணை மருங்கிற் கிளந்தாங்கியலும் ---- 56

குடிமை முதலாக விறற்சொல் ஈறாகக் கூறப்பெற்ற அப்பதினென் சொற்களும் உளப்பட அவை போல்வன பிறவும் அவற்றொரு பொருந்தித் தொக்குச் சொல்லுவோன் குறிப்பினான் உயர்திணைப் பாங்கினவாய் நிலைபெற்றனவாயினும் அவை அ்.றிணையிடத்தவாய்க் கிளக்கப் பெற்று அ்.றிணையாக நடைபெறும் என்றது: குடிமை முதலாயவை பொருளான் உயர்திணைப் பாங்கின எனினும் சொல் முடிபான் அ்.றிணையாயே நிகழும்.

**காலம் முதலான உயர்திணைச் சொற்கள்:**

காலம் உலகம் உயிரே உடம்பே

பால்வரை தெய்வம் வினையே

பூதம் ஞாயிறு திங்கள் சொல்என வரூஉம்

ஆயீ ரைந்தொடு பிறவும் அன்ன

ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்

பால்பிரிந் திசையா உயர்திணை மேன ----- 57

காலம் முதலாகச் சொல் ஈறாகக் கூறப்பெற்ற அப்பத்துச் சொற்களோடு அத்தன்மையனவாகிய பிறவுமாய்த் தெய்வஞ்சுட்டிய பெயராக அவ்விடத்து வரும் சொற்கள் எல்லாம் உயர்திணை மருங்கினவாய்ப் பால் பிரித்திசைக்க மாட்டா அ∴றிணையாயே முடியும்.

காலம் என்றது காலக் கடவுளை, உலகம் என்றது நிலத் தெய்வத்தை, உயிர் என்றது உயிர்க்கிழவனை உடம்பு என்றது தெய்வப் படிமத்தைப் பால்வரை தெய்வம் என்றது கந்தழியை அ∴து ''அவன் அவள் அது'' எனப்பாற் பொதுமையாக நிற்றலின் கந்தழி பால்வரை தெய்வம் எனற்து கந்தழியை அ∴து ''அவள் அவன் அது'' எனப்பாற் பொதுமையாக நிற்றலின் கந்தழி பால்வரை தெய்வம் எனப்பட்டது.

நின்றாங் கிசைத்தல் இவண் இயல்பின்றே ---- 58

அ∴றிணை மருங்கிற் கிளந்தாங்கியலும் எனப்பட்ட சொற்களும் பால் பிரிந்திசையா உயர்திணை மேன எனப்பட்ட கிளவிகளும் கூறப்பட்ட இவ்வடிவான் நிற்குமிடத்து உயர்திணையாக இசைத்தல் இலக்கணமாதல் இல்லை அ∴றிணையாயே இசைக்கும்.

**ஈறு திரிந்து உயர்திணை முடிபு கோடல்:**

இசைத்தலும் உரிய வேறிடத் தான ---- 59

மேற்கூறிய சொற்களும் கிளவிகளும் வேறு நிலைமைக்கண் உயர்திணையாய் இசைத்தற்கும் உரியவாம்.

உம்மை எதிர்மறை இடம் என்றது நிலையை வேறுநிலையாவது ஈறு திரிந்து வேறுபடுதலும் முழுதுந் திரிந்து வேறுபடுதலுமாம்.

எடுத்துக்காட்டு:

குடிமையன் வந்தான், பெருந்திறலோன் வென்றான் எனவரும் இவை ஈறு திரிந்து உயர்திணையாயிசைத்தன. நிலமகள் செழித்தாள், நாமகள் அருளினாள் எனவரும்.

**அடைமொழி இனம் செப்பல்:**

எடுத்த மொழிஇனஞ் செப்பலுமு உரித்தே ----- 60

ஒருபொருளைப்பற்றிச் செப்பாக மொழிந்தசொல் அதற்கு இனமான பொருளை ஒருங்கு உணர்த்தற்கும் உரித்தாகும்.

உம்மையான் இனம் செப்பாமைக்கும் உரித்தாகும் எனக். இனப்பொருட்கருத்து உள்ள இடத்தன்றி இப்பொருட்பேறு நிகழாதாதலின் பிறபொருள் என்னாது, இனம் செப்பலும் என்றார்.

எடுத்துக்காட்டு:

ஈகை புகழைத் தரும், கல்வி அறிவைப் பெருக்கும், அளவறிந்துண்பான் இன்புறும் என்ற வழி கூறுவோனுக்கு இனக் கருத்தை உணர்த்தலும் கருத்தாயின்,ஈயாமை இகழைத்தரும், கல்லாமை அறிவைச் சுருக்கும் கழிபேரிரையான் துன்புறும் என்னும் பொருள் உடன்தோன்றி நிற்கும்.

**பன்மை சுட்டிய சினைநிலைப் பெயர்:**

கண்ணும் தோளும் முலையும் பிறவும்

பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி

பன்மை கூறும் கடப்பா டிலவே

தம்வினைக் கியலும் எழுத்தலங்கடையே --- 61

கண்முதலாயினவும் அவைபோல்வன பிறவுமாக இருதிணையிடத்தும் பன்மைப் பொருளாயே வரும் உருப்புப்பற்றிய பெயர்சொற்கள், தமக்கொத்த பன்மை வினையோரு முடிதற்குரிய எழுத்துப் பெறுதல் அல்லாத இடத்துப் பன்மை வினையோரு கூறும் யாப்புறவு உடையன அல்ல.

எடுத்துக்காட்டு:

கண் நன்று, தோள் நன்று, கண் பெரிது, தோள் வலிது, எனவரும். தம் வினைக்குரிய எழுத்தாகிய கள் என்பதனொரு கூடிவரின் கண்கள் நொந்தன – முலைகள் எழுந்தன தோள்கள் வலியன என வரும்.

**இயலின் தொகுப்புரை**

தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களை உடையது. அதில் இரண்டாவதாக இடம்பெறுகின்ற சொல்லதிகாரத்தின் வரலாறு கிளிவியாக்கம் என்ற இயலில் இருந்து தொடங்குகிறது.

மக்களைக் குறிக்கின்ற சொல் உயர்திணை. மக்கள் அல்லாத பிறவற்றைக் குறிக்கின்ற சொல் அ.்.றிணையாகும்.

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் உள்ளிட்டவைகளுக்கான வேறுபாட்டினை அறிந்துகொண்டு தொடரமைக்கும் முறை முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

வினா-விடை, வழக்கு முறைகள், சுட்டு முதலானவை கிளவியாக்கத்தில் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றைப் பற்றிய புரிதல் உண்டாகும்போது சொல்லிணக்க வரலாற்றை எழுதத் தொடங்க முடியும்.

**அருஞ்சொற்பொருள் விளக்கம்**

1. கிளவி – சொல்
2. ஆடுஉ – ஆண்பாலைக் குறிக்கின்ற சொல்
3. ஈறு - இறுதி
4. சினை – உறுப்பு
5. ஆக்கம் - உருவாதல்

**தன்மதிப்பீட்டு வினாக்கள்**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. “ள∴கான் ஒற்றே ……………. அறிசொல்”

அ) மகடூஉ ஆ) ஆடூஉ இ) விலங்கு ஈ) மக்கள்

2. “ செயற்கைப் பொருளை ……………. கூறல்”

அ) பெயரோடு ஆ) ஊக்கமோடு இ) ஆக்கமோடு ஈ) வினையோடு

3. “ன∴கான் ஒற்றே ………………… அறிசொல்”

அ) மகடூஉ ஆ) ஆடூஉ இ) விலங்கு ஈ) மக்கள்

4. “இயற்கைப் பொருளை ……….. கிளத்தல்”

அ) மற்றெனக் ஆ) அன்றெனக் இ) இன்றெனக் ஈ) இற்றெனக்

5. திரை என்ற சொல்லின் பொருள் என்ன?

அ) கடல் ஆ) காற்று இ) உடல் ஈ) உறுப்பு

**விடைகள் :**

1. அ) மகடூஉ
2. இ) ஆக்கமோடு
3. ஆ) ஆடூஉ
4. ஈ) இற்றெனக்
5. அ) கடல்

**குறுவினாக்கள் - நெடுவினாக்கள்**

1. சொற்கள் திணை, பால் அடிப்படையில் எவ்வாறு பாகுபாடு செய்யப்பட்டுள்ளன?

2. திணை, பால் இயைபு பற்றிய கருத்தினைச் சான்றுடன் விளக்குக.

3. வழு எத்தனை வகைப்படும்? அவையாவை?

5. செப்பு, வினா ஒவ்வொன்றும் எத்தனை வகைப்படுமா? அவையாவை?

6. செப்பு வழுவிற்கும் வினாவழுவிற்கும் சான்று தருக.

7. “வினாவும் செப்பே வினா எதிர் வரினே” விளக்கம் தருக.

8. வண்ணச் சினைச்சொல் - விளக்குக

9. சுட்டு முதலாகிய காரணக்கிளவியை விளக்கிச் சான்று தருக.

10. சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவி விளக்குக.

11. பொதுப்பிரி பால்சொற்கள் யாவை? அவை எவ்வாறு வரும்.

12. “வேறுவினை பொதுச்சொல் ஒருவினை கிளவார்” -இந்நூற்பாவை விளக்குக.

**துணைநின்ற நூல்கள் :**


1. தொல் - சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி

2. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - தமிழண்ணல் உரை, மீனாட்சி புத்தக நிலைய வெளியீடு –


**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள்**

1. **Tamil Heritage Foudation – www.tamilheritage.org<http://www.tamilheritage.org>**
2. **Project Madurai – www. Projectmadurai.org**
3. **Tamil virtual University Library – www.tamilvu.org**
4. **Tamil Books on line – books.tamilcube.com**
5. **Catalogue of the tamil Books in the library of British Congress archive.org**

## அலகு – 2

## வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு

### நோக்கங்கள் :

- தமிழ்ச்சொற்களின் அமைப்பு, அவற்றின் செயல்பாடுகளைத் தொல்காப்பியத்தின் வழி அறிந்துகொள்ளுதல்

- வேற்றுமை உருபுகளும் அவை பயின்று வருகின்ற இடங்களையும் அறிந்துகொள்கின்றபோது முறையான சொற்றொடர் அமைப்பை உருவாக்க முயலுதல்
- தொல்காப்பியர் கூறுகின்ற வேற்றுமை உருபுகள் மயங்கி வருகின்ற இடங்களை அடையாளப்படுத்துவதன்வழி சொல்லிலக்கணக் கோட்பாட்டை உருவாக்குதல்.
- விளி வேற்றுமைக்கு உருபு இல்லை. திரியும்போது ஈறு திரிதல் முதலான மூன்று மாற்றங்களைக் கொண்டு நிகழும்.

**வேற்றுமையின் வகை:**

வேற்றுமை தாமே ஏழென மொழிப ---- 62

பெயர்ப்பொருள் எய்தும் வேற்றுமை ஏழென்று கூறுவர் ஆசிரியர். அவையாவன, பெயர் எழுவாயாகிய அ∴து இடம் ஈறாக எய்தும் வேறுபாடுகளாம். தாம் ஏ என்னும் இடைச்சொற்கள் அடிநிரப்ப வந்த அசையாம்.

விளிகொள் வதன்கண் விளியொடு எட்டே --- 63

விளிகொள்வதாகிய பெயர்க்கண் தோன்றும் விளி வேற்றுமையொடு வேற்றுமை எட்டாகும்.

**வேற்றுமையின் பெயரும் முறையும்:**

அவைதாம்,

பெயர் ஐ ஒடு கு

இன் அது கண் விளி என்னும் ஈற்ற ---- 64

மேல் எட்டே எனக் கூறப்பட்ட வேற்றுமைகள் தாம் பெயர் ஐ, ஒடு, கு, இன், அது, கண் விளியென்னும் ஈற்றனவாம்.

இப்பெயரானே இவ்எட்டு வேற்றுமைகளும் சுட்டி வழங்கப்பெறும். இதனை, அன்றி அனைத்தும் பெயர்ப்பயனிலையே ஐயெனப் பெயரிய, ஒடுவெனப் பெயரிய என ஆசிரியர் ஆளுமாற்றான் அறிக. ஈண்டு நிறுத்த முறையானே பின்னர் எண்ணுப்பெயரான் இவற்றை வழங்குதற் பொருட்டு இங்ஙனம் நிரல் செய்யப்பெற்றன.

இவற்றுள் தமக்கென உருபுகளில்லாத முதல் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் பொருளானும் ஏனைய வேற்றுமைகள் உருபானும் பெயர் பெற்றன.

**முதல் வேற்றுமை பெயர்தோன்று நிலையே:**

அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே --- 65

மேற்கூறிய எட்டனுள் முதல் வேற்றுமையாவது பெயர்ப்பொருள் தான் தனித்துத் தோன்றி நிற்கும் நிலைமைத்தாகும்.

தனித்துத் தோன்றுவதாவது பொருட்பெயர்க் குழுவினின்று பிரிந்து வினை முதலாய் நிற்றல். நிற்கும் நிலைமையாவது அறுவகைப் பயனிலை கோடற்கும் பிற வேற்றுமை உருபுகளை ஏற்று வேறுபாடுறுதற்கும் உரியதாக நிற்றலாம். ஒருபெயர் முதல் வேற்றுமையாய்ப் பயனிலை கொள்ளுங்கால் தன்வடிவு திரியாமலும் ஏனைய உருபுகளை ஏற்குங்கால் வடிவு திரிந்தும் நிற்கும்.

எடுத்துக்காட்டு: நம்பி – சாத்தன் - மக்கள் - நிலம் - என வரும். இவை பெயர் தோன்றிய நிலையாய் நிற்றலாம். நம்பி வந்தான், சாத்தன், நல்லன். மக்கள், வாழ்வார், நிலம் வலிது, இவை பயனிலை கொண்டு நிற்றல். நம்பியைக் கண்டேன், சாத்தனைப் பார்த்தான், இவை வடிவு திரிந்து நிற்றல். நம்பியை, நம்பியோடு, நம்பிக்கு,

நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ, எனப்பிற உருபுகளொடும் கூட்டிச் கண்டுகொள்க. எழுவாய் எனினும் வினை முதல் எனினும் பெயர் வேற்றுமை எனினும் முதல் வேற்றுமை எனினும் ஒக்கும்.

**எழுவாய் வேற்றுமை ஏற்கும் பயனிலைகள்:**

பொருண்மை சுட்டல் வியங்கொள் வருதல்

வினைநிலை உரைத்தல் வினாவிற் கேற்றல்

பண்புகொள வருதல் பெயர்கொள வருதலென்று

அன்றி யனைத்தும் பெயர்ப்பய னிலையே ----- 66

பொருண்மை சுட்டல்...... பெயர் கொள வருதல் ஆகிய அவ்வனைத்தும் பெயர் வேற்றுமை கொள்ளும் பயனிலைகளாம். பெயர் என்றது மேலைச் சூத்திரத்துக் கூறிய எழுவாயினை, பயனிலை என்றது முடிக்குஞ் சொல்லை என்று "என்பது" எண்ணிடைச்சொல்.

1. பொருண்மை சுட்டல் என்பது எழுவாயாக நிற்கும் பெயர்ப் பொருளின் பண்பு செயல் முதலியவற்றைச் சுட்டாமல் அதன் உண்மைத் தன்மையை மட்டும் சுட்டி நிற்றலாம். உண்மைத் தன்மையாவது சாதித் தன்மை.

எடுத்துக்காட்டு:

ஆவுண்டு, மலை உண்டு, குடம் உண்டு என வரும். காணப்படும் ஆவும் மலையும், குடமும் ஆகிய பொருள் அழியினும் அவற்றின் தன்மை அழியாது நிற்றலின் பொருள் என்னாது பொருண்மை என்றார். 2. வியங்கொள வருதல் என்பது ஏவலைக் கருதாது அப்பொருண்மைத்தாகக் கூறவருதல்.

எடுத்துக்காட்டு:

ஆ வாழ்க, சாத்தன் வாழ்க, வேந்தன் வெல்க, இறைவன் அருள்க, என வரும். இவை ஏவல் கண்ணியவாயின் எட்டாம் வேற்றுமை ஆதலன்றி மதல் வேற்றுமையாகா என அறிக. நீ – நீயிர் என்னும் முன்னிலைக் பெயர்க்கண் நீ செல்க – நீயிர் வருக, எனவரின் அவ்வியங்கோள் ஏவல் கண்ணியதாம் அவை எழுவாயாகாமையும், ஆண்டுச் சாத்தா, சாத்திர் என்னும் விளிப்பெயர் மறைந்து நிற்கின்றமையும் அறிக.

3. வினைநிலை உரைத்தல் என்பது காலம் வெளிப்படத் தோன்றும் புடை பெயர்ச்சி வினையான் வருதல்.

எடுத்துக்காட்டு:

ஆகிடந்தது, சாத்தன், வந்தான் நீ, உண்டாய், யான் வருவேன் என வரும். 4. வினாவிற்கேற்றல் என்பது ஏற்புடைய வினாப்பெயரான் வருதல். எடுத்துக்காட்டு: ஆயாது?, சாத்தன் யாவன்? எனவும் ஆயாது?, அஃது எவன்? எனவும் வரும்.

5. பண்புகொள வருதல் என்பது பணிபினைச் சுட்டி வினைக் குறிப்பாக வருதல்.

எடுத்துக்காட்டு: ஆகரிது – சாத்தன் இனியன். கொற்றன் நெடியன் என வரும். குணப்பண்பல்லாத உள, இல முதலாகிய வினைக் குறிப்பான் வருதல் அதன் பாற்படும். எடுத்துக்காட்டு: அ உளது, சாத்தன் உளன், ஆ இல்லை, சாத்தன் இலன் எனவரும். இவற்றை வினைநிலை உரைத்தலின் பாற்படுப்பினும் இழுக்காதென்க.

6. பெயர் கொள வருதல் என்பது பிறிதொரு பெயர்ச் சொல்லைப் பயனிலையாகக் கொண்டு வருதல். எடுத்துக்காட்டு: ஆபல, சாத்தன் அவன், எனவரும்.

**தொகைப்பெயர்கள்:**

**தொகைப்பெயர்கள் பயனிலை கொள்ளல்:**

பெயரி னாகிய தொகையுமா ருளவே

அவ்வும் உரிய அப்பா லான --- 67

ஒரு பொருளைச் சுட்டி வரும் பெயர்களானாகிய தொகைச்சொற்களும் உள. அவையும் முதல் வேற்றுமைப் பாலனவாய் நின்று பயனிலை கோடற்கு உரியவாம்.

தொகை மொழி என்னாது பெயரின் ஆகிய தொகை எனற் தனான். அ∴து ஒரு பொருள் குறித்து வரும் பல சொற்களான் ஆன தொகைச்சொல் எனப் து பெறப்படும். வேற்றுமைத் தொகை முதலிய அறுவகைத் தொகைகளையே தொகை மொழி எனல் தொல்லாசிரியர் மரபு. ஆசிரியர் எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய என்பதனால் அவை ஒருசொல் நீர் மைய வாய்நின்று எழுவாயாகியும் பிற உருபுகளை ஏற்றும் பயனிநிலை கோடல் பெறப்படுதலின் ஈண்டுப் பெயரனாகிய தொகை என்றது அவையல்லாமல் பிறிதோராற்றான் வரும் தொகைச் சொல் என்பது புலனாம்.

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி, ஆசிரியன் பேரூர்கிழான், இளங்கண்ணன், சாத்தன், விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார் என்றாற் போலப் பல பெயர்கள் தொக்கு ஒருபொருள் சுட்டி நிற்பனவாம். இவை ஒர்எழுவாயாய்ப் பயனிலை கொள்ளுமாறு, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வாழ்க, வந்தான், யாவன், நெடியான், வள்ளல் எனவரும்.

**தோன்றா எழுவாய்:**

எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி

அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப --- 68

மூவிடத்துப் பெயர்களும் புலனாகத் தோன்றி மேற்கூறிய இலக்கணத்தான் நிற்றல் சிறப்புடையது என்று கூறுவர் ஆசிரியர். புலனாகத் தோன்றுதலாவது ஒலிவடிவு செவிக்கும் வரிவடிவு விழிக்கும் வெளிப்பட நிற்றலாம்.

எடுத்துக்காட்டு: எழுத்தெனப்படுவ… என்ப எனவும், உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே எனவும் வரும். சாத்தன் உண்பானோ என்றவழி, உண்பான் என வழக்கின் கண் எழுவாய் குன்றி வருதல் கண்டு கொள்க.

**பெயரில் உருபு நிற்கும் இடம்:**

கூறிய முறையின் உருபு நிலை திரியாது

ஈறு பெயர்க்காகும் இயற்கைய எனப் ----- 69

அவ்வாறென்ப வேற்றுமை உருபே, எனப் புணரியலுள் முறைமையோடு கூறப்பெற்ற ஐ முதலிய ஆறு உருபுகளும் தத்தம் தன்மை திரியாமல் பெயரின் கண் இறுதியாக வந்து புணர்ந்து நிற்கும் இயல்பினவாகுமெனக் கூறுவார் ஆசிரியர்.

**பெயரின் இலக்கணம்:**

பெயர் நிலைக் கிளவி காலந் தோன்றா

தொழில் நிலை ஒட்டும் ஒன்றலங்கடையே ----- 70

எழுவாய் வேற்றுமையாய் நிலைபெறுதலையுடைய சொற்கள் கலந்தோன்ற நில்லா. அங்ஙனமாதல் வினையினது நிலையைப் பொருந்தும் ஒரு கூற்றுச்சொல் அல்லாதவிடத்து.

வினை நிலையாவது காலம்புணர்ந்து நிற்றல் ஒட்டுதல் - பொருந்துதல். அ∴தாவது வடிவான் ஒன்று பட்டுப் பொருளான் வேறாதல் இதனை வினையாலணையும் பெயர் என்றும் வினைப் பெயர் என்றும் கூறுவர்.

அவையாவன: உண்டான், உண்கின்றான், உண்பான் என்னும் தொடக்கத்தன, அவை உண்டவன் தின்றவன் எனப் பெயர் வடிவுற்றும் நிற்கும். கொல்லன், தச்சன் என்பவை தொழில் பற்றி வரும் இனப் பெயராகலின் ஈண்டைக்கு ஏலா. அவை தொழில் காரணமாக வந்த இயற்பெயர்களேயாம். அவை உண்டான் வாழ்க, உண்டான் தின்றவன் எனப் பெயர் வடிவுற்றும் நிற்கும். கொல்லன், தச்சன், என்பனவை தொழில் பற்றிவரும் இனப்பெயராகலின் ஈண்டைகக் ஏலா. அவை தொழில் காரணமாக வந்த இயற்பெயர்களேயாம். அவை உண்டான் வாழ்க, உண்டான் வந்தான், உண்டானைக் கண்டேன், உண்டானாற் செய்யதத்கும். உண்டானது உடை, உண்டான் கண் அயர்வு, உண்டானே வருக என எழுவாயாயும் பிற வேற்றமைகளை ஏற்றும் வரும்.

**இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும்:**

இரண்டாகுவதே

ஐயெனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல்

எவ்வழி வரினும் வினையே வினைக்குறிப்பென்று

அவ்விரு முதலிற் றோன்றும் அதுவே ---- 71

ஐயெனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல் யாதொரு பெயரிடத்து வரினும் அ.்.து இரண்டாம் வேற்றுமையாம். அ.்.து வினையும் வினைக் குறிப்புமாகிய அவ் இரண்டனது அடிப்படைப் பொருளின் கண் தோன்றிவரும்.

எடுத்துக்காட்டு:

சாத்தன் அறிவைப் பெற்றான் - குடத்தை வனைந்தான், நடத்தலைச் செய்தான் எனவும் குழையை உடையன், பொருளை இலன் எனவும் வரும்.

உண்டான் என்ற வழி உணவு என்னும் பொருள் இன்றேல் இத்தொழில் நிகழாதன்றே? ஆகலின் உணவு ஆயிற்று. எனவே வினைமுதல் நிகழ்த்தும் செயல்

சென்றுபடும் பொருள் எய்தும் வேறுபாடு இரண்டாம் வேற்றுமை என்பது பெறப்படும். செயற்படுபொருள் என்பது செயப்படுபொருள் எனத்திரிந்து இலக்கணக்

குறியீடாயமைந்தது. இதனைச் செய்யப்படும் பொருள் எனக்கொள்ளின் அ.ஃ.து எல்லா வினைகட்கும் எய்தாமையின் குன்றக் கூறலாகும்.

**இரண்டாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள்:**

காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்றா
பெறலின் இழவின் காதலின் வெகுளியின்
செறலின் உவத்தலின் கற்பின் என்றா
அறுத்தலின் குறைத்தலின் தொகுத்தலின் பிரித்தலின்
நிறுத்தலின் அளவின் எண்ணின் என்றா
ஆக்கலின் சார்தலின் செலவின் கன்றலின்
நோக்கலின் அஞ்சலின் சிதைப்பின் என்றா
அன்ன பிறவும் அம்முதற் பொருள
என்ன கிளவியும் அதன்பால என்மனார் ---- 72

காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாக உள்ள இவ்இருபத்தெட்டும் அவை போல்வன பிறவுமாகியவற்றின் அடிப்படைப் பொருளவாகிய எத்தகைய சொற்களும் இரண்டாம் வேற்றுமைப் பலவாகும். என்றா, என்பன எண் இடைச் சொற்கள் இன்யாவும் அசைநிலைப் பொருளாய் நின்றன. ‘‘அம்முதற் பொருள என்ன கிளவியும்’’ என்றது காப்பு முதலாய செயல் நிகழ்தற்கு அடிப்படையான பொருள்களின் பெயர்கள் என்றவாறு.

வேற்றுமை எய்துதல் பொருளாயினும் இவ்வதிகாரத்துக் கூறப்பெறும் இலக்கணம் எல்லாம் சொல் அடிப்படையிற் கூறப்படுதலான் ஒற்றுமை நயத்தான் சொல் மேலேற்றி என்ன கிளவியும் அதன் பால என்றார். உருபு நிற்றல் சொல்லின் கண்ணேயாகலின் அவ்விளக்கம் மேல்வருவனவற்றிற்கொல்லாம் ஒக்கும்.

எடுத்துக்காட்டு:

மன்னன் தன் ஊரைக்காக்கும், சாத்தன் தன் தந்தையை ஒப்பான், தேரை உளரும், இகலை இழக்கும், மரத்தை அறுக்கும், எயிலை இழைக்கும், தலைவியைக் காதலிக்கும், நோயைக் குறைக்கும், கிள்ளையை ஒப்பும் பகைவரை வெகுளும், படையைத் தொடுக்கும் அரசனைப் புகழும், தீயாரைச் செறும், வேலியைப் பிரிக்கும், தீமையைப் பழிக்கும், நட்பினை உவக்கும் பொன்னை நிறுக்கும், மக்களைப்பெறும், கலையைக் கற்கும், நெல்லை அளக்கும், மணியை எண்ணும், உணவை ஆக்கும், மலையைச் சாரும், நெறியைச் செல்லும்,சூதினைக் கன்றும், அழகை நோக்கும், கள்வனை அஞ்சும், காட்டைச் சிதைக்கும், எனவரும். இவற்றிற்கு ஏற்ற எழுவாய் கூட்டிக் கண்டு கொள்க. காத்தல், பேணல், புரத்தல் என்பவை ஒத்த பொருளின ஆதலின் காப்பு வாய்ப்பாடு ஆயிற்று ஏனையவும் அன்ன.

**மூன்றாம் வேற்றுமை உருபும் பொருளும்:**

மூன்றாகுவதே

ஒருவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

வினைமுதற் கருவி அனைமுதற் றதுவெ ----- 73

ஒடுவெனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் யாதொரு பெயரிடத்துவரினும் அது மூன்றாம் வேற்றுமையாம். அது வினை நிகழ்தற்கு அடிப்படைக் கருவியாகிய அத்தகைய காரணத்தை உடையதாய் வரும்.

‘‘எவ்வழி வரினும்’’ என்பது மேலைச் சூத்திரத்தினின்று அதிகரித்தது. கருவியாக நிற்கும் சொல்லை அவ்வுருபு ஊர்ந்து அவ்வேற்றுமையைப் புலப்படுத்தும். இரண்டாம் வேற்றுமை வினை நிகழ்தற்குரிய பொருளிடத்தும் மூன்றாம் வேற்றுமை அவ்வினை நிகழ்தற்குரிய கருவியிடத்தும் தோன்றி நிற்கும் என்றவாறு.

ஈண்டு வினைமுதல் என்றது வினையின் அடிப்படையை மேல் அவ்விருமுதல் என்றாற்போல் ‘‘வினைமுதல்’’ என்றாரெனக் கொள்க. எனவே‘‘வினை முதல் கருவி’’ என்றது வினை நிகழ்தற்கு அடிப்படையான கருவி என்றவாறாம். கருவி என்பது அகக்கருவி, புறக்கருவி, முதற்கருவி, துணைக்கருவி, சாப்புக்கருவி, ஒற்றுமைக் கருவி, வேற்றுமைக் கருவி முதலியவாகப் பல்வகைப்படுதலின் ‘‘அனைமுதற்று’’

என்றார். நோக்கும் முறைமையாற் கருவியே காரணமாகவும் நிற்றலின் வினை முதற்கருவி அனைமுதற்றென்றார். 1. முதல் ஸ்ரீ அடிப்படை 2. முதல் ஸ்ரீ காரணம்.

எடுத்துக்காட்டு:

கொடியொரு துவக்குண்டான் - ‘‘ஊசியொடு குயின்ற தூசும்பட்டும்’’ மனத்தொடுவாய்மை மொழியின் எனவரும். இவை முறையே முதற்கருவி, துணைக்கருவி, அகக்கருவி எனப்படும். கோயில் கற்களாற் கட்டப்பட்டது முதற்கருவி, கோயில் தச்சனாற் கட்டப்பட்டது. துணைக்கருவி, கோயில் அரசனாற் கட்டப்பட்டது நிமித்த கருவி. கண்ணாற் கண்டான் ஒற்றுமைக் கருவி, வாளான் வெட்டினான் வேற்றுமைக் கருவி.

**மூன்றாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள்:**

அதனின் இயறல் அதற்றகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனொ டியைந்த ஒருவினைக் கிளவி
அதனொ டியைந்த வேறுவினைக் கிளவி
அதனொ டியைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னாள் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால் என்மனார் ----- 74

அதனின் இயறல்… இன் ஆன் ஏது, என ஈங்குச் சொல்லப்பட்டனவாய் வருவனவும் அவை போல்வன பிறவும் மூன்றாம் வேற்றுமையின் பாலன என்று கூறுவர் ஆசிரியர்.

‘‘இன்னான் ஏது’’ என்றது இன்னும் ஆனுமாகிய துணையுருபுகளை ஏற்று வரும் ஏதுப்பொருள் என்றவாறு. இதனான் ஒடு உருபேயன்றி மூன்றாம் வேற்றுமைக்கு இன் - ஆன் எனப் வை ஏதுப் பொருட்கண் மாற்று உருபுகளாக வருதல் பெறப்பட்டது. இதனை, ஓம்படைக் கியவிக்கு ஐயம் ஆனும் என ஆசிரியர் ஆளுதலானும் அதனின்

இயறல் என உடம்பொடு புணர்த்து ஓதுதலானும் அறியலாம். ஈங்கு என்றது இவ்விடத்துக் கூறப்பெற்ற கருவிப்பொருள் என்றவாறு என ஈங்குவரூஉம் அன்ன பிறவும் எனக் கூட்டுக.

எடுத்துக்காட்டு:

1. **அதனினியறல்**: மண்ணின் இயன்றகுடம், அறிவின் அமைந்த சான்றோர் எனவரும். மண்ணே குடமாகவும் அறிவே சால்பாகவும் நிற்றலின் அதனின் இயல்தலாயிற்று. இதனை முதற்காரணம் என்ப. இவை இக்குடம் மண்ணானியன்றது. சாத்தன் மண்ணாற் குடத்தைச் செய்தான். இ∴து அறிவினாகிய சால்பு. இவர் அறவினாற் சால்புற்றார் எனவும் தொடர் அமைப்பு வேறுபட்டு வரும் கருவிகளுள் இ∴தொருவகை.

2. **அதற்றகுகிளவி:** வாயான் தக்கது வாய்ச்சி எனவரும் வாய்ச்சி என்பது அதன்வாய் காரணமாக அமைந்த குறியாதலின் அது தகவாயிற்று. இது வாய்ச்சி வாயான் தகவுடையதாயிற்று எனத் தொடர் வேறுபட்டும் வரும். இது கருவிகளுள் பிறிதொரு வகை.

3. **அதன் வினைப்படுதல்:** கொற்றன் நாயாற் கௌவப்பட்டான் என வரும். கௌவுதல் வினை சாத்தன் கண் உறுதலின் வினைப்படுதலாயிற்று. இக்கருவி முன்னையவற்றின் வேறுபட்டது.

4. **அதனின் ஆதல்:** வாணிகத்தின் ஆயினான் என வரும். ஆதலாவது ஆக்கமுறுதல் அ∴தாவது உரு பொருள் நிலைமாற்றம் முன்னர் வறியனாக இருந்த ஒருவன் அந்நிலை நீங்கிச் செல்வனாயினாள் என்பது கருத்தாயின் அ∴து ஐந்தாம் வேற்றுமைக்குரிய ஆக்கமாம்.

ஈண்டு ஆக்கம் சாத்தன் வாணிகம் செய்தமையான் செல்வனாயினன் எனக் காரணப்பொருட்டாய் நின்றது. வினையினிற் ஆக்கம் நிகழாதாதலின் செய்தல் வினையாயிற்று. வாணிகம் செய்தமையான் என்பது வாணிகத்தின் என நின்றது. இ∴து ஒருவகைக் கருவி ஆயுற்று சாத்தன் வாணிகம் செய்தான் அதனாற் செல்வானாயினான் என்னும் இரு தொடர்களை “இன்” உருபு ஒரு தொடராக்கியவாறும் அ∴து ஏதுக்கிளவியாயினவாறும் காண்க.

**5. அதனிற்கோடல்**: காணத்தாற் கொண்ட அரிசி என வரும். கொள்ளப்பட்ட என்பது கருத்து அரிசி பணத்தாற் கொள்ளப்பட்டது. சாத்தன் பணத்தான் அரிசியைக் கொண்டான் என அது கோடற்குக் காரணமாயினமையின் இ∴தொரு கருவி வேறுபாடு ஆயிற்று. பணத்தைக் கொண்டு அரிசியை வாங்கினான் என்பது இதன் புறநிலைத் தொடர் கொண்டு என்பது சொல்லுருபாக வரும்.

**6. அதனொடு மயங்கல்:** பாலொடு தேன் மயங்கிற்று என வரும். ஈண்டுத் தேன் தன் தன்மை திரிந்து வேறுபட்டமை கொள்க. மயக்கமாவது ஒன்றுபடுவது கலப்பு என்பது பின்னர்ப் பிரித்தற்கு ஏற்பக் குழுமுவது. ''விசும் பொடைந்தும் கலந்த மயக்கம்''என்பது காண்க. தேன் மயங்கற்குப்பால் கருவியாக நின்றது இதுவும் ஒருவகைக்கருவி வேறுபடாயிற்று. பாலொடு தேனைக் கலந்தான் என்பது உருபு மயக்கமாய் ஏழாவதன் பொருளாம். அதனான் எண்ணொடு எள்ளோடு விராய அரிசி எனக் காட்டுதல் நிரம்பாமையறிக.

**7. அதனொடு இயைந்த ஒருவினைக்கிளவி:** அரசனொடு இளையர் வந்தார் கணவனொடு மனைவி வந்தாள் என வரும். இளையரும் மனைவியும் வருவதற்குக் காரணம் அரசனும் கணவனுமாம். வருதல் வினை அரசற்கும் கணவற்கும் அமைதலின் ஒருவினை ஒடு எனப்பட்டது. கருவியுள் இ∴தொருவகை.

**8. அதனொடு இயைந்த வேறுவினைக்கிளவி**: காவொடு அறக்குளந் தொட்டான் என வரும். குளந்தொடுதற்குக் காரணம் காவளர்தத்ற்காகலின் கா, கருவியாயிற்று. தொடுதல் குளத்திறகின்ற காவிற்குச் சேராமையின் வேறுவினை ஒடுவாயிற்று இ∴தொருவகைக் கருவி.

மலையொரு பொருத மால்யானை எனப் தனைக் காட்டி மலையொடு பொருதல் யானைக்கல்லது மலைக்கினன் மயின் வேறுவினை ஒடு என்பார் உரையாளர். ஆசிரியருக்கு அது கருத்தாயின் அதனொடு இயையாத்தனி வினைக் கிளவி என்பர். இத்தகையன அன்ன பிறவும் என்பதனுள் அடங்குமென்ப. பொருதல் வினைக்கு மலை இடமாகவும் ஏதுவாகவும் அமைதலின் மூன்றாவதற்குரியதாகக் கொள்ளப்படும்.

**9. அதனொடு இயைந்த ஒப்பல் ஒப்புரை:** பொன்னோடு இரும்பனையர் நின்னொடு பிறரே எனவும் விலங்கோடு மக்களனையர் இலங்குநூல் கற்றாரொடேனையவர் எனவும் வரும்.

பொன்னும் இரும்பும் தம்முள் ஒத்தன அல்ல ஆதலின் ஒப்பல்லாத எனவும் அவை இணைந்து பிறிதோர் இணைக்கு உவமமாக வருதலின் ஒப்புரை என்றும் கூறினார். அவற்றின் இயைபு உவமை கூற்றுக்கு காரணமாக அமைதலின் இ∴து ஒரு வகை கருவி ஆயிற்று.

இன் ஆன் ஏது - இன்னும் ஆனும் ஆகிய மாற்று உருபுகளை ஏற்று ஏதுப்பொருளில் வருவன. அவை கல்வியிற் பெரியன் கம்பன், பனியின்மையின் குளிரில்லை எனவும் அறிவாற் சிறந்தான் அகத்தியன், புகை உண்மையான் நெருப்புண்மை பெற்றாம் எனவும் பிறவாறும் வரும். ‘‘இன்’’ உருபு ஐந்தாவதற்குரியதாக ஓதப்பட்டமையின் மூன்றாம் வேற்றுமைக்குரிய ஏதுப் பொருளின்கண் அருகியல்லது பயின்றுவாராதென அறிக. ஆனுருபு பயின்று வரும்.

**நான்காம் வேற்றுமை உருபும் பொருளும்:**

நான்காகுவதே

குவ்வெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே --- 75

கு எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் யாதொரு பெயரிடத்து வரினும் அது நான்காம் வேற்றுமையாம். அ∴து எத்தகைய பொருளாயினும் ஏற்கும் நிலையினதாகும்.

எடுத்துக்காட்டு:

அரசன் பாணர்க்குப் பரிசளித்தான். வேந்தன் புலவர்க்கு வரிசை தந்தான் என வரும்.

இயற்கையாகத் தான் கொண்டுள்ளதும் பிறிதொன்றாற் கொண்டதும் கொள்வதும் ஆகிய எல்லாம் அடங்கும் என்பதறிவித்தற்குக் கோடற்பொருள் எனத் தொழிற் பெயராற் கூறாது செய்யும் என்னும் வாய்ப்பாட்டாற் கூறினார். கொள்ளல், ஏற்றல், பெறல், உறல், படுதல், அடைதல் என்பவை இதன் கண் ஒத்த பொருளினவாய் வரும்.

நான்காம் வேற்றுமைக்குரிய ''கு'' உருபு விரிந்து நிற்குங்காலும் ஏனைய வேற்றுமைக்குரிய பொருளொடு மயங்கி வரும் இயல்புமையதாகலின் இதற்குரிய கோடற்பொருளை மிகவும் நுணுகி உணர்தல் வேண்டி எப்பொருளாயினும் என இதனை விளங்க ஓதினார்.

ஆசிரியன் மாணாக்கற்கு அறிவு கொடுத்தான் எனக்கொடுப்போன் பொருளை இழவாமல் கொள்வேன் பெறும் பொருளும், தலைவன் தலைவிக்கு இன்பமளித்தான் எனக் கொடைப்பொருளினிற் ஆண்டுத் தோன்றும் பொருளும்,''அருமறை சோரும் அறிவிலான் செய்யும் பெருமிறைதானே தனக்கு''எனக் கொடுப்போரினிற்த்தானே ஆக்கிக் கொள்ளும் பொருளும் போல்வனவெல்லாம் அடங்க எப்பொருளாயினும் கொள்ளும் என்றார்.

**நான்காம் வேற்றுமைப்பொருளின் பாகுபாடுகள்:**

அதற்கு வினை உடைமையின் அதற்குடம்படுதலின்

அதற்குப் படுபொருளின் அதுவாகு கிளவியின்

அதற்கு யாப்புடைமையின் அதன் பொருட்டாதலின்

நட்பின் பகையின் காதலின் சிறப்பின் என்று

அப்பொருட் கிளவியும் அதன் பால என்மனார் ----- 76

அதற்கு வினையுடைமை முதல் சிறப்பு ஈறாகச் சொல்லப்பட்டனவும் கோடற் பொருளுக்கு உரியவாய் வரும் பிற கிளவிகளும் நான்காம் வேற்றுமைப் பாலவாம். கிளவி எனற்து பொருளை இன் யாவும் அசைநிலைப் பொருட்டாம்.

எடுத்துக்காட்டு: 1. அதற்கு வினையுடைமை: நெல்லுக்கு உழுதான் கரும்பிற்கு உழுதான் என வரும். உழுதலின் பயனை நெல்லும் கரும்பும் கோடலின் இவை கொள்ளும் பொருளாயினவாறும் வினை அவற்றிற்கு உடைமையாயினவாறும் காண்க. நெல்லைப் பெறுதற்கு உழுதான் என்பது பொருளாயின் அதன் பொருட்டு என்பதனுள் அடங்கும்.

இனி சேனாவரையார் வினையாவது உபகாரம் என்று கூறிக் கரும்பிற்கு வேலி என உதாரணம் காட்டுவார் வேலி என்பது வினையாகாமையின் பொருந்தாமை யறிக. வேலியமைத்தான் எனின் பொருந்தும்.

2. அதற்கு உடம்படுதல்:சாத்தன் மணத்திற்கு உடம்பட்டான், அரசன் போருக்கு உடம்பட்டான் என வரும். உடம்பாட்டினை ஏற்பது மனமும் போருமாதலைக் காண்க. உடம்படுதல் - ஒப்புதல் சான்றோர் கொலைக்கு உடம்பட்டார் என்பதும் அது.

3. உரையாளர் சாத்தற்கு மகளுடம்பட்டார் எனக் காட்டுவர். உடம்பாடு உருபேற்ற சொல்லிற்கியையாமையின் அது பொருந்தாமை யறிக. இவ்வாறு வருவன அன்னபிற என்பதனான் முடியும்.

4. ஆதற்குப்படுபொருள்: ஒரு வண்ண ஓவியன் தான் வரைந்த மலர்களைச் சுட்டி இதற்கு நிறம் மஞ்சள் இதற்கு நிறம் நலீம் என்றாற்போலக் கூறுதல் இதன் பொருளாம் படுதல்- ஒத்துரிமையாதல் படு பொருள் வினைத்தொகை நெல்லுக்கு உமியுண்டு - நீர்க்கு நுரையுண்டு என வருவன இதன்கண் அடங்கும். நெல்லும் நீரும் முறையே உமியையும் நுரையையும் இயற்கையாகவே கொண்டுள்ளவை ஆதலின் பட்டபொருளாயின. அம்முறையான் அவை கோடற் பொருள் பயந்து நின்றன.

இதற்குச் சாத்தற்குக் கூறு கொற்றன் என உதாரணம் காட்டுவர் உரையாளர். சாத்தன் உருவாவதற்குக் கொற்றன் ஒரு கூறாக அமையின் நான்காவதாம் இன்றேல் சாத்தனது ஒரு கூறு கொற்றன் சாத்தன் கண் ஒரு கூறு கொற்றன் என ஆறாவதும் ஏழாவதுமாய் மயக்கந்தருமென்க.

5. அதுவாகு கிளவி: ஏற்கும் பொருளும் ஏற்கப்படும் பொருளும் ஒன்றாகிவிடுதல் இதன் பொருளாம். தாலிக்குப் பொன் கொடுத்தான், ஆடைக்கு நூல் தந்தான் எனவரும். பொன்னே தாலியாகவும் நூலே ஆடையாகவும் திரிதலின் அதுவாகு கிளவி என்றார். கிளவி என்றது ஈண்டுப் பொருளை.

6. அதற்கு யாப்புடைமை: யாப்புடைமையாவது இன்றியமையாமை பொருந்தலுமாம் பிணிக்கு மருந்துண்டான், பாடற்கு இசை கூட்டினான் எனவும் கைக்குக் கடகமிட்டான் செவிக்குக் குழைபூட்டினான் எனவும் வரும்.

7. அதன் பொருட்டாதல்: பொருட்டு – நிமித்தம் மழைக்குக் குடை பிடித்தான், பசிக்கு உணவளித்தான், கூழிற்கு வேலை செய்தான், உணவுக்கு அரிசி கொடுத்தான் என வரும். மழை முதலாயவை ஓராற்றான் குடை முதலாயவற்றை ஏற்று நிற்றலின் கோடற் பொருளாயினவாறு காண்க. பசிக்கு உண்டான் என வரின் அஃது மூன்றாவதன் மயக்கமென அறிக.

8. நட்பு: நெருப்புக்கு நெய்வார்த்தான் எனவும், கபிலர்க்கு நட்பினன் பாரி எனவும் வரும்.

9. பகை: நெருப்புக்கு நீர்விட்டான் எனவும் பாம்பிற்குப் பகை மயில் எனவும் வரும்.

10. காதல்: தலைவன் தலைவிக்குப் பூச்சூட்டினான் எனவும், நட்டார்க்குக் காதலன் எனவும் வரும்.

11. சிறப்பு: மனைக்கு விளக்கம் மடவார் எனவும் கல்விக்குச் சிறந்தது செவி எனவும் வரும்.

அப்பொருள் என்றது அன்ன பொருள் என்றவாறு அதனான் போர்க்குப்புணைமன் மனைக்குப் பாழ் வாணுதலின்மை உற்றாற்குரியர் பொற்றொடி மகளிர் அவற்குச் சோறு உண்டு இவற்குப் போக்குண்டு அடியார்க்கு அன்பு செய்தான், என்றாற்போல வருவனவும் கோடற் பொருளாய் வந்தன. பிறவாறு வருவனவும் அறிந்து கொள்க.

**ஐந்தாம் வேற்றுமை உருபும் பொருளும்:**

ஐந்தாகுவேதே

இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

இதனி னிற்றிது என்னும் அதுவே --- 77

இன் எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் யாதொரு பெயரிடத்து வரினும் அது ஐந்தாம் வேற்றுமையாம். இப்பொருளினின்று இத்தன்மைத்து இப்பொருள் என உணர்த்தும். அஃதாவது வேற்றுமை ஏற்ற சொல் ஓர் அளவையாக எல்லையாக நிற்றல் இதன் வேற்றுமை நிலையாகும்.

எடுத்துக்காட்டு:

ஓதலிற் சிறந்தன்று ஒழுக்குடைமை தஞ்சையின் மேற்கு உறையூர். உறையூரின் முக்காவதம் கருவூர் - பழியின் நீங்கினான் பாண்டியன் என வரும்.

**ஐந்தாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள்:**

வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்றா
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
பதுமை பழமை ஆக்கம் என்றா
இன்மை உடைமை நாற்றந் திரிதல்
பன்மை சின்மை பற்றுவிடுதல் என்று
அன்ன பிறவும் அதன்பால என்மனார் ---- 78

வண்ணம் முதலாகப் பற்றுவிடுதல் ஈறாகக் கூறப் பெற்றனவும் அவைபோல் வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைப் பால் எனக் கூறுவர் ஆசிரியர்.

எடுத்துக்காட்டு:

வண்ணம்: காக்கையிற் கரிது களம்பழம் என வரும் ஈண்டு இது வெனச் சுட்டப்பட்டது. காக்கையின் வண்ணத்தைச் காக்கையின் நிறம் தற்கிழமைப் பொருட்டாய் வேறினிற் நிற்றலின் இன் உருபு காக்கைக் கண் நின்றது. களம் பழத்திற்கும் இ.்.தொக்கும் இவ்விளக்கம் பின்வரும் பண்புச் சொற்களுக்கும் கொள்க.

வடிவு: சாத்தனின் நெடியன் கொற்றன் எனவும் கையின் நெடியது கால் எனவும் வரும்.

அளவு : நாழியின் சிறியது உழக்கு எனவும் வானின் அகன்றது நெஞ்சம் எனவும் க.ஃ.சின் நிறைந்தது தொடி எனவும் பத்தின் குறைத்தது ஒன்ப.ஃ.து எனவும் வரும். ஏனைய அளவைகட்கும் இவ்வாறே கொள்க.

சுவை : தேனின் இனியது சிறாரின் மழலை என வரும்.

தண்மை: நீரின் தண்ணியள் என் நெஞ்சமர்ந் தோள் என வரும்.

வெம்மை: தீயின் வெய்யது தேறார் சிறுசெயல் என வரும்.

அச்சம் : மானின் அஞ்சும் இம்மடவரல் எனவும் கயவரின் அஞ்சுவர் கள்வர் எனவும் வரும்.

நன்மை: கற்றலின் நல்லது கேட்டல் என வரும்.

தீமை: கொலையிற்றீயது குரவரை இகழ்தல் என வரும்.

சிறுமை: ஏழ்மையின் சிறுமைத்து இயல்வது கரத்தல் என வரும்.

பெருமை: கல்வியின் மாண்டது கற்றறிந் தடங்கள் என வரும்.

வன்மை: மலையின் வலியது மனத்தின் திண்மை என வரும்.

மென்மை: மலரின் மெல்லியள் இம்மடவரல் என வரும்.

கடுமை: வேலின் கடிதவர் வெஞ்சொல் என வரும்.

முதுமை: கமுகின் முதியது தெங்கு எனவும் இவனின் முதியோன் இவன் எனவும் அதியனின் முதியோள் ஔவை எனவும் வரும்.

இளமை: இவனின் இளையன் இவன் எனவும் இலையின், இளையது தளிர் எனவும் அப்பரின் இளையவர் ஆளுடைய பிள்ளையார் எனவும் வரும்.

சிறத்தல்: ஓதலிற் சிறந்தது ஒழுக்குமுடைமை என வரும்.

இழித்தல்: இரத்தலின் இழிந்தது ஈயாதிவறல் என வரும்.

புதுமை: காலையிற் புதிது கடும்பகல் என வரும்.

பழமை: கனியின் பழையது காய் எனவும் கம்பனிற் பழையவர் கபிலர் எனவும் வரும்.

ஆக்கம்: பாலின் ஆயிற்றுத்தயிர் என வரும். தயிராதற்குப் பால் இடமாக நின்று பின்பு பால் தன் தன்மை நீங்கித் தயிராதலின் நீக்கம் கருத்துப் பொருள் பற்றி நிற்றல் காண்க. தவத்தின் ஆயினான் முனிவன் மது என்பது.

இன்மை: வறுமையின் இன்மை எழுத்தறியாமை என வரும்.

உடைமை: செல்வரின் உடையவர் செப்பமுடையார் என வரும்.

நாற்றம்: சாந்தின் நறியது தாழை என வரும்.

தீர்தல்: பசியிற்றீர்ந்தான் பாணன் எனவும் ஊரிற்றீர் தான் ஒற்றன் எனவும் பழியின் நீங்கினான் பாண்டியன் எனவும் மலையின் வீழும் அருவி எனவும் வரும்.

பன்மை: யானையிற் பலவாம் பரிமா என வரும்.

சின்மை: பரிமாவிற் சிலவாம் படைக்களிறு என வரும்.

பற்று விடுதல்: காமத்தின் பற்று விட்டான் மனை வாழ்க்கையிற் பற்று விட்டான் என வரும்.

**ஆறாம் வேற்றுமை உருபும் பொருளும்:**

ஆறாகுவதே
அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
அன்ன கிளவிக் கிழமைத் ததுவே ---- 79

அது வெனப் பெயர் பெற்ற வேற்றுமைச் சொல் யாதொரு பெயரிடத்து வரினும் அஃது ஆறாம் வேற்றுமையாம் அது தன்னொடு ஒற்றுமைப்பட்ட பொருளானும் தன்னின் பிறதாகிய பொருளானும் இப்பொருளினது இப்பொருள் எனச் சொல்ல நிற்கும் அத்தகைய பொருட்கிழமையை உடையது.

தன்னின் ஆகியதற் கிழமை: ஒன்றுபல குழுமியதும், வேறுபல குழுமியதும், ஒன்றியற் கிழமையும், உறுப்பின் கிழமையும் மெய் திரிந்தாகியதும் என ஐந்து வகைப்படுமாறும்.

பிறிதின் கிழமை: பொருட்கிழமையும் நிலக் கிழமையும், காலக்கிழமையும் என மூன்று வகைப்படுமாறும் பிறவும் வருஞ் சூத்திரத்தான் விரித்துக் கூறப்படும்.

**ஆறாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள்:**

இயற்கையின் உடைமையின் முறைமையின் கிழமையின்
செய்கையின் முதுமையின் வினையின் என்றா
கருவியின் துணையின் கலத்தின் முதலின்
ஒருவழி யுறுப்பின் குழுவின் என்றா
தெரிந்து மொழிச் செய்தியின் நிலையின் வாழ்ச்சியின்
திரிந்து வேறுபடூஉம் பிறவும் அன்ன
கூறிய மருங்கின் தோன்றுங் கிளவி
ஆறன் பால என்மனார் புலவர் ---- 80

இயற்கை முதல் வாழ்ச்சி ஈறாக வருவனவும் திரிந்து வேறுபட்டு வருவனவும் அவை போல்வன பிறவுமாய் மேற்கூறப்பட்ட இலக்கணத்தான் தோன்றி வரும் பொருள்களும் ஆறாம் வேற்றுமைப்பாலன எனக் கூறுவர் ஆசிரியர். திரிந்து வேறுபடுதலாவது கோட்டது நூறு கோடு = சங்கு, நூறு = துகள் என்புழிக் கோடே துகளாக மாறி நிற்றலாம். இங்ஙனம் வடிவு வேறுபட்டால் சாத்தனது செலவு என வினை முதலின் வேறுபாடாகவரின் மெய்திரிந்தாயதற் கிழமை எனப்படும். மெய் - திரிதல் வடிவின்றிச் செயலும் பண்புமாக நிற்றல்.

எடுத்துக்காட்டு: இயற்கை: இயல்பாகப் பெற்றிருக்கும் தன்மை அது சாத்தனது இயல்பு – நிலத்து வலிமை நங்கையது நலம் என வரும். நலம் செய்து கொள்ளப்பட்டதாயின் செயற்கை என்பதன் கண் அடங்கும். இ∴து ஒன்றியற் கிழமையாகிய தற்கிழமை.

உடைமை: பிறர்க்கும் பொதுவான ஒன்றினைப் பொருள் முதலியவற்றான் தனக்குரிமையாகக் கொண்டிருத்தல் அது சாத்தனது பொருள், சாத்தனது ஆடை, சாத்தனது குழை, என வரும். இதனை நிலைமையில் உடைமை என்று கூறுவர். இது பொருட்பிறிதின் கிழமை.

முறைமை: பிறப்புத் தொடர்பான் வரும் உறவுரிமை அது மறியது தாய், மறியது தந்தை. கன்றினது தாய் என வரும். இது பொருட்பிறிதின் கிழமை.

கிழமை: வரலாற்று முறைமையான் தொன்றுதொட்டு ஒன்றற்கு உரிமையாகி வரும் பொருள். அது வேந்தனது செங்கோல் - பாணரது யாழ், முருகனது குறிஞ்சி நிலம். வெள்ளியது ஆட்சி என வரும். இவற்றுள் முன்மைய இரண்டும் பொருட் பிறிதின் கிழமை - பின்னையது நிலப் பிறிதின் கிழமை வெள்ளியது ஆட்சி என்பது காலப் பிறிதின் கிழமை.

செயற்கை: தன் முயற்சியான் வளர்த்துக் கொண்டதும் ஒரு காரணத்தான் பெற்றதுமாம். அது சாத்தனது கற்றறிவு - கபிலரது பலமை அரசனது மாண்பு கம்பரது புகழ் என வரும். இவை திரிபு பற்றி வரும் தற்கிழமை.

முதுமை: இயற்கையுள் ஒரு நிலைமையைக் குறித்து நிற்கும் அது சாத்தனது முதுமை, அறிவினது முதிர்ச்சி என வரும். முதுமை என்பது அதனாலாம் பயனைச் சுட்டி அனுபவம் நிற்றலின் இயற்கையுள்ளும் செயற்கையுள்ளும் அடக்கலாகாமைபற்றிப் பிரித்துக் கூறப்பட்டது. தன்னினம் முடித்தல் என்னும் உத்தியான் கொற்றனது இளமை என இளமைப் பயன் கருதி வருதலும் கொள்க. இது தற்கிழமையுள் ஒன்றியற் கிழமையின் பாற்படும்.

வினை: ஒரு பொருளின் செயல் பற்றி வருவது அது சாத்தனது நடை, சாத்தனது கூத்து – செலவு – பார்வை என வரும். இது மெய் திரிந்தாய் தற்கிழமை.

கருவி: காரியத்திற்கும் துணையாக வருவது அது சாத்தனது எழுதுகோல் - வனை கலத்தது திகிரி என வரும். இது பொருட்பிறிதின்கிழமை.

துணை: ஒன்றனொடு ஒன்றன் இயைபுணர வருவது அது அவனது இணக்கம் அவளது துணை பெட்டையது துணை என வரும். இது பொருட்பிறிதின் கிழமை.

கலம்: எழுதியது ஓலையைக் குறித்து வருவது சிறுபான்மை பொருட்கலம் பற்றியும் வரும். நிலத்தது ஒற்றிக் கலம் அரசனது பட்டோலை, சாத்தனது விலைத்தீட்டு எனவும் பாலது கலம் எனவும் வரும். இது பொருட்பிறிதின் கிழமை.

முதல்: ஒன்றற்காக வகுத்துக்கொண்ட பொருள் அது வணிகரது முதல், ஒற்றியது முதல் என வரும். இது பொருட்பிறிதின் கிழமை.

ஒருவழியுறுப்பு: ஒரு பொருளின் பகுதியாக ஒன்றி நிற்கும் உறுப்பு,யானையது கோடு – புலியது உகிர் - மரத்தது கிளை, ஞாயிற்றினது கதிர் என வரும். இனி ஒருவழியுறுப்பு என வரையாது கூறினமையின் யாதானும் ஒரு வழியான் உறுப்பாக நிற்றலும் கொள்ளப்படும். அது வருமாறு அரசனது படை நாட்டது அரண் என வரும். இவற்றுள் முன்னவை தற்கிழமை. பின்னவை பிறிதின் கிழமை.

குழு: திரட்சி குறித்து நிற்பது அஃது எள்ளது குப்பை, நெல்லது குவை எனவும், படையது குழாம், பறவையது கூட்டம் எனவும் வரும். இவற்றுள் முன்னவை ஒன்று பல குழுமியது. பின்னவை வேறு பல குழுமியது இவை தற்கிழமை.

நிலை: ஒரு பொருளின் அப்பொழுதைய நிலையைக் குறித்து வருவது. சாத்தனது வளமை – கொற்றனது ஏழைமை, பூதனது இயலாமை என வரும். இது தற்கிழமைப் பற்றி நிற்கும். தெரிந்து மொழிச் செய்தி: ஆராய்ந்து மொழியாற் செய்யப்படுதல் செய்தி – செய்யுள் இதனைச் செய்யுட்கிழமை என்றும் கூறுப. கபிலரது பாட்டு – கம்பரது காவியம் எனவும் முருகனது பிள்ளைத்தமிழ் எனவும் வரும். முன்னையவை தற்கிழமை பின்னையது பிறிதின் கிழமை.

வாழ்ச்சி: வாழ்தலாகிய செயல் பற்றி வரும் அது காட்டது யானை - குளத்தது தவளை எனவும். யானையது காடு, தவளையது குளம் எனவும் வரும். இவற்றுள் முன்னவை உருபு தொக்க வழி ஏழாவதனொடு மயங்குமாறு பின்னர்க் கூறுவார் இவை பிறிதின் கிழமை. இவற்றுள் பின்னவை தற்கிழமைப் பொருட்டாகவும் கொள்ளப்படும் என்னை? யானையும் தவளையுமின்றேல் அவற்றிற்கு அப்பெயர் எய்தாமையின் எனக். திரிந்து வேறுபடுதல்: ஒரு பொருள் திரிந்து வேறு வடிவம் பெற்று நிற்றல் அது கோட்டது நூறு எள்ளது சாந்து என வரும்.

அன்ன பிற என்றதனான். சொல்லது பொருள் சாத்தனது ஒப்பம் அழகினது பொலிவு சாத்தனது ஒப்பு என்றாற் போல்வன கொள்க. பிறவும் கிழமைப் பொருட்டாய் வருவனவற்றை ஓர்ந்து கொள்க.

**ஏழாம் வேற்றுமை உருபும் பொருளும்:**

ஏழாகுவதே

கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி

வினைசெய் இடத்தின் நிலத்தின் காலத்தின்

அனைவகைக் குறிப்பிற் றோன்றும் அதுவே --- 81

கண் எனப் பெயர் பெற்ற வேற்றுமைச்சொல் யாதொரு பெயரிடத்து வரினும் அ.்.து ஏழாம் வேற்றுமையாம். அது வினை நிகழிடம், நிலமும், காலமும் என்னும் அவ்வகையான இடப்பொருளின் கண் தோன்றும்.

பகற்குறி இரவுக்குறி என்றாற்போலக் குறிப்பென்பது குறிக்கப்படும் இடத்தை உணர்த்தி நின்றது. நிலமொழிந்த இரண்டும் இடமாகக் குறித்துக் கொள்ளப்படும் எனப் தறிவித்தற்காக இடம் என்னாது குறிப்பு என ஓதினார். எனவே பெயர்ப் பொருளை இடமாக வேற்றுமை செய்தல் ஏழாம் வேற்றுமை என்பது பெறப்படும்.

**ஏழாம் வேற்றுமைப் பொருளின் பாகுபாடுகள்:**

கண்கால் புறம் அகம் உள்உழை கீழ்மேல்

பின்சார் அயல் புடை தேவகை எனாஅ

முன் இடை கடை தலை வலம் இடம் எனாஅ

அனன் பிறவும் அதன்பால என்மனார் ----- 82

கண் முதலாக இடம் ஈறாக ஓதப்பட்டனவும் அவை போல்வன பிறவும் ஏழாம் வேற்றுமைப் பாலன என்று கூறுவர் ஆசிரியர். அதன்பால என்றது அவ்வேற்றுமைக்குரிய இடப்பொருளின் பால் என்றவாறு எனாஅ என்பவை எண் இடைச் சொற்கள்.

காட்சி வகையானும் கருத்து வகையானும் ஒன்றைத் தாங்கி நிற்கும் பொருள் இடமாம். முலையின் கண் இருந்தான் என்புழி மலையின் கண் யாண்டிருந்தான்? எனக் கருதுங்கால் உச்சி - நடு - அகம் - புறம் - அடி முதலிய வகையுள் ஒன்றைச் சுட்டுதல் வேண்டுமன்றோ? அங்ஙனம் சுட்டிக் கூறப்படும் இடம் மலையென்னும் பொதுவிடத்தின் பகுதியாதலின் கண் கால் புறம் முதலிய சொற்கள் இட வேறுபாடுணர்த்தும் பொருளாதல் அறிக. இவற்றை உருபென்று கொண்டார் உரையாசிரியர். உருபே என வரைந்தார் பவணந்தியார் உருபு இடைச் சொல்லாக நிற்கும். இவையாவும் தனித்துப் பொருள் பயந்து பெயராக நிற்குமாறு அறிக.

இவை ஏழாவதன் பொருளாயின் ஊரைக் காத்தான் மண்ணின் இயன்றகுடம் என்புழி உருபின் பின் காத்தல் இயறல் என்னும் அப்பொருட் சொற்கள் விரிந்து வருமாறு போலக் கண் கால் புறமுகம் என்பவை கண்ணுருபின் பின்வரல் வேண்டுமன்றோ எனின்? அற்றன்று நெல்லுக்கு உழுதான் என்புழி, அதற்கு வினையுடைமை என்னும் பொருள் உழுதான் என்னும் வினை காரணமாகவும் காட்டது யானை என்புழி வாழ்ச்சிப் பொருள் அச்சொற்களின் இயைபு காரணமாகவும் பெறப்படுமாறுபோல ஊர்க்கண் செய் என்புழி அவ் இயைபினான் ஊர்ப்பக்கத்தின்கண் செய் உள்ளமையையும் ஆலின்கண் இடந்த ஆ என்புழி ஆலின் கீழ்ப்பகுதிக் கண் ஆ கிடந்தமையும் புலப்படுத்து நிற்குமாதலின் அப்பொருட்சொற்கள் விரிந்து வரல் வேண்டுமென்பது யாப்புடைமை யாகாதென்க. இனி ஊர்க்கால் நிவந்த பொதும்பர், அரசனுழை இருந்தான் என்புழி கால், உழை, என்பவை இடத்தைத் தெளிவுபடுத்தி நின்றமையின் ஆண்டு உருபு விரிதல் வேண்டாதாலையும் அறிக.

இச்சூத்திரத்துக் கூறப்பெற்ற ''கண்'' என்பது உருபு இடைச் சொல்லன்று இடம் உணர்த்தும் பெயர். இதனை அக்கண்ணி விளைந்தது என வழங்கு மாற்றான் அறிக. காணி என்பது அதனடியாகப் பிறந்த உடைமைப் பெயர். தேளம் என்பது இலக்கணத்திற் பயின்று வரும் இடங்குறித்த திரிசொல். அது மறையோர் தேளத்து மன்றல் - கொள்ளார் தேளம் குறித்த கொற்றம், கிழவோள் தேளத்து – கோடாய் தேளத்து எனப்பல கோணங்களில் வருதலின் ''தேவகை'' என்றார். இதற்குத் திசைக்கூறு எனப் பொருள் கூறல் சிறவாமையறிக. ஏனையவும் இங்ஙனம் வகைப்படுமாயினும் அவையெல்லாம் இயற்சொல்லாய் தெளிவு பெற நிற்றலின் உய்த்துணர்ந்து கொள்ள வைத்தார்.

வேற்றுமைப் பொருளை விரிக்குங் காலை

ஈற்று நின்றியலும் தொகைவயிற் பிரிந்து

பல்லா றாகப் பொருள்புணர்ந் திசைக்கும்

எல்லாச் சொல்லும் உரிய எனப் ---- 83

அஃதாவது இது காறும் வேற்றுமை உருபுகள் விரிந்து நின்றவழி எய்தும் வேற்றுமை நிலைகளையும் அவ்வேற்றுமைகளைச் செய்யும் பொருட் பாகுபாடுகளையும் பற்றிக் கூறினார். அவை தொடர் மொழிக்கண் புலப்படும் இலக்கணமாகும். எழுவாய் வேற்றுமை அதற்கு உரியவாம் என்ற தொகை மொழிகள் விரிந்த வழி அவை தொடர் மொழிகளாகுமன்றோ? அவ்வழி இவ்விலக்கணமெல்லாம் அவற்றிற்கு எய்துமாகலின் அவற்றை விரித்துக் கொள்ளும் முறைமை இதுவெண்பதாகும்.

முன்மொழி நிலையலாகத்தொகும் வேற்றுமைத் தொகையிடத்துக் தொக்கு நிற்கும் உருபையும் பொருளையும் விரிக்குங்காலத்துப் பல்லாறாகப் பிரிந்து பொருள் ஒன்றாதற்கேற்பப் பொருத்தி இசைக்கும் எல்லாச் சொற்களும் விரித்தற்குரியன என்று கூறுவர் ஆசிரியர்.

## வேற்றுமை மயங்கியல்

கரும மல்லாச் சார்பென் கிளவிக்கு

உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை ---- 84

மெய்யுறுதல் தொழில் அல்லாத சார்பென்னும் சொற்கு, கண்ணென்னும் ஏழாம் வேற்றுமையும் உரிமையுடைத்தாகும். உம்மையான் ஆண்டும் இரண்டாவது வருதலே சிறப்புடைத்தாம் என்று கொள்க.

கருமல்லாச் சார்பிற்கு ஏழாவதும் உரித்தெனவே கருமச் சார்பிற்கு இரண்டாவதே உரியது என்பது பெறப்படும். கருமச் சார்பாவது துணைச் சார்ந்தான், ஓரைச் சார்ந்தான், அரசனைச் சார்ந்தான், எனத் தொழிற்பாடு புலனாகக் கண்ணுற்று நிற்றலாம். கருமமல்லாச் சார்பாவது, சைவ நெறியைச் சார்ந்தான்,சமண நெறியைச் சார்ந்தான்,எனத் தொழிற்பாடு கருத்துவகையான் புலப்பட நிற்றலாம்.

எடுத்துக்காட்டு:

சைவ நெறிக்கண் சார்ந்தான் என வரும். அரசனது கொள்கை வழி நிற்பது பொருளாயின் அரசன் கண் சார்ந்தான் என வரும். இரண்டாவதற்குரித்தாக ஓதப்பெற்ற ‘‘சார்பு’’ தொழில்,கருத்துவகையான் நிகழுங்கால் உருபேற்ற சொல் இடப்பொருள் தோன்ற நின்றலின் ஏழாவது மயங்கும் என்னாது உரிமையும் உடைத்தே என்றார்.

இ∴து தன் பொருளிற்றிராமல் இரண்டு வேற்றுமைக் கண்ணும் சேறலின் பொருள் மயக்கமாம்.

**உறுப்புப் பெயர்களின் ஐயும் கண்ணும் ஒத்து வருதல்:**

சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்

வினைநிலை ஒக்கும் என்மனார் புலவர் ---- 85

ஒரு பொருளினது உறுப்பு என்னும் நிலையைப் பெற்ற சொல்லக்கு ஏற்ற வினை முடிபாக வருங்கால் இரண்டனுருபும் ஏழனுருபும் ஆண்டு வருவதற்கு ஒக்கும். நிலைவினை என மாறுக.

எடுத்துக்காட்டு:

கண்ணைக் குத்தினான், கண்ணுட் குத்தினான், கிளையை வெட்டினான், கிளையின் கண் வெட்டினான் என வரும்.

குத்தப்படும் பொருளும் வெட்டப்படும் பொருளும் அத்தொழில்கள் நிகழ்தற்கு இடமாகவும் அமைதலின் இரண்டு உருபிற்கும் ஏற்பவனாயின. காத்தல், புகழ்தல் போன்ற ஒவ்வா வினைகள் மயங்காவாதலின் ஒக்கும் வினைகளே கொள்ளப்படுமென்பார். நிலைவினை என்றார் முதல் சினை என்பவை நியதின்றித்தடுமாறும் இயல்பினவாதலின் ஒன்றன் பாற்படுதலை நிலை என்றார். இ∴து உருபும் பொருளும் உடன் மயங்கின மயக்கம். இ∴து நிலைமொழி பற்றிய வரையரையாகலின் வேறு கூறினார்.

**இரண்டாம் வேற்றுமையிடத்தில் ஏழாம் வேற்றுமையும் வருதல்:**

கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே -- 86

கன்றலும் செலவும் ஆகிய தொழிற் சொற்கள் மேற்கூறிய இரண்டு வேற்றுமைக் கண்ணும் ஒத்த வரவினவாம்.

எடுத்துக்காட்டு:

சூதினைக் கன்றினான் - சூதின் கட் கன்றினான் எனவும், நெறியைச் சென்றான்- நெறிக்கட் சென்றான் எனவும் வரும். கன்றுதல் - இவறுதல் சார்பென் கிளவி போலன்றி இவை இரண்டு வேற்றுமைக் கண்ணும் ஒத்த வரவின ஆதலின் ''சார்பென் கிளவிக்கு'' என்பதன் பின்வையாது இதனை ஈண்டு வைத்தார்.

**முதலும் சினையும் வேற்றுமை ஏற்கும் விதம்:**

முதலுக்கு அது வரின் சினைக்கு ஐ வரும்

முதற்சினைக் கிளவிக்கு அதுவென் வேற்றுமை

முதற்கண் வரினே சினைக்கு ஐவருமே ---- 87

முதலும் சினையும் ஒருங்கு வரும் தொடரின்கண் ஆறாம் உருபு முதற்பொருள் இடத்துவரின் சினைக்கிளவியினிடத்து இரண்டாம் உருபு வரும்.

எடுத்துக்காட்டு:

யானையது கோட்டைக் குறைத்தான், மரத்தினது கிளையை முரித்தான் என வரும்.

**முதலுக்கு ஐ வரின் சினைக்குக் கண் வரும்:**

முதல்முன் ஐவரின் கண்ணென் வேற்றுமை

சினைமுன் வருதல் தெள்ளி தென்ப --- 88

மேற்கூறிய முதற்சினை கிளவிகள் அங்ஙனம் ஒருங்கு வருமிடத்து முதற்கிளவிக் கண் இரண்டாம் உருபு வரின் சினைக் கிளவிக்கண் ஏழாவதன் உருபு வருதல் தெளிவுடையதாகும் என்று கூறுவர் ஆசிரியர்.

எடுத்துக்காட்டு:

யானையைக் கோட்டின் கண் குறைத்தான் மரத்தினைக் கிளையின் கண் வெட்டினான்ள ன வரும். செயப்படு பொருள் ஆதல் கருதியும் இடமாதல் கருதியும் யானையைக் கோட்டைக் குறைத்தான் எனவும் யானையின் கண் கோட்டைக் குறைத்தான் எனவும் வருதல் தெள்ளிது அற்றென்றவாறாம்.

சினைநிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும் ஒத்த வரவின என மேற்கூறப்பட்டமையான் முதலொடு கூடி ஒருங்கு வருங்கால் முதற்பொருள் ஏற்கும் உருபிற்கேற்பச் சினைக்கிளவி ஒன்றனை மட்டுமே ஏற்று வரும். என இவ்விரு சூத்திரங்களானும் வரையறை செய்தார். இவற்றை ஒரு சூத்திரமாகக் கூறினும் இழுக்காதென்க. இவை இரண்டும் பொருள் மயங்கங் கூறினவாம்.

**முதலும் சினையும் இடம்நோக்கி உணரப்படும்:**

முதலும் சினையும் பொருள்வேறு படாஅ

நினையுங் காலைச் சொற்குறிப் பினவே --- 89

முதல் என்பதும் சினை என்பதும் பொருளான் வேறுவேறு ஆகா. ஆராயுமிடத்து அவை வேறு வேறாகச் சொல்லப்படும் குறிப்பினவாம்.

அ∴தாவது அரசனது யானையைக் குத்தினான் என்புழி அரசன் குத்தப்படவில்லை என்பது புலனாகும். காரணம் பொருள் இரண்டும் வேறுவேறு ஆதலின் யானையது துதிக்கையை வெட்டினான் என்புழி வெட்டப்பட்டது யானையே யானையும் துதிக்கையும் வேறுவேறல்ல ஆதலின். அரசனைத் தேரின்கண் வெட்டினான் என்பதையும் யானையைக் கோட்டின் கண் குறைத்தான் என்பதையும் அவ்வாறே அறிகிறோம். யானையது கோடு என்னுமிடத்து யானையின் ஒரு பகுதியைச் சினையாகவும் ஏனையவற்றை முதலாகவும் கருதுகின்றோம். யானையது துதிக்கை என்ற வழி முன்னா் முதற்பகுதியாக நின்ற துதிக்கைச் சினையாகவும் சினையாக நின்ற கோடு முதற்பகுதியாகவும் மாறிவிடுகின்றது. ஆதலின் சுட்டி எடுத்துக் கொண்ட பொருளை முதலாகவும் அதன் பகுதிகளைச் சினையாகவும் கருதுகின்றோம்.

மேலும் யானை என்னும் ஒரு பொருளை முதலாகக் கருதுங்கால் அதன் பகுதிகளாகிய தலை உடல் கால் துதிக்கை ஆகியவற்றைச் சினையாகவும்,

துதிக்கையை முதலாகக் கருதுங்கால் அதன், பகுதியாகிய இடை, கடை, நுனி, பக்கம், துளை, புள்ளி ஆகியவற்றைச் சினையாகவும் கூறுகின்றோம்.

**பிண்டப் பெயரும் உறுப்பும் முதலும் சினையும் போல்அமையும்:**

பிண்டப் பொருளும் ஆயியல் திரியாது

பண்டியல் மருங்கின் மரீஇய மரபே --- 90

ஒத்தனவும் வேறானவுமான பொருள்களின் திரட்சியாகிய பிண்டப்பொருளும் மேற்கூறிய இலக்கணத்திற்றிரியாமல் வரும். அவ்வாறு வருதல் பழமையான இலக்கணப் பகுதியிடத்து மருவிய முறையாகும்.

எடுத்துக்காட்டு:

குப்பையது தலையைச் சிதறினான். குப்பையைத் தலைக்கண் சிதறினன் என வரும். குப்பை – குவியல் இயற்கையாக வரையறைப்படாமல் ஒத்தனவும் வேறானவுமான பொருள்களின் செயற்கைத் திரட்சியாதலின் பிண்டப்பொருளை மாட்டெறிந்து கூறினார் என்க.

**ஓடுச்சொல் உயர் பொருளுடன் சேர்ந்து வரும்:**

ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே --- 91

மூன்றாம் வேற்றுமைக்கண் ஏதுப்பொருள் பற்றி வருமெனக் கூறப்பட்ட ஒருவினை ஒடுச்சொல் உயர்ந்த பொருளினிடத்தே வரும். ஒடுச்சொல் என்றது ஒடு என்னும் உருபினை உயர்பு ஆகுபெயர்.

அ∴தாவது ஒருவினையான் முடியும் பொருள்களுள் ஒன்றனை அருள், ஆட்சி, அறிவு, திரு, சிறப்பு முதலியவற்றான் உயர்வாக மதித்தல். (ஏகாரம் தேற்றம்) உயர்பின் வழித்தாய வழியே அ∴து காரணப்பொருட்டாகும் என்பது இதனான் அறிவுறுத்தப்பட்டது.

எடுத்துக்காட்டு:

அரசனொடு இளையர் வந்தார், யானையோடு பாகன் வந்தான் என வரும். நாயோடு நம்பி வந்தான் என இழித்தற்பொருள் மாட்டும் வருமால் எனின்? நம்பியினும்

நாய்க்கு யாதானுமொறு சிறப்புள் வழியே அவ்வாறு வரும். இன்றேல் அ∴து ஒடுஉ_ருபன்று, ஒருங்கு எனனும் பொருள்தரும் இடைச்சொல்லாம்.

**மூன்றும் ஐந்தும் ஏதுப்பொருளில் ஒன்றுடன் ஒன்று மயங்குதல்:**

மூன்றனும் ஐந்தனும் தோன்றக்கூறிய

ஆக்கமொரு புணர்ந்த ஏதுக்கிளவி

நோக்கு ஓரனைய என்மனார் புலவர் ----- 92

மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருளின் கண்ணும் ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருளின் கண்ணும் தெளிவாகக் கூறப்பெற்ற ஆக்கச் சொல்லோடு புணர்ந்து ஊதுக் குறித்து வரும் சொற்கள் கருத்து வகையான் ஒருதன்மையன எனக் கூறுவர் புலவர்.

''ஆதனின் ஆதல்'' எனவும் ''புதுமை பழமை ஆக்கம் என்றா'' எனவும் இரண்டற்கும் உ_ரியதாக ஓதப்பெற்ற ஆக்கச் சொல்லோடு ''இன் ஆன்'' ஏது என மூன்றாவதற்கு ஓதிய மாற்றுருபாகிய இன்னும் ஐந்தாவதற்கு ஓதிய இன் உ_ருபும் வரின் அவை இரண்டு வேற்றுமைகட்கும் ஒத்த நோக்குடையனவாம் என்றவாறு.

ஏதுக்கிளவி எனப் பொதுப்படக் கூறினாராயினும் ஏற்புழிக்கோடல் என்பதனான் இன், ஆன் இரண்டனுள் ''இன்'' உ_ருபே கொள்ளப்படும். என்னை? ஐந்தாவதனோடு ஒத்தது அதுவே யாதலின் எனக் . எனவே இன்னுருபும் ஆக்கச் சொல்லும் ஒருங்குவருமிடத்து இம்மயக்கமாம் என்பது புலப்படும்.

எடுத்துக்காட்டு:

மண்ணின் ஆகிய குடம் - எள்ளின் ஆகிய நெய், பஞ்சியினாகிய நூல் - பாலினாகிய தயிர் என வரும்.

மண்ணே குடமாகவும் - எள்ளே நெய்யாவும் - பஞ்சியே நூலாகவும் - பாலே தயிராகவும் மாறி நிற்றலான் மண் முதலியவற்றைக் காரணமாகக் கருதியவழி மூன்றாவதற்கும், நீக்கமாகிய அளவையைக் கருதியவழி ஐந்தாவதற்கும் பொருத்தி வருமாறு காண்க.

**நோக்கும் அல் நோக்கமும் இரண்டில் ஏதுப் பொருட்டாகும்:**

இரண்டன் மருங்கின் நோக்கல் நோக்கம் அவ்

விரண்டன் மருங்கின் ஏதுவு மாகும் ---- 93

இரண்டாம் வேற்றுமைக்கு ஓதப்பட்ட நோக்கப் பொருளின் மருங்காகிய நோக்கல் நோக்கம் ஏதுக்கிளவி என மேற்கூறப்பட்ட இன்னும் ஆனுமாகிய இரண்டிடத்து ஏதுப் பொருளாகவும் வரும்.

" நோக்கலின் அஞ்சலின்'' என ஓதப்பெற்ற ''நோக்கம்'' கட்பொறியால் நோக்கும் நோக்கமாகும். நோக்கல் நோக்கம் என்பது கருத்தான் நோக்குதலாதலின் அதன் மருங்கினதாயிற்று. உம்மையான் இரண்டாவதன்கண் வருதலே பெரும்பான்மை என்பதும், நோக்கும் நோக்கு இரண்டாவதற்கே உரியதென்பதும் புலப்படும். ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி அதிகாரப்பட்டமையான் ''இன்னான் எது'' என மூன்றாவதற்கு ஓதிய அவ்விரண்டு உருபுகளையும் சுட்டி அவ்விரண்டன் மருங்கின் என்றும் கருவிப்பொருளை நீக்குதற்கு,,ஏதுவும்'' என்றும் கூறினார். இதுவே ஆசிரியர் கருத்தென்பதை ''ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்'' எனப் பின்னர் உருபுகளைவிதந்து கூறுதலான் அறியலாம்.

எடுத்துக்காட்டு:

வானோக்கி வாழும் உயிரெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழுங்குடி என வரும். வானையும் கோலையும் கண்ணான் நோக்கும் உயிரும் குடியும் இடைஈடின்றி அவற்றின் பயனாகிய மழையையும் நீதியையும் கருத்தான் நோக்குதலின் செயப்படுபொருளே ஏதுவாகவும் நிற்பனவாயின எனக் வானும் மழையும், கோலும் நீதியும் வேறு வேறன்மையின் இம்மயக்கம் நிகழ்வதாயிற்றெனக். அதனான் அவை விரியுமிடத்து வானை நோக்கி வாழும், கோலை நோக்கி வாழும் எனவும் வானின் நோக்கி வாழும் வானான் நோக்கி வாழும் கோலின் நோக்கி வாழும் கோலான் நோக்கி வாழும் எனவும் விரியும் எனக். இ்.து உருபும் பொருளும் ஒருங்கு மயங்கின மயக்கம்.

**உயர்திணை உறவுமுறைப் பெயரில் அது கெட்டுத் தோன்றும்:**

அதுவென் வேற்றுமை உயர்திணைத் தொகைவயின்

அதுவென் உருபுகெடக் குகரம் வருமே -- 94

அது என்னும் கிழமைப் பொருள் வேற்றுமை உயர்திணை முறைப்பெயர்த் தொகையின் கண் உருபு விரியுங்கால் அது என்னும் உருபுவிரியாது நான்கன் உருபாகிய குகரம் விரிந்து வரும்.

உயர்திணை தொகை என்றதனான் முறைப்பெயர்த்தொகை என்பதும், வரும் என்பதனான் விரியும் என்பதும் பெறப்பட்டன. கெடுதலாவது ஆண்டுவாராமை.

நம்பி மகன்- நம்பி தந்தை - நங்கை கணவன் நங்கைதாய் என்பவை முறையே. நம்பிக்கு மகன் - நம்பிக்கு தந்தை – நங்கைக்குக் கணவன் நங்கைக்குத்தாய் என விரிந்து வரும். தன்மைப் பெயரும் சுட்டுப்பெயரும் இவ்வாறே எனக்கு மகன், அவனுக்குத் தந்தை, என வரும். முறைப்பெயரல்லா வழியும், அஃறிணையாய வழியும் அதுவென்னும் உருபே விரியும் எனக். நம்பியது குதிரை நங்கையது மயில் எனவும் மறியது தாய், மறியது தந்தை எனவும் வரும்.

பொருள் தடுமாறும் வினைச் சொல் தொடரை இரண்டும் மூன்றுமாகப் பொருள் நிலைக்கேற்ப விரிக்கப்படும்.

தடுமாறு தொழிற் பெயர்க்கு இரண்டும் மூன்றும்

கடிநிலை யிலவே பொருள்வயி னான ---- 95

உருபு தொக்கு நிற்கும் வேற்றுமைத் தொடர் மொழி, தொகை மொழிகளின் கண் தொழிற் சொல் தடுமாறிவரும் பெயர்க்கண் இரண்டாவதும் மூன்றாவதும் வரின் நீக்கப்படும் நிலையின அல்ல. பொருத்து மாற்றான் வரும் என்றவாறு.

புலி கொன்ற யானை அல்லது புலி கொல் யானை என உருபு தொக்க மொழியிடத்துக் கொல்லுதல் தொழில் யானைக்குரிய தாயின் புலியைக் கொன்ற

யானை என இரண்டாவதும் புலிக்குரிய தாயின் புலியாற் கொல்லப்பட்ட யானை என மூன்றாவதும் விரித்து வரும்.

இது வேற்றுமை மயக்கமன்றாயினும் தடுமாறு தொழில் காரணமாக ஒருபெயர் ஒருகால் செயப்படு பொருளாகவும் ஒருகால் கருவிப் பொருளாகவும் மயங்குதலின் இதனை இவ்வியலும் கூறினார்.

பொருள் தடுமாறும் வினைச் சொல்தொடர்கள் தெளிவுதரும் வினை முடிபு கொண்டு வேறுபாடறியப்படும்

ஈற்றுப் பெயர் முன்னர் மெய்யறி பனுவலின்

வேற்றுமை தெரிப உணரு மோரே ---- 96

மேற்கூறிய தடுமாறு தொழிற்றொகையின் கண் ஈறாகிய பெயரின் முன்னர் வந்து பொருள் வேறுபாடுணர்தத்தும் சொற்களான் இப்பெயர் இன்ன வேற்றுமைக்குரிய எனத்தெளித்து கொள்வர் உணரும் இயல்புடையோர்.

புலிகொள் யானை ஓடா நின்றது புலி கொல் யானை சிதைந்தது எனப் பயனிலை கொண்டு முடிந்த வழி ஓடா நின்றது என்பதனால் கொல்லப்பட்டது புலி எனவும் சிதைந்தது என்பதனால் கொல்லப்பட்டது யானைனெவும் தெரிந்தவாறு காண்க.

**ஓம்படை கூறும் தொடர்களில் ஐயும் ஆனும் ஒருதன்மைத்தாய் வரும்:**

ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்

தாம்பிரி விலவே தொகுவரு காலை…..97

உருபு தொக்கு நிற்கும் மொழியிடத்து இரண்டாவதற்கோதிய ஓம்படைச் சொற்கு ஐயருபும் ஆனுருபும் பிரிவிலாய் வரும். அ∴தாவது ஒத்த உரிமையாய் வரும் என்றவாறு.

**வசிப்பதால் வரும் ஆறன் உருபு ஏழன் உருபாதலும் உண்டு.**

ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு

ஏழும் ஆகும் உறைநிலத் தான……..98

ஆறாவதன் பொருளுள் ஒன்றாகிய வாழ்ச்சிக் கிழமைக்கு அது உருபேயன்றி உறையும் நிலமாய வழி ஏழாவதன் உருபும் விரிந்து வரும்

இ∴து உருபு தொக்கு நிற்கும் மொழிக்கண் நிகழும் மயக்கம் என்பது அதிகாரத்தாற் பெறப்பட்டது. அ∴தாவது காட்டு யானை என்னும் தொகை விரியழிக் காட்டது யானை எனவும் காட்டுள் யானை எனவும் விரியும் யானைக்காடு என வாழ்ச்சிப் பொருள் உடைமை பற்றி நிற்பின் யானையது காடு என ஆறாவதே விரியும் என்பது தோன்ற உறைநிலத்தான் என்றார்.

**கோடை ஏற்கும் தொடரில் கு தொக்கு அது வருதலுண்டு**

குத்தொகை உரூஉம் கொடையெதிர் கிளவி

அப்பொருள் ஆறற்கு உரித்து மாகும் ----99

குவ்வுருபு தொக்கு வரும் கொடையை ஏற்றுக் கொள்ளுதலை உணர்த்தும் தொகைமொழி விரியும் வழி நான்காவதற்கு உரித்தாதலேயன்றி ஆறாவதற்கும் உரியதாகும்.

தேவர்பலி என்னும் தொகைமொழி தேவர்க்குப் பலி எனவும் தேவரது பலியெனவும் விரிந்து வரும். தேவர்க்கு நேர்ந்த பலி தப்பாது அவர்க்கு உரிமையாய் விடுதலின் ஆறாவதற்கும் உரியதாயிற்றென்க. தாலிப்பொன் - கபிலர் நட்பினன் எனவரும் நான்கன் தொகைகள் கொடை எதிர் கிளவிகள் அல்லவாதலின் அவைபோல்வன் ஆறற்கு உரியவாகாமையின் உரித்தும் ஆகும் என்றார்.

**அச்சத்தைக் குறிக்கும் தொடரில் ஐந்தும் இரண்டும் மயங்கி வரும்**

அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்

எச்ச மிலவே பொருள்வயி னான ---- 100

நோக்கலின் அஞ்சலின் என இரண்டாவதற்கும் தண்மை, வெம்மை அச்சம் என்றா என ஐந்தாவதற்கும் உரித்தாக ஓதப்பெற்ற அச்சக்கிளவிக்கு உருபு தொக்கு நிற்கும்

மொழிக்கண் ஐந்தாம் உருபும் இரண்டாம் உருபும் குறைவின்றி வரும். எஞ்சுதலில் என்றது ஒன்றின் ஒன்று எஞ்சாது ஒப்ப வரும் என்ற வாறாம்.

விரிந்து நிற்வழி செய்ப்படு பொருளும் நீக்கப் பொருளும் தெரிய சொற்கள் வேறுவேறு நிற்கும். தொக்க வழி ஒரு சொல்லே செய்ப்படு பொருளாகவும் எல்லைப் பொருளாகவும் உருபிற் கேற்பப் பொருள் தருதலின் மயக்க மாயிற்றென்க.

பழியஞ்சும் என்னும் தொகை விரியும் வழிப் பழியின் அஞ்சும் எனவும் பழியை சிறுபான்மை நான்காவது விரிதலும் கொள்க. பழியை ஏற்றுக் கொள்ள அஞ்சும் என்பது பொருள்.அஞ்சும் எனவும் விரியும். புழியின் அஞ்சும் எனபுழிப் பழியினின்று நீங்குதலைக் கருதும் மெய்ப்பாடு அச்சமாம். புழியை அஞ்சும் என்புழிப் பழி தன்னைப் பற்றாமற் பொருட்டுச் செய்யும் செயல் அச்சமாம்.

**உருபும் பொருளும் இங்ஙனம் மயங்குவன தொன்றுதொட்டு வழக்காற்றில் வருவன**

அன்ன பிறவும் தொன்னெறி பிழையாது

உருபினும் பொருளினும் மெய்தடுமாறி

இருவயின் நிலையும் வேற்றுமை யெல்லாம்

திரிபிடன் இலவே தெரியு மோர்க்கே ------- 101

வேற்றுமை மயக்கம் பற்றிமேல் எடுத்தோதப் பெற்றனவேயன்றி அவைபோல்வன் பிறவும் தொல்லோர் தன் இலக்கண மரபு பிழையாமல் உருபானும் பொருளானும் வழவு தடுமாறித் தனதும் பிறிதுமாகிய ஈரிடத்தும் நிலைபெறும் வேற்றுமை மயக்கமெல்லாம், வேற்றுமையின் இயல்பினை ஆராய்ந்தறிந்தோர்க்கு அவை திரிபின் பாலன அல்ல என்பது புலனாம் என்றது வேற்றுமையியலுள் ஓதப்பெற்ற வரையறையை நோக்க மயங்கி வந்தன என்றதல்லது அவை வழுவின அல்ல மொழி மரபுகளே என்றவாறாம்.

**உருபுகள் அடுக்கி வரும் தொடரின் முடிபு**

உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக் கிளவி

ஒருசொல் நடைய பொருள்சென் மருங்கே ----- 102

தொடர்மொழியின் கண் உருபகள் தொடர்ந்து அடுக்கி வரும் வேற்றுமைச் சொற்கள் பொருள் இயைற்து செல்லுமிடத்து அவை ஒரு சொல்நடை போன்றனவாகும்.

தொடர்மொழிக்கண் ஒத்த உருபுகளோ வேறுபட்ட உருபுகளோ தொடர்ந்து அடுக்கி வந்த சொற்க்ள தனித்தனியே முடிக்குஞ் சொற்கொண்டு முடிதல் வேண்டுமென்னும் யாப்புறவிலை, அவை முடிக்குஞ் சொல் ஒன்றனான் முடிதற்குரிய பொருளியைபு உடையாவாயின் அவ்வழி அவை ஒரு சொல் நடைபோன்ற வழக்கினவாம் என்றவாறு ஒரு சொல் நடையை என்பதன் கண் உவம உருபு தொக்கு நின்றது. அங்ஙனம் ஒரு பொருளியைபில்லாவழிப் பலசொல் நடையவாய் அவ்வவற்றிற் கேற்ற முடிக்குஞ் சொல்லோடு தொடர்ந்து முடியும்.

நிலத்தையும் நீரையும் தீமையும் வளியையும் போற்றினர் எனவும் கண்ணனானும் கருத்தானும் நோக்கினாள் எனவும் அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன்கோல் எனவும் வரும். இவை ஒருவகை உருபுகளே அடுக்கிவந்து ஒரு பயனிலை கொண்டன. மரத்தை நுனிக்கட் குறைத்தான் எனவும் சாத்தனைக் கண்களான் வீட்டின் கண் கண்டேன் எனவும் வரும். இவைவேறு உருபுகள் அடுக்கி வந்து ஒரு பயனிலை கொண்டன் யானையது கோட்டைக் குறைத்தான் மனைக்கண் இருந்து நோய்க்கு மருந்தினை உண்டான். அவை பொருள் செல் மருங்கின் இயையாமையின் பல சொல் நடையவாய் ஏற்ற முடிபுகளைக் கொண்டன.

**உருபு விரிந்து நிற்கும் இடங்கள்.**

இறுதியும் இடையும் எல்லா உருபும்

நெறிபடு பொருள்வயின் நிலவுதல் வறயாய்---- 103

பயனிலை கோடற்கண் உருபேற்ற சொற்கள் எல்லாம் கவர்பொருள் படாமல் அவ்வவ் வேற்றுமைக்குரிய செம்பொருள்படுமிடத்துத் தொடர் மொழிக்கண் இறுதி நிற்றலையும் இடைநிற்றலையும் வரையறை செய்யார் ஆசிரியர். யாண்பு நிற்பினும் ஒக்கும் என்றவாறு.

உண்டான் உணவை – துவக்குண்டான் கொடியோடு கொடுத்தான் பாணற்கு வலிநன் சாத்தனின் - இஜந்தபன் மலையின்கண் என வரும். ஆறாவது இறுதிநிற்பின் வினைக் குறிப்புமாதலின் நெறிப்டு பொருளன்றாய் வரையப்படும்

கூகை குன்றத்தின் கண் உணர்ந்தான் கேள்வியான் என வருபவை கவர்பொருளினவாம். கூகை என்பது குன்றத்திற்கு அடையாய் நிற்றற்கும் கேள்வியான் என்பது வினைக் குறிப்புபெயராதற்கும் ஏற்குமாகலின் என்க.

**வெவ்வேறு உருபுகள் வருதலும் தொக்கு நிற்றலும் நெறிவழி வழங்கும் வழக்காற்றிடத்தன.**

பிறிது பிறிது ஏற்றலும் உருபு தொகவருதலும்

நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப ---- 104

காப்பு முதலாக ஓதப்பெற்ற அறுவகை வேற்றுமைப் பொருள்களைப் பற்றி வரும் வேற்றுமை ஒருபு ஏற்கும் பெயர்கள் பொருள் நோக்கிற்கியைய வேறு வேறு உருபுகளை ஏற்று வருதலும் உருபுகள் தொக்கு நிற்ப அப்பொருள் விளங்க வருதலும் இலக்கண நூலோர் முறைபெற வழங்கிய இலக்கண வழக்கிடத்தன என்று கூறுவர் ஆசிரியர்.

அஃதாவது தொடர் மொழிக்கண் வேற்றுமைப் பொருள்கள் மயங்குந்தொறும் அம்மயக்கத்திற்கேற்ப வேற்றுமையுற்ற பெயர்கள் பிறிது பிறிதாக வரும் அவ்வவ் உருபுகளை ஏற்று வருதலும் பொருள் நிலை திரியாமல் உருபுகள் குன்றிருதலும், இலக்கண நெறியே என்றவாறு வேற்றுமைக்கிளவி என்பது மேலைச் சூத்திரத்தினின்று அதிகரித்தது. உருபென்பது தாப்பிசையாய்ப் பிறது பிறதென் பலவற்றோடும் இயைந்து நின்றது.

**இறுதியில் தொக்கு நிற்கும் உருபுகள்**

ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள்வயின்

மெய்யுருபு தொகா இறுதியான ----- 105

ஐகார வேற்றுமைப் பொருளும் கண்ணென் வேற்றுமைப் பொருளும் அல்லாத ஏனைய வேற்றுமைப் பொருள் பற்றி வரும் சொல்லிடத்துத் தொடர்மொழி இறுதிக்கண்

உருபுகள் தம் வடிவு தொக்க நில்லா விரிந்து வரும் என்றவாறு எனவே ஐயும் கண்ணும் தொக்கு நிற்கும் என்றவாறாம்.

(எ-டு) கடந்தான் நிலம் - இருந்தான் என வரும் எறிந்தான் வாளான், கொடுத்தான் சாத்தற்கு என்பவை, எறிந்தபன் வாள், கொடுத்தான் சாத்தான் என உருபு தொக்குவரின் அவ்வப் பொருள் தாராமையின் இறுதிக்கண் தொகா என்றார். ஏனையவும் அன்ன இறுதியான என்றது உருபு மயக்கம்.

**பொருள் வழியே தான் உருபு செல்லும் (உருபு மயக்கம்)**

யாதன் உருபிற் கூறிற் றாயினும்

பொருள்சென் மருங்கின் வேற்றுமை சாரும் --- 106

ஒரு தொடரின்கண் வேற்றுமை ஏற்கும் பெயர் யாதொரு வேற்றுமைக்குரிய உருபொடு கூட்டிக் கூறப்பெற்ற தாயினும் அத்தொடர்ப் பொருள் செல்லும் பக்கத்து வேற்றுமைப் பொருளையே அது சார்ந்து நிற்கும்

உருபுகள் தன் பொருளிற்றீர்ந்தும் சிறுபான்மை வருமாதலின் உருபு நோக்கி வேற்றுமையைக் கருதாமல் பொருள் நோக்கிஅவ்வவ் வேற்றுமையைக் கொள்க என உருபு பற்றிப் புறனடை கூறியவாறு

(எ-டு) கோட்டுப் பூச் சூடினும் காயும் ஒருத்தியைக் காட்டிய சூடினரென்று இதனுள் ஒருத்தி என்னும் சொல் ஐகார உருபொடு கூடி நின்றதாயினும் காட்டிய சூடினீர் என்னும் பொருள் செல்லும் பக்கத்தான் அது கோற் பொருட்டாய் நின்றவாறு காண்க. கொக்கினும் கொழிந்த தீம்பழம் என்னும் தொடர்க்கண் கொக்கினுக்கு என நான்கன் உருபு நின்ற தேனும் ஒழிதற் பொருள் அதற்கின்மையான் ஐந்தாவதன் பொருட்டாய் நின்றவாறு காண்க. ஏனையவும் இவ்வாறே கண்டு கொள்க.

**எதிர்மறையாகக் கூறினும் வேற்றுமையுருபு மாறாது**

எதிர்மறுத்து மொழியினும் தத்தம் மரபிற்

பொருள்நிலை திரியா வேற்றுமைச் சொல்லே ----107

'காப்பின் ஒப்பின்' எனவும் 'அதனினாதல்' எனவும் உடன்பாட்டுச் சொற்களாக ஓதப்பெற்ற வேற்றுமை செய்யும் விளைநிலைக் கிளவிகளை எல்லாம் எதிர்மறையாக் கூறினும் ஐ முதலிய வேற்றுமைகளை ஏற்று நிற்கும் சொற்கள் செய்ப்படு பொருள் முதலாய தத்தம் பொருள நிலையினின்று திரியா, அவ்வவ் பொருள்படவே நிற்கும்.

( எ-டு) குடத்தை வனையான், வேலான் எறியான், அரசற்குக் கொடான், மலையின் வீழான், மன்றின் கண் இரான் என வரும்.

**வேற்றுமை உருபுகள் செய்யுளில் திரிதல்**

குஐ ஆன் என வரும் இறுதி
அவ்வொருஞ் சிவணும் செய்யுள்ளே --- 108

கு, ஐ, ஆன் எனச் சொல்லப்பட்டனவாய் வரும் வேற்றுமை உருபுகள் மூன்றும் செய்யுளள் தம்மை ஏற்ற பெயரிறுதிக்கண் அகரத்தொடு பொருத்தி நிற்றலும் உடையவாம்.

நான்கனுருபு பெயரொடு கூடி இறுதியாக நின்றலான்றிக் குற்றியலுகரமாதற் கலாமையின் இறுதி என விதந்து கூறினார். அதனான் இறுதி என்றது பெயரிறுதி என்பது பெறப்பட்டது. ஏற்புழிக் கோடலான் சிவணுதல் குவ்விற்கும் ஆனுக்கும் கொள்க. ஐ ஆன்கு என முறையிற் கூறாமையான் ஐகாரம் திரிதல் கொள்க எதிர்மறை உம்மையைச் சிவணுதலும் என மாறிக் கூட்டிக் கொள்க.

(எ-டு) கடிநிலையின்றே ஆசிரியற்க, காவலோனக் களிறஞ்சுமே, புரைதீர் கேள்விப் புலவரான புள்ளினான என வரும்.

அவற்றுள்

அவ்வெனப் பிறத்தல் அ∴றிணை மருங்கின்

குவ்வும் ஐயும் இல்லென மொழிப ---- 109

மேற்கூறிய உருபுகளுள் குவ்வும் ஐயும் அ∴றிணைப் பெயர்க் கண் ஈறாக என்று அகரத்தோடு சிவணுதல் இல்லை எனக் கூறுவர் ஆசிரியர்.

**நான்காம் உருபு ஏனை வேற்றுமைப் பொருளில் மயங்குதல்**

இதனுது இதுவிற்று என்னும் கிளவியும்

ஆதனைக் கொள்ளும் பொருள் வயினானும்

ஆதனாற் செயற்படற் கொத்த கிளவியும்

முறைக்கொண் டெழுந்த பெயர்ச்சொற் கிளவியும்

பால்வரை கிளவியும் பண்பி னாக்கும்

காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்

பற்றுவிடு கிளவியும் தீர்ந்து மொழிக்கிளவியும்

அன்ன பிறவும் நான்கனு ருபிற்

றொன்னெறி மரபின தோன்ற லாறே ---- 110

நான்கனுருபு விரிந்து நின்ற சொல் பிற வேற்றுமைப் பொருளோடு மயங்குமாறு கூறுகின்றது. இ.்.து உருபு மயக்கம்.

இதனது இது விற்று என்பது முதலாகத் தீர்ந்து மொழிக்கிளவி என்பதீறாகக் கூறப்பெற்றவையும் அவை போல்வன பிறவும் நான்காவதன் உருபினாற் கூறுவதாகிய முறைமை தொன்மையான இலக்கண மரபாகும்.

1. இதனது இது விற்று என்னும் கிளவி என்பது: இப்பொருளினுடையது இப்பொருள் இத்தன்மைத்து எனவரும். ஆறவாதற்குரிய உடைமைப் பொருட்ககண், நான்கனுருபு கோடு கூரியது என வரும்.
2. அதனைக் கொங்ளும் வயினுானும் என்பது : இதனை இதனாற் கொள்ளும் என வரும் மூன்றாவதற்குரிய கருவிப்பொருட்களு. நான்கனுருபு காணத்திற்குக் கொண்ட அரசி என வரும்.
3. ஆதனாற் செயற்படற் கொத்த கிளவி என்பது: இதனான் இது செய்யத்தகும் என வரும் மூன்றாவதற்குரிய ஏதுப் பொருட்கண், நான்கனுருபு அவனுக்குச் செய்ய இயலும் இக்காரியம் என வரும்
4. முறைக்கொண்டழுந்த பெயர்ச் சொற்கிளவி என்பது: பிறப்புத் தொடர்பான கிழமை கொண்டு நிற்கும் ஆறாவதற்குரிய முறைப் பொருட்கள், நான்கனுருபு

இம்மகளுக்குத்தாய் இது இக்குருளைக்குத் தந்தை இது என வரும் உயர்திணைத் தொகைவயின் அதுவென் உருபுகெடக் குகரம் வரும் என்றதனான். இ∴து அ∴றிணை முறைப்பெயர் என்பது போதரும்

5. பால்வரை கிளவி என்பது: இடத்தை வரைந்துணர்த்தி வரும் ஐந்தாவதற்குரிய எல்லைப் பொருட்கண், நான்கனுருபு கருவூர்க்குக் கிழக்கு மருவூர் என வரும்.
6. பண்பின் ஆக்கம் என்பது: பண்பு பற்றி வரும் ஒன்றனொடு ஒன்றை உறழ்ந்து கூறம் ஐந்தாவதற்குரிய பொருட்கண், நான்கனுருபு சாத்தற்கு நெடியனாயினான் - அரசற்கு மேலாயினான் என வரும்.
7. காலத்தின் அறியும் வேற்றுமை கிளவி என்பது: காலத்தின் கண் வேறுபாடு அறிய வரும் ஏழாவதன் காலப் பொருட்கண் நான்கனுருபு நேற்றைக்கு வந்தான் நாளைக்கு வருவான் என்பது உலக வழக்காக வரும்.
8. பற்று விடுகிளவி என்பது: பற்று விடுதல் என்னும் ஐந்தாவதற்குரிய பொருட்கண் நான்கனுருபு மனை வாழ்க்கைக்குப் பற்று விட்டான் என வரும்.
9. தீர்ந்து மொழிக்கிளவி என்பது: தீர்தல் பொருளுணர்த்தும் ஐந்தாவதற்குரிய நீக்கப் பொருட்கண் நான்கனுருபு, ஊர்க்குத் தீர்ந்தான் - ஊர்க்கு நீங்கினான் என வரும்.

அன்னபிறவும் என்றதனான் ஏழாவதன் இடப்பொருட்கண் நான்கனுருபு ஊர்க்குச் சென்றான் எனவும் ஐந்தாவன் எல்லைப் பொருட்கண் ஊர்க்குச் சேயன் எனவும் தொன்னெறி மரபினாவய் வருவன கொள்க.

**ஏனைய உருபுகளும் பிற பொருளில் மயங்கி வருமெனல்:**

ஏனை உருபும் அன்ன மரபின

மான மிலவே சொன் முறையான ---- 111

மேற்கூறிய நான்கனுருபல்லாத ஏனைய உருபுகளும் தொகையின்றி விரிந்து நிற்கும் தொடர் மொழிக்கண் மேற்கூறிய மரபினைவாகச் சொல்லும் முறைமைக்கண் குற்றமிலவாம்.

(எ-டு) நூலது குற்றுங் கூறினான் என்னும் தொடர்கண் உரிமைப் பொருட்குரிய ஆறாவது நூலைக்குற்றங் கூறினான் எனச் செயப்பட்டு பொருட்டாய் வந்தது. அவனது குற்றவேல் செய்தான் என்னும் தொடர் அவனுக்குக் குற்றவேல் செய்தான்

எனக்கோடற் பொருட்டாய் வந்தது. பிறவும் தொன்னெறி மரபினாவய் வருவன ஓர்ந்தறிந்து கொள்க.

**வினைச்சொல் உணர்த்தும் பொருள்கள்:**

வினையே செய்வது செய்யப்படு பொருளே
நிலனே காலம் கருவி என்றா
இன்னதற் கிதுபய னாக என்னும்
அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
ஆயெட்டென்ப தொழில் முதனிலையே --- 112

வினையே – புடைபெயர்ச்சியை உணர்த்தும் உண், தின, செல், வா, போ முதலிய வினையடிகளாகிய வினையும் செய்வது – தொழிலை நிகழ்த்துட் வினை முதலும் செயப்படுபொருள் - வினை முதலின் தொழில் சென்றுபடும் பொருளும் நிலனே – அத்தொழில் நிகழ்வதற்கு ஆதாரமாகிய இடனும், காலம் - அத்தொழில் நிகழ் காலமும், கருவியும் - தொழிலை நிகத்தும் வினை முதற்குத் துணையாக நிற்கும் கருவியும் ஆகிய ஆறும், அத்தொழில் நிகழ்த்துவதற்குரிய நோக்கமாகிய இன்னதற்கு எனவும் அத்தொழிலின் விளைவாகிய இது பயனாக எனவும் சொல்லப்பெறும் இம்மரபினை உடையனவாகிய இரண்டொடும் கூடி அமையும் அவ்எட்டும் முற்றி நிற்கும் தொழிற்கு அடிப்படைப் காரணங்கள் என்று கூறுவர் ஆசிரியர்.

வினைச் சொற்கள் இங்ஙனம் எட்டுக் காரணங்களை உடைமையான் அவை பெயாப் பொருளை வேற்றுமை செய்தற்குரியவாயின என்பதும் வேற்றுமை மயங்கி வருவதற்குக் காரணமும் அவையே என்பதும் இதனாற் புலப்படும்.

இன்னான் ஏது என்னும் மூன்றாவது கருவிக் கண்ணும் “ இதனினிற்றிது” என்னும் ஐந்தாவது நிலத்தின் கண்ணும் இதனிது என்னும் ஆறாவது செயப்படுபொருட் கண்ணும் அடங்குமாதலின் அவற்றை அவற்றுள் அடக்கி ஓதினா். புகை உண்மையான் நெருப்புண்டு என்னுமிடத்து நெருப்புண்மை புகையாக அறிதலின் புகை கருவியாக நின்றவாறும் மலையின் வீழ் அருவி என்னுமிடத்து அருவி

மலையின் கண்ணதாதலை உணர்தலின் மலை இடமாகி நின்றவாறும் சாத்தனது கை என்னுமிடத்துச் சாத்தன் கையை உடையான் என்பது பொருளாதலின் உடையான் என்னும் வினைக் குறிப்பான் அ∴து செயப்படு பொருளாதற்கு ஒத்தவாறும் கண்டு கொள்க.

இங்ஙனம் இவை உருபு வகையாற் தோன்றாமல் தொடரமைப்பான் பெறப்படுதலின் நேரே உரிமை பெறாமல் பிறவற்றறைச் சார்ந்து அடங்கி நின்றன என்க. இன்னதற்கு இது பயனாக என்பதை தொழிற்கு நேரே காணரமாகாமல் பொருட்டாக நிற்றலின் பிரித்து எண்ணிக் கூட்டப் பெற்றன.

தொழில் முதனிலை எட்டனுள் செய்வது முதல் வேற்றுமையையும் வினையும் செயப்படு பொருளும் இரண்டாம் வேற்றுமையையும் ஆறாம் வேற்றுமையையும் கருவி மூன்றாம் வேற்றுமையையும் நிலமும் காலமும் ஏழாம் வேற்றுமையையும் ஐந்தாம் வேற்றுமையையும் இன்னதற்கு என்பது நான்காம் வேற்றுமையையும் இது பயனாக என்பது இரண்டாம் வேற்றுமையையும் நான்காம் வேற்றுமயையையும் தோற்றுவிப்பனவாகும்.

உண்டன் என்புழித் தொழில் பலவற்றுள் ஒரு தொழிலை வரைந்துணர்த்தும் உண் என்னும் வினையடியாகிய முதனிலை வினையும் உயர்திணை ஆடுஉ ஒருமையாயகிய செய்வதும் உண்ணுதற் தொழிற்குரிய உணவு என்னும் செய்ப்படு பொருளும் அத்தொழில் நிகழ்தற்குரிய இடமாகிய நிலனும் அத்தொழிலின் காலமும் வினைமுதற்குத் என்னும் கோடற் பொருளாகிய இன்னதற்கு என்பதும் சுவைத்தல் அல்லது உடலோம்பல் என்னும் இது பயனாக என்பது தோன்றிய வாறு காண்க.

அவ்வாறே உடையான் என்புழி உடைமை உணர்ச்சியாகிய உளதுது நிகழ் வினையும் உடையானிகிய வினை முதலும் குழையாகிய செயப்படு பொருளும் செவி உறுப்பாகிய செய்ப்படுபொருளும் செவி உறுப்பாகி இடமும் நேற்று உடையாள இன்று உடையான் நாளை உடையனாவான் என்னும் காலக் குறிப்பும் செல்வச்செருக்கினைப் புலப்படுத்தும் நோக்காகிய கருவியும் செவிக்குப் பூட்டினான் என்னும் இன்னதற்கு என்பதும் பிறர் மதிப்பைக் கோடலாகிய இது பயனாக என்பதும் தோன்றியவாறு காண்க.

**செய்ப்படுபொருள் குன்றிய வினைகள்**

அவைதாம்

வழக்கியல் மருங்கிற் குன்றுவ குன்றும் ----- 113.

மேற்கூறப்பட்ட தொழில் முதனிலை எட்டனுள் தொழிற் சொற்கள் வழங்கிவருமிடத்துக் குன்றத்தகுவன குன்றி நிற்கும். அவற்றுள் என்னும் பாடம் காலத்தாற் பிறழ்ந்ததெனல் வேண்டும்.

(எ-டு) கொடி ஆடிற்று, என்புழிப் புறநிலைச் செயப்படுபொருளும் இன்னதற்கு என்பதும் குன்றி நின்றன நடந்தான் என்புழிப் புறநிலைச் செயயப்படு பொருள் குன்றி நின்றது பிறவும் ஓர்ந்து கொள்க.

**ஆகுபெயர் வகைகள்**

முதலிற் கூறும் சினையறி கிளவியும்

சினையிற் கூறும் முதலறி கிளவியும்

பிறந்த வழிக் கூறுலும் பண்புகொள்பெயரும்

இயன்றது மொழிதலும் இருபெயரொட்டும்

வினைமுத லுரைக்கும் கிளவியொடு தொகைஇ

அனை மரபினவே ஆகுபெயர்க்கிளவி….114

1. முதற் பொருளின் பெயரான் சினைப் பெயரை அறியக் கூறப்படும் சொற்களும்
2. சினைப் பொருளின் பெயரான் முதற் பொருளை அறியக் கூறப்படும் சொற்களும்
3. பொருள் தோன்றிய இடத்தாற் கூறப்படும் சொற்களும்
4. வண்ணம், வடிவு, சுவை முதலாய பண்புப் பெயர்களாற் கூறப்படும் சொற்களும்
5. காரியமாகிய பொருள் அ∴தியன்தற்குரிய காரணத்தாற் கூறப்படும் சொற்களும்

6. ஒரு பொருளை விளக்க அடையாக வந்த சொல்லோடு ஒட்டப்பட்டு நிற்கும் இருபெயரொட்டாகிய சொற்களும்.
7. பொருளை இயற்றிய வினை முதலாற் கூறப்படும் சொற்களோடு கூடி அத்தகைய மரபினவாய் வருவனவே ஆகுபெயர்ச் சொற்களாம்.

அன்ன மரபின என்றது அஃது ஆகிவரும் பொருட் கூறுபாடுகள் இவ்விலக்கணத்தன என்றவாறாம். ஒப்பின் முடித்தல் என்னும் உத்தியான் பிறந்தவழிக் கூறல் என்பதனோடு பிறந்த வழி நிகழ்வனவும் கொள்க. தன்னின முடித்தல் என்னும் உத்தியான இயன்றது மொழிதல் என்பதனோடு இயல்வது மொழிதலும் கொள்க. அஃதாவது காரணமாகிய பொருளை அதனான் இயலும் காரியத்ததாற் கூறுதலாம். ஆளவை ஆகுபெயர் பற்றிப் பின்னர் விதந்து கூறுதலான் பண்பென்பதற்கு அளவுப்பெயர் தவிர்த்த ஏனையவற்றைக் கொள்க.

(எ-டு)

1.கடுத்தின்றான் - தெங்குதின்றான் என்பவை முதற்பொருள் தத்தம் சினைப் பொருளுணர்த்தி நின்றன.

2.இலைநட்டு வளர்த்தான் - பூ நட்டு வாழும் என்பவை சினைப் பொருள் தத்தம் முதற் பொருளாகிய கொடியை உணர்த்தின.

3.குடிப்பாடி உடுத்தினான் - உறையூர் அணிந்தான் என்பவை அவ்வவ் ஊரின்கண் நெய்து வந்த ஆடையை உணர்தின. இது பிறந்த வழிக் கூறல் ஆறு பெருகிற்று, குளம் நிறைந்தது என்பவை இடத்து நிகழ் பொருளாகிய நீரை உணர்த்தின.

4.காரறுத்தான் - நீலம் சூடினான் என்னும் பண்புப் பெயர் கார்முகில் பெய்யும் நீரால் விளைந்த நெல்லையும் நீல நிறத்தையுடைய மலரையும் உணர்த்தின.

5.போன் அணிந்தான். மணியணிந்தான் என்பவை அவற்றலாகிய அணிகலன்களை உணர்த்தின. இது இயன்றது மொழிதல் கூறல் ஆகியது. வெட்டு ஆறவில்லை என்பவை அவற்றலாகிய புண்களை உணர்த்தின. யாழ் கேட்டான், குழல் கேட்டாள் என்பனவும் அது யாழிடத்துப் பிறந்த ஓசையெனக் கொள்ளின் பிறந்த வழிக் கூறலாய் அடங்கும். நெல்லைப் பெற்றவனைக் சோறு பெற்றான் என்பதும் கல்வியைப் பெற்றவனை வாழ்வு பெற்றான் என்பதும் இயல்வது மொழிதலாம் இயன்றது

மொழிதலைக்காரிய ஆகுபெயர் என்றும் இயல்வது கூறலைக் காரண ஆகுபெயர் என்றும் கூறுவர்.

1.பவளவாய், திரிதாடி அறுகால் என்பவை வாயினை உடையாளையும் தாடியை உடையானையும் கால்களையுடைய வண்டினையும் உணர்த்தின. பவளம், திரிபு, ஆறு என்பவை அவற்றிற்கு அடையாக வந்து அவற்றை விளக்கி நின்றன.

2.கம்பரைக் கற்றான், திருவள்ளுவரைப் பயின்றான் என்பவை அவராற் செய்யப் பெற்ற நூல்களை உணர்த்தின. இவை வினை முதலுரைக்கும் கிளவியாம். தொல்காப்பியம், கபிலம் என்பவை ஈறு திரிந்து செயற்பாடு உணர்த்தி நிற்றிலின் ஆகுபெயராதல் என்க.

திருவாசம் , திருவாய்மொழி என்பவை பாக்களை உணர்த்தி நிற்பின் ஆகுபெயராம். இவற்றை அடையடுத்த ஆகுபெயர் என்ப. இவை பாக்களை உணர்த்தாமல் நூல்களை உணர்த்தி நிற்பின் அன்மொழித் தொகையாம்.

**விடா ஆகுபெயரும் விட்ட ஆகுபெயரும்**

அவைதாம்

தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்

ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்

அப்பண் பினவே நுவலுங் காலை….. 115

மேல் அனைமரபின வாய் வரும் எனக் கூறப்பெற்ற ஆகுபெயர்க் கிளவிகள் தாம் இவ்வியல்பின் எனச் சொல்லுமிடத்து அவை தம் பொருளிடத்து இயைபுடைமையான் தம்மொடு பொருந்தி வருதலும் ஒத்துடைமையில்லாத பிற இயைபுகளான் பிறிதாகிய பொருளைச் சுட்டி வருதலும் ஆகிய அவ்இரு தன்மையினவாகும். ஓப்பாவது தற்கிழமைத் தொடர்பு அ.்.தில் வழி எனவே பிரிதின் கிழமையவாய் வரும் என்றவாறு

கடுத்தின்றான், தெங்கு தின்றான், இலை நட்டான், பொன்னனிந்தான் என்றாற் போல்வன தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணி வந்தன. குழிப்பாடி உடுத்தான், வாள் வெட்டு, யாழ் கேட்டான், திருவள்ளுவரைப் பயின்றான் என்றாற் போல்வன.

ஓப்பில் வழியாற் பிறிது பொருள் கூட்டி வந்தன. இவற்றை முறையே விடாதே ஆகுபெயர் என்றும் விட்ட ஆகுபெயரென்றும் கூறுப.

வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும் --- 116

மேற்கூறிய இருவகையானும் வரும் ஆகுபெயர்க்ள செயப்படு பொருள் முதலாய வேற்றுமைகளின் தொடர்பினான் வருமாதலின் இவ்விவ் வேற்றுமைப் பொருளான் இப்பெயர் ஆகுபெயராயிற்று எனப் போற்றிக் கொள்க.

ஆகுபெயர்களின் வேற்றுமைத் தொடர்புகள் உணரப் பெறாவிடின் அவை தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணி வந்தனவா ஒப்பில் வழியாற் பிறது பொருள் சுட்டி வந்தனவா என்பது புலப்படா ஆகலின் போற்றல் வேண்டும் என்றார்.

போற்றி உணருங்கால் இரண்டாட் வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணி வரும். ஏழாம் வேற்றுமை ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டி வரும். மூன்றாம் வேற்றுமை இரு நிலைமைத் தாயும் வரும் என அறிக.

மஞ்சள் உடுத்தாள் என்பது மஞ்சளைத் தோய்த்த ஆடையயை உடுத்தாள் என இரண்டாம் வேற்றுமை பற்றி வந்த ஆகுபெயர். கடுத்தின்றான் என்பது கடுவினது காயைத் தின்றான் என ஆறாம் வேற்றுமை பற்றி வந்த ஆகுபெயர். இவை தம் பொருள்வயின் தம்மொடு சிவணி வந்தன. குழிப்பாடி உடுத்தான் என்பது குழிப்பாடி என்னுமிடத்தில் நெய்து வந்த ஆடையை உணர்த்தலின் ஏழாம் வேற்றுமை பற்றி வந்த ஆகுபெயர்.

**அளவை பெயர்கெல்லாம் ஆகுபெயர்களாதல்**

அளவும் நிறையும் அவற்றொடு கொள்வழி

உளவென மொழிப உணர்ந்திசி னோரே---- 117

அளவுப் பெயரும் நிறைப்பெயரும் அனை மரபினவாய இலக்கணத்தோடு பொருந்தக் கொள்ளுமிடத்து அவை மேற்கூறிய அகுபெயரதற்கு உள என்று கூறுவர். இலக்கண மரபுணாந்தோர் நீட்டலளவைவும் எண்ணலளையும் அளவை என்பதனுள் அடங்கும்.

அளவைப் பெயர்கள் காட்சிப் பொருளோடு படுத்துணரப்படும் கருத்துப் பொருளாகலின் நாழி, உழக்கு, கழஞ்சு, தொடி, தடி, மா, ஒன்று இரண்டு என்னும் பெயர்கள் அவ் அளவைகளைத் தரும் மரக்கால், நிறைகல், அளவுகோல்,பொருள் முதலிய கருவிகளையும் அக்கரு, விகளான் அளக்கப்பெற்ற பொருள்களையும் ஆகுபெயரான் உணர்த்தலின் மேலனவற்றொடு ஒருங்குக் கூறாமல் பிரித்துக் கூறினார்.

இ∴தொரு நாழி என்பது அளவு கருவியையும் அளக்கப் பெற்ற பொருளையும் இடம் நோக்கி உணர்த்தும். இவ்வாறே நிறைப் பெயரும், நீட்டலளைப் பெயரும் உணர்த்தும், எண்ணலளவை பொருள்பற்றியே உணர்த்தும்அது கருவியன்மையன். இ∴தொரு கழஞ்சு – கருவி - பொருள், இ∴தொரு மா- நிலம், இ∴தொரு கோல் - கருவி – பொருள் இ∴து ஒன்று இது பத்து – பொருள் என வரும்.

அளவுப் பெயர்கள் கருவியையும் உடைமைகளையும் இடத்தையும் பற்றிப் பொருள் கோடற்கியையவருதலின் அளவு கருவிகளை உணர்த்தும் வழித் தத்தம் பொருள் வயின் தம்மொடு சிவணலாயும் அளக்கப் பெற்ற பொருட்களை உணர்த்தும் வழி ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலாயும் கருதிக் கேடாலின் பொதுப்படக் கூறினார்.

**ஆகுபெயர்கட்குப் புறனடை**

கிளந்த அல்ல வேறுபிற தோன்றினும்

கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே--- 118

மேற்கிளந்து கூறப்பெற்ற மரபினவாய் வரும் ஆகுபெயர்களேயன்றி வேறுபிறவற்றுள் தோன்றிவரினும் மேற்கூறப்பெற்ற இலக்கணத்தான் உணர்ந்து கொள்க.

பாவை போல் வாளைப் பாவை என்றும், நரியின் பண்புடையாளை நரி என்றும் எழுத்தாலாகிய நூலை அறிவித்தவனை எழுத்தறிவித்தவன் என்றும் சொல்லிலக்கணம் உணர்ந்தானைச் சொல்லுணர்ந்தான் என்றும் வருவன கொள்க. பேச்சு வழக்கின் கண் சிறப்பாகப் பயின்றறிந்தமை நோக்கிச் சிலம்பு வந்தான் என்றும் சிந்தாம வந்தான் என்றும், இடையாறது கொணடியல்வது பற்றிப் பட்டுருமாலை வந்தான், குடை வந்தான் என்றும் வருவனவும் வழக்கு நோக்கிக் கொள்க. வரிவடிவங்களையும் அடையாளங்களையும் அவ்வவ் பொருளாகக் கூறுங்கால் அவை ஆகுபெயராதலையும் ஓர்த்துணர்ந்து கொள்க.

## விளிமரபு

**விளிவேற்றுமை இலக்கணம்**

விளி எனப்படுவ கொள்ளும் பெயரொடு
தெளியத் தோன்றும் இயற்கைய என்ப ..119

விளி எனச் சிறப்பித்துக் கூறப்பெறுபவைதாம் தம்மை ஏற்கும் பெயரொடு விளங்கத் தோன்றும் இயல்பின் என்று கூறுவர் நூலோர்.

விளியேற்ற பெயர் இயல்பாதலும், ஈறு திரிதலும் குன்றலும் பிறிது ஏற்றலுமாக அமைந்து வேற்றுமை செய்தலின் அத்திரிபுகளே உருபின் பயத்தவாம் என்பதறிவித்தற்கு விளி எனப்படுவ எனப்பன்மையாற் கூறினார். ‘‘கொள்ளும் பெயரொடு’’ என்றதனாற் கொள்ளாப் பெயரும் உளவென்பது பொருட் பேற்றாற் கொள்ளப்படும் அண்மை விளிக்கண் விளியேற்ற பெயர் திரிபின்றி நிற்குமாயினும் ஆண்டு அது வேற்றுமையுற்றமையை முடிக்குஞ் சொல் புலப்படுத்தி விடுமாகலின் தெளியத் தோன்றும் என்றார்.

எ-க:- அன்பன் வருக! அன்ப வருக!, அன்பா வருக!, அன்பனே வருக!, அன்பினாய் வருக!, அன்பினோய் வருக!, அன்பாவோ வருக, என இயல்பாயும் திரிந்தும் வந்த வாறு கண்டு கொள்க.

**தனித்து விரித்து விளக்கத்தக்கவை**

அவ்வே

இவ்வென அறிதற்கு மெய்பெறக் கிளப்ப…120

மேற்கூறிய விளியும் அவற்றைக் கொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும் இவை எனத் தெற்றென அறிந்து கோடற்குப் பொருள் தோன்ற இனிக் கிளந்து கூறப்படும்.

மேற்கூறிய விளி என்றது இயல்பாயும் திரிந்தும் நிற்கும் விளி மரபினை ‘கிளக்கப் படும்’ என்பது கிளப்ப எனக் குறைந்து நின்றது. அன்றி இலக்கண நூலோர் கிளந்தே கூறுபவாதலின்யானும் அவ்வாறே கூறுவென் எனக் கருத்துக் கூறலுமாம்.

**உயிர் திணையில் விளியேற்கும் உயிர் ஈறுகள்**

அவைதாம்

இ உ ஐ ஓ என்னும் இறுதி

அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்

மெய்ப்பொருள் கட்டிய விளிகொள் பெயரே ... 121

விளிக்கப்படுதலை உணர்ந்து, விளிப்போர் விதிக்கும் ஏவலையும் வியங்கோலையும் ஏற்றுச் செயல்படுந்திறன் உடையவை ஆறறிவுடைய உயர்திணைப் பொருளும், அக்கிளைப் பிறப்பினவாகிய பொருளுமே எனினும் உறுப்புமையது போல் உணர்வுடையது போல் மறுத்துரைப்பது போல் நெஞ்சொடு புணர்த்துக் கூறுதலும் ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லியாங்கமையும் என்மனார் புலவர் என்பவற்றான் அ∴றிணைப் பொருள் மாட்டுச் சொல் நிகழ்த்தலும் செய்யுள் மரபாகலின் ஆசிரியர் உயர்திணைப் பெயர் அ∴றிணைப் பெயர் விரவுப்பெயர் ஆகிய மூவகைப் பெயர்களும் விளிகொள்ளும் மரபினை ஓர்ந்து விதி கூறத்தொடங்குகின்றார்.

எல்லாப் பெயர்களும் பொருட் பகுதியான் இரு கூறாய் அடங்குதலின் பெயரியலுள் விதந்தோதப் பெறும் உயர்திணைப் பெயர்களையும் உயர்திணைப் பொருளுணர்த்தி வரும் விரவுப் பெயர்களையும், ஆகுபெயராயும், அன்மொழித் தொகையாயும், உயர்திணை உணர்த்தி வரும் பெயர்களையும் உயர்திணைப் பெயர் என ஒன்றாக அடக்கியும் அ∴றிணைப் பொருளுணர்த்தி வரும் விரவுப் பெயர்களைத்

தனியாகவும் அ∴றிணைப் பெயர்களையும் அ∴றிணைப் பொருளுணர்த்தி வரும் ஆகுபெயர் அன்மொழித் தொகைப் பெயர்களையும் அ∴றிணைப் பெயர் என ஒன்றாகவும் அடக்கி ஓதுகின்றார்.

கிளக்கப்படுபவைதாம் உயர்திணைப் பாலவாய் உயர்திணைப் பொருளைக் கருதிய உயிரீற்று விளிகொள் பெயர் இ உ ஐ ஓ என்னும் இறுதியை உடைய அ∴கூற்று நான்கு மேயாம்.

**இ, ஐ ஈறுகள் விளியேற்றல்**

அவற்றுள்

இ ஈ யாகும் ஐ ஆய் ஆகும் ... 122

மேற்கூறியவற்றுள் இகர ஈறு ஈ எனத் திரியும், ஐகார ஈறு ஆய் எனத்திரியும் ஆகும் என்றது திரிந்து விளி வேற்றுமையாகும் என்றவாறு

எ-டு- நம்வீ வருக!, நங்காய் செல்க!, எனவும் சாத்தி வருக!, எனவும் வரும். சுடர்த்தொடீ கேளாய்! எனவும் வரும். அன்னை அன்னாய் எனவும் எந்தை எந்தாய் எனவும் வரும்.

**ஓ,உகர ஈறுகள் விளியேற்றல்:**

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும் …123

எஞ்சி நின்ற ஓகாரமும் உகரமும் ஏகாரத்தொடு பொருந்தி விளிவேற்றுமையாகும்.

(எ-டு) கோவே வருக! வேந்தே வருக! என வரும். இவ் உகரம் சார்பெழுத்து என்பது உணர அதனைப்பிற் கூறினார்.

**உகரம் குற்றியலுகர ஈறு எனல்**

உகரந் தானே குற்றியலுகரம் …124

மேல் வாளா கூறிய உகரம் சார்பெழுத்துக்களுள் ஒன்றாகிய குற்றியலுகரமாம். முற்றியலுகரமாயின் உடம்படுமெய் பெற்றுப் புணர்தல்லலது உயிரேற இடந்தாராலதாகலின் உகரந் தானே குற்றியலுகரம் என விளக்கினார் என்க.

**உயர்திணையில் விளியேலா உயிர் ஈறுகள்:**

ஏனை உயிரே உயர்திணை மருங்கின்

தாம்விளி கொள்ளா என்மனார் புலவர் ….125

மேற்கூறிய நான்கு மல்லாத ஏனைய எட்டு உயிரீற்று உயர்திணைப் பெயர்கள் விளி கொள்ளா எனக் கூறுவர் புலவர்.

கொள்பவை இவை எனவே கொள்ளாதவை தாமே பெறப்படுமாயினும் இங்ஙனம் எடுத்துக் கூறுதல் பிறிதொரு பயன் நோக்கியதாகும். இதன் பயனாவது. எடுத்தோதாத அகர ஈறும், ஆகார ஈறும் முற்றுகர ஈறும் ஊகார ஈறும் முறையே மகவே! ஏல்லா! திருவே! ஆடுவே என ஏகராம் பெற்றும் இயல்பாயும் விளி ஏற்றலும், திரியும் எனப்பெற்ற இகர ஐகாரங்கள் கணியே! இறையே! என ஏகாரம் பெறுதலும் மலர்விழிபணிமொழி என்றாற் போல வரும் இருபெயரொட்டு ஆகுபெயர்களின் இகர

ஈறு ஈயாகத் திரியாமல் ஏகாரம் பெறுதலும் பிறவும் சான்றோர் வழக்கு நோக்கிக் கொள்ள வைத்தலாம்.

**இகர ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்கும் முறை**

அளபெடை மிகூஉம் இகர இறுபெயர்

இயற்கைய வாகும் செயற்கைய என்ப ... 126

இயல்பாகவன்றி அளபெடுத்தலான் விகாரப்பட்டு மிக்கு நிற்கும் இகர ஈற்றுப் பெயர்கள் திரியாமல் இயற்கையவாய் வரும் இலக்கணத்தனவாகும்.

(எ-க) தொழிஇ! செல்க என வரும். தொழிஇ என்பது தொழுவன் என்பதன் பெண்பாற்சொல். அது குருவி குரீஇ என வருதல் போன்ற இயற்கை அளபெடையாம்.

**முறைப்பெயர் ஐ ஈறு ஆவுமாதல்**

முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி

ஆவொடு வருதற்கு உரிமையும் உளவே ….127

முறைப் பெயர்களிடத்து ஈறாக வரும் ஐகார இறுதிச் சொற்கள் ஆகாரமாக வருதற்கு உரிமை உடையனவும் உளவாம். ஆவாகத் திரிதலை ஆவொடு வருதல் என்றார் உம்மை எதிர்மறை.

(எ-டு) அன்னை-அன்னா எனவும் தாதை-தாதா எனவும் வரும் எதிர் மறை உம்மையான் தந்தை, தங்கை, தவ்வை முதலியவை ஆவாகத் திரியமற் பொது விதியே பெறுமெனக் கொள்க.

**அண்மை விளி உயிரீறுகள் இயல்பாதல்:**

அண்மைச் சொல்லே இயற்கை யாகும் ….128

மேற் கூறிய நான்கு ஈறுகளும் அண்மை விளிக்கண் இயல்பாக வரும். சொல் என்றது விளியை

(எ-டு) நம்பி வாழி! நங்கை வாழி! வேந்து வருக! கோகாணாய்! எனவும், மகவாராய்! ஏல்லா வருக! ஆடு செல்க! எனவும் வருக.

**புள்ளி ஈறுகள் விளியேற்றல்- உயர்திணைப் பெயர்கள்:**

னரலள என்னும் அந்நான் கென்ப

புள்ளியிறுதி விளிகொள் பெயரே …..129

பதினொரு புள்ளி ஈறுகளுள் னரலன என்னும் அந்நான்கு புள்ளியை இறுதியாக உடைய பெயர்கள் உயர்திணைக்கண் விளிகொள்வன எனக் கூறுவர் புலவர்.

**ஏனைய புள்ளி ஈறுகள் விளியேலாமை**

ஏனைப் புள்ளி யீறுவிளி கொள்ளா ….130

மேற் கூறிய நான்குமல்லாத ஞணநமயவழ என்னும் ஏழு புள்ளியீற்றுப் பெயர்கள் உயர்திணைக் கண் விளி கொள்ளாவாம்.

இங்ஙனம் வாராதனவற்றைக் கூறியதன் பயனாவது னாலள என்பவற்றிற்கு இனி ஓதும் விதிகளேயன்றிச் சிறிது வேறுபட்ட விதிகளையும் அவை எய்தும் என்பதும்,

கொள்ளா என்றவற்றுள் ணகரமும் யகரமும் ழகரமும் சிறுபான்மை விளியேற்று வருமென்பதும் பெறுதலாம்.

**சேய்மை விளியில் அன் ஈறு**

அவற்றுள்

அன் என் இறுதி ஆவா கும்மே ... 131

விளி கொள்ளும் புள்ளியீறுகளுள் அன் என்னும் இடைச்சொல் பற்றி நிற்கும் பெயரினது ஈறு ஆவாகத் திரிந்து வரும்.

(எ-டு) தோழன் தோழா வருக! சேர்ப்பன் சேர்ப்பா வருக! என வரும்

**அண்மை விளியில் அன் ஈறு**

அண்மைச் சொல்லிற்கு அகரமுமாகும் …132

அன்னீற்றுப் பெயரிறு அண்மை விளிக்கண் அகரமாகத் திரிதலும் ஆகும். திரிதலாவது குன்றலாம். உம்மையாற்றிரியாது நிற்றலே பெரும்பான்மை எனக் கொள்க.

(எ-டு) துறைவ கேள்! எனவும் துறைவன் வருக ! எனவும் வரும்.

**ஆன் ஈறு இயல்பாதல்**

ஆன் என் இறுதி இயற்கை யாகும் …133

ஆன் என்னும் இறுதி இடைச்சொல் பற்றிவரும் பெயரினது ஈறு திரியாது இயல்பாக வரும்.

(எ-டு) சேரமான் வருக ! மலையமான் வருக! என வரும்.

**ஆன் ஈற்று வினையாலணையும் பெயர் விளியேற்றல்**

தொழிலிற் கூறும் ஆன்என் இறுதி

ஆய் ஆ கும்மே விளிவயி னான ….134

விளி வேற்றுமைக் கண் ஆயினவாய்த் தொழிற் சொல்லாற் கூறப்பெறும் பெயரிறுதி ஆன் என்னும் ஈறு ஆய் எனத் திரிந்து வரும்.

(எ-டு) உண்டான், தின்றான், என்னும் வினையாலணையும் பெயர்கள் உண்டாய் வருக! சென்றாய் வருக! என வரும்.

ஊடையான், குழையான் என்னும் குறிப்பு வினைப் பெயரும் உடையாய்! குழையாய்! என வரும்.

**ஆன் ஈற்றுப் பண்புப் பெயர் விளியேற்றல்:**

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே ... 135

பண்படியாகத் தோன்றி வரும் ஆனீற்றுப் பெயரும் தொழிலிற் கூறும் பெயரிலக்கணத்தொடு ஒரு தன்மைத் தான் என்றது. ஆன் ஆயாகத் திரிந்து வரும் என்றவாறு.

(எ-டு) கரியான் என்பது கரியாய் வருக! எனவும் நெடியாய் எனவும் வரும்.

கரியான் வருக! என இயல்பாயும் கரியோய் எனத் திரிந்தும் வரும்.

**ஆன் ஈற்று அளபெடைப் பெயர் விளியேற்றல்**

அளபெடைப் பெயரே அளபெடை இயல …..136

னகர ஈற்று அளபெடைப் பெயர்கள் இகர ஈற்று அளபெடைப் பெயரியல்பினவாம்.

இகர ஈறு நீண்டு அளபெடுத்தவழி ஈகார ஈறாகாமல் இகர ஈறாக நின்று திரிபின்றி விளிவேற்றுமையாகும் என்பதனொடு மாட்டெறிந்து கூறினமையான் அழாஅன், பழாஅன் என்னும் இயற்கை,அளபெடைச் சொற்களாயினும், மலையமாஅன், சேரமாஅன் என்னும் இசைநிறை அளபெடைச் சொற்களாயினும்

அவை அன்னீறாகவே கொள்ளப்படும் என்பது பெறப்பட்டது. அவ்வழி அன்னீற்றிற்கு ஓதிய ஆ ஒ வாகத் திரியும் விதியைப் பெறாமல் இயல்பாக நின்று விளியேற்கும் என்றவாறாம்.

(எ-டு) அழாஅன் வருக ! மலையமாஅன் வருக! என வரும்.

**னகரமெய் ஈற்று முறைப்பெயர் விளியேற்றல்:**

முறைப்பெயர்க் கிளவி ஏயொடு வருமே ….137

னகர ஈற்று முறைப் பெயராக வரும் சொல்லிறுதி ஏகாரத்தொ பொருந்தி வரும்.

(எ-க) மகன் என்பது மகளே வருக! என வரும். மருமகனே தலைமகன என அடையடுத்து வரினும் ஒக்கும்

**விளி ஏலாத னகர மெய்யீற்றுப் பெயர்கள்:**

தான் என் பெயரும் சுட்டுமுதற் பெயரும்

யானென் பெயரும் வினாவின் பெயரும்

அன்றி யனைத்தும் விளிகோ ளிலவே ... 138

தான் என்னும் படர்க்கைப் பெயரும் சுட்டினை முதலாகக் கொண்ட அவன் இவன் உவன் என்னும் பெயர்களும் யான் என்னும் தன்மைப் பெயரும், யாவன் என்னும் வினாப் பெயரும் ஆகிய அவ் அனைத்துப் பெயர்களும் விளி கொள்ளுதல் இலவாம்.

**ரகர மெய்யீறு விளியேற்றல்:**

ஆரும் அருவும் ஈரொடு சிவணும் …139

ஆர், அர் என்னும் இடைச்சொற்களை இறுதியாக உடைய ரகர ஈற்றுயர் திணைப் பெயர்கள் ஈர் என்பதனொடு பொருந்தி விளியேற்கும். அர் ஆர் என்பவை ஈர் எனத் திரிந்து நிற்கும் என்றவாறு.

(எ-டு) சான்றார் என்பது சான்றீர் வருக! எனவும், மாந்தார் என்பது மாந்தீர் வருக! எனவும் கூத்தர்-கூத்தீர் எனவும் வரும்.

**ரகர மெய்யீற்று வினையாலணையும் பெயர் விளியேற்றல்:**

தொழிற்பெய ராயின் ஏகாரம் வருதலும்

வழக்கின் றென்மனார் வயங்கி யோரே .......140

மேற்கூறிய ரகர ஈற்றுச் சொற்கள் தொழிலிற் கூறும் பெயர்களாயின் அவற்றொடு ஏகாரம் வருதலும் குற்றமின்று எனக் கூறுவர் வயங்கியோர்.

(எ-டு) கற்றார் என்பது கற்றிரே வருக! எனவும், உண்பார் என்பது உண்பீரே வருக! எனவும் வரும். ஒருசார் பெயர்கள் சென்றவரே, வந்தவரே என வருதலும் கொண்டோரே! உண்டோரே என ஆகாரம் ஒகாரமாகத் திரிந்து வருதலும் கொள்க.

**ரகர மெய்யீற்றுப் பண்புப் பெயர் விளியேற்றல்**

பண்புகொள் பெயரும் அதனோ ரற்றே ....141

பண்படியாகப் பிறந்த ரகார ஈற்றுப் பெயரும் அதனொடு ஒரு தன்மைத்தாம் என்றது ஈறு திரிந்து ஏகாரம் பெறுதலும் திரியாது ஏகாரம் பெறுதலும் இயல்பாதலும் ஆகுமென்றவாறு.

(எ-டு) கரியார்-கரியீரே வருக! எனவும் வெளியர்-வெளியரே எனவும் கரியார் வருக எனவும் வரும்.

**ரகர மெய்யீற்று அளபெடைப் பெயர் விளியேற்றல்**

அளபெடைப் பெயரே அளபெடை இயல .....142

ரகர ஈற்று அளபெடைப் பெயர்கள் னகார ஈற்று அளபெடைப் பெயர்களின் இயல்பினவாம். அஃதாவது திரிபின்றி இயற்கையாகவே விளியேற்று வரும் என்றவாறு.

(எ-டு) மகாஅர் வருக! சிறாஅர் வருக! என வரும்.

**ரகர மெய்யீறுகளுள் விளியேலாதவை சுட்டு முதலாக வரும் பெயர்கள்:**

கட்டு முதற் பெயரே முற்கிளந் தன்ன .....143

அவர், இவர், உவர் என்னும் ரகார ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் னகார ஈற்றுச் சுட்டுப் பெயர்க் கோதியாங்கு விளியேலா என்ற வாறு.

**நீயிர், யாவர் என்பன:**

நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்று

அம்முறை இரண்டும் அவற்றியல் பியலும் ….144

வேற்றுமை ஏற்றற் குரியதாகிய நும் என்னும் பெயரினின்று திரிந்த எழுவாய்ப் பெயராகிய நீயிர் என்பதும், ரகார ஈற்று வினப் பெயராகிய யாவர் என்பதும் மேற்கூறிய சுட்டுப் பெயரியல்பாக நிகழும் என்றது இவையும் விளியேலா என்றவாறு.

**லகர ளகர மெய்யீறுகள் விளியேற்றல்:**

எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே

நின்றே ஈற்றயல் நீட்டம் வேண்டும் …..145

புள்ளியீறு நான்கனுள் எஞ்சிநின்ற லகார ளகார ஈற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமிடத்து ஈற்றயல் நின்ற குற்றெழுத்துக்கள் நீளுதல் வேண்டும். அங்ஙனம் நீளுதலே விளிவேற்றுமையாம்

(எ-டு) குரிசீல் வருக! தோன்றால் வாழ்க! எனவும் மக்கள் காண்மின்! அடிகாள் கேண்மின்! எனவும் வரும்.

**அவற்றுள் ஈற்றயல் நெடிலாக வருவன:**

அயல் நெடி தாயின் இயற்கை யாகும் ….146

மேற்கூறிய லகார ளகார ஈற்றுப் பெயர்களின் ஈற்றயல் நெடிலாயே இருப்பின் அவை இயல்பாகவே விளியேற்கும்.

(எ-டு) திருமால் காண்க! பெருமாள்வருக! என வரும்.

**ளகர ஈற்று வினைப் பெயரும் பண்புப் பெயரும் விளியேற்றல்**

வினையினும் பண்பினும்

நினையத் தோன்றும் ஆள்என் இறுதி

ஆய் ஆகும்மே விளிவயி னான ... 147

விளி வேற்றுமைக் கண் ஆயினவாய், வினையடி யானும் பண்படியானும் கருதத் தோன்றி வரும் பெயரிறுதியாகிய ஆள் என்னும் இடைச்சொல் ஆய் எனத் திரிந்து வரும்.

(எ-டு) உடன் பிறந்தாள் என்பது உடன் பிறந்தாய் வருக எனவும் கரியாள் நெடியாள் என்பவை கரியாய் வருக! நெடியாய் வருக! எனவும் வரும்.

**ளகர ஈற்று முறைப்பெயர் விளியேற்றல்:**

முறைப்பெயர்க் கிளவி முறைப் பெயரியல …148

ளகார ஈற்று முறைப் பெயர்கள் னகார ஈற்று முறைப் பெயரியல்பினவாய் ஏகாரம் பெற்று வரும். (எ-டு) மகளேவாழ்க! மருமகளே வருக! என வரும்.

**ளகர ஈற்றுப் பெயர்களுள் விளிஏலாதன:**

சுட்டுமுதற் பெயரும் வினாவின் பெயரும்

மேற்கிளந் தன்ன என்மனார் புலவர் ...149

சுட்டெழுத்துக்களை முதலாகக் கொண்டு வரும் ளகர ஈற்றுச் சுட்டுப் பெயர்களும் ளகர ஈற்று வினாப் பெயரும் மேல் னகர ஈற்றிற்குக் கூறிய தன்மையவாம் என்றது இவையும் விளியேலா என்றவாறு.

**ல, ள ஈற்று அளபெடைப் பெயர்கள் விளியேற்றல்**

அளபெடைப் பெயரே அளபெடையியல ....150

லகார ளகார ஈற்று அளபெடைப் பெயர்கள் ரகார ஈற்று அளபெடைப் பெயரியல்பினவாம். அஃதாவது திரியாது இயல்பாக விளியேற்கும் என்றவாறு (எ-டு) மாஅல் வருக! வேஎள் வருக! என வரும்.

**விரவுப் பெயர்கள் விளியேற்றல்:**

கிளந்த இறுதி அஃறிணை விரவுப் பெயர்

விளம்பிய நெறிய விளிக்குங் காலை …..151

உயர்திணைப் பெயர்க்கண் விளிகொள்ளுதற் குரியனவாக எடுத்தோதப் பெற்ற இறுதிகளை யுடையவாய் வரும் அஃறிணை விரவுப் பெயர்கள் விளிக்கப்படுமிடத்து அவ்வவ் ஈறு பற்றி உயர்திணைப் பெயர்கட்குக் கூறிய நெறியினவாகும்.

கிளந்த இறுதியாவன, இ உ ஐ ஓ என்னும் உயிரீறுகளும் னரலன என்னும் புள்ளியீறுகளுமாம் ஆண்டு அவற்றிற்குக் கூறிய விதிகளொடு விதப்பானும் உத்தியானும் கொண்ட விதிகளுள் ஏற்பன இவற்றிற்கும் கொள்க.

(எ-டு) சாத்தீ செல்க! எனவும் விருந்தே வருவாய் எனவும் கோதாய் உண்க! எனவும் சாத்தா உழுவாய்! எனவும் கூந்தால் வளர்க! எனவும் மாக்காள் செல்க! எனவும் வரும். முறைப்பெயர் தாயே வருக! தந்தையே வருக! மகனே வருக! மகளே வருக என வரும்.

**அஃறிணைப் பெயர்கள் விளியேற்றல்:**

புள்ளியும் உயிரும் இறுதி யாகிய

அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்

விளிநிலை பெறூஉங் காலந் தோன்றின்

தெளிநிலை உடைய ஏகாரம் வரலே ...152

அஃறிணைப் பொருள் பற்றிப் புள்ளியும் உயிரும் இறுதியாக வரும் எல்லாப் பெயர்களும் விளிக்கும் நிலைமை எய்தும் காலந்தோன்றின் ஏகதார இடைச் சொல்லை ஏற்று விளி வேற்றுமையாதல் தெளியும் நிலையுடையவாகும் வரையறைப் படாமையின் புள்ளியும் உயிரும் எனப் பொதுப்படக் கூறினார்.

(எ-டு) விள, விளவே!, புறா, புறாவே!, புலி, புலியே!, தீ, தீயே!, முசு முசுவே!, வண்டு, வண்டே! ஏன உயிரீற்று அஃறிணைப் பெயர்கள் வரும். மண், மண்ணே! மரம், மரமே! குயில், குயிலே! எனப் புள்ளியீற்று அஃறிணைப் பெயர்கள் வரும்.

**மூவகைப் பெரும் சேய்மை விளியேற்றல்:**

உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்

அளபிறந் தனவே விளிக்குங் காலை

சேய்மையின் இசைக்கும் வழக்கத் தான ...153

விளிகோடற்குரியன என மேல் விதந்து கூறப்பட்ட எல்லாச் சொற்களும் சேய்மை இடம் பற்றி இசைக்கும் வழக்கின்கண் விளிக்குமிடத்து அளபிறந்தனவாம்.

(எ-டு) நம்பீஇ நம்பீ இஇ! ஆடூஉ! சாத்தா, சாத்தாஅ, மலையமான், மலைமாஅன் எனவும் விளவோ! புறவோ எனவும் வரும்.

**'அம்ம' இடைச்சொல் விளியேற்றல்:**

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்

அம்முறைப் பெயரொ சிவணாதாயினும்

விளியொடு கொள்ப தெளியு மோரே ...154

புணர் மொழிக்கண் 'உரைப் பொருட் கிளவி நீட்டமும் வரையார்' எனக் கூறப் பெற்ற 'அம்ம' என்னும் இடைச் சொல்லினது நீட்டமாகிய 'அம்மா' என்னும் சொல் மேற்கூறிய முறையாகிய மூவகைப் பெயரொடு ஒன்றாகப் பொருந்தாதாயினும் 'அம்ம கேட்பிக்கும்' என்னும் அதன் பொருள் நிலையைத் தெளிந்தோர் அதனை விளி கொள்ளும் பெயரொடு சார்த்திக் கொள்ளுவர். 'அம்முறைப் பெயர்' என்றது முன்னர் விளி கொள்ளும் பெயராகக் கூறிய உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் பொதுப் பெயர்களை.

(எ-டு) அம்மா சாத்தா! அம்மா கொற்றா என வரும்.

**உயர்திணைப் பெயர்களுள் விளியலாதவை**

தநநு எயென அவை மதலாகித்

தன்மை குறித்த னளரவென் இறுதியும்

அன்ன பிறவும் பெயர்நிலை வரினே

இம்மை வேண்டும் விளியோடு கொளலே ...155

தநநு எ என்னும் எழுத்துக்கள் முதலாகிக் கிழமை குறித்து நின்ற னளர என்னும் இறுதிகளை உடைய சொற்களும் அவை போல்வன பிறவும் பெயர் நிலைமை யுற்றுவரின் அவற்றை விளியேற்கும் பெயர்களொடு கோடல் இன்மை வேண்டும்.

அவையாவன தமன், தமன், தமர், நமன், நமள், நமர், நுமன், நுமள், நுமர், எமன், எமன், எமர் எனவும் தம்மான், தம்மாள், தம்மார், நம்மான், நம்மாள், நம்மார், நும்மான், நும்மாள், நும்மார், எம்மான், எம்மாள், எம்மார் எனவும் வருவன.

அன்ன பிறவாக வருவன : பிறன், பிறள், பிறர், பிறர், பிறிது, பிற, மற்றையான், மற்றையாள், மற்றையார், மற்றையது, மற்றையவை என வருவனவும் யான், நீ, தான் என்னும் மூவிடப் பெயர்களும் ஆம்.

## விளிமரபு - பயிற்சி வினாக்கள்

1. விளிமரபு-பெயர்க்காரணம் தருக.
2. விளி வேற்றுமையின் இலக்கணத்தை வரையறுக்க.
3. விளி வேற்றுமையின் திரிபுகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. உயர்திணைப் பெயர்களில் விளியேற்கும் உயிர் ஈறுகள் யாவை ?
5. இகர ஐகார ஈறுகள் விளியேற்கும் போது அடையும் திரிபுகளைக் குறிப்பிடுக.
6. உகர ஓகார ஈறுகள் விளியேற்கும் போது பெறும் மாற்றங்களைச் சுட்டுக.
7. உயிர் ஈற்று முறைப்பெயர்கள் விளியேற்கும் முறையை விவரி.
8. உயர்திணைப் பெயர்களில் விளியேற்கும் புள்ளி ஈறுகள் யாவை?
9. சேய்மை விளியிலும் அண்மை விளியிலும் ‘அன்’ஈறு எவ்வாறு திரியும்?

10. வினையால் அணையும் பெயர், பண்புகொள்பெயர் இவற்றில் ஆன் ஈறு திரியுமாற்றைச் சான்றுடன் விளக்குக.

## தொகுப்புரை

- எழுவாயும் பயனிலையும் தொடரும் பாங்கு கிளவியாக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. இங்கு எழுவாயோடு வேற்றுமை தொடரும் பாங்கு சொல்லப்படுகிறது. வேற்றுமை உருபுகள் மயங்கி வருகின்ற இடங்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- பெயர்ச்சொல்லோடு வேற்றுமையும் வினைச்சொல்லோடு காலமும் இயைந்து வருவது தமிழ் மொழியின் மரபு.
- சொல்லதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களில் வேற்றுமை பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.
- எழுவாய் வேற்றுமை முதல் விளி வேற்றுமை வரை தொல்காப்பியர் சொல்லதிகார இரண்டாம் இயலில் விளக்கியுள்ளார்.

### அருஞ்சொற்பொருள் விளக்கம்:

1. சிவணுதல் - பொருந்துதல்
2. கிழமை - உரிமை
3. இன்மை - இல்லை
4. தண்மை – குளிர்ச்சி
5. தலை – முதல்

### தன்மதிப்பீட்டு வினாக்கள்.

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பெயர் மட்டுமே வெளிபட்டு நிற்கும் வேற்றுமை எது?

அ) முதலாம் ஆ) மூன்றாம் இ) நான்காம் ஈ) ஐந்தாம்

2. தற்கிழமை, பிறிதின்கிழமையில் வருகின்ற வேற்றுமை உருபு எது?

அ) மூன்றாம் ஆ) ஆறாம் இ) ஐந்தாம் ஈ) நான்காம்

3. செயப்படு பொருள்மேல் வரும் எல்லாச் சொற்களும் எவ்வேற்றுமைக்குரியது

அ) 3 ஆ) 4 இ) 5 ஈ) 2

4. ஒருவினை ஒடுச்சொல் …………. வழித்தே”

அ) பெயர்பின் ஆ) வினைபின் இ) சொல்பின் ஈ) உயர்பின்

5. கழஞ்சி என்பது……..

அ) பண்புப்பெயர் ஆ) அளவுப்பெயர் இ) சினைப்பெயர் ஈ) தொழிற்பெயர்

**விடைகள் :**

1. அ) முதலாம்
2. ஆ) ஆறாம்
3. ஈ) 2
4. ஈ) உயர்பின்
5. ஆ) அளவுப்பெயர்

**குறுவினாக்கள் - நெடுவினாக்கள்**

1. வேற்றுமை – பெயர்க்காரணம் தருக.
2. முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உள்ள வேறு பெயர்கள் யாவை?
3. எழுவாய் வேற்றுமை கொள்ளும் பயனிலைகள் எத்தனை? அவை யாவை?
4. இரண்டு முதல் ஏழு வரை உள்ள வேற்றுமைகளுக்குக் கூறப்படும் உருபுகள் யாவை?
5. தோன்றா எழுவாய் என்றால் என்ன?
6. பெயரில் உருபு நிற்கும் இடம் பற்றித் தொல்காப்பியர் கூறுவது யாது?
7. வேற்றுமையியலில் பெயரின் இலக்கணமாக கூறப்படும் செய்திகளை விளக்குக.
8. இரண்டாம் வேற்றுமை உருபும் பொருளும் பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றைச் சான்றுடன் விளக்குக.

9.செயப்படுபொருள் குன்றாவினை, செயப்படு பொருள் குன்றிய வினை – விளக்குக.

**துணைநின்ற நூல்கள் :**


1. தொல் - சொல்லதிகாரம், சேனாவரையர் உரை, திருநெல்வேலி சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி
2. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - தமிழண்ணல் உரை, மீனாட்சி புத்தக நிலைய வெளியீடு -


**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள்**

1. Tamil Heritage Foudationwww.tamilheritage.orghttp://www.tamilheritage.org
2. Project Madurai – www. Project Madurai.org
3. Tamil Universal Digital Library – www.ulib.prg<http: www.ulib.prg>
4. Tamil E – Books Dwonloads – tamilebooksdownloads.blogspot.com
5. Chennailibrary – www.chennailibrary.com<http: www.chennailibrary.com>

## அலகு - 3

**அலகில் இடம்பெறுபவை :**

பெயரியல், வினையியல்

**நோக்கங்கள் :**

- உலக மொழிகளின் இலக்கண வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்கும் தமிழ்மொழியின் கட்டமைப்பை விளக்குதல்.
- பெயர் மற்றும் வினைச் சொற்களின் இலக்கணங்களின்வழி மொழியியல் கருத்துகளைக் கற்பித்தல்.
- பெயர் மற்றும் வினைச்சொற்கள் உயர்திணை மற்றும் அஃறிணையில் அமைந்து வருகின்ற முறைமையினைத் தெளிவுபட எடுத்துரைத்தல்.

- பெயர்ச்சொற்கள் மற்றும் வினைச்சொற்கள் குறித்து தொல்காப்பியர் முன்வைக்கும் இலக்கணச் சிந்தனைகளை சான்றுகளோடு கற்பித்தல்.

## பெயரியல்

### சொல்லினது பொது இலக்கணம்

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே ... 156

பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களும் பொருள் குறித்து நிற்பனவேயாம்.

(எ-டு) நிலம், நீர், வளி, வான், நம்பி, நங்கை, புள், விலங்கு, மரம், மலர், செம்மை, கருமை, உண்மை, நம்மை எனவும், உண்டான், உண்டது, கரியன், கரியது எனவும், கொன், மன், மதி எனவும், உறு, தவ எனவும் வரும்.

### சொல் தன்மையும் பொருளையும் உணர்த்துதல்

பொருண்மை தெரிதலு சொன்மை தெரிதலும்

சொல்லின் ஆகும் என்மார் புலவர் ---- 157

சொல் கருவியாகத் தன்னின் வேறாகிய பொருளை அறிந்து கோடலும் இ∴து இன்ன சொல் என அச் சொல்லின் தன்மையை அறிந்து கோடலும் ஆகிய இரண்டும் பொருள் குறித்து வருமென்ற அச் சொல்லானே விளக்கமாகும் என்று கூறுவர் புலவர்.

(எ-டு) நம்பி வந்தான், பெறுகதின், உறுகால் என்பவை முறையே உயர்திணை ஆடுஉ எனவும் உயர்திணை ஆடுவின் வருதற்றொழில் நிகழ்ந்து முடிந்தது எனவும், பெறுதலை விழைகின்றேன் எனவும் மிக்க காற்று எனவும் பொருளுணர்த்தி நின்றவாறும். 'நீயென் கிளவி ஒருமைக் குரித்தே' எனவும், செய்கென் கிளவி வினையொடு முடியினும் எனவும் உம் உந்தாகும் இடனுமாருண்டே எனவும் ‘‘வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம் எனவும்'' நின்றவற்றுள் நீ-செய்கு-உம் வயா என்பவை பிற பொருளுணர்த்தாமல் முறையே பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனத் தம்மையே உணர்த்தி நின்ற வாறும் கண்டு கொள்க

**சொல் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருளுணர்த்துதல்**

திரிபுவேறு நிலையிலும் குறிப்பிற்றோன்றலும்

இருபாற்றென்ப பொருண்மை நிலையே - 158

மேற் கூறப்பெற்ற பொருண்மை தெரிதலாகிய நிலையாவது ஒரு சொல் பொருளை வெளிப்படையாகத் தெரிவித்துக் குறிப்பினின்று வேறுபட நிற்றலும் குறிப்பானே பொருள் தெரிய நிற்றலும் என இரு கூறுபாட்டினை உடைத்து என்று கூறுவர் புலவர்.

(எ-டு) அவன், நிலம், மலை, வந்தான், சென்றான் என்பவை திரிபின்றித் தம்பொருளை நேரே விளக்கி நின்றன. ஒருவர் வந்தார் என்புழி அவ்வொருவர் ஆடுஉ அல்லது மகடூஉ என்பதைப்பின் முன் வரும் சொற்களான் அறிந்து கொள்ளுமாறு நிற்றலும் சோறுண்ணா நிற்பவன் கற்கறித்து நன்கட்டாய் என்புழி தீங்கட்டாய் எனப் பொருள் தருதலும் கடுந்தின்றான் என்பது மரத்தை உணர்த்தாமல் அதன் காயை உணர்த்தலும் இவ்வாறு வரும் அன்மொழித் தொகைகளும் உவமப் போலியாயும் உள்ளுறை உவமமாயும் வருவன பிறவும் குறிப்பாற் பொருள் தருவனவாம். பொருண்மை நிலை இருபாற்றெனவே சொன்மை நிலை ஒன்றே என்பது பெறப்படும்.

**சொற்களின் பாகுபாடு – பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும்:**

சொல்லெனப் படுவ பெயரே வினையென்று

ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே - 159

சொல்லென்று சிறப்பித்துக் கூறப்படுபவை பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் என அவ்விரண்டு கூறாகும் என்று சொல்லுவர் இலக்கண நெறியறிந்தோர்.

**இடைச்சொல்லும் உரிச்சொல்லும்**

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்

அவற்றுவழி மருங்கிற் தோன்று மென்ப - 160

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மேற் கூறிய பெயர் வினைகளைச் சார்ந்து அவற்றின் வழியாகவும் அவற்றின் இடமாகவும் தோன்றி நிற்கும்.

**திணை அடிப்படையில் பெயர்ச்சொல் வகை:**

அவற்றுள்

பெயரெனப் படுபவை தெரியுங் காலை

உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்

ஆயிருதிணைக்கும் ஓரன்ன உரிமையும்

அம்மூ வுருபின தோன்ற வாறே - 161

மேற்கூறப்பெற்ற நால்வகைச் சொற்களுள் பெயர்ச்சொல் என்று கூறப்படுவனவற்றை ஆராயுங்கால் அவை தோன்றுமாற்றான் உயர்திணைக்கே உரிமை உடையனவும் அஃறிணைக்கே உரிமையுடையனவும் அவ்விரு திணைகட்கும் ஒருங்கொத்த உரிமையுடையனவும் படிவத்தனவாகும். என அம் மூன்று

**பெயர்ச்சொல் பால் உணர்த்துதல்:**

இருதிணைப் பிரிந்த ஐம்பாற் கிளவிக்கும்

உரியவை உரிய பெயர்வயி னான - 162

இருதிணைக்கும் உரியவாக ஆடூஉவறி சொல் முதலாகப் பலவறி சொல் ஈறாகப் பிரிந்து நின்ற ஐம்பாற் சொல்லுக்கும் மேற் கூறிய பெயர்களிடத்தான சொற்களில் உரியவை உரியவாம்.

**உயர்திணைப் பெயர் வகை-சுட்டுவினா இடப்பெயர்கள்:**

அவ்வழி

அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும்

அவள் இவன் உவள் என வரூஉம் பெயரும்

அவர் இவர் உவர் என வரூஉம் பெயரும்

யான் யாம் நாம் என வரூஉம் பெரும்

யாவன் யாவள் யாவர் என்னும்

ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்

பாலறிவந்த உயர்திணைப் பெயரே…..163

உரியவை உரிய எனக்கூறிய முறைமையான் அவன் முதலாக யாவர் ஈறாகக் கூறப்பெற்ற அப்பதினைந்து சொற்களும் உயர்திணைக்கே உரிய பெயர்ச் சொற்களாம். வழக்குப் பயிற்சி குறைந்தவையாதலின் வினாப் பெயர்களைப் பிரித்தோதினார்.

யான் என்பது ஆடு மகடுவாகியவற்றுள் ஒன்றனை வரைந்துணர்த்ததாயினும் உயர்திணை ஒருமை உணர்த்தலின் பாலறி கிளவியாயிற்று.

**ஆண்மகன் முதலான பெயர்கள்:**

ஆண்மை யடுத்த மகனென் கிளவியும்

பெண்மை யடுத்த மகளென் கிளவியும்

பெண்மை யடுத்த இகர இறுதியும்

நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்

முறைமை சுட்டா மகனும் மகளும்

மாந்தர் மக்கள் என்னும் பெயரும்

ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்

சுட்டு முதலாகிய பெண்டன் கிளவியும்

ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ

அப்பதி னைந்தும் அவற்றோ ரன்ன ….164

ஆண்மையடுத்த மகனென் கிளவி முதலாக ஒப்பொடு வரூஉம் கிளவி ஈறாக ஓதப் பெற்றனவாய் வரும் அப்பதினைந்து சொற்களும் பால் விளங்க வந்து நிகழும் உயர்திணைக்கு உரிய பெயர்ச்சொற்களாம்.

ஆண்மையடுத்த மகனென் கிளவி என்றது ஆண்மைப் பண்பை உணர்த்தும் சொல்லாகிய ஆண் என்பதனைத் தொடர்ந்து நிற்கும் மகன் என்னும் பெயர் என்றவாறு அஃதாவது இருபெயரொட்டன்று என்றதாம். இவற்றைப் பிரிப்பின் ஒவ்வொன்றும் விரவுப் பெயராதலின் ஆண்மையடுத்த மகனென் கிளவி என விளங்கக் கூறினார். பெண்மை யடுத்த மகளென் கிளவி என்பதற்கும் இவ்விளக்கம் ஒக்கும். அவை முறையே ஆண்மகன்-பெண்மகள் என வரும்.

பெண்மை யடுத்த இகர இறுதி என்பது பெண் என்னும் பண்புச் சொல்லைத் தொடந்து நிற்கும் ஆள்வினையொடு கூடிய இகர ஈற்றுப் பெயர் என்பதாம் அஃது பெண்டாட்டி என வரும்.

இவ் இகர ஈறு பெண்ணென்னும் சொல்லொடு நேரேதொடராமல் ஆளுதல் வினைப் பண்புணர்த்தும் உரிச்சொல்லொடு கூடி ஆட்டி என வருமென்பதும். தோன்றப் பிரித்துக் கூறினார். அதனான் பெண் தன்மையை அடுத்து இவ்வாறு இகர இறுதியாகத் திருவாட்டி, பெருமாட்டி எனவும் வரும். தலைவி, தோழி, கிழத்தி, செவிலி, விறலி, பாடினி, ஒருத்தி முதலாயினவும் பெண்மை யடுத்த இகர இறுதியாக அடங்குமென்க.

இவ்வாறு வருவன விரவுப் பெயராதற்கும் ஒக்குமன்றோ எனின் பயனும் சிறப்புங்கருதி ஓராவினையும் பெற்றத்தையும் அவள், அவன் எனக் கூறுதல் போல இவை அஃறிணைக்கண் வழங்கப்படுதலன்றி முடவன் முடத்தி என்றாற் போல இரு திணைக்கும் ஒத்த உரிமையவாய் வருவன அல்ல என்பதை இருவகை வழக்கும் நோக்கி அறிக. இங்ஙனம் கொள்ளாக்கால் சாத்தி-கொற்றி என்றாற்போல வரும் பெயர்கள் பெண்பால் உணர்த்துதற்கு ஏலாவாய்க்குன்றக் கூறலாய் முடியும் என்க.

நம்மூர்ந்து வரூஉம் இகர ஐகாரம் என்பது, நம் என்னும் முதனிலையொரு கூடி இறுதியாயும் ஐகார இறுதியாயும் வரும் பெயர்ச்சொற்கள் என்றவாறு அவை நம்பி-நங்கை என வரும்.

முறைமை சுட்டா மகனும் மகம் என்பது இன்னார்க்கு அல்லது இன்னதற்கு என உரிமை கருதாமல் ஆடூஉ மகடூஉ என்னும் துணையாய் வரும் பெயர்ச் சொற்கள் அவை மகனே தோழி என்றனள்.

மாந்தர் மக்கள் என்னும் பெயரும் என்பது மாந்தர் எனவும் மக்கள் எனவும் பன்மை குறித்து வரும் பெயர்ச் சொற்களாம்.

ஆடுஉ மகடுஉ ஆயிருபெயரும் என்பது ஆடூஉ எனவும் மகடுஉ எனவும் ஒருமை குறித்து வரும் பெயர்ச் சொற்களாம்.

சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் என்பது சுட்டிடைச் சொற்களை முதலாகக் கொண்டு பாலுணர்த்தும் ஈற்றொடு தொடர்ந்து அவன் இவன் என்னும் கட்டும் பெயர்களை ஒப்பப் பொருளுணர்த்தி நிற்கும் அன்னிற்று ஆனீற்றுப் பெயர்களாம்.

அவை அன்னன் இன்னன் எனவும் அன்னான் இன்னான் எனவும் வரும். உகரச் சுட்டிடைச் சொல் முதலாக வரும் உன்னன் உன்னான் என்பவை சிங்க ஈழத்துப் (இலங்கை) பயின்று வருகின்றமை போலத் தமிழீழத்துப் (தமிழகத்துப் பயின்று வரவில்லை என்க.

சுட்டு முதலாகிய அன்னும் ஆனும் என்றதனான் அவை சுட்டெழுத்துக்களை அடுத்தவரின் அவன், இவள் அவான், இவான் என்றன்றே வரல் வேண்டுமெனின் அற்றன்று சுட்டெழுத்துக்களின் அடிப்படையில் வருவன அவன் இவன் உவன் எனப்பிரிப்பப் பிரியா ஒரு சொல்லாக வரும் என்பதுணா அவன் இவன் உவன் என வரூஉம் பெயரும் என ஆசிரியர் மேல் விதந்து கூறினமையானும் சுட்டெழுத்துக்கள் இடைச்சொல்லாதலின் இடைச்சொற்கள் தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும் பிறவுமாகிய இலக்கணத்தை உடையவாதலானும் ஈண்டுச் சுட்டென்றது ஆன்,ஈன், ஊன் என்னும் இடம் உணர்த்தும் சுட்டுப்பெயர்களின் திரிபாக வரும் அன், இன், உன் என்பவற்றை என அறிக. இதனை இவரிவர் கூறினார் என்பதை இன்னின்னார் கூறினார் எனவரும் வழக்கானும் அவ்வனைத்தும் என்பதனை அன்றியனைத்தும் என ஆசிரியர் வழங்கலானும் உணர்க.

அவை முதலாகிய பெண்டன் கிளவி என்பது சுட்டுக்களை முதலாகக் கொண்டு பெண்மை பற்றி வரும் பெயர்ச் சொற்களாம். அவை அன்னள்-இன்னள்-அன்னாள்-இன்னாள் என வரும்.

அவை முதலாகிய ‘அள்ளும் ஆளும்’ என்னாது பெண்டன் கிளவி எனக் கூறினார் அவ்வாட்டி இவ்வாட்டி என வரும் இகர ஈற்றுப் பெயர்களும், அப்பெண்டு இப்பெண்டு என வரும்உகர ஈற்றுப் பெயர்களும் முறைமை கருதாது வரும் அன்னை எனவரும் ஐகார ஈற்றுப் பெயரும் கோடற்கென்க.

ஒப்பொடு வரூஉம் கிளவி என்பது உவம உருபிடைச் சொற்களை முதனிலையாகக் கொண்டு வரும் பெயர்களாம். அவை அன்னவன், அன்னவள், அன்னவர், அனையவன், அனையவள், அனையவர் என வரும்.

ஒப்பிடைச் சொல்லான் வரும் என்னாது ஒப்பொடு வரூஉம் எனப் பொதுப்பட ஓதியமையான் புலியான், வேங்கையான், பூசையான், மயிலாள், குயிலாள், கண்ணார், பொன்னார், கோதையார் என ஒப்புமைக் கருத்தான் வருவனவும் கொள்க.

மேலைச் சூத்திரத்துக் கூறிய பதினைந்தும் ஒரு மொழியாய்த் திரிபின்றி உயர்திணை முப்பாலையும் பற்றிப் பெரு வழக்கிற்றாயீ வருவன. இக் கூறிய பதினைந்தும் அவ்வாறன்றித் தொகைச் சொல்லாயும் வருதலின் அவற்றொடு கூறாமற் பிரித்துக் கூறினார் என்க.

**எல்லாரும் முதலான பெயர்கள்:**

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை யடுத்த மகனென் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர் - 165

எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரும் பெண்ணென்னும் சொல்லைத் தொடர்ந்து நிற்கும் மகன் என்னும் சொல்லாகிய பெண்மகன் என்னும் சொல்லும் மேலன போலப் பால் விளங்க வரும் உயர்திணைப் பெயர்ச்சொற்களாம் என்று கூறுவர் புலவர்.

எல்லார், எல்லீர் என்பவை உம்மை பெற்று நிற்றலானும் மகன் என ஈறு திரிந்து நிற்றலானும் இவற்றை வேறாகக் கூறினார்.

**நிலப்பெயர் முதலான பெயர்கள்:**

நிலப்பெயர் குடிப்பெயர் குழுவின் பெயரே
பல்லோர்க் குறித்த முறைநிலைப் பெயரே
பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயரே

பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே
வினைப்பெயர் உடைப்பெயர் பண்புகொள்பெயரே
கூடிவரு வழக்கின் ஆடியற்பெயரே
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரொடு
அன்றி அனைத்தும் அவற்றியல் பினவே - 166

நிலப்பெயர் முதலாக எண்ணியற் பெயர் ஈறாக ஓதிய அவ்வனைத்தப் பெயர்களும் மேலான போலப் பாலறி வந்த உயர்திணைப் பெயர்ச் சொற்களாகும். இயல்பினவே என்னும் ஏகாரம் இசைநிறை ஏனைய எண்ணுப் பொருளன.

நிலப்பெயராவன:-

முல்லை முதலாய நிலமும், நாடும், ஊரும் பற்றி வருவன. அவை முல்லையான், குறிஞ்சியான், நாட்டான், ஊரான், மதுணயான் என வரும். வஞ்சி நாடன், என அவை அடையடுத்தும் வரும். அன், ஆன், அள், ஆள், அர்,ஆர் என்னும் இறுதிகளை ஏற்பனவற்றொடு பொருந்தக் கூட்டிக் கொள்க.

குடிப்பெயராவன:-

குடி மரபு பற்றி வரும் பெயர் அவை சேரன், சோழன், சேரமான், மலையமான் எனவும், பாணன், கடம்பன் எனவும் வரும் இவை பற்றி வரும் பெண்பாற் பெயர் சோழச்சி, சேரச்சி, பாணத்தி, கடம்பச்சி என்றாற் போல வரும். ஒன்றென முடித்தலான பார்ப்பான், பார்ப்பனி, வேளாளன், சோழியன் என வருவனவும் கொள்க.

குழுவின் பெயராவன:-

யாதானும் ஒரு துறைக்கண் ஒத்த உரிமையுடையாராய்ப் பலர் கூடியுறையும் கூட்டத்தைக் குறித்து வரும் பெயர் அவை அவையத்தார், மன்றத்தார், ஆயத்தார், கழகத்தார் என வரும். அவையத்தான், அவையத்தாள் எனச் சிறுபான்மை ஒருமைப்பாலாயும் வரும்.

வினைப்பெயராவன:-

தொழில் காரணமாக வரும் பெயர்கள் அவை. உண்டவன், தின்றவன், உண்டான் தின்றான் என வரும். சாதி குறியாது கொல்லன், தச்சன், கூத்தன் என வருவனவும் கொள்க. பெண்பாற்கும் பலர்பாற்கும் ஒட்டிக் கொள்க.

உடைப்பெயராவன், ஒன்றை உடைமையாகக் கொண்டிருத்தல் பற்றி எய்திய பெயர். அவை குட்டுவன், பூழியன், வெற்பன், சேர்ப்பன் குழையன், வேலன், வில்லன் எனவரும்.

பண்புகொள் பெயராவன:-

வன்மை, வடிவு, சுவை, அளவு முதலிய குணம் பற்றி வரும் பெயர்களாம். அவை கரியன், கூனன், இனியன், நெடியன், நல்லன், தீயன் என வரும்.

இவ் அறுவகைப் பெயரும் ஆடூஉ மகடூஉ பல்லோர் என்னும் மூன்றுபாற்கும் இயையு மாற்றான் வரும் என்பது உணர இனி வருவனவற்றைப் பல்லோர்க் குறித்த என விதந்து கூறினார் என அறிக.

பல்லோர்க் குறித்த முறைநிலைக் பெயராவன: பன்மை பற்றி வரும் முறைப் பெயர்களாம். அவை தாயர், தந்தையர், தாய்மார், தந்தைமார் எனவும் மாமன்மார், பாட்டன்மார் என வழக்கின் கண்வருவனவும் மகன்மார், மகள்மார் எனப் பன்மைப் பொருட்டாய் வருவனவும் கொள்க.

பல்லோர்க் குறித்த சினை நிலைப் பெயராவன:-

பன்மைப் பாலாய்ச் சினை காரணமாக முதலுக்கு எய்திய பெயர், அவை குருடர், செவியர், தலையர், வாயர் என வரும்.

பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயராவன:-

பன்மை பற்றித் திணை காரணமாக வரும் பெயர் திணை என்றது கைக்கிளை முதலாய ஏழும், அவற்றின், புறத்திணைகளுமாம். இவற்றுள் குறிஞ்சி முதலாய ஐந்தும் நிலத்திற்கும் பெயராக வருதலின் குறிஞ்சியான், முல்லையான் என வருவன நிலப்பெயர் என்பதன் கண் அடங்கும், ஆயர், வேட்டுவர் என்றாற் போல வருவன திணை தொறும் மரீஇய திணைநிலைப்பெயர் எனப் பின்னர்க் கூறுவாராகலின் அவை மரபு பற்றிய திணைப் பெயராய் அடங்கும்.

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயராவன:-

இளையோர் தம்முள்ள வினையாடுதற்கண் குழுஉப்படப் பிரிந்து அவ்வப்போது அமைத்துக் கொள்ளும் பெயர் கடலைக்கையான், முகப்பவர், மணலைக் கயிறாகத் திரிப்பவர், விண்ணை அளப்பவர், மலையை உகிராற் பிளப்பவர் என்றாற் போல வரும். இவை பெயரினாகிய தொகையாய் வந்து ஒரு சொல் நீர்மையவாக நிற்பன என அறிக.

இன்றிவர் என்னும் எண்ணியற் பெயராவன

இவ்வளவினர் என எண்ணான் இயன்று வரும் பெயர்களாம். ஒருவன், ஒருத்தி, இருவர், மூவர், நால்வர், பன்னிருவர், முப்பத்து மூவர், நூற்றுவர் நாறத்தொண்ணாயிரவர் என்றாற் போல வருவனவாம்.

பொருளான் வேறுபட்ட பல்வகைப் பெயர்கள் நிலம் குடி, முதலிய ஓர் அடிப்படையுள் ஒன்றுபட்டு இனமாய் நிற்றலின் இவற்றைப் பிரித்து வேறு கூறினார்.

**உயர்திணைப் பெயர்களுக்கு ஒரு புறனடை:**

அன்ன பிறவும் உயர்தினை மருங்கின்

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த

என்ன பெயரும் அத்திணை யவ்வே - 167

மேற்கூறப் பெற்ற பெயர்களை ஒப்பவருவனவும் பிறவுமாய் உயர்திணையிடத்து ஒருமையும் பன்மையுமாகிய பால் விளங்கவரும் எவ்வகையான பெயர்களும் உயர்திணைக் குரியவையாம்.

ஏனாதி, காவிதி, அமைச்சன், மன்னன், ஒற்றன், தூதன், வாயிலான், அடியான், பிறன், மற்றையான், எமன், துமன், என்றாற்போல்வன. இவற்றைப் பொருந்து மாற்றான் மகடுஉ விற்கும் பல்லோர்க்கும் ஆக்கிக் கொள்க. இனி எல்லேம், வல்லேம், ஒருவேன், இருவேம், பலவேம் என வருவன "கடி சொல்லில்லை" என்பதனாற் கொள்க.

**அஃறிணைப் பெயர்கள்**

அது இது உது வென வரூஉம் பெயரும்

அவை இவை உவை யென வரூஉம் பெயரும்

அவை முதலாகிய வகரப் பெயரும்

யாது யா யாவை என்னும் பெயரும்

ஆவயின் மூன்றொடு அப்பதி னைந்தும்

பாலறி வந்த அ∴றிணைப் பெயரே - 168

அது, முதலாக யாவை,ஈறாகக் கூறப்பெற்ற அப்பதினைந்து சொற்களும் ஒருமையும் பன்மையுமாகிய பால் விளங்க வரும் அ∴றிணைப் பெயர்ச் சொற்களாகும்.

ஆவை முதலாகிய என்றது அச்சுட்டுக்களை முதலாக உடைய என்றவாறு. ஆவையாவன அ∴து, இ∴து, உ∴து என்பனவும் அவ், இவ், உவ் என்பனவுமாம். யாது யாவை என்பவை எது, எவை யென இக்காலத்துக் திரிந்து வழங்குகின்றன. அவை தொல்காப்பிய நெறியை நோக்க வழூஉ வழக்காகும்.

**பல்ல முதலான பல்வகைப் பெயர்கள்:**

பல்ல பலசில என்னும் பெயரும்

உள்ள இல்ல என்னும் பெயரும்

வினைப் பெயர்க்கிளவியும் பண்புகொள் பெயரும்

இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்

ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட

அப்பால் ஒன்பதும் அவற்றோ ரன்ன - 169

பல்ல பல சில உள்ள இல்ல என்னும் பெயர்களும் வினைகாரணமாக வந்த பெயர்களும் பண்பு காரணமாக வந்த பெயர்களும் இவ் அளவினது எனக்கூறப்பெறும் எண்ணாற் குறிப்பிடப் பெற்றுவரும் பெயர்களும் ஒப்புப்பற்றி வரும்

பெயர்களும் ஆகிய அக்கூற்று ஒன்பதும் மேலனவற்றொடு ஒத்த அ∴றிணைப் பெயர்களாம்.

பல்ல, பல, பல்லவை எனவும் சில்ல, சில, சில்லவை எனவும் உள்ள உள்ளவை எனவும் இல்ல, இல்லவை இல எனவும் வரும். இவ்வைந்தும் கூறப்பட்டுவந்தன.

வினைப் பெயராவன:

வருவது, செல்வது-வருபவை, செல்பவை, உண்டது, உண்டன-இடிதாங்கி-சேர்ந்தாரைக் கொல்லி என்றாற்போல்வனவாம். பண்புகொள் பெயராவன கரியது, கரியவை, வெளியது. வெளியவை நல்லது-நல்லவை-நெடியது-நெடியவை-இனியது-இனியவை என்றாற் போல வருவனவாம்.

எண்ணுக் குறிப்பெயராவன:

பொருளையே சுட்டி வரும் ஒன்று, இரண்டு, பத்து, நூறு, ஆயிரம் கோடி என்றாற் போல்வனவாம். எண்ணுப் பெயர் என்னாது எண்ணுக்குறிப்பெயர் என்ற தனான் தாமரை, ஆம்பல், வெள்ளம் எனவரும் எண்ணுப் பெயர்களும் கொள்க.

ஒப்பின் ஆகிய பெயராவன:

ஒப்புமை குறித்து உவம உருபிடைச் சொல் முதனிலையாகவரும் பெயர்களாம். அவை: அன்னது, அன்னவை, போல்வது போல்பவை, போன்றவை. ஒத்தது. என்றாற் போல வருவனவாம்.

வாள் போல இருப்பதனால் வாளை மீனுக்கு அப்பெயர் வந்ததாயினும் அங்ஙனம் ஒப்புமையாக்கத்தான் வரும் பெயர்கள் இயற்பெயராவதல்லது ஒப்பின் ஆகிய பெயராக என அறிக. மேலன போல இவை தனிச் சொல்லாக நில்லாமல் வகைப்பட (இனம்) நிற்றலின் இவற்றை வேறு பிரித்தோதினார் என்க.

**அ.்.றிணைப் பன்மை-கள் விகுதி:**

கள்ளொடு சிவனும் அவ்வியற் பெயரே

கொள்வழி யுடைய பலவறி சொற்கே ... 170

கள் என்னும் இறுதியொடு பொருந்தி வரும் அ.்.றிணை இயற்பெயர்கள் பலவறி சொல்லாதற்கு உரியவாகக் கொள்ளும் முறைமை உடையனவாம். எனவேகள்ளொடு

சிவணாதவழி ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் அத்திணைப் பொதுப் பெயராக நிற்கும் என்பதாம்.

அகரச்சுட்டு அஃறிணையாகிய திணையைச் சுட்டி நின்றது.

அவையாவன மலை, கடல் நாடு, மரம், செடி, கொடி, யானை, குதிரை, நாரை, நந்து, மீன்,ஈ, பாம்பு, எறும்பி முதலியவாய உருவப் பொருள்களும் வளி, வான் முதலியவாய அருவப் பொருள்களும் செம்மை, கருமை முதலியவாய காட்சிப் பொருள்களும் அன்பு, அறிவு, வன்மை, மென்மை முதலியவாகிய கருத்துப் பொருள்களும் பிறவுமாம்.

அவை கள்ளொடு சிவணியவழித் திரிபின்றிப் பால் உணர்த்துமாறு, மலைகள், யானைகள், மரங்கள், மீன்கள், வளிகள், செம்மைகள், அறிவுகள் என வரும்.

அஃறிணை இயற்பெயர் எனினும், அஃறிணை விரவுப் பெயர் எனினும், அஃறிணைப் பொதுப்பெயர் எனினும், பால்பகா அஃறிணைப் பெயர் எனினும் ஒக்கும். மக்கட் சாதி ஒன்றே யாதலின் அவர்கட்கு இட்டு வழங்குதற்கு இவ் அஃறிணையியற் பெயர்களே துணையாக அமைதலின் னஃகான் ஒற்றும் எஃகான் ஒற்றும் இகர ஈறும் பெற்று ஆண், பெண் என்னும் பாலுணர நிற்பினும் அவையெல்லாம் விரவுப் பெயராதற்குரியவாய் நிற்கும்.

**அஃறிணைப் பெயர்களுக்கு புறனடை**:

அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்

பன்மையும் ஒருமையும் பாலறிவந்த

என்ன பெயரும் அத்திணை யவ்வே - 171

மேற்கூறப்பட்ட பெயர்கள் போல்வனவும் பிறவும் அஃறிணையிடத்துப் பன்மைப்பாலும் ஒருமைப்பாலும் விளங்க வரும் எவ்வகைப் பெயர்களும் அஃறிணைக்கு உரியனவாகும்.

(எ-டு) பிற, பிறிது, மற்றயவை, மற்றையது எனவும் நிலம், நீர், தீ எனவும் உண்ணல் தின்னல் எனவும் வரும் பிற அமன்ன.

**கல் விகுதி இல்லாமல் பன்மை உணர்த்தல்**:

தெரிநிலை உடைய அஃறிணை இயற்பெயர்

ஒருமையும் பன்மையும் வினையொடுவரினே ... 172

பாற்பொதுவாக நிற்கும் அஃறிணை இயற்பெயர்கள் ஒருபாலுக்குரிய சிறப்பு வினையான் முடியவரின் ஒருமைப் பாலும் பன்மைப்பாலும் விளங்கும் நிலையினை உடையனவாம்.

(எ-டு) யானை வந்தது, யானை வந்தன, மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும் வாய்மை நன்று, வாய்மை நல்ல எனவும் வரும். சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனான் வினையொடுவரினே என்றாராயினம் பால் காட்டும் பெயர்களான் தெரிநிலை உடையவாதலும் கொள்ளப்படும். (எ-டு) ஆ ஒன்று, ஆ பல, யானை இது, யானை இவை என வரும்.

**வினையால் திணை பால் உணர்த்தல்**

இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்

திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்

நினையுங் காலைத் தத்தம் மரபின்

வினையொடல்லது பால் தெரி பிலவே ... 173

ஒரு கால் உயர்திணையாயும் ஒருகால் அஃறிணையாயும் பயனிலைக் கேற்பத் திரிந்து வேறுபடும் பெயரெல்லாம் இருதிணைக்கும் சொல்லாதற்கு ஒத்த உரிமையுடையனவாதலின் ஆராயுங்கால் அவை அவ்வத்திணைக்கு ஓதிய மரபினான் வரும் வினையானல்லது தனித்து நின்றவழி தாமே திணைப் பகுதிவிளங்க நிற்றல் இலவாம்.

(எ-டு) சாத்தன் வந்தான் – சாத்தன் வந்தது. சாத்தி வந்தாள்-சாத்தி வந்தது. கோதை வந்தான்-கோதை வந்தாள் கோதை வந்தது. கோதை வந்தன என இவை தத்தம் மலரபின் வினைகளான் பால் தெரிய நின்றன. சாத்தா வந்தனை-சாத்தா வாழ்க-சாத்தன் வரும் என இவை பொது வினையான் வந்து பால் தெரிய நில்லாதன.

நிகழூஉ நின்ற பால்வரை கிளவியின்

உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே

அன்ன மரபின் வினைவயி னான ... 174

நிகழ்காலம் பற்றி நின்ற செய்யும் என்னும் முற்றுச் சொல்லான் விரவுப் பெயர் உயர்திணை ஒருமை தோன்ற வருதலும் உரித்து, அத்தகைய மரபினை உடைய தொழில் பற்றிய வினையிடத்து செய்யுமென்னு முற்று எதிர்காலத்திற்கும் உரித்தாகலின் இம்மரபு நிகழ்வினை உணர்த்தி நிற்குமிடத்து என்பது விளங்க 'நிகழூஉ நின்ற கிளவி' என்றார்.

சாத்தன் நகைக்கும் சாத்தி உணவு சமைக்கும் எனவரும் நகைத்தலும் சமைத்தலும் எவ்வாற்றானும் அஃறிணைக்கு இயையாமையின் சாத்தன் சாத்தி என்பவை உயர்திணை ஒருமையாகிய ஆடூஉவையும் மகடூஉவையும் உணர்த்தி நின்றவாறு கண்டு கொள்க.

**விரவுப் பெயரின் தொகை, வகை:**

இயற்பெயர் சினைப்பெயர் சினைமுதற் பெயரே

முறைப் பெயர்க் கிளவி தாமே தானே

எல்லாம் நீயிர் நீயெனக் கிளந்து

சொல்லிய அல்ல பிறவும் ஆஅங்கு ... 175

இயற்பெயர் முதலாக நீ என்பது ஈறாகச் சொல்லப் பெற்றனவும் அவையல்லாத பிறவும் விரவும் பெயரிடத்து அத்தகையவாய்த் தோன்றின் அவ் இயற்பெயர் முதலாயவற்றோடு கூட்டிக் கொள்க.

'அவற்றொடும்' என்னும் உம்மை அன்னவையாகத் தோன்றி வருவன உயர்திணைக்குரியவாய் நின்று செய்யுள் வழக்கானே விரவுப் பெயராயும் வரும் என்பது தோன்ற நிற்றலின் எச்சவும்மையாம்.

இயற்பெயராவது சாத்தன் கொற்றன் என யாதானுமோர் காரணத்தான் தோன்றிய சொல்லை அக்காரணம் கருதியும் கருதாமலும் ஒரு முதற் பொருளுக்கு

இட்டு வழங்குதற் பயத்தவாய் நிகழும் இடு பெயர் இயற்பெயரெனிலும் முதற்பெயர் எனினும் ஒக்கம். சினை முதலிய நிமித்தமின்றிக் குறியீடாய் வழங்கப்படுதலின் இயற்பெயரெனப்பட்டது.

சினைப்பெயராவது: நெடுஞ்செவியன் செங்கண்ணன், முடவன், கூனன் எனச் சினை நிமித்தமாக அச்சினையை உடைய முதற்பொருளுக்கு வழங்கும் பெயர். சினைமுதற் பெயராவது குறுங்கைக் கொற்றன் நெடுஞ்செவிச் சாத்தன் கொடும்புற மருதி எனச் சினைப் பெயரும் முதற் பெயரும் இணைந்து ஒரு சொல் நீர்மைத்தாய் முதற்பொருளுக்கு வழங்கும் பெயர்.

முறைப்பெயராவது தாய், தந்தை, மகன், மகள் என ஒன்றனொடு ஒன்றற்குப் பிறப்புத் தொடர்பாய காரணத்தான் அமைந்து வரும் பெயர். தாம், தான், எல்லாம், நீயிர், நீ என்பவை தம்மை உணர்த்தி நின்றன.

அன்னவையாகத் தோன்றி வருவன, பொன்னன் மலையன் என்றாற் போலப் பொருள் பற்றியும், காடன், நாடன், நடுவன் என்றாற்போல இடம் பற்றியும் வேனிலான்-சித்திரையான் என்றாற் போலக் காலம் பற்றியும், கரியன் வெளியன் என்றாற் போலப் பண்பு பற்றியும் ஊணன் நடையன் என்றாற் போலத் தொழில் பற்றியும் மூப்பன், சின்னான் என்றாற்போல அகவை பற்றியும் இவையல்லாத பிற பொருள் பற்றியும் வரும் ஆண்மைப் பெயர்களும் இவ்வடிப்படையாக வரும் ஏற்புடைய பெண்மைப் பெயர்கலும் மக, குழவி என முறைப் பெயர்க்கு இனமாக வரும் பெயர்களுமாம்.

இவை பெரும்பான்மையும் உயர்திணைக்கன் ஆக்கமுற்று அமைந்து செய்யுள் வழக்கானும் சிறுபான்மை உலக வாழுக்கானும் அ்.றிணைக்கண் சார்த்தி வழங்கப்படும்.

**விரவுப் பெயரின் விரி:**

அவற்றுள்

நான்கே இயற்பெயர் நான்கே சினைப்பெயர்

நான்கென மொழி மனார் சினைமுதற்பெயரே

முறைப் பெயர்க்கிளவி இரண்டா கும்மே

ஏனைப் பெயரே தத்தம் மரபின் ... 176

மேற்கூறிய விரவுப் பெயர்களுள் இயற்பெயர் முதலிய மூன்றும் ஒவ்வொன்றும் நான்கு கூற்றன். முறைப்பெயர் இரண்டு கூறாகும் ஏனையவை தனித்தனியாக நிற்கும் இலக்கணத்தனவாகும்.

ஆக, கிளந்தோதிய விரவுப் பெயர்கள் பத்தொன்பது கூறுபாட்டின என்பதாயிற்று விரவுப் பெயர்களின் விரி என்னும் ஒரு பொருள் பற்றி நிற்றலின் ஒரு சூத்திரமாகக் கொள்ளப் பெற்றது மூன்றாகப் பிரித்துக் கோடலுமாம்.

**நான்குவகை இயற்பெயர்கள்**:

அவைதாம்

பெண்மை இயற்பெயர் ஆண்மை இயற்பெயர்

பன்மை இயற்பெயர் ஒருமை இயற்பெயர் என்று

அந்நான்கு என்ப இயற்பெயர் நிலையே ---- 177

**நான்குவகைச் சினைச்பெயர்கள்:**

பெண்மைச் சினைப்பெயர் ஆண்மைச் சினைப்பெயர்

பன்மைச் சினைப்பெயர் ஒருமைச் சினைப்பெயர் என்ற

அந்நான் கென்ப சினைப்பெயர் நிலையே ... 178

**நான்குவகைச் சினைமுதற் பெயர்கள்**:

பெண்மை சுட்டிய சினைமுதற் பெயரே

ஆண்மை சுட்டிய சினைமுதற் பெயரே

பன்மை சுட்டிய சினைமுதற் பெயரே

ஒருமை சுட்டிய சினைமுதற் பெயரேன்று

அந்நான் கென்ப சினைமுதற் பெயரே ---- 179

**இருவகை முறைப்பெயர்கள்:**

பெண்மை முறைப்பெயர் ஆண்மை முறைப்பெயரென்று

ஆறிரண்டென்ப முறைப்பெயர் நிலையே 180

விரவுப் பெயர்களில் இவையிவை விரவிவரும் எனல் பெண்மை சுட்டிய விரவுப் யெர்களில் விரவி வருவன பொருளியைபு கருதி இந்நான்கு நூற்பாக்களுக்கும் ஒருங்கு பொருள் கூறப்படுகின்றது.

ஈண்டுப் பன்மைப் பெயர் என்றது கள்ளொடு கூடாத அ∴றிணை இயற்பெயராகிய பெயர்களை பாலறி நிளவியான் வரும் பன்மைப் பெயர்கள் விரவிவாராமையான் என்க. பாலறி கிளவிகளாவன அர், ஆர், ப, மார், அ, வ என்பவை.

பேணுதல் தன்மையும் ஆளுதல் தன்மையும் ஆகிய மக்கட் பண்பு அ∴றிணைக்கின்மையின் பெண்மை ஆண்மை என்றது உறுப்பளவான் கூறப்பட்டது போலும் எனக் கொள்ளற்க என்பார். பெண்மை சுட்டிய ஆண்மை சுட்டிய என்றும், பொதுப் பெயராகி நிற்கும் ஒரு பெயரே முடிக்குஞ் சொல்லான் பன்மை ஒருமைகளைச் சுட்டி நிற்றலின் "பன்மை சுட்டிய ஒருமை சுட்டிய" என்றும் கூறினார். "சுட்டிய" என்பதனை முறைப்பெயர் என்பதனொடும் கூட்டிப் பொருள் கொள்க வினைச்சொற் போல ஈற்றான் பால் விளக்குதல் விரவுப் பெயர்க்கின்மையின் ஈறு கருதாது குறித்துக் கொள்ளப் படுதலின் 'சுட்டிய' என்றார் என்க.

பெயர்ச் சொற்களின் வகை கூறத்தொடங்கி உயர்திணைப் பெயர்களை ஈற்று வகையான் அவன், இவன், உவன் எனக் கூறியதனான் ஆண்மைப் பெயர்க்குரியவை னகரை ஈற்றுச் சொற்கள் எனவும் அவள் இவள், உவள் எனவும் பெண்மை யடுத்த இகர இறுதி எனவும் கூறிதனான் பெண்மைப் பெயர்க் குரியவை ளகர ஈறும் இகர ஈறும் எனவும் கொள்ளவைத்தமையான் ஆண்மை சுட்டிய விரவுப் பெயரும் பெண்மை சுட்டிய விரவுப் பெயரும் அவ்வவ் ஈறுகளான் வருமென்பதும் அது, இது, உது முதலியவாக விதந்தோதிய சொற்கள் பால் காட்டி நிற்றலின் அவை உயர்திணைக்கண் சென்று விரவா என்பதும் 'தெரிநிலை உடைய அ∴றிணை இயற்பெயர் என்னும் சூத்திரத்தான் பன்மையும் ஒருமையும் சுட்டி வரும் விரவுப்

பெயர்கள் இடுபெயராகிய இயற்பெயராயே வருமென்பதும் அவ் அஃறிணை இயற்பெயர்களே உயர்திணைக்கண் சென்று விரவும் என்பதும் அச்சூத்திரங்களான் பெறப்பட வைத்தமையின் ஆசிரியர் விரவுப் பெயர்கள் இவை என எடுத்தோதாமல் திரிபு வேறுபடுஉம் என அதன் இலக்கணத்தை மட்டுமே கூறித் தன்மை காரணமாகவும், ஒருமை பன்மை காரணமாகவும் முறைப்பெயர் இடப்பெயர்

ஒழிந்தவற்றை நான்கு கூறுகளாக வகுத்தோதினார் என்க. அங்ஙனம் ஓதியவாற்றான் அப்பதினான்கு பெயர்களுள் பெண்மைப் பெயர் நான்காயும் ஆண்மைப் பெயர் நான்காயும் பன்மைப் பெயர் மூன்றாயும் ஒருமைப் பெயர் மூன்றாயும் நிற்குமாறறிந்து கொள்க.

**ஆண்மை சுட்டிய விரவுப் பெயர்களில் விரவி வருவன:**

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே - 181

பெண்மை சுட்டி வரும் விரவும் பெயர் நான்கும் அஃறிணைப் பெண்மைப் பொருள் ஒன்றற்கும் உயர்திணை மகடூஉவிற்கும் பொருந்திய நிலையினவாம் நான்காவன இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற் பெயர், முறைப்பெயர் ஆகியவை ஆண்மை சுட்டிய பெயர்க்கும் இஃதொக்கும்.

(எ-டு) சாத்தி வந்தது-சாத்தி வந்தாள், முடத்தி வந்தது-முடித்தி வந்தாள், முடக்கொற்றி வந்தது-முடக்கொற்றி வந்தாள், தாய் வந்தாள் எனவும், சாத்தி ஒன்று-சாத்தி ஒருத்தி எனவும் வரும். ஒன்று என்பது ஆண்மை பெண்மைகட்குப் பொதுவாயினும் பெண்மை சுட்டிய என்பதனாற் பெண்மைப் பொருள் என்பது பொருள்படும்.

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே ... 182

ஆண்மை சுட்டி வரும் விரவுப்பெயர் நான்கும் அஃறிணை ஆண்மைப் பொருள் ஒன்றற்கும் உயர்திணை ஆடூஉ விற்கும் பொருந்திய நிலையினவாகும்.

(எ-க) சாத்தன் வந்தது-சாத்தன் வந்தான், முடவன் வந்தது-முடவன் வந்தான், தந்தை வந்தது, தந்தை வந்தான், மகன் வந்தது மகன் வந்தான் எனவும் சாத்தன் ஒன்று சாத்தன் ஒருவன் சாத்தன் இது, சாத்தன் இவன் எனவும் வரும்.

**பன்மை சுட்டிய பெயர்**

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றே பலவே ஒருவன் என்னும்

அன்றிப் பாற்கும் ஓரன் னவ்வே - 183

பன்மை சுட்டி வரும் மூன்று பெயரும் அ∴றிணைப் பொருள் ஒன்றற்கும் அத்திணைப் பலவிற்கும் உயர்திணை ஆடூஉ மகடூஉ வாகிய இரண்டற்குமுரிய ஒருவர் என்று சொல்லப்படும் அவ் விருபாற்கும் ஒத்த உரிமையவாம்.

மூன்றாவன: இயற்பெயர் – சினைப்பெயர் – சினை முதற்பெயர் ஆகியவை

ஒருமை சுட்டிய பெயர்க்கும் இ∴தொக்கும்.

(எ-டு) யானை வந்தது-யானை வந்தன, யானை வந்தாள், யானை வந்தான் எனவும், நெடுங்கழுத்தல் வந்தது-வந்தன. வந்தாள்-வந்தான் எனவும் பெருங்கால் யானை வந்தது வந்தன-வந்தாள் வந்தான் எனவும் வரும்.

**ஒருமை சுட்டிய பெயர் விரவி வருவன:**

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே ... 184

ஒருமை சுட்டி வரும் பெயர் மூன்றும் அ∴றிணைப் பொருள் ஒன்றற்கும் உயர்திணை ஒருமை இரண்டற்கும் பொருந்திய நிலையினவாம். பெண்மைப் பெயரும் ஆண்மைப் பெயரும் ஒருமையே எனினும் அவை சொல்லளவில் தம் தன்மை யுணர நின்று ஒருமையைச் சுட்டும் நோக்கின்றிப் பெண்மை ஆண்மை என்னும் பொருட்டன்மை காட்டி வரும். ஒருமை சுட்டிய பெயர் சொல்லளவில் பெண்மைத் தன்மையும் ஆண்மைத் தன்மையும் இன்றி ஒருமைப் பாலாகிய நிலையைச் சுட்டி வரும் என்க.

(எ-டு) கோதை வந்தது, கோதை வந்தான், கோதை வந்தாள் எனவும், செவியிலி வந்தது, செவியிலி வந்தான், செவியிலி வந்தாள் எனவும் வரும் கோதை இது, கோதை இவன் கோதை இவள் எனவும் வரும். கொடும் புற மருதி-கொடும்புற மருதன் என்பவை ஈற்றான் பெண்மை ஆண்மைகளை உணர்த்தி நிற்றலின் அவை காட்டாதல் பொருந்தா என்கூ

**படர்க்கைப்பெயர்கள்:**

தாமென் கிளவி பன்மைக்குரித்தே - 185

தாம் என்னும் பொதுப்பெயர் இருதிணைக் கண்ணும் பன்மைப்பாலுக்கு உரித்தாய் வரும்.

(எ-டு) தாம் வந்தார், தாம் வந்தன எனவும் தாம் பலர்-தாம் பல எனவும் வரும்.

தான் என்னும் விரவுப் பெயர் இயல்பு

தானென் கிளவி ஒருமைக் குயித்தே .. 186

தான் என்னும் பொதுப்பெயர் இருதிணைக் கண்ணும் ஒருமைப் பாலுக்கு உரித்தாய் வரும்.

(எ-டு) தான் வந்தான், தான் வந்தாள், தான் வந்தது எனவும் தான் ஒருவன், தான் ஒருத்தி, தான் ஒன்று எனவும் வரும்.

‘‘எல்லாம் ‘‘ என்னும் விரவுப் பெயர்:

எல்லாம் என்னும் பெயர் நிலைக் கிளவி

பல்வழி நுதலிய நிலைத்தா கும்மே ... 187

எல்லாம் என்னும் பெயர் நிலைமை யாகிய பொதுச்சொல் பன்மைப் பாலைக் கருதிய நிலைமைத் தாகும்.

இப்பொதுப்பெயர் உயர்திணைக்கண் வருங்கால் தன்மைப் பன்மைக் கண்ணும் அ·.றிணைக்கண் வருங்கால் படர்க்கைப் பன்மைக் கண்ணும் முன்னிலைப் பன்மைக்

கண்ணும் வருதலின் பன்மை என்னாது ‘பல்வழி’ என வாய்ப்பாடு வேறுபடுத்திக் கூறினார் என்க.

(எ-டு) எல்லாம் வந்தேம் எனவும் எல்லாம் வந்தன, எல்லாம் வந்தீர் எனவும் வரும். எல்லாம் யாம் எல்லாம் அவை எல்லாம் நீயிர் எனவும் வரும்.

**“எல்லாம்” என்னும் விரவுப் பெயர் உயர்திணையில் வருமாறு:**

தன்னுள் ளுறுத்த பன்மைக் கல்லது

உயர்திணை மருங்கின் ஆக்க மில்லை - 188

மேற்கூறிய எல்லாம் என்னும் பொதுப்பெயர் உயர்திணையிடத்து விரவுங்கால் தன்மைப் பன்மைக் கல்லது ஏனை ஈரிடத்தும் விரவுதலில்லை.

தன்மைச்சொல் அ∴றிணைக்கின்மையின் தன்னுள்ளுறுத்த என்றதனான் உயர்திணை என்பது பெறப்படும். எல்லாம் என்னும் சொல் எல்லாரும், எல்லீரும் எனத் திரிந்து முறையே உயர்திணைக்கண் படர்கையினும் முன்னிலையினும் வருமிடத்து அவை விரவுப் பெயராகா என்க.

இங்ஙனம் உயர்திணை இடத்தை வரைந்து கூறினமையின் அ∴றிணைக்கண் தன்மை ஒழிந்த ஏனைஈரிடத்தும் வரும் என்பது பெற்றாம்.

(எ-டு) எல்லாம் வந்தேம் உயர்-த-பண்மை. எல்லாம் வந்தீர் அ∴றி-மு-பன்மை. எல்லாம் வந்தன அ∴றி-ப-பன்மை என வரும்.

**முன்னிலைப்பெயர்கள்:**

நீயிர் நீ என வரூஉங் கிளவி

பால்தெரிபிலவே உடன்மொழிப் பொருள ... 189

நீயிர் நீ என வரும் முன்னிலைப் பெயர்கள் ஏனைப் பொதுப் பெயர்களைப்போல வினையான் திணை வேறுபாடு தெரிதல் இல முன்னத்தான் உணரும் முறைமையொடு இரு திணைகளையும் ஒருங்கு மொழி தலையுடைய பொருளினவாம். பால் என்றது ஈண்டுத் திணையினை.

(எ-டு) நீயிர் வந்தீர், நீயிர் வம்மின் எனவும், நீ வந்தாய்-நீ வந்தனை, நீ காண்டி எனவும் வரும்.

நீ என்னும் விரவுப் பெயர் ஒருமைகுறித்தல்:

அவற்றுள்

நீயென் கிறவி ஒருமைக் குரித்தே - 190

மேற்கூறிய முன்னிலைப் பெயர்களுள் நீ என்னும் சொல் திணை காட்டாதாயினும் இருதிணைக் கண்ணும் ஒருமை குறித்து வரும்.

(எ-டு) நீ வந்தாய் என்பது ஒருவன் ஒருத்தியாகிய உயர்திணைக்கும் ஒன்று பற்றிய அஃறிணைக்கும் உரித்தாய் நின்றவாறு காண்க.

நீயிர் எனும் விரவுப் பெயர் பன்மை குறித்தல்

ஏனைக் கிளவி பன்மைக் குரித்தே - 191

பிறிதொன்றாகிய நீயிர் என்னும் பொதுப்பெயர் இரு திணைக் கண்ணும் பன்மைக் குரித்தாய் வரும்.

(எ-டு) நீயிர் வந்தீர், என்பது உயர்திணைப் பல்லோர்க்கும் அஃறிணைப் பலவிற்கும் உரித்தாய் வந்தவாறு கண்டு கொள்க.

"ஒருவர்" என்பது உயர்திணை இருபாற்கம் பொதுவாதல்

ஒருவர் என்னும் பெயர் நிலைக் கிளவி

இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை ... 192

ஒருவர் என்னும் பெயர் நிலைமைத்தாகிய சொல் ஆராயுமிடத்து ஒருவன் ஒருத்தி என்னும் இரு பாலுக்கும் உரித்தாய் வரும்.

(எ-டு) ஒருவர் வந்தார், ஒருவர் அவர் என வரும்.

இருபாற்கும் எனப் பொதுப்பட நிற்பினும் "ஒரு" என்னும் முதனிலையாற் பாலுணர்த்துவன ஒருவன் ஒருத்தி என்பனவே ஆதலின் அவையே கொள்ளப்படும்.

ஊயர்திணை ஒருமைப்பால் இரண்டேயாதலின் பாற்கும் என்னும் உம்மை முற்றும்மை. ஆடூஉ மகடூஉ என்னும் இருபாற் கண்ணும் விரவுதலின் இதனை விரவுப் பெயரதிகாரத்து வைத்தார் என்க. ஒருவர் ஒருவுவர் நீங்குவர் என்னும் பொருள் தருமிடத்து வினைநிலை எய்துதலின் பெயர்நிலைக் கிளவி என்றார்.

**ஒருவர் என்பது ஒருமையாயினும் பன்மைவினை கொள்ளுதல்**

தன்மை சுட்டின் பன்மைக் கேற்கும் ……193

மேற்கூறிய ஒருவர் என்னும் பெயரினது இயல்பினைக் கருதின் அது பன்மைச் சொல்லான் முடிதற்கு ஏற்புடையதாகும்.

**நீயிர் நீ ஒருவர் போல்வனவற்றின் திணை, பால் அறிதல்**

இன்னபேய இவையெனல் வேண்டின்

முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல் ... 194

நீயிர், நீ, ஒருவர் என்பவை இன்னதிணை இன்ன பால் பற்றி நிற்கும் பெயரே என அறிதல் வேண்டின் செப்புவோனது குறிப்பொடு சேர்த்தி முறையானே உணர்க.

(எ-டு) நீயுந்தவறிலை என்பது மகடுவாகிய உயர்திணையையும் நீயே பிறர் நாடு கொள்ளுங்காலை என்பது ஆடுஉவாகிய உயர்திணையையும் இன்றுணைப் பிரிந்தாரை உடையையோ நீ என்பது அஃறிணை ஒன்றனையும் குறிப்பான் உணர நின்றன. நீ அரசன்-நீ தோழி – நீகிள்ளை எனப் பின்வரும் சொற்களான் ஆடூஉ மகடூஉ ஒன்று என்பது உனர நின்றது பறவை வேட்டுவன் வலையைச் சுருக்குவானாய் நீயிர் அகப்பட்டீர் என்புழி அஃறிணையையும் சொல்வலை வேட்டுவன் நீயிர் அகப்பட்டீர் என்புழி உயர்திணையையும் உணர்த்தி நிற்குமாரறிக.

ஒருவர் மணந்தார்-என்புழி ஒருவனையும் ஒருவர் வாழ்க்கைப்பட்டார் என்புழி ஒருத்தியையும் உணர்த்தி நிற்குமாறறிக. ஆயிழையார் ஒருவர், அயில் வேலார் ஒருவர் என்புழியும் அவ்வாறே உணர்த்தி நின்றது பிறவும் இவ்வாறே கண்டு கொள்க.

**பெயரியலுக்குப் புறனடை:**

மகடூஉ மருங்கின் பால்திரி கிளவி

மகடூஉ வியற்கை தொழில் வயினான ... 195

மகடூஉ பொருண்மைத்தாகிய தொகைச் சொற்கண் ஒருகூறு திரிந்து நிற்கும் பெண்மகன் என்னும் பெயர் பயனிலை கொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய இலக்கணத்ததாகும்.

**பெயர்ஈறு செய்யுளில் திரிதல்**

(எ-டு) பெண்மகன் வந்தாள் என வரும்.

ஆ ஓ வாகும் பெயருமார் உளவே

ஆயிடன் அறிதல் செய்யு லுள்ளே ... 196

ஆன், ஆள், ஆர், ஆய் என்னும் ஈறுகளுள் நிற்கும் ஆகாரம் ஓகாரமாக மாறிவரப் பெறும் பெயர்ச் சொற்களும் உள அவை அவ்வாறு வருமிடம் செய்யுள் வழக்கினுள் என அறிக.

(எ-டு) வில்லோன் காலன கழலே தொடியோள் மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர் எனவும் பருவரல் செப்பாதோயே எனவும் வரும்.

**விரவுப்பெயர்கள் செய்யுளில் திணை உணர்த்தும் முறைமை**

இறைச்சிப் பொருள்வயின் செய்யுலுட் கிளக்கும்

இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா

நிலத்துவழி மருங்கிற் றோன்ற லாண ….197

இறைச்சிப் பொருள் பயக்குமிடத்துச் செய்யலும் கூறப்பெறும் விரவுப் பெயராய இயற்பெயர்கள் திணை உணர்தற்குத் துணையாக அவ்வந்நிலப் பொருள்மேற் றோன்றி வருதலான் அவை உயர்திணையைச் சுட்டமாட்டா அ்.றிணையையே சுட்டி நிற்கும்.

(எ-டு) “கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு வதுவை யயர்ந்த வண்பறழ்க் குமரி” எனவும்,“மாதர் வண்டின் நயவருந்தீங்குரல் மணநாறு சிலம்பின் அசுணம்

ஓர்க்கும்'' எனவும், கல்லாக் கடுவன் கணமலி கற்றத்து மெல்விரல் மந்தி குறை கூறும் செம்மற்றே எனவும் வரும்.

**திணையொடு பழகியபெயர்:**

திணையொடு பழகிய பெயரலங் கடையே ... 198

மேலைச் சூத்திரத்துச் செய்யுலுள் இறைச்சிப் பொருள்வயின் கிளக்கும் இயற்பெயர்க் கிளவிகள் உயர்திணையைச் சுட்டா என்றது. ஐந்திணை ஒழுக்கத்திற்குரிய தலைமக்களுக்குரியவாகத் திணையொடு தொன்று தொட்டுப் பயின்று வரும் பெயர் அல்லாத விடத்தேயாம் என்றது திணையொடு பழகி வரும் இப்பெயர்கள் உயர்திணையைச் சுட்டி விரவுப்பெயராய் வரும் என்றவாறு.

அவையாவன: காளை, மீளி, விடலை என்னும் தொடக்கத்தன திணை என்றது உரிப்பொருளாகிய ஒழுகலாற்றினை அ∴து ஈண்டு அவ்வொழுகலாற்றினையுடைய மக்கள் மேல் நின்றது.

(எ-டு) வயக்களிற்றன்ன காளையொடு என்மகள் கழிந்ததற்கு அழிந்தன்றோ விலனே'' எனவும் ''அருஞ்சுர மிறந்தவென் பொருந்தோட்குறுமகள் திருந்து வேல் விடலையொடு வருமெனத் தாயே'' எனவும் வரும். இவற்றுள் காளை, விடலை என்னும் விரவுப் பெயர்கள் உயர்திணையைச் சுட்டி நின்றவாறு கண்டு கொள்க.

**(ஆ) பெயரியல்**

**பயிற்சி வினாக்கள்**

1. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' எல்லாச் சொல்லும் யாவை?
2. சொல் தன்னையும் பொருளையும் உணர்த்துவதைச் சான்றுடன் விளக்குக.
3. சொல் வெளிப்படையானும் குறிப்பானும் பொருள் உணர்த்துவதை விளக்கிக் காட்டுக.
4. சொல் பாகுபாடு விளக்குக.

5. உயர்திணைப் பெயர்களில் சுட்டு, வினா இடப்பெயர்களைத் தொகுத்து எழுதுக.
6. நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின்பெயர்- இவற்றை விளக்குக.
7. பல்லோரைக் குறித்து வரும் முறைநிலைப் பெயர், சினைநிலைப்பெயர். திணை நிலைப்பெயர் மூன்றனையும் விளக்குக.
8. அ∴றிணைப் பெயர்களில் சுட்டி, வினாப் பெயர்கள் யாவை?
9. அ∴றிணைப் பெயர்களில் கூறப்படும் வினைப் பெயர்க்கிளவி, பண்பு கொள்பெயர், எண்ணுக் குறிப்பெயர் ஆகியவற்றைச் சான்றுடன் விளக்குக.
10. 'கள்' விகுதி பற்றிய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

## வினையியல்

**வினைச் சொல்லின் இலக்கணம்:**

வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலைக் காலமொடு தோன்றும் - 199

வினைச்சொல் என்று கூறப்படுவது வேற்றுமை கொள்ளது, ஆராயுங் காலத்துக் காலத்தொடு விளங்கி நிற்கும் வேற்றுமையாவது, வேற்றுமையியலுள் கூறிய எண் வகை வேற்றுமை நிலைகள் வேற்றுமை கொள்ளாது என்றதனான் உருபேலாமை தாமே பெறப்படும்.

(எ-டு) உண்டான், உண்டது எனவும், கரியன், கரியது எனவும் வரும். உண்ணான் உண்ணாது என எதிர்மறை வினைவரும்.

**மூவகைக்காலம்:**

காலந்தாமே மூன்றேன மொழிப... 200

காலமொடு தோன்றும் எனப்பெற்ற அக்காலம் மூன்று கூறுபடுமெனக் கூறுவர் தொன்னூலாசிரியர். தாமே என்பது அடிநிரப்ப வந்த அசைச்சொல் காலமாவது பொருள் நிகழ்வு உரைப்பது என்பாராகலின் இச்சூத்திரம் மொழிவாம் என்னும் உத்திக்கு இனம்.

**காலங்காட்டும் முறை வெளிப்படை குறிப்பு:**

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றா

அம்முக் காலமும் குறிப்பொடுங் கொள்ளும்

மெய்ந்நிலை உடைய தோன்ற லாறே ... 201

இறப்பின் கண்ணும் நிகழ்வின் கண்ணும் எதிர்வின் கண்ணும் வரும் அம்மூன்று காலமும் வினைச் சொற்களுள் தோன்றுமிடது வெறிப்பட நிற்றலேயன்றிக் குறிப்பாகவும் கொள்ளப்படும் பொருள் நிலையை உடையவாம். எனவே காலம், வெளிப்பட வரும் வினைச்சொல் குறிப்பாக வரும் வினைச்சொல் என வினைச் சொற்கள் இருவகைப்படும் என்றவாறாம்.

**வினைச்சொல் பாகுபாடு**:

குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்

காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்

உயர்திணைக் குரிமையும் அ∴றிணைக் குரிமையும்

ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்

அம்மூ உருபின தோன்றலாறே - 202

குறிப்புப் பொருண்மை பற்றி வரும் சொல்லானும் தொழிற் பொருண்மை பற்றி வரும் சொல்லானும் முறையாகத் தோன்ற வரும் வினைச் சொற்கள் எல்லாம் தோன்று மாற்றான் உயர்திணைக்கே உரியனவும் அ∴றிணைக்கே உரியனவும் அவ் இரு திணைக்கும் ஒப்ப உரியனவும் என அம்மூன்று படிவத்தனவாகும்.

குறிப்புப் பொருண்மை பற்றிவரும் சொற்களாவன:- பொருட் பெயரும் இடப்பெயரும் பண்புப் பெயருமாக அமைவனவாகும். கால்பெயர் இடப்பெயருள்ளும் சினைப்பெயர் பொருட்பெயருள்ளும் அடங்கும். தொழிற் பொருண்மை பற்றி வரும்சொற்களாவன, தொழிற் பெயர்களாசு அமைவனவாம். சிறுபான்மை ஏற்ற பெற்றி இடைச்சொல், உரிச்சொற்களடியானும் வரும்.

உயர்திணை வினைச்சொற்கள் இடம்பற்றித் தன்மை வினை, படர்க்கை வினை எனவும், பால்பற்றி ஆடுஉ அறிவினை மகடூஉ அறிவினை, பல்லோர் அறிவினை எனவும் தன்மை வினை, தனித்தன்மை வினை உளப்பாட்டுத் தன்மை

வினை எனவும் வகைப்பட்டு அம்முக் காலமும் பற்றி விதிவினையாயும் மறைவினையாயும் விரிந்து வரும்.

அ∴றிணை வினைச்சொற்கள் படர்க்கைக்கே உரியவாய் ஒன்று பல என்னும் பால் பற்றி விதிவினையாயும் மறைவினையாயும் வரும். ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையவாய் வரும் வினைச்சொற்கள் முன்னிலைவினை முதலாக எண்வகையினவாய் அவ்வவற்றிற்குப் பொருந்திய காலத்தொடு ஒருமையும் பன்மையுமாகிய பாலுணர்த்தி விதி வினையாயும் மறைவினையாயும் வரும்.

**உயிர்திணை விணைகள், தெரிநிலை வினைமுற்று வினைமுற்று-தன்மைப் பன்மை**

அவைதாம்

அம் ஆம் எம் ஏம் என்னும் கிளவியும்

உம்மொடு வரூஉம் கடதற என்னும்

அந்நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்
பன்மை உரைக்குந் தன்மைச் சொல்லே – 203

அம் ஆம் எம் ஏம் என்னும் ஈற்றிடைச் சொற்களும் உம்மையொடு கூடிவரும் கடதற வாகிய கும்டும் தும்றும் என்னும் அந்நான்கு ஈற்றிடைச் சொற்களொடு ஆகிய எட்டுச் சொற்களும் தன்மைப் பன்மையை உணர்த்தும் உயர்திணை வினைச் சொற்களாம்.

ஆம் ஆம் எம் ஏம் என்பவை மூன்று காலமும் கும்டும் தும்றும் என்பவை எதிர்காலமும் பற்றி வந்தன.

உண்டனம், உண்டாம், உண்டெனெம், உண்டேம், உண்டனேம், டகரம் இறந்தகாலம் காட்டிற்று, நிகழ் காலத்தில் உண்ணா நின்றனம், உண்கின்றெனம், உண்ணா நின்றனெம், உண்கின்றனெம், உண்ணா நின்றனேம், எனவரும். எதிர்காலத்தில் உண்பம், உண்பாம், உண்பெம், உண்பேம், வருவம், வருவாம், வருவெம், உண்குவம், தின்குவம், உண்ணுவம் எனவும் வரும்.

**தன்மை ஒருமை வினைமுற்று:**

கடதற என்னும்
அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமொடு
என் ஏன் அல் என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே ... 204

கடதற என்னும் மெய்களை உயர்ந்து நின்ற குற்றுகரத்தை ஈறாகவுடையனவாகவும் என் ஏன் அல் என்னும் ஈற்றவாய் வருவனவு மாகிய எழும் ஒருமை உணர்த்தி வரும் தன்மை வினை உயர்திணைச் சொற்களாகும்.

நால்வகைக் குற்றுகர ஈறும் அல்லீறும் எதிர்காலம் பற்றி வரும். என், ஏன் என்பவை மூன்று காலமும் பற்றி வரும்.100

(எ-டு) உண்கு, கொண்டு, வருது, சேறு, எனவும் காண்பல், கொள்வல் எனவும் வரும். காண்குவல் எனச் சிறுபான்மை உகரச் சாரியையொடும் வரும்.

**செய்கு எனும் வாய்பாட்டுவினை:**

அவற்றுள்
செய்கென் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்- 205

மேற்கூறிய தன்மை ஒருமைவினை ஏழுனுள் ‘செய்கு’ என்னும் சொல் பிறிதொரு வினையொடு முடியுமாயினும் தான் முற்று வினை என்னும் இலக்கணத்தின் மாறுபடாது என்று கூறுவர் புலவர்.

(எ-டு) காண்கு வந்தேன் என வரும்.

**படர்க்கை ஒருமை வினைமுற்று**

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும்

ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே - 206

அன் ஆன் அள் ஆள் என்னும் நான்கும் ஆடூஉ மகடூஉ என்னும் ஒருவர் மருங்கின் வரும் உயர்திணைப் படர்க்கைச் சொற்களாம்.

(எ-டு) உண்டனன், உண்ணா நின்றனன், உண்பன் எனவும், உண்டனள் உண்ணா நின்றனர் உண்பள் எனவும், உண்டான், உண்ணா நிற்றான் உண்பான் எனவும், உண்டாள், உண்ணா நின்றாள், உண்பாள் எனவும், உண்ணுவன், உண்ணுவள், உண்குவன் உண்குவள் எனவும் வரும். கேட்குநன், நோக்குநன் எனச் சிறுபான்மை நகரம் நிகழ்காலம் பற்றி வரும்.

**உயர்திணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று**

அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே - 207

அர், ஆர், ப என்னும் ஈறுகளை உடைய மூவகை வினைச் சொற்களும் பல்லோர் மருங்கின் வரும் உயர்திணைப் படர்க்கை வினைச் சொற்களாம்.

அர் ஆர் என்பவை மூன்று காலமும் பற்றிவரும் சாரியை பெருங்கால் அர் ஈறு அன் ஈற்றொடும் ஆர் ஈறு ஆன் ஈற்றொடும் ஒக்கும். பகர ஈறு எதிர்காலம் பற்றி வரும் உகரச் சாரியை பெற்றும் பெறாதும் சிறு பான்மை குகரமும் பெற்றுவரும்.

(எ-டு) உண்டனர், உண்னா நின்றனர், உண்பர்எனவும் உண்டார், உண்ணாநின்றார். உண்பார் எனவும் உண்குவர், எனவும் உண்ப செல்லுப உண்குப எனவும் வரும்.

**செய்மார் என்னும் வாய்பாட்டு வினைமுற்று :**

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கைக்
காலக் கிளவியொடும் முடியுமென்ப - 208

மேற்கூறியவற்றைப் போல மாரீற்று வினைச் சொல்லும் பல்லோர் படர்க்கை வினைச்சொல்லாம் அ்.து பெயரொடு முடிதலேயன்றி வினையொடும் முடியும் என்று கூறுவர் புலவர்.

(எ-டு) கொண்மார் வந்தார், எள்ளுமார் வந்தார் என வரும் இது செயற்கு என்னும் எச்சப் பொருட்டாய் நின்கும்.

**உயர்திணைத் தெரிநிலை வினைமுற்று ஈறுகள்:**

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அந்நா லைந்தும் மூன்று தலையிட்ட
முன்னுறக் கிளந்த உயர்திணை யவ்வே – 209

பன்மையும் ஒருமையுமாகிய பாலுணரவந்த அம் ஆம் என்பவை முதலாக முன்னர் வகுத்து ஓதப்பெற்ற இருபத்து மூன்று ஈறுகளையுடைய வினைச்சொற்களும் உயர்திணையினவாம்.

**தன்மை பன்மை திரிதல்:**

அவற்றுள்

பன்மை யுரைக்குந் தன்மைக் கிளவி

எண்ணியல் மருங்கின் திரிபவை உளவே ... 210

மேற்கூறியவற்றுள் பன்மைத்தன்மை உணர்த்தும் வினைச்சொற்கள் தன்னொடு பிற பொருளை உளப்படுத்து எண்ணுதற்கண் திரிவனவுமுள என்றது தன்மைவினை உயர்திணைக்கே உரியதென்றதனான் உயர்திணையையே உளப்படுத்தல் வேண்டு

மன்றே அங்ஙனமின்றி ஒரோவழி அ.்.து அ.்.றிணையை உளப்படுத்தி வருதலும் உண்டு. அங்ஙனம் வரினும் இழுக்காகாது என்றவாறு.

(எ-டு) யானும் என் எ.்.கமும் சாறும் யானும் என் யானையும் பகையை வெல்வேம் என வரும்.

**யார் என்னும் வினைச்சொல்**

யாஅர் என்னும் வினாவின் கிளவி

அத்திணை மருங்கின் முப்பாற்கும் உரித்தே - 211

யாவர் என்னும் பெயர்ச்சொல்லின் மரூஉ வாகிய 'யார்' என்னும் சொல் அல்லாத, வினாவினையுணர்த்தி வரும். 'யார்' என்றும் வினைக்குறிப்பு முற்றுச் சொல் உயர்திணை யிடத்துள்ள மூன்று பகுதிக்கும் உரியதாகும். முப்பால் என்றது ஆடூஉ, மகடூஉ, பல்லோர் என்னும் பிரிவுகளை.

(எ-டு) அவன் யார், அவள் யார், அவர் யார் என வரும்.

**ஆன் ஆள் ஆர்-ஈறுகள் செய்யுளில் திரிதல்**

பாலறி மரபின் அம்மூ வீற்றும்

ஆ ஓ வாகலும் செய்யுலுள் உரித்தே - 212

தெற்றெனப் பால் விளங்குமாறு நிற்கும் இயல்பினை உடைய உயர்திணை மூன்று ஈற்றினும் உள்ள ஆகாரம் ஒகாரமாதல் செய்யுள் வழக்கிற்குரியதாகும்.

(எ-டு) வினவி நிற்றந்தோனே எனவும் நல்லை மன் என நகூப் பெயர்ந்தோளே எனவும் வாடா வள்ளியங் காடிறத்தோரே எனவும் வரும்.

ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும் ...213

ஆய் என வரும் முன்னிலை வினைச் சொல்லீறும் மேற்கூறியவற்றொடு ஒத்து அவ்விலக்கணத்தை ஏற்கும்.

(எ-டு) வந்தோய் மன்ற தண்கடற்சேர்ப்ப என வரும்.

**உயர்திணைக் குறிப்பு வினைமுற்று உருவாகும் முறை**

அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும்

கண்ணென் வேற்றுமை நிலத்தினானும்

ஒப்பினானும் பண்பி னானுமென்று

அப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும் ... 214

அதுச் சொல் வேற்றுமையாகிய ஆறாம் வேற்றுமையது உடைமமைப் பொருட்கண்ணும், ஏழாம் வேற்றுமையது இடப் பொருட்கண்ணும் ஒப்புப் பொருட்கண்ணும், பண்புப் பொருட் கண்ணும் என்று சொல்லப்பட்ட அப்பொருண்மை பற்றி வரும் சொல்லகத்துக் காலம் குறிப்பான் தோன்றும் என்றது அச்சொற்கள் அடியாகக் குறிப்பு வினை தோன்றி வரும் என்றவாறு.

ஊடைமை பற்றி வருவன:- கச்சினன், கழவினன், பொன்னன், கண்ணன், நடையன் குடியன் என வரும். நிலம் பற்றி வருவன- அகத்தன், புறத்தன்,விண்ணவன், கானவன், வஞ்சியான், கோழியான் என வரும். ஒப்பு பற்றி வருவன:-பொன்னனைன் உயிரன்னன் என உவம வாய்ப்பாட்டொடும் புலியன் நரியன் என உவமப் பொருண்மையொடும் வரும். பண்பு பற்றி வருவன'- கரியன், வெளியன், குறளன், பெரியன், இனியன், மெய்யன் என வரும்.

**வாய்பாட்டு அடிப்படையிலான குறிப்பு வினை வகைகள்**

அன்மையின் இன்மையின் உண்மையின் வன்மையின்

அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்

என்ன கிளவியும் குறிப்பே காலம் . 215

அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் வாய்ப்பாட்டுப் பொருள் பற்றி வருவனவும், அத்தகையன பிறவும் அங்ஙனம் குறிப்புப் பொருண்மையொ வரும் எத்தகைய சொல்லும் குறிப்பாற் கால முணர்த்துவனவாம் என்றது அன்மை முதலாய சொற்பொருள் பற்றி அவற்றினடியாகவும் குறிப்பு வினை தோன்றி வரும் என்றவாறாம்.

(எ-டு) அல்லன், அல்லள், அல்லர் எனவும், இலன், இலள், இலர் எனவும், உளன், உளள், உளர் எனவும் வல்லன், வல்லள், வல்லர் எனவும் படர்க்கைக்கண் வந்தன

அல்லென், அல்லேன், அல்லம், அல்லேம் எனவும் வல்லென், வல்லேம் எனவும் தன்மைக்கண் வந்தன.

**உயர்திணைக் குறிப்புவினைமுற்று ஈறுகள்**

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த
அன்ன மரபிற் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடிலவே ... 216

உயர்திணையிடத்து ஈற்றிடைச் சொற்களான் பன்மையும் ஒருமையும் ஆகிய பால் அறியவந்த மேற்கூறிய தெரிநிலை வினையொடு மேற்கூறிய மரபினான் குறிப்புப் பொருண்மை யொடு வரும் வினைச் சொற்கள் வேறுபடுதலிலவாம்.

(எ-டு) கச்சினம், கச்சினாம், கச்சினெம், கச்சினேம், கச்சினென், கச்சினேன், கச்சினன், கச்சினள், கச்சினாள், கச்சினர், கச்சினார் என வரும்.

**படர்க்கைப் பன்மை வினைமுற்று**

அ ஆ வ எனவரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை ...217

அகரமும் ஆகாரமும் வகர உயிர் மெய்யுமாகிய அக்கூற்று மூன்று ஈறுகளை யுடையனவே பலவற்றுப் படர்க்கை உணர்த்தும் தெரிநிலை வினைச் சொற்களாம்.

அகர ஈறு மூன்று காலமும் பற்றிவரும். ஆகாரம் எதிர்மறைக்கண் வரும் வகரம் எதிர்காலம் பற்றி வரும்.

(எ-டு) வந்தன, வந்த, உண்டன, உண்ட, சென்றன, சென்ற எனவும், அஞ்சின, அஞ்சிய போயின போய எனவும் புக்கன புக்க எனவும் இறந்த காலம் பற்றி வரும். உண்பன, தின்பன, உண்குவன, தின்குவன என எதிர்காலம் பற்றி வரும்.

**படர்க்கை ஒருமை வினைமுற்று**

ஒன்றன் படர்க்கை தடற ஊர்ந்த

குன்றிய லுகரத்து இறுதி யாகும் ... 218

தடற என்னும் மெய்யினை ஊர்த்து துடுறு என வரும் குற்றியலுகரத்தை ஈறாக உடைய வினைச் சொற்கள் அ.்.றிணை ஒன்றன் படர்க்கையை உணர்த்தி வரும் வினைச் சொற்களாம்.

இவற்றுள் தகர உகரம் மூன்று காலத்திற்கும் உரித்தாய் வரும் றகர உகரம் இறந்தகாலம் பற்றி வரும். இவ்விரண்டும் வினை, வினைக் குறிப்பு இரண்டிற்கும் உரியன.

(எ-டு) வந்தது-உண்டது சென்றது-எஞ்சியது போயது எனவும் புக்கது உற்றது எனவும் இறந்த காலம் பற்றி வரும் நிகழ்காலம் பற்றி வருங்கால் ஆநின்று கிறு கின்று என்னும் கால இடை நிலைகளொடு அகரச் சாரியை பெற்று உண்ணா நின்றது. உண்கின்றது. உண்கிறது எனவும், உரிஞ்சுகின்றது, திருமுகின்றது எனவும் வரும்.

எதிர்காலம் பற்றி வருங்கால் பகரமும் வகரமுமாகிய கால எழுத்துக்களொடு அகரச் சாரியை பெற்று உண்பது, வருவது உரிஞ்சுவது எனவரும்.

**அ.்.றிணை வினைமுற்று ஈறுகள்**

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த

அம்மு விரண்டும் அ.்.றிணை யவ்வே ... 219

பன்மையும் ஒருமையும் ஆகிய பாலுணருமாறு கூறிய ஆறு ஈற்று. வினைச்சொற்களும் அ.்.றிணைக்குரியவையாம். இதனாற் பயன் அ.்.றினைச் சொற்கள் ஈற்று வகையான் ஆறே என்னும் வரையறை பெறுதலாம்.

**எவன் என்னும் வினாச்சொல்**

அத்திணை மருங்கின் இருபாற் கிளவிக்கும்

ஒக்கும் என்ப எவன் என் வினாவே ... 220

வினா வினைக் குறிப்பை உணர்த்திவரும் எவன் என்னும் சொல் அ.்.றிணை இடத்துள்ள இரு பாலுக்கும் ஒப்ப வருமென்று கூறுவர் புலவர்.

(எ-டு) அ.்.தெவன்? அவை எவன்? என வரும்.

**அ.்.றிணை வினைகள்-குறிப்பு வினைமுற்று**

இன்று இல உடைய என்னும் கிளவியும்

அன்று உடைத்து அல்ல என்னும் கிளவியும்

பண்புகொள் கிளவுயும் உளவென் கிளவியும்

பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்

ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ

அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும் ... 221

இன்று இல என்பவை முதலாகக் கூறப் பெற்ற அக் கூறுபாட்டினையுடைய பத்தும் காலம் குறிப்பொடு பொருந்தி வரும் அ.்.றிணை விணைக் குறிப்புக்களாம்.

(எ-டு) அறிந்தமாக்கட்டு, ஆகுக, குழையது, குழையன, கோட்டது. கோட்டன, பெயர்த்து, பெயர முதற்று, முதல, பாற்று, பால, நீர்த்து, நீர், எனவும் நிலத்தது, நிலத்தன, அணித்து, சேய்த்து, புறத்தது புறத்த, மேற்று, மேல வடாது, தெனாது எனவும் ஓடவற்று ஓடவல்ல எனவும் வரும்.

**அ.்.றிணை குறிப்பு வினைமுற்று ஈறுகள்**

பன்மையும் ஒருமையும் பாலறி வந்த

அன்ன மரவிற் குறிப்பொடு வடூஉம்

காலக் கிளவி அ.்.றிணை மருங்கின்

மேலைக் கிளவியொடு வேறு பாடிலவ ...222

அ.்.றிணையின்கண் பன்மையும் ஒருமையுமாகப் பாலுணார வந்த மேற்கூறிய தெரிநிலை வினையொடு மேற்கூறிய மரபினான் வரும் குறிப்புப் பொருண்மையொடு வரும் வினைக் குறிப்புச் சொற்கள் வேறுபாடிலவாம்.

(எ-டு) நல்ல-நல்லன, கோட்ட-கோட்டன, கதத்த-கதவ எனவும் பொல்லாஎனவும் கரிது செம்மற்று குறுந்தாட்டு எனவும் வரும்.

**விரவு வினை**

முன்னிலை வியங்கோள் வினை யெஞ்சு கிளவி

இன்மை செப்பல் வேறென் கிளவி

செய்ம்மன செய்யும் செய்த என்னும்

அம்முறை நின்ற ஆ யெண் கிளவியும்

திரிபு வேறுபடூஉம் செய்தியவாகி

இருதிணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய ... 223

முன்னிலை வினை முதலாகச் செய்த என்னும் பெயரெஞ்சுகிளவி ஈறாக அம்முறைமையான் ஓதப்பெற்ற அவ்எண் வகைச் சொற்களும் உயர்திணைக் காங்கால் உயர்திணைச் சொல்லாகவும் அ.்.றிணைக் காங்கால் அ.்.றிணைச் சொல்லாகவும் திரிந்து வேறுபடும் செயலினை உடையவாகி இருதிணைக்கும் சொல்லாதற்கு ஒத்த உரிமையனவாம்.

முன்னிலை வினையாவது எதிர்முகமாய் நிற்கும் பொருளின் செயல் பற்றி வரும். அ.்.து செயல் உணர்த்துவதும் செயற்படுத்துவதும் என இருநிலைமைத்து செயற்படுத்தலை ஏவல் வினை எனல் வழக்கு உண்பாய் வருவாய், உண்மின், சென்மின் என்னும் எதிர்காலமுணர்த்தும் முன்னிலை வினைகளே ஓசை வேறுபாட்டான் ஏவற்பொருண்மை உணர்த்தி நிற்கும்.

வியங்கோள் வினையாவது: ஒன்றின்பால் ஒருவர் தாம் கருதும் தொழிற்றன்மையை வெளிப்படுத்தலாம். வியம் வெளிப்படுத்தல் கோள்-கொள்கை.

விழைதல், வெறுத்தல், விதித்தல் என்னும் பொருண்மைத்தாய் வரும். ஆ வாழ்க, மழை பெய்க, நாடு செழிக்க என்றாற் போல்வன விழைதலாம் பகை நலிக, அல்லவைகெடுக களவு ஒழிக என்றாற் போல்வன வெறுத்தலாம் சான்றோன் வருக, சாத்தன் உண்க என்றாற் போல்வன விதித்தலாம்.

வினையெஞ்சு கிளவியாவது, பிறிதொரு வினையை ஒழிபாகக் கொண்டு அதனொடுமுடியும் இயல்பினதாய்த் திணைபால் காட்டும் இறுதி குன்றி நிற்கும் குறைநிலை வினைச்சொல். இன்மை செப்பலாவது இன்மை நிலையை உணர்த்தி வரும் இல்லை, இலை, இல் என வருவனவாம் வேறுஎன் கிளவியாவது: ஒன்றினின்று ஒன்றனைப் பிரித்தறிவிக்கும் குறிப்புச் சொல்லாகும் செய்ம்மன என்பது: மன என்னும் ஈற்றான் நின்று எதிர்காலம் உணர்த்தி வரும் முற்றுச் சொல்லாகும். செய்யும் பன்பது உம் என்னும் ஈற்றான் நிகழ் காலமுணர்த்தி வரும் முற்றுவினையாயும் எதிர்காலத்தொடு நிகழ் காலமும் உணர்த்திப் பெயர் சொல்லை ஒழிபாகக் கொண்டு அதனொடு முடியும் எச்சமாயும் வரும். செய்த என்பது அகர ஈறாய் தடற இன்என்னும் கால எழுத்தொடு வந்து இறந்த கால முணர்த்திப் பெயர்ச்சொல்லை ஒழிபாகக் கொண்டு அதனொடு முடியும் இயல்பினதாய்த் திணைபால் காட்டும் இறுதிகுன்றி நிற்கும் குறைச் சொல்லாகும்.

**புறனடை**

அவற்றுள்

முன்னிலைக் கிளவி

இஐ ஆய் என வருஉம் மூன்றும்

ஒப்பந் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும் ... 224

மேற்கூறிய பொதுவினை எட்டனுள் முன்னிலை வினைச்சொல் ஒருமைக்கண் இகரமும் ஐகாரமும் ஆய் என்னும் இடைச்சொல்லும் ஆகிய ஈறுகளை உடையவாய் வரும் மூன்றும் உயர்திணை ஒருவற்கும் ஒருத்திக்கும் அ·றிணை ஒன்றற்கும் ஒப்பத்

தோன்றி நிகழும் அவற்றுள் என்பது அதிகாரச் சூத்திரமாய் பின் வரும் இரண்டு சூத்திரங்களொடும் இயையும்.

அம்மூன்றனுள் இகர ஈறு தடறக என்னும் மெய்களை ஊர்ந்து எதிர்காலம் பற்றி வரும் ஐகாரம் அம்மீற்றொடு ஒத்து எதிர்காலம் பற்றி வரும். ஆய் ஈறு ஆம் ஈற்றொடு ஒத்து மூன்று காலம் பற்றி வரும்.

(எ-டு) உரைத்தி-உண்டி, தின்றி, ஊக்கி என இகரம் எதிர்காலம் பற்றி வந்தது. உண்டனை, உண்ணா நின்றனை, உண்பை, உண்குவை என ஐகாரம் மூன்று காலமும் பற்றி வந்தது. உண்டாய், உண்ணா நின்றாய், உண்பாய் என ஆய் ஈறு மூன்று காலமும் பற்றி வந்தது ஆடு, பாடு, நோக்கு, சேர், செல், காண் என்பவை ஆய் என்னும் ஈறு குன்றி வந்தன.

இர் ஈர் மின்என வருஉம் மூன்றும்

பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்

சொல்லோ ரனைய என்னோர் புலவர் ...225

அவற்றுள் முன்னிலை வினைச்சொல் பன்மைக்கண் இர்,ஈர், மின் என்னும் இடைச்சொற்களை ஈறாகவுடையவாய் வரும் மூன்றும் உயர்திணைப் பல்லோரிடத்தும் அ.்.றிணைப் பலவினிடத்தும் ஒத்த நிலைமையுடைய சொல்லாய் வருமெனக் கூறுவர் புலவர்.

ஈர்,ஈறு, ஆர் ஈற்றினை ஒத்தும் மூன்று காலமும் பற்றி வரும். மின் ஈறு எதிர் காலம் பற்றி வரும்.

(எ-டு) உண்டனிர், உண்ணா நின்றனிர், உண்பிர், உண்குவிர், எனவும், உண்டனீர் உண்டீர், உண்ணா நின்றனீர் உண்மின் தின்மின் எனவும் வரும். முன்னிலை வினைக் குறிப்பு உயர்திணை வினைக் குறிப்பிற்கு ஓதிய பொருள் பற்றி ஐ, ஆர், இர்,ஈர் என்னும் நான்கீறுகளைப் பற்றி வருமெனக் கொள்க. (எ-டு) கழலினை, நாட்டை, கரியை, நடையினை, பொன்னன்னை, எனவும் கழலினாய், நாட்டாய், கரியாய், நடையினாய், பொன்னன்னாய் எனவும் கழலினிர், நாட்டிர், கரியிர், நடையீர், எனவும் நழலினீர், நாட்பீர், கரியீர், நடையீர் பொன்னன்னீர் எனவும் வரும்.

எஞ்சிய கிளவி இடத்தொட சிவணி

ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே ... 226

முன்னிலை வினை தவிர்ந்த பிற ஏழு பொதுவினைகளும் தோன்றி நிகழுமிடத்துத் தமக்குரிய இடங்களொடு பொருந்தி ஐம்பாலுக்கும் உரியவாய் வரும்.

(எ- டு) வினையெச்சம்:- உண்டு வந்தேன், உண்டு வந்தாய், உண்டு வந்தான், உண்டுவந்தாள், உண்டு வந்தார், உண்டு வந்தன என வரும். இன்மை செப்பல் யானில்லை, நீயில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவிலை அவை இல்லை என வரும். வேறு என்னும் சொல்- யான்வேறு, நீவேறு, அவன்வேறு, அவள்வேறு, அவர்வேறு, அதுவேறு, அவைவேறு என வரும். செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டு முற்றுச்சொல் யானுண்மன, நீயுண்மன, அவன் உண்மன, அவள் உண்மன, அவர் உண்மன, அது உண்மன என வரும். இதற்கு உண்பேன், உண்பாய், உண்பான் என இடத்திற்கும் பாலிற்கும் ஏற்ப எதிர் காலம் பொருள் கொள்க.

செய்யும் என்னும் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம் இது யான் வாழும் இல், அது நீ வாழுமில், அவன் வாழுமில், அவள் வாழும், இல், அவர் வாழும் இல் எனவும் வரும். செய்த என்னும் வாய்ப்பாட்டு பெயரெச்சம் இதுயான் உண்ட ஊன், நீ உண்ட ஊன், அது உண்ட ஊண், அவள் உண்ட ஊண், அது உண்ட ஊண், அவை உண்ட ஊண் என வரும்.

**வியங்கோள் வினையின் இயல்பு**

அவற்றுள்

முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடும்

மன்னா தாகும் வியங்கோட் கிளவி .. 227

எஞ்சிய கிளவி என்றவற்றுள் வியங்கோள் பற்றி வரும் வினைச் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய அவ் இரண்டிடத்துச் சொல்லாகி நிலைபெறாது யாண்டு வரினும் படர்க்கைச் சொல்லாயே நிற்கும்.

(எ-டு) வாழ்க அந்தணர், ஆவாழி, வழாஅல் ஓம்பல், வசை தீர்ந்த என் நலம் வாடுவது அருளுவார் என வரும்.

**செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று**

பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை

அவ்வயின் மூன்றும் நிகழும் காலத்துச்

செய்யு மென்னும் கிளவியொடு கொள்ளா... 228

எஞ்சிய கிளவி என மேலே, ஏழற்கும் பொது வகையான் ஓதிய ஐம்பால் மூவிடங்களுள் பல்லோரைக் குறித்து வரும் படர்க்கை இடமும், தன்மையிடமும், முன்னிலையிடமும், ஆகியவை நிகழ்கால முணர்த்துதலுடைய செய்யு மென்னும் வாய்பாட்டு முற்றும் சொல்லொடு பொருந்தி வாரா.

எனவே படர்க்கை இடத்து ஒருவன் ஒருத்தி ஒன்று பல என்னும் நான்கு பாலுக்கு மட்டுமே பொருந்தி வருமென்றவாறு.108

(எ-டு) அவன் உண்ணும், அவள் உண்ணும், அது உண்ணும், அவை உண்ணும் என வரும்.

**வினையெச்ச வாய்பாடுகள்**

செய்து செய்யூ செய்பு செய்தெனச்

செய்யியர் செய்யிய செயின் செய செயற்கென

அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி ... 229

செய்து முதலாய ஒன்பது வாய்ப்பாட்டுச் சொல்லும் வினையெச்சச் சொற்களாம்.

செய்து என்பது இறந்த காலம் பற்றிப் பயின்று வரும் (எ- டு) ஒத்து நின்றான், உண்டு வந்தான், கற்று வந்தான்.

செய்யூ: என்பது பின்வரும் தொழிற்கு முன்னர் வினையின் இடையீடின்மை உணர்த்தி இறந்த காலம் பற்றி உண்ணூ வந்தான் படுமகன் இடைக்கை காணுஉ பெரிது வந்தனளே, நிலம்பூடையூஉ எழுதரும் வலம்படு குஞ்சரம் என வரும்.

செய்பு: என்பது முடிக்குஞ் சொற்பொருளொடு ஒருங்கு நிகழ்வதாய் அதற்குரிய காலம்பற்றி உரிஞுபு வந்தான், கற்குபு வந்தான், தெரிபு தெரிபு குத்தின ஏறு என வரும். செய்தென: என்பது முடிக்குஞ் சொல்லான் உணர்த்தப்படும் பொருட்குத் தன் முதனிலைத் தொழில் காரணம் என்பது பட உண்டெனப் பசி தீர்ந்தது-மருந்து தின்றென நோய் நீங்கிற்று என வரும்.

செய்யீர், செய்யிய: என்பவை எதிர்காலம் பற்றி ஏதுப் பொருட்டாய்,உண்ணியர் வந்தான், உண்ணிய வந்தான் என வரும். செயின்: என்பது எதிர்காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் மழை பெய்யின் குளம் நிறையும், உண்ண வந்தான், ஞாயிறுபட வந்தான் என முறையே கண்டு கொள்க.

செயற்கு என்பது இன்னதற்கு என்னும் பொருள்பட எதிர்காலம் பற்றி உணற்கு வந்தான் திறைகு வந்தான் என வரும்.

**காலம் கண்ணிய சொற்கள்**

பின்முன் கால் கடை வழி இடத்தென்னும்

அன்ன மரபிற் காலங் கண்ணிய

என்ன கிளவியும் அவற்றியல் பினவே ... 230

பின் முன் கால் கடை வழி இடத்து என்னும் அத்தகைய மரபினான் காலத்தைக் கருதி நின்ற எவ்வகைச் சொற்களும் மேற் கூறப்பெற்ற வினையெச்சச் சொற்களின் இயல்பினவாகும்.(-6)

பின்: நீயிர் பொய்கூறிய பின் மெய் கூறுவார் யார்-நீயிர் பொய் கூறா

நின்றபின் மெய் கூறுவார் யார்.

முன்: மருந்து தின்னா முன் நோய் தீர்ந்தது மருந்து தின்னா முன்

நோய் தீரும்.

கால்: வணங்கி நாம் விடுத்தக்கால் அகன்றவர் திறத்தினி நாடுங்கால் எனக் கால் ஈற்று வினையெச்சம் இறப்பும் எதிர்வும் உணர்த்தி வரும்.

கடை: தொடர் கூரத் துவ்வாமை வந்தக் கடை.

வழி: உரைக்கும் வழிக் காண்மின்.

இடத்து களையுநர் கை கொல்லும் காழ்த்தவிடத்து என வரும்.

**வினையெச்சங்களின் வினைமுடிபு முதல் வகை**

அவற்றுள்

முதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின... 231

மேற் கிளந்தோதப் பெற்ற பதினைந்து வினையெச்ச வாய்பாடுகளுள் முதல் நின்ற செய்து செய்யூ செய்பு என்னும் மூன்றும் தம்வினை முதலுக்குரிய முற்று வினையொடு முடியும் இயல்பினவாம்.

(எ-டு)சாத்தன், உண்டு வந்தான், உண்ணூ வந்தான், உண்குபு வந்தான், எனவும் வரும்.

**சிறப்புவிதி**

அம்முக் கிளவியும் சினைவினை தோன்றின்

சினையொடு முடியா முதலொட முடியினும்

வினையோ ரனைய என்மனார் புலவர் ... 232

மேல் வினைமுதல் முடிபின எனப் பெற்ற அம்மூன்று வினையெச்சச் சொற்களும் சினைவினை பற்றியவாகத் தோன்றின் அச்சினைவினையொடு முடியாமல்

அதன் முதல் வினையொடு முடியினும் சினை வினையொடு முடியும் முடிபிற்கு ஒத்த தன்மையவாமெனக் கூறுவர் புலவர்.

(எ-டு) சாத்தன் கையிற்று, வீழ்ந்தான், கையிறூ வீழ்ந்தான் கையிறுபு வழ்ந்தான் என வரும்.

**வினையெச்சங்களின் வினைமுடிபு- இரண்டாவது வகை**

ஏனை எச்சம் வினை முதலானும்

ஆன்வந் தியையும் வினை நிலையானும்

தாமியல் மருங்கின் முடியும் என்ம ...233

மேற்கூறிய மூன்றுமல்லாத ‘செய்தென’ என்பது முதலாக ‘இடத்து’ என்பதீறாக நின்ற பன்னிரண்டு வினை யெச்சங்களும் தத்தம் வினைமுதல் வினையனும் ஆண்டு வந்து இயையும் பிற வினைமுதல் வினையானும் தாம் இயலுமிடத்து வரைவின்றி முடியும் எனக் கூறுவர் ஆசிரியர்.

செய்தென:- மழை பெய்தெனப் புகழ் பெற்றது எனவும், செய்யியர்:- மழை பெய்யியர் எழுந்தது எனவும் செய்யி:- மழை பெய்யிய முழங்கும் எனவும் வரும்.இவ்வாறு தாமியல் மருங்கின் வருவன நோக்கிக் கொள்க.

**வினையெச்சங்கள் அடுக்கிவருதல்**

பன்முறை யானும் வினை யெஞ்சு கிளவி

சொன்முறை முடியாது அடுக்குந வரினும்

முன்னது முடிய முடியுமன் பொருளே ... 234

கூறப்பெற்ற வினையெச்சங்கள் சொல்தொறும் முடிக்குஞ் சொல்லைப் பெறாமல் ஒத்தவாய் பாட்டானும் வேறு வேறு வாய்பாட்டானும் அடுக்கினவாசு வரினும் முன்னின்றது பின்னிற்பதனொடு முடியத் தொடர்ந்து சென்று பொருள் முடி வெய்தும்.

(எ-டு) இது பறக்கும் இருக்கும் பேசும் கிள்ளை எனவும் இது பறந்த பேசிய கிள்ளை எனவும் வரும்.

**பெயரெச்ச வாய்பாடுகள்**

நிலனும் பொருளும் காலமும் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையும் உளப்பட
அவ்வறு பொருட்கும் ஓரன்ன உரிமைய
செய்யும் செய்த என்னும் சொல்லே ... 235

செய்யும் செய்த என்னும் வாய்ப்பாட்டு விரவு வினைச் சொற்கள், நிலமும், செயப்படுபொருளும் காலமும் கருவியும் வினைமுதற் கிளவியாகிய பொருட் சொல்லும் வினைப் பெயரும் உட்பட அவ் அறுவகைப் பொருளையும் ஏற்று முடிதற்கு ஒத்த உரிமை உடையனவாகும்.

இடம்:- வாழும் இல்லம், வாழ்ந்த இல்லம் செயப்படுபொருள்: கற்கும் நூல், கற்றநூல்.

காலம்:- துயிலும் காலம், துயின்ற காலம்.

கருவி:- வெல்லும் வேல், வென்ற வேல்.

வினைமுதற்கிளவி:- நிலம் முதலாகிய ஐந்தும் அல்லாத பொருளாம்.

வினை:- வினை என்றது தொழிற்பெயரை அது காணும் காட்சி, கண்ட காட்சி என வரும்.

**செய்யும் என்னும் வாய்பாட்டுக்குச் சிறப்பு விதி**

அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே ... 236

செய்யுமென்னும் வாய்பாட்டுச் சொல் மேற் கூறிய அறுவகைப் பொருளொடுமுடியும் தன்மைத்தாய் எச்சமாய் வருதற்கண் ‘‘பல்லோர்படர்க்கைஎன்னும்

சூத்திரத்தின்கண் நீக்கப்பெற்ற பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை ஆகிய மூன்று பகுதியொடும் வருதற்குரியதாம்.

**எச்சங்கள் எதிர்மறையில் வருதல்**

பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்

எதிர்மறுத்து மொழினும் பொருள்நிலை திரியா... 237

செய்யும் செய்த என ஓதப்பெற்ற பெயரெச்சச் சொற்களும் செய்து முதலாக ஒதப் பெற்ற வினையெச்சச் சொற்களும் எதிர் மறுத்துக் கூறினும் தம் எச்சப் பொருண்மையினின்று திரியா.

(எ-டு) உண்ணா இல்லடும், உண்ணாச் சோறு, உண்ணா நாள் என வரும்.

பின் முன் கால் கடை வழி இடத்து என்னும் ஈற்று வினை எச்சங்கள் எதிர்மறையாங்கால் அவற்றின் முதனிலைகளே எதிர்மறை வடிவாகத் திரியும்.

(எ-டு) உண்ணாத பின், உண்ணாத முன், உண்ணாக் கடை, என வரும்.

**இடைப்பிறவரல்**

தத்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்

எச்சொல் லாயினும் இடைநிலை வரையார் ... 238

இருவகை எச்சங்களும் முடிக்குஞ் சொல்லொடு இடையீடு இன்றி முடிதலேயன்றித் தமக்கு ஒழிபாக நிற்கும் வினை முற்றொடும் பெயரொடும் இயைந்து முடியும் குறிப்பினவாய்வரின் அவை எவ்வகைச் சொல்லாயினும் இடையே நிற்றலைத் தவிரார் ஆசிரியர்.

(எ-டு) சாத்தன் உழுது ஏரொடு வந்தான் உழுது சாத்தன் வந்தான் எனவும் இது கொல்லும் காட்டுள் யானை இது கொன்ற காட்டுள் யானை எனவும் வரும்.

**செய்யும் என்னும் பெயரெச்சத்தின் ஈறுகெடுதல்**

அவற்றுள்

செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கும்

மெய்யொடும் கெடுமே ஈற்றுமிசை உகரம்

அவ்விடன் அறிதல் என்மனார் புலவர் ... 239

மேற்கூறிய எச்ச வாய்பாடுகளுள் செய்யும் என்னும் பெயரெச்சச் சொற்கண்ணும் செய்யுமென்னும் முற்றுச் சொற்கண்ணும் ஈற்றுமிசை உகரம் தான் ஊர்ந்து நிற்கும் மெய்யொடும் மெய்யொழித்தும் கெடும். அங்ஙனம் கெடுமிடங்களை அறிந்து கொள்க என்று கூறுவர் புலவர்.

(எ-டு) வாவும் புரவி, ஆகும் பொருள் என்பவை வாம் புரவி ஆம் பொருள் என வரும்.

இறப்பு எதிர்வொடு மயங்கல்

செய்தென் னெச்சத்து இறந்த காலம்

எய்திட னுடைத்தே வாராக் காலம் ... 240

செய்து என்னும் எச்சத்தினது இறந்தகாலம் எதிர் காலத்தொடு பொருந்திவரும் இடனும் உடைத்தாகும்.

(எ-டு) சாத்தன் உண்டு வருவான் என்றவழி செய்து என்னும் எச்சம் வருவான் என்னும் எதிர்காலத்துச் சொல்லொடு பொருந்தி வந்தவாறு காண்க.

**முக்கால இயற்கையை நிகழ்வால் கூறல்**

முந்நிலைக் காலமும் தோன்றும் இயற்கை

எம்முறைச் சொல்லும் நிகழுங்காலத்து

மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும் ... 241

மூவகையாகிய காலத்தினும் மாறுபாடின்றி நிகழத் தோன்றும் இயல்புடைய எவ்வகைப் பொருளையும் நிகழ் காலத்தினது பொருள் நிலைமை உடைய பொதுச் சொல்லாகிய ‘செய்யும்’ என்னும் சொல்லாற் கிளந்து கூறுக.

முந்நிலைக் காலத்தும் தோன்றும் இயற்கைப் பொருளாவன நாள் கோள்களின் இயக்கமும் பொருப் பண்புகளுமாம்.

(எ-டு) ஞாயிறு இயங்கும், தீச்சுடும், மலை நிற்கும், யாறு ஒழுகும் என வரும்.

**விரைவுப் பொருளில் காலம் மயங்குதல்**

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர் ... 242

எதிர் காலத்தும் நிகழ் காலத்தும் வரும் வினைச் சொற் பொருண்மைகளை ஒருபடித்தாக இறந்த காலக் குறிப்பொடு கூறுதல் விரைவு பொருளைக் கருதியவாறாம் என்று கூறுவர் புலவர்.

சோறுண்ணச் செல்வான் ஒருவனை அழைத்துச் செல்லவந்த ஒருவன் இன்னும் உண்டிலையோ ? என்ற வழி அவன் உண்டேன் வந்தேன் என்று கூறும் உண்ணா நிற்பவனும் அவ்வாறே கூறும். அவ்வழி எதிர்காலத்திற்குரிய வினை இறந்த காலத்தாற் கூறப்பட்டமை காண்க.

**சிறப்புப் பொருளில் காலம் மயங்குதல்**

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து

மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே... 243

ஒன்றன் கண் சிறப்புடைத்தாக நிகழும் பாங்கினையுடைய வினைச்சொல்லை நோக்கிச் செயல் குறியாமல் அச்செயற் பண்பினைக் குறித்து நிற்கும் வினை

முதலாகிய சொல் செய்யும் பிற கருத்தா இல்லாத இடத்து நிகழ் காலத்திற்குரிய செய்யும் என்னும் சொல்லொடு தோன்றி வரும்.

(எ-டு) நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் என்புழி ஒழுக்கம் என்னும் பண்பு குறித்து நிற்கும் ஒழுகுதல் என்னும் வினைச்சொல் எழுவாயாக நின்று தரும் என்னும் முற்று வினையை ஏற்று முக்காலத்திற்கும் ஒப்ப நின்றவாறு காண்க.

இதுசெயல் வேண்டும் எனும் முற்று

இதுசெயல் வேண்டும் என்னும் கிளவி

இருவயின் நிலையும் பொருட்டாகும்மே

தன்பா லானும் பிறன்பா லானும் ... 244

'இது செயல் வேண்டும்' என்னும் வாய்ப்பாட்டான் வரும் வேண்டும் என்னும் சொல்தன்பாலும் பிறன்பாலுமாகிய இரண்டன் பாலும் நிலை பெறும் பொருண்மைத்தாகும்.

(எ-டு) சாத்தன் ஓதல் வேண்டும், மயில் ஆடல் நோக்கும் மன்னன் வேறல் கருதும் என்றாங்கு வரும்.

வற்புறுத்தல் பொருளில் வரும்வினைா
வன்புற வரூஉம் வினாவுடை வினைச்சொல்
எதர்மறுத் துனர்த்தற் குறிமையும் உடைத்தே ...245

ஒன்றினை வற்புறுத்துதற் பொருட்டு வினாவொடு கூடிவிரும் வினைச்சொல் எதிர் மறுத்துணர்த்தற்கும் உரிமையுடைத்தாகும்.

ஒருவன் தன் மகனை அச்சுறுத்துதற் பொருட் ஒறுப்பானாய் இனி இதனைச் செய்வாயா? இதனை எடுப்பாயா? என்னுமிடத்து அவ்வினாவொடு கூடிய வினைச் சொற்கள் இனிச் செய்யாதே, எடுக்காதே, என்னும் எதிர்மறைப் பொருள் பற்றி நிற்குமாறும் காண்க.

**இயற்கை, தெளிவுப் பொருள்களில் காலம் மயங்குதல்**

வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெறிவும் கிளக்குங் காலை ... 246

எதிர் காலத்திற்குரிய வினைச்சொற் பொருண்மை இயற்கை பற்றியும் தெளிவு பற்றியும் கிளத்து கூறுமிடந்து இறந்த காலத்தொடும் நிகழ் காலத்தொடும் விளங்கத் தோன்றி வரும்.

(எ-டு) இக்காட்டுள் போன்கி கூறை கோட் பட்டான் கூறை கோட்படும் எனவும் எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழைபெய்யும் எனவும் வருதல் இயற்கை.

**செயப்படுபொருள் வினைமுதல் போல் வருதல்:**

செயப்படு பொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரமே... 247

செயப்படுபொருள் வினையாகக் கிளத்தலை வினை முதல் வினை போலத் தொழிற்படச் சொல்லுதலும் பரவை வழக்கின் கண் நிகழும் மரபாகும் உம்மையான் அங்ஙனம் கிளவாமை பெரும்பான்மை என்பதாம்.

(எ-டு) திண்ணை மெழுகிற்று-சோறு அட்டது என வரும். மெழுகப்பட்டது அடப்பட்டது எனச் செயப்படுபொருள் வாய்பாட்டாற் கூறாமல் வினை முதல் வாய்பாட்டாற் கூறப்பட்டவாறு காண்க.

**முக்காலங்களும் தம்முள் மயங்குதல்:**

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்

சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி ... 248

இறப்பும் எதிர்வுமாகிய காலமுணர்த்தும் மயங்குமொழிப் பொருளவாய்ச் சிறப்பத் தோன்றி வரும். அவ்விரு சொற்களும்

(எ-டு) இவர் பண்டு இப்பொழிலகத்து விளையாடுவார் எனவும் நாளை அவன் வெகுண்டு வாளொடு வந்தான் நீ என் செய்குவை எனவும் வரும்.

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார் ... 249

இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் அவ்விரு காலச் சொற்களொடு மயங்குதலை நீக்கார் ஆசிரியர்.

(எ-டு) இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும் எனவும் இவன் நாளை வரும் எனவும் வரும்.

**வினையியல் - பயிற்சி வினாக்கள்**

1. வினைச் சொல்லின் இலக்கணமாகத் தொல்காப்பியர் கூறுவது யாது?

2.'காலந்தாமே மூன்றென மொழிப'- மூன்று யாவை?

3. தெரிநிலை வினை, குறிப்பு வினை-இவற்றைச் சான்றுடன் விளக்குக.

4. வினைச்சொல்லின் பாகுபாடு குறித்துக் கட்டுரை வரைக.

5. உயர்திணை வினைகளை எத்தனை வகையாகப் பிரிக்கிறார் தொல்காப்பியர்? அவை யாவை?

6. தன்மை பன்மை வினைமுற்று ஈறுகள் யாவை?

7. தன்மை ஒருமை வினைமுற்று ஈறுகள் விளக்குக.

8. படர்க்கை ஒருமை வினைமுற்று ஈறுகளைச் சான்று கூறி விளக்குக.

9. உயர்திணைத் தெரிநிலை வினைமுற்று ஈறுகள் மொத்தம் எத்தனை? அவற்றை வகைப்படுத்தி எழுதுக.

10. அதுச்சொல் வேற்றுமை உடைமையானும் கண் என் வேற்றுமை நிலத்தினாலும் குறிப்பு வினை முற்றுத் தோன்றுதலைச் சான்றுடன் விளக்குக.

## தொகுப்புரை :

- தமிழ் மொழியில் அமைந்துள்ள பெயர்ச்சொற்களை விளக்குவது பெயரியல் ஆகும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் ஐந்தாவது இயலாக இடம்பெற்றுள்ளது.
- சொல்லின் வகைகள் இரண்டு. ஒன்று பெயர் மற்றொன்று வினை ஆகும். அவற்றின் வழியே இடைச்சொல் உரிச்சொல் ஆகியவை தோன்றும்.
- உயர்திணைச் சொற்கள், அ∴றிணைச் சொற்கள், அ∴றிணை விரவுப்பெயர், பெயர்ச்சொல் வகைப்பாடு உள்ளிட்டவைகளின் இலக்கணம் பெயரியலில் விளக்கப்பட்டுள்ளன.
- வினைச்சொல்லானது வேற்றுமை கொள்ளாது மற்றும் காலங்காட்டும் தன்மை உடையனவாய் உள்ளன.
- உயர்திணை மற்றும் அ∴றிணையில் வினையின் செயல்பாடுகளை இவ்வியல் விரிவாகப் பேசியிருக்கிறது.

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சினைமுதற் பெயர் எத்தனை வகைப்படும்?

அ) 4 ஆ) 5 இ) 3 ஈ) 6

2. செய்து என்னும் எச்சம் பெரும்பாலும் எக்காலத்தில் வரும்?

அ) எதிர்காலம் ஆ) இறந்தகாலம் இ) நிகழ்காலம் ஈ) எதுவுமில்லை

3. பன்மைக்கு உரிய பெயரினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) நீ ஆ) அவன் இ) நான் ஈ) நீயிர்

4. “காலந் தாமே ……………….. மொழிப”

அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 6

5. தொல்காப்பியத்தின் ஆறாவது இயல் எது?

அ) பெயரியல் ஆ) வினையியல் இ) உரியியல் ஈ) எச்சவியல்

**அருஞ்சொற்பொருள் விளக்கம் :**

அன்ன – முன்பு

கடைவழி - இறுதிவழி

புணர்தல் - சேர்தல்

சிவணுதல் - பொருந்துதல்

அனைய – ஒத்த

**விடைகள்**

1. அ) 4
2. ஆ) இறந்தகாலம்
3. ஈ) நீயிர்
4. ஆ) 3
5. ஆ) வினையியல்

**குறுவினாக்கள்**

1. வினைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறி அதன் வகைப்பாட்டை எடுத்தெழுதுக

**நெடுவினாக்கள்**

1.விரவுப்பெயர் பாகுபாட்டினைப் பெயரியல்வழி தொகுத்துரைக்க.

2. பெயரெச்சம் மற்றும் வினையெச்ச வாய்பாடுகளைப் பற்றிக் கட்டுரைக்க.

3. வினைச்சொல்லின் இலக்கணத்தைக் கூறி அவை காலங்காட்டும் முறையினை விளக்குக.

**பாடம் தொடர்பான புத்தகங்கள்**

1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் பாவலரேறு பாலசுந்தரனார் உரை, பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம் 11, 2012

**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள் :**

- Tamil Heritage Foundation – www. Tamilheritage.org <http:// – www. Tamilheritage.org>
- Project Madurai – www. Project Madurai.org
- Tamil Universal Digital Library – www.ulib.prg<http: www.ulib.prg>
- Tamil E – Books Dwonloads – tamilebooksdownloads.blogspot.com
- Chennailibrary – www.chennailibrary.com<http: www.chennailibrary.com>

## அலகு –4

**அலகில் இடம்பெறுபவை :**

இடையியல், உரியியல், எச்சவியல்

**நோக்கங்கள் :**

- உலக மொழிகளின் இலக்கண வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்கும் தமிழ்மொழியின் கட்டமைப்பை விளக்குதல்.
- இடைச்சொற்கள் மற்றும் உரிச்சொற்களின் இலக்கணங்களின்வழி மொழியியல் கருத்துகளைக் கற்பித்தல்.
- மொழியானது செய்யுள் மற்றும் வழக்கு என்று பாகுப்படுத்தப்பட்டு அமையும் முறைகள் குறித்து விளக்குதல்
- செய்யுள் ஈட்டச்சொல், செய்யுளில் தொடர் அமைதி, இலக்கணத்தில் கட்டுப்படாத மொழி குறித்துக் கற்பித்தல்

## இடையியல்

**இடைச்சொல்லின் பொது இலக்கணம்**

இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்

நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே ... 250

இடைச்சொல் என்று கூறப்படுபவை பெயரோடும் வினையொடும் வழங்குதலைப் பெற்றியலும்,அவை தாமாக நடக்கும் இயல்பில்லாதன.

பால் முதலியவற்றைக் காட்டும் இடைச் சொற்களேயாயினும் ஆ, கா, பூ என்றாற் போலவும் வா, போ, கா என்றாற் போலவும் வருமிடத்து வினை முதற் பொருள் தரும் இடைச் சொல்லும், ஏவற் பொருள் தரும் இடைச் சொல்லும் குன்றிப் பெயராயும், வினையாயும் ஓரேழுத்து ஒருமொழியாய் வரும் சொற்கள் இருவகை வழக்கினும் நடைபெறுதலானும், தத்தம் பொருளவாய் வரும் இடைச் சொற்களும் வேற்றுமை உருபுகளும் பெயர் வினைகளைச் சார்ந்து வருதலானும் பொதுப்படப் பெயரொடும் வினையொடும் என்றார். இதனை ஆசிரியர் “அவ்வச் சொல்லிற் கவையவை பொருளென் மெய்பெறக்கிலந்த இயலவானும் வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றிற் திரிந்து வேறுபடினும் தெரிந்தனர் கொளலே” (இடைபு) எனக் கூறுதலான் அறியலாம்.

(எ-டு) அதுகொல் தோழி காமநோயேகொன்ன கழிந்தன்றிளமை என இவை பெயரொடும் வினையொடும் சார்ந்து வந்தன மலையன், உண்டான், கரியன் என இவை அவற்றிற்கு உறுப்பாய் வந்தன, பிறவும் அன்ன.

**இடைச்சொல்லின் பாகுபாடு**

அவைதாம்

புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதாவும்

வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்

வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும்

அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்

இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்

தத்தங் குறிப்பிற் பொருள் செய்குநவும்

ஒப்பில் வரியாற்பொருள் செய் குநவும்என்று

அப்பண் பினவே நுவலுங் காலை ...251

மேற்சொல்லப் பெற்ற இடைச் சொற்கள் தாம் நுவலுவங்காலை நிறுத்த சொல்லும் குறித்து வரு கிளவியும் புணர்ந்தியலும் நிலைமைக்கண் அவற்றின் பொருள் நிலைமை உணர்தற்கு உதவுவனவும், வினைப் பெயர் வினைச்சொல்லாது இயக்க முணர்த்து மிடத்துக் காலங்காட்டுதலொடு வருவனவும், வேற்றுமைப் பொருள் விரியுமிடத்து உருபாக வருவனவும், அசைநிலை என உணர்த்தும் சொல்லாக ஆகிவருவனவும் இசை நிறைக்கும் சொல்லாக ஆகிவருவனவும், கூறுவோர்தாம், குறித்த குறிப்பிற்கேற்பப் பொருள் இயன்று வருவனவும் ஒக்கும் என்னும் ஒத்தற்பொருள் இல்லாத வழியும் அப்வொப்புப் பொருளை உணரச் செய்வனவும் என்று சொல்லப்படும் அவ் ஏழு இயல்பினவாகும்.

1) புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக் குதநவும் என்பதனைப் புணரியல் நிலைக்கு உதநவும், பொருள் நிலைக் குதநவும் எனப் பிரித்துக் கூட்டிப்

பொருள் காண்க அவையாவன இருமொழிப் புணர்ச்சியுள்ளும் ஒரு மொழிப் புணர்ச்சியுள்ளும் வரும் சாரியைகளாம்.

(எ-டு) மரத்துக்கிளை-அவற்றுக் கோடுவண்டின் கால் பதிற்றகல் என வரும்.

2) வினை செயன் மருகிற் காலமொடு வருநவும் திணையும் பாலும் இடமும் காட்டும் இறுதி இடைச்சொற்களும் காலங்காட்டும் இடைச் சொற்களுமாம். இதனை வினை செயல் மருங்கின் வருநவும் காலமொடு வருநவும் எனப் பிரித்துக் கூட்டிப் பொருள் என்க.

(எ-டு) உண்டனன், உண்டான், உண்ணா நின்றனன், உண்ணா நின்றான்,

உண்பான் என வரும்.

3) வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுநவும். ஐஒடுகு இன் அது கண் என்பவை பெயர்ப் பொருள் வேறுபாடுற்றமையை உணர்த்தும் உருபிடைச் சொற்களாம்.

(எ-டு) வேற்றுமையியல் உடையுள் கண்டு கொள்க,

4) அசைநிலைக் கிளவி:- என்பது பிறபொருளுணர்த்தாமல் செய்யுள் வழக்குப் பற்றிச் சீர்க்கு உறுப்பாகவும் சீராகவும் ஓசை நிரப்புதற்கு வரும் சொல்லுறுப்புக்களை.

(எ-டு) அந்திற் கச்சினன் கழலினன் ‘ஆங்கக் குயிலும் மயிலுங் காட்டி என்பவை சீராக அசைத்து அடிரப்பி நின்றன.

5) இசை நிறைக் கிளவி: என்பது சார்ந்த சொல்லின் பொருட்குத் துணையாகச் செய்யுட்கண் சீர் நிறைத்து ஓசை பற்றி வரும்.

(எ-டு) ஏஎ இ∴. தொத்தன் என்பெறாஅன் கோட்டைக்காண் எனவும் வரும்.

6) தத்தம் குறிப்பிற் பொருள் செய்குநவும் இது பல நிலைகளில் வரும்.

(எ-டு) கூரியதோர் வாள்மன், வருகதில்அம்மவெம் சேரிசர சாத்தனும் வந்தான் என வரும்.

7) ஒப்பில் வழியாற் பொருள் செய்குந உவமவியலுள் பெறப்படும்.

(எ-டு) எரி யகைந்தன்ன தாமரை யாழ்கெழு மணிமிடற்றந்தணன் “குறுந்தொடி ஏய்க்கும் மெலிந்து வீங்கு திவவின்” விண் பொருபுகழ் விறல் வஞ்சி, மகன்றாயாதல் புரைவதாலெனவே என உவமச்சொல் இடைச் சொல்லாக வரும்.

**இடைச்சொல் நிற்குமிடமும் வேறுபாடும்**

அவைதாம்
முன்னும் பின்னும் மொழியடுத்து வருதலும்
தம்மீறு திரிதலும் பிறிதவண் நிலையலும்
அன்னவை யெல்லாம் உரிய என்ப ... 252

மேல் வகைப்படுத்தப் பெற்ற இடைச் சொற்கள் பெயரொடும் வினையொடும் நடை பெறுங்கால் அவற்றின் முன்னர் வருதலும், பின்னர் வருதலும், தம் ஈறு திரிந்து வருதலும் பிறிதோரிடைச்சொல் அவண் வந்து இணைய நிற்றலுமாகிய அத்தகைய இயல்புகளெல்லாம் உறுதற்குரிய எனக் கூறுவர் ஆசிரியர்.

(எ-டு) பண்டு காடுமன்-கேண்மியா இவை முன்னடுத்து நின்றன கொன்னூர்-ஓஒ இனிதே இவை பின்னடுத்தன. உடனுயிர் போகுத தில்லதில் என்பது ஈறுதிரிந்து வந்தது வசு தில்லம்ம எம் சேரிசேர-பிறிதவண் வந்து இணைந்து நின்றது.

**மன் இடைச்சொல்**

கழிவே ஆக்கம் ஒழியிசைக் கிளவியென்று
அம்மூன் றென்ப மன்னைச் சொல்லே ...253

மன் என்னும் இடைச்சொல் செயற்கழிவும் ஆக்கமும் எச்சமாக ஒழிந்து நிற்கும் பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம்மூன்று பொருட் கூறுபாட்டினை உடையதென்று கூறுவர் புலவர்.

(எ-டு) சிறியகள் பெறினே எமக்கீயு மன்னே இது கழிந்த பொருள் சுட்டி நின்றது. பண்டுகாடுமன் இப்போது வாயலாயிற்று இது ஆக்கங் குறித்து நின்றது. கூரியதோர்வாள்மன் இது ஒழிந்த சொற் பொருண்மை சுட்டி நின்றது.

**தில் இடைச்சொல்**

விழைவே காலம் ஒழியிசைக் கிளவிஎன்று

அம்மூன் றென்ப தில்லைச் சொல்லே ...254

தில் என்னும் இடைச்சொல் விழைவும், காலமும், ஒழிந்து நிற்கும் சொற்பொருண்மையும் என்று சொல்லப்பட்ட அம்மூன்று பொருட் கூறுபாட்டினை உடையதென்று கூறுவர் புலவர்.

(எ-டு) சின்மொழி அரிவையைப் பெறுகதில் அம்மயானே- இது பெறுதல் வேண்டும் என்னும் விழைவு குறித்து நின்றது. பெற்றாங்கறிக தில்லம்மவிவ் வூரே- இது காலங் குறித்து நின்றது.

அச்சம் பயமிலி காலம் பெருமை யென்று

அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே…255

கொன் என்னும் இடைச்சொல் அச்சம் பயனின்மை, காலம், பெருமை என்று சொல்லப்படும் அந்நான்கு பொருட் கூறுபாட்டினை உடையதாம்.

(எ-டு) கொன்முனையிரவூர் கொன்னே கழிந் தன்றிளமை கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ-கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ்சலமே என முறையே அப்பொருள் நான்கினும் வந்தமை கண்டு கொள்க.

**உம் இடைச்சொல்**

எச்சம் சிறப்பே ஐயம் எதிர்மறை

முற்றே எண்ணே தெரிநிலை ஆக்கமென்று

அப்பால் எட்ட உம்மைச் சொல்லே ...256

உம் என்னும் இடைச்சொல் எச்சமும், சிறப்பும், ஐயமும், எதிர்மறையும், முழுமையும், எண்ணும், ஆய்வு நிலையும், ஆக்கமும்என்று சொல்லப்படும் அவ் எட்டுப் பொருட்கூறுபாட்டினை உடையதாம்.

1. சாத்தனும் வந்தான் இது முன்னர்க் கொற்றன் வந்தமையைக் குறித்து நிற்றலின் இறந்தது தழுவிய எச்சவும்மை.

2. யானைக்கும் அடி சறுக்கும் என்பது உயர்வு சிறப்பும்மை. இவ்வூர்ப் பூசையும் புலால் தின்னாது என்பது இழிவு சிறப்பும்மை.

3. ஒன்று இரப்பான் போல் எளிவந்தும் சொல்லும் உலகம் புரப்பான் போல் வதோர் மதுகையு முடையன் வல்லாரை வழிபட்டொன்றறிற் தான் போல் நல்லார் எண் தோன்றும் அடக்கமுடையான் அன்னான் ஒருவன் இ∴து இன்னான் எனத் துணியப்படாமையின் ஐயவும்மை.

4 மரப்பினும் ஒத்துக் கொளலாகும் என்புழி மறத்தற் கூடாது எனப் பொருள்தந்து நிற்றலின் இ∴து எதிர்மறையும்மை.

4. முத்தமிழுங் கற்றான் என்பது முற்றும்மை.

5. நிலனும் நீரும் தீயும் வளியும் காயமும் எனப்பூதமைந்து என்பது எண்ணும்மை.

6. இரு நிலம் அடிதோய்தலின் திருமகளும் அல்லள் அரமகளும் அல்லள் இவன் யாராகும் என ஆய்வின் கண் வருதல் தெரிநிலை உம்மை.

7. செந்தமிழால் வையினும் உவக்கும் சேயோன் என்புழி வைதலை வாழ்த்தாக எண்ணிக் கோடலின் ஆக்க உம்மையாம்.

**ஓகார இடைச்சொற்கள்**

பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை

தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ

இருமூன் றென்ப ஓகா ரம்மே ...257

ஓ என்னும் இடைச்சொல் பிரிநிலையும் வினாவுதலும், எதிர்மறையும், ஒழியிசையும், தெரிநிலைச் சொல்லும், சிறப்புப் பொருள் தரும், சொல்லொடும் கூடி அவ்வூறு பொருட் கூறுபாட்டினது என்று கூறுவர் புலவர்.

1.யானோ தேறேன் அவர் பொய்வழங்கலரே என்பது பிறர்தேறின் தேறுக எனத் தேறு வாரினின்று தன்னை வேறுபடுத்தலின் பிரிநிலையாம்.

2. சாத்தன் உண்டானோ ? என்பது வினா ஓகாரம்.

3.யானோ கொள்வேன் என்பது கொள்ளேன் என்னும் பொருள் தருலின் எதிர்மறையாம்.

4 கற்கவோ வந்தான்? என்பது விளையாடற்கு வந்தான் எனத்தான் கருதிய பொருள்தருதலின்ஒழியிசை ஓகாரமாம்.

5. திருமகளோ அல்லள்-அரமகளோ அல்லள் இவள் யார் என்பது ஆய்வின் கண் வருதலின்
தெரிநிலை ஓகாரமாம்.

6. ஓஓ பெரியன் என்பது பெருமை யை விதந்து கூறுதலின் சிறப்பு ஓகாரமாம்.

**‘ஏ’ கார இடைச்சொல்**

தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே

ஈற்றசை இவ்வைந் தேகா ரம்மே...258

ஏ என்னும் இடைச்சொல் தெளிவும், வினாவும், பிரிநிலையும், எண்ணுதலும்,ஈற்றசையும், என ஐந்து பொருட் கூறுபட்டதாகும்.

(எ-டு) உண்டே எ மறுமை, வாய்மை யேர வெல்லும் என வரும் இவை தேற்றாகாரம். நீயே கொண்டாய் என்பது வினா ஏகாரம். இவனே வலியன் என்பது பிரிநிலை ஏகாரம். நிலனே, நீரே, தீயே வளியே என எண்ணுதற் கண் வரும்ஏகாரம் எண்ணேகாரம், வாடாவள்ளியங் காடிறந்தோரே எனச் சீர் இறுதிக்கண் வரும் ஏகாரம் ஈற்றசை ஏகாரம்.

**என- இடைச்சொல்**

வினையே குறிப்பே இசையே பண்பே

எண்ணே பெயரோ டவ்வறு கிளவியும்

கண்ணிய நிலைத்தே எனவென் கிளவி ... 259

என்னும் இடைச்சொல் வினைப்பொருண்மையும் குறிப்புப் பொருண்மையும், இசைப் பொருண்மையும், பண்புப் பொருண்மையையும், எண்ணுதற் பொருண்மையும் பெயர்ப் பொருண்மையும் ஆகிய ஆறும் குறித்த சொற் பொருளைக் கருதி வரும் நிலைமையதாகும்.

1). மலைவான் கொள்கென உயர்பலிதூஉய் எனவும்

2). துண்ணெனத் துடித்தது மனம் எனவும்

3). ஒல்லென ஒலிக்கும் கடல் எனவும்

4). வெள்ளென விளர்த்தது வானம் எனவும்

5). நிலனென தீயென வளியென வானெனப் பூதம் ஐந்து எனவும்

6). அழுக்காறென வொரு பாவி எனவும் முறையே வந்தவாறு கண்டு

கொள்க.

**என்று-இடைச்சொல்**

என்றென் கிளவியும் அதனோ ரற்றே ... 260

என்று எனப்படும் இடைச்சொல்லும் மேற்கூறிய என என்பதன் பொருளொடு ஒருங்கு ஒத்ததேயாகும்.

(எ-டு) நரைவம் என்றெண்ணி என்பது வினைப் பொருண்மை பற்றி வந்தது விண்ணென்று விசைத்தது வான் என்பது குறிப்புப் பொருண்மை

ஒல்லென்றொலிக்கம் ஒலி புனலூரன் என்பது பண்புப் பொருண்மை நீரென்று தீயென்று ஐந்து என்பது எண்ணுதற் பொருண்மை. பாரி பாரி என்று ஒருவனுளன் என்பது பெயர்ப் பொருண்மை என்று என்னும் செய்தென் எச்சம் வேறு இவ் இடைச்சொல் வேறென அறிக.

**'தில்' இடைச்சொல்லுக்குச் சிறப்பு விதி**

விழைவின் தில்லை தன்னிடத்தியலும் ...261

விழைவுப் பொருண்மை பற்றி வரும் 'தில்' என்னும் இடைச்சொல் தன்மைக்கண் வரும். ஏனையிடத்து வராது என்றவாறாம்.

**ஏ ஓ இடைச்சொற்களுக்குச் சிறப்பு விதி**

தெளிவின் ஏயும் சிறப்பின் ஓவும்

அளபின் எடுத்த இசைய என்ப - 262

தெளிவு குறித்து வரும் ஏகாரமும் சிறப்புக் குறித்து வரும் ஓகாரமும் அளபெடுத்தலான் ஓங்கிய இசையை உடையவாய் வருமெனக் கூறுவர் புலவர்.

**மற்று இடைச்சொல் உணர்த்தும் பொருள்**

மற்றென் கிளவி வினைமாற் றசைநிலை

அப்பாலிரண்டென மொழிமனார் புலவர் - 263

மற்று என்னும் இடைச்சொல், வினைமாற்றாதலும், அசை நிலையாதலும் என அதன் பொருட் பகுதி இரண்டெனக் கூறுவர் புலவர்.

(எ-டு) ''மற்றறிவாம் நல்வினை யாம் இளையம்'' என்ற வழி நல்வினை பின்னர் இயற்றுவாம் என மாற்றுதலின் வினை மாற்றாயிற்று. அதுமற் றவலங் கொள்ளாது நொதுமற்கலுழும், என்பது அசை நிலையாய் வந்தது.

**எற்று இடைச்சொல் உணர்த்தும் பொருள்**

எற்றென் கிளவி இறந்த பொருட்டே - 264

எற்று என்னும் இடைச்சொல் காலச் செலவினை உணர்த்தும் பொருட்டாய் வரும்.

(எ-டு) எற்றென் ஊடம்பின் எழில் நலம், என்ற வழி முன்னர் எழிலுடையதாக இருந்த உடம்பு இப்பொழுது எழில் குன்றியமையைப் புலப்படுத்தலின் காலக் கடப்பினை உணர்த்தி நிற்றல் காண்க.

**மற்றையது எனும் சொல் பொருளுணர்த்தும் முறை**

மற்றையது என்னும் கிளவி தானே

சுட்டு நிலை ஒழிய இனங்குறித் தன்றே - 265

மற்றை எனும் இடைச்சொல் யாதானும் ஒரு பொருளைச் சுட்டும் நிலைமையைத் தவிர்த்து எடுத்த ஒரு பெருளிற்கினமான பொருளைக் குறித்து வரும்.

இச்சொல் பெரும் பான்மையும் யாதானும் ஒரு பால் பற்றிய சுட்டுப் பெயரோடிணைந்து வருமென்பதறிவித்தற்கு 'மற்றையது' என ஓதினார். (எ-டு)

இவ் ஆடை கொள்க மற்றையது கொள் வேன் எனின் அச்சுட்டு பிறிதொரு ஆடையையே சுட்டி நிற்குமாறு காண்க.

**மன்ற என்னும் சொல் உணர்த்தும் பொருள்**

மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும் - 266

மன்ற என்னும் இடைச்சொல் தெளிவு பொருண்மை குறித்து வரும்.

(எ-டு) 'சுடவுளாயினும் ஆக மடவைமன்ற வாழியமுருகே' என வரும். தேற்றம் என்பது ஈண்டு உறுதி செய்தலைக் கருதிற்று.

**தஞ்சம் என்னும் சொல் உணர்த்தும் பொருள்**

தஞ்சக் கிளவி எண்மைப் பொருட்டே...267

தஞ்சம் என்னும் இடைச்சொல் எளிமைப் பண்புணர்த்தாமல் எளிதாதற் குறிப்புப் பொருள் பற்றி வரும்.

(எ-டு) ஈயென இரக்குவாயின் சீருடை முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்'' அரசைப் பெறுவது எளிது என்பது பொருள் அடைக்கலம் என்னும் பொருள் தரும் தஞ்சம் என்னும் பெயர்ச்சொல் வேறு இவ் இடைச்சொல் வேறு.

**அந்தில் எனும் சொல் பொருள் உணர்த்துதல்**

அந்தில் ஆங்க அசைநிலை கிளவியென்று

ஆயிரண்டாகம் இயற்கைத் தென்ப ...268

அந்தில் என்னும் இடைச்சொல் ஆங்கு என்னும் இக்குறிப்பும் அசைநிலையும் எனப்படும் அவ்விரண்டு இயல்பினதாகும் என்று கூறவர் புலவர்.

(எ-டு) வருமே சேயிழை அந்திற் கொழுநற் காணிய என்பது இடக்குறிப்பு. அந்திற் கச்சினன் கழிலினன் என்பது அசைநிலை.

**கொல் உணர்த்தும் பொருள்**

கொல்லே ஐயம் ... 269

கொல் என்னும் இடைச்சொல் ஐயப் பொருட்டாய்வரும்.

(எ-டு) சாத்தன் வருங்கொல் என வரும். இவ் விடைச்சொல் குற்றி கொல்லோ மகன் கொல்லோ என வினா எழுத்தொடும் வரும்.

**எல் உணர்த்தும் பொருள்**

எல்லே இலக்கம் ... 270

எல் என்னும் இடைச்சொல் அசைந்திலங்குதல் பொருட்டாகும்.

(எ-டு) எல்வளை மகளிர் என வரும், அசைதலையுடைய வளையணிந்த மகளிர் என்பது பொருள்.

இலக்கம் என்பது இலங்குதல், விலங்குதல், துலங்குதல் என்னும் பண்பு குறியாது தொழிற் குறிப்புணர்த்தி நிற்றலின் இடைச் சொல்லாயிற்று என்க.

**'ஆர்'ஈறும் மதிப்புப்பன்மை வினை முடியும்**

இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி

லர்க்குரி எழுத்தின் வினையொடு முடிமே ...271

ஆர் என்னும் இடைச்சொல் இயற்பெயர்களின் முன்னர் அவற்றைச் சார்ந்து வந்து பல்லோரறியுஞ் சொல்லுக்குரிய ரகார ஈற்றுப் பெயர் போல உயர்திணைப் பன்மை வினையான் முடியும்.

(எ-டு) சாத்தனார் வந்தார் முடத்தாமக் கண்ணியார் வந்தார் கொற்றனார் வந்தார் என வரும்.

**'ஆர்' இடைச்சொல் அசைநிலை ஆதல்**

அசை நிலைக் கிளவி ஆகும்வழி யறிதல் ... 272

மேற்கூறப்பெற்ற ஆரைக் கிளவி அசைநிலைக் கிளவியாயும் வரும். அங்ஙனம் வருமிடம் அறிந்து கொள்க.

(எ-டு) எல்லா உயிரொடும் செல்லு மார்முதலே பெயரினாகிய தொகையுமாளவே என வரும்.

**ஏ-குரை-சொற்களின் இயல்பு**

ஏயுங் குரையும் இசைநிறை அசைநிலை

ஆயிரண் டாகும் இயற்கைய என்ப ...273

ஏ என்னும் இடைச்சொல்லும் குரை என்னும் இடைச்சொல்லும் இசை நிறையும் அசை நிலையும் என அவ் இரண்டியல் பின என்று கூறுவர் புலவர்.

(எ-டு) ஏஎ இ∴தொன் என் பெறான் சேட்டைக் காண் இ∴து இசைநிறை ஏஎ என் சொல்லியவாறு? இ∴தசைநிலை, அளிதோதானேயது பெறலருங் குரைத்தே'' இ∴து இசைநிறை பல்குரைத் துன்பங்கள் சென்று படும் என்பதும் அது அசை நிலையாய் வருதல் வந்துழிக் கண்டு கொள்க.

**மா வியங்கோள் அசைச் சொல் ஆதல்**

மா என் கிளவி வியங்கோ ளசைச் சொல் ... 274

மா என்னும் இடைச்சொல் வியங்கோளின் கண் அசை நிலையாய் வரும்.

(எ-டு) ‘‘உப்பின்று புற்கை உண்கமா கொற்கையோனே’’ என வரும்.

**முன்னிலை அசைச் சொற்கள்**

மியா இக மோமதி இகும்சின் என்னும்

ஆவயின் ஆறும் முன்னிலையசைச்சொல் ...275

மியா, இக, மோ, மதி, இகும், சின் என்னும் ஆறும் முன்னிலையாகிய அவ்விடத்து அசைச் சொல்லாய் வரும்.

(எ-டு) கேண்மியா கொற்றா, கண்பனி ஆன்றிக என்றி தோழி-காமஞ் செப்பாது கண்டது மொழிமோ உரைமதி வாழியோ வலவ மெல்லம் புலம்ப கண்டிகும் காப்பும் பூண்டிசின் கடையும் போகலை என வரும்.

**இகும், சின் ஏனையிடங்களிலும் வருதல்**

அவற்றுள்

இகுமும் சின்னும் ஏனை யிடத்தொடும்

தகும் நிலை உடைய என்மனார் புலவர்...276

மேற்கூறிய ஆறனுள் இகும் இசின் என்னும் இடைச்சொற்கள் முன்னிலையேயன்றித் தன்மையும் படர்க்கையுமாகிய இடங்களொடும் வரத்தகும் இயல்பினை உடைய என்று கூறுவர் புலவர்.

(எ-டு) கண்டிக்கும் அல்லமோ எனவும், கண்ணும் படுமோ என்றிசின்யானே எனவும், தன்மைக் கண் வந்தன, புகழ்ந் திகுமல்லமோ பெரிதே எனவும் யார∴தறிந்திதசினோரே எனவும் படர்க்னகக் கண் வந்தன.

**அம்ம சொல் வதைக் கேட்கச் செய்யும்**

அம்ம கேட்பிக்கும் ...277

அம்ம என்னும் இடைச்சொல் கேட்பாய் என்னும் பொருட்குறிப்பொடு நிற்கும். கேட்பிக்கும் எனக் கருவி கருத்தா வாக ஓதப்பெற்றது. (எ-டு) அம்ம வாழி தோழி என வரும்.

**ஆங்க உரையசை**

ஆங்க உரையசை - 278

ஆங்க எனும் இடைச்சொல் உரையசையாக வரும்.

(எ-டு) ‘‘ஆங்கக் குயிலும்மயிலும் காட்டிக் கேள்வனை விடுத்துப் போகியோளே’’ என வரும். உரையசையாவது பொருள் காணுமிடத்துப் பொருள் இன்றி நிற்றல்.

**ஒப்பில் போலி**

ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும் - 279

ஒப்புமை உணர்த்தாது வரும்போலும் என்னும் இடைச் சொல்லும் ஆங்க என்னும் இடைச்சொற் போல உரைசையாக வரும்.

(எ-டு) மங்கலம் என்பதோர் ஊர் உண்டு போலும் என வரும்.

**அசைநிலைச் சொற்கள்**

யா, கா

பிறபிறக்கு அரோபோ மாதென வரூஉம்

ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி ... 280

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, எனச் சொல்ல வரும் அவ் ஏழு இடைச்சொற்களும் அசைநிலையாய் வரும்.

(எ-டு) யா பன்னிருவர் மாணாக்கர் அகத்தியனார்க்கு எனவும் புறநிழற்பட்டாளோ இவளிவட்காண்டிகா எனவும் தான்பிற வரிசையறிதலின் தன்னுந் தூக்கி எனவும் நசை தரவந்தோர் நசை பிறக் கொழியஎனவும் வரும்.

**பிரிவில் அசைநிலை**

ஆக ஆகல் என்பது என்னும்

ஆவயின் மூன்றும் பிரிவில் அசைநிலை ... 281

ஆக, ஆகல் என்பது, என்னும் அம்மூன்றும் அம் மூன்று சொற்களினிடத்தும் இணைந்து வந்து அசைநிலையாகும்.

(எ-டு) ஒருவன் மழை வேண்டி மக்கள் வான் பலிதரல் வேண்டும் என்று கூறிய வழி அதனை உடன்பகுவான் ஒருவன் ஆக ஆக! என்றோ ஆகல் ஆகல்! என்றோ கூறும். அவ்வழி அவற்றுள் ஒரு சொல் அங்ஙனம் ஆவதாக என்னும் பொருள்தர ஏனையது அசைநிலையாக நின்றவாறு காண்க.

**ஔ என்னும் சொல்**

ஈரள பிசைக்கும் இறுதியி லுயிரே

ஆயியல் நிலையும் காலத் தானும்

அளபெடை நிலையும் காலத் தானும்

அளபெடை யின்றித் தான்வருங் காலையும்

உளவென மொழிப் பொருள் வேறுபடுதல்

குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும் ... 282

இரண்டு மாத்திரை யளவிற்றாயிசைக்கும் மொழி யிறுதியாகி வருதலில்லாத உயிரெழுத்தாகிய ஔகாரம், மேற் கூறிய இடைச் சொற்களைப் போல இரட்டித்து நிற்குமிடத்தும் அளபெடுத்து நிற்குமிடத்தும் அளபெடாது தனித்து நிற்குமிடத்தும் குறிப்பானும் இசையானும் நெறிப்படத் தோன்றுதாலன் அதன் பொருள் வேறுபடுதல் உளவென்று கூறுவர் புலவர்.

ஔஔ இவன் தவஞ் செய்தவாறு என்னுமிடத்து வியப்பும், ஔஉ இவன் போர் செய்தவாறு என்புழிச் சிறப்பும், ஔஇனி வெகுளல் என்னுமிடத்து மாறுபாடும் குறிப்பானுணர்த்தி நிற்குமாறு அறிக.

**குறிப்புச்சொற்கள்**

நன்றீற் றேயும் அன்றிற் றேயும்

அந்தீற் றோவும் அன்னீற் றோவும்

அன்ன பிறவும் குறிப்பொ கொள்ளும் ... 283

நன்றே, அன்றே என வரும் சொற்களும் அந்தோ, அன்னோ என வரும் சொற்களும் அவை போல்வனவாய் வரும் பிறவும் இடைச் சொற்களாய்க் குறிப்புப் பொருள் பற்றி வரும்.

தவறு செய்த ஒருவன் தான் செய்ததனை மறுத்துக் கூறும் வழி அதனை உள்ளத்தான் வெறுப்பான் ஒருவன் நீ செய்தது நன்றே நன்றே என்ற வழித் "தீது" என்னும் குறிப்புத் தோன்றுமாறு காண்க.

**எச்சவும்மையும் எதிர்மறை உம்மையும்**

எச்ச உம்மையும் எதிர்மறை உம்மையும்

தத்தமுள் மயங்கும் உடநிலை இலவே ... 284

ஒரு தொடரின் கண் எச்சவும்மையும் எதிர்மறையும்மையும் தத்தமக்குள் ஒருங்கு மயங்குதல் இல.

**எச்ச உம்மை நிற்றற்குரிய இடம்**

எஞ்சு பொருட் கிளவி செஞ்சொல் லாயின்

பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல் ... 285

எச்ச உம்மையான் தழுவப்படும் எஞ்சுபொருட் கிளவி உம்மையின்றிச் செஞ் சொல்லாக நிற்பின் அதனை உம்மையொடு நின்ற தொடருக்குப் பிற் கூறாது முற்கூறுவாராக.

(எ-டு) சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான் எனவும் கடல் போலும் கல்வியவன் எனவும் வரும்.

**முற்றும்மை எச்சமாதல்**

முற்றிய உம்மைத் தொகைச் சொன் மருங்கின்

எச்சக் கிளவி உரித்து மாகும் ... 286

முற்றுமையடுத்துத் தொகை குறித்து நிற்கும் சொல்லின்கண் எச்சக் கிளவி வருதற்கும் உரியதாகும்.

(எ-டு) பத்துங் கொடாதே என்றவழிச் சில எஞ்சக்கொடு என்றும் ஓரோ வழிப் பொருள் தருதல் காண்க.

**ஈற்றசை ஏகாரத்திற்கு ஒலியளவு**

ஈற்று நின் றிசைக்கும் ஏயென் இறுதி

கூற்றுவயின் ஓரள பாகலும் உரித்தே ... 287

சொல்லிறுதிக்கண் நின்று அசையாக இசைக்கும் ஏ என்னும் ஈற்றசை வழக்கின் கண் ஒரு மாத்திரையளவிற்றாதலும் உரித்தாகும்.

முன்னின்றாரை நோக்கி ஒருவர் உரை யாடுங்கால் கண்டேனே, பார்த்தேனே, உண்டேனே என்ற வழி கண்டேனே, பார்த்தேனே என இறுதிகுன்றி இசைத்தலை வழக்காற்றினானறிக.

**உம், என எண்ணிடைச் சொற்கள்**

உம்மை எண்ணும் எனவென் எண்ணும்

தம்வயின் தொகுதி கடப்பா டிலவே ... 288

உம்மையான் வரும் எண்ணும் என என்று வரும் எண்ணும் முடிபின்கண் தொகை பெற்று வருதலாகிய கடப்பாடுடையவல்ல தொகை பெற்றும் வரும், பெறாதும் வரும்.

உயர்திணைக்குரிமையும் அஃறிணைக்குரிமையும் ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும் அம்மூ உருபின தோன்றலாறே என உம்மை எண்ணும் நிலனெனத் நீரெனத் தீன்றொ வளியென்றா நான்கும் என எனவென் எண்ணும் தொகை பெற்று வந்தன.

**எண் ஏகாரம் இடையிட்டு வருதல்**

எண்ணேகாரம் இடையிட்டுக் கொளினும்

எண்ணுக் குறித் தியலும் என்மனார் புலவர்... 289

எண்ணுக் குறித்து வரும் ஏகாரம் சொற்றொறும் வாராமல் இடையீட்டு வரினும் செவ்வெண்ணாகநின்ற சொற்கள் எண்ணுதற் பொருட்டாயே நடக்கும் என்று கூறுவர் புலவர்.

(எ-டு) மலைநிலம் பூவே துலோக்கோலென்றின்னர், எனவும் தோற்றம் இசையே நாற்றம் சுவையே உறலோ டாங்கைம் புலனென மொழிபு எனவும் வரும்.

**எனா, என்றா எண்ணிடைச் சொற்கள்**

உம்மை தொக்க எனாவென் கிளவியும்

ஆ வீறாகிய என்றன் கிளவியும்

ஆயிரு கிளவியும் எண்ணு வழிப்பட்டன... 290

உம்மை தொக்கு வரும் எனாவென்னும் இடைச்சொல்லும் ஆகார ஈற்றதாகிய என்றா என்னும் இடைச் சொல்லும் ஆகிய இரண்டு இடைச்சொற்களும் எண்ணுதற் பொருளினவாம்.

(எ-டு) நிலனெனா நீரெனாத் தீயெனா வளியெனா வானெனாப்பூதம் ஐந்து எனவும் நிலனென்றா நீரென்றா தீயென்றா வளியென்றா வானென்றாப் பூதமைந்து எனவும் வரும்.

**தொகை பெற்றே முடியும் எண்ணிடைச்சொற்கள்**

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்

பெயர்க்குரி மரபின் செவ்வெண் இறுதியும்

ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும்

யாவயின் வரினும் தொகையின் றியலா .. 291

மேற்கூறிய எனா என்றா என்பவற்றான் வரும் எண்ணின் இறுதியும் பெயர்க்கு உரியவாய் இம்மரபினான் வரும் பெயர்ச் செவ்வெண் இறுதியும் ஏகார இடைச்சொல்லாகிய எண்ணின் இறுதியும் எவ்விடத்து வரினும் அவை தொகையின்றி நடவா தொகை பெற்றே முடியும் என்றவாறு.

(எ-டு) மாத்திரை எழுத்தியல் அசை வகை எனாஅ ஆறுதலையிட்ட அந்நாலைந்தும் எனவும் உயர்திணை என்றா அ∴றிணை என்றா ஆயிரெண்டென்ப திணைநிலை வகையே எனவும் வரும்.

**உருபுதொக வரும் எண்ணிடைச்சொல்**

உம்மை எண்ணின் உருபு தொகல் வரையார் ... 292

எண்ணும்மையின் கண் வேற்றுமை உருபு தொக்கு வருதலை நீக்கார் ஆசிரியர்.

(எ- டு) புலியும் வில்லும் கெண்டையும் நாட்டினான் எனவும் யானையும் குதிரையும் தேரும் எறிந்தான் எனவும் இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி எனவும் வரும்.

**உந்து ஆதல்**

உம் உந்தாகும் இடனுமா ருண்டே ... 293

வினைச் சொல்லிறுதியாய் நிற்கும் உம்மீறு உந்து என வடிவு திரிந்து நிற்கும் இடனும் உண்டு உம்மை எதிர்மறை ஆரும் ஏயும் அசை நிலை.

(எ-டு) “நீர்க் கோழி கூப்பெயர்க்குந்து” நாரி நறவின் நாண் மகிழ்தூக் குந்து என வரும்.

எண்ணிடைச் சொற்கள் வினையிலும் வருதல்

வினையொடு நிலையினும் எண்ணுநிலை திரியா

நினையல் வேண்டும் அவற்றவற் றியல்பே ...294

எண்ணிடைச் சொற்கள் பெயரொடு வருதலேயன்றி வினைச் சொல்லொடு கூடி நிற்பினும் எண்ணுதலாகிய தம் இலக்கணத்திற்றிரியா ஆண்டு அவ்வவற்றின் இயல்பினை ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும்.

உண்டும் தின்றும் பாடியும் மகிழ்ந்தான் எனவும் உண்ணவெனத் தின்னவெனப் பாடவென வந்தான் எனவும் வரும்.

**எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்**

என்றும் எனவும் ஒடுவுந் தோன்றி

ஒன்றுவழி உடைய எண்ணினுட் பிரிந்தே - 295

என்று என- ஒடு என்னும் இவ் எண்ணிடைச் சொற்கள் ஒரோவோர் சொல்லின் கண் தோன்றி நின்று பிரிந்து பிற சொற்களொடும் பொருந்தி வரும் நெறியினை உடையவாம்.

(எ-டு) இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் லென்று அனைத்தே செய்யுளீட்டச் சொல்லே என வரும்.

**புறனடை**

அவ்வச் சொல்லிற் சுவையவை பொருளென

மெய்பெறக் கிளந்த இயல வாயினும்

வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றித்

திரிந்து வேறு படினும் தெரிந்தனர் கொளலே - 296

மேற்கூறிய இடைச்சொற்கள் அவ்வச் சொற்கு அவையவை பொருளென அவ்வப் பொருள் கொள்ளுமாறு கிளந்து கூறப்பெற்ற இலக்கணத்தனவாயினும் அவையவை முன்னும் பின்னும் வரும் வினைச்சொல்லொடும் பெயர்ச் சொல்லொடும் வைத்து ஆராய்ந்து உணருமாறு தோன்றித் திரிந்து வேறுபட்டு வரினும் அவ்வேறு பாட்டினைத் தெரிந்து பொருந்துமாறு அமைத்துக் கொள்க.

(எ-டு) ‘சென்றீ பெருமநிற்றகை க்குரர் யாரோ’ என ஓகாரம் ஈற்றசையாக வந்தது. அதுமன் கொண்கன் தேரே மன் அசைநிலையாக வந்தது, ஊரெனப்படுவது உரையூர் என என்பது சிறப்பின் கண் வந்தது. பிறவும் அவ்வாறு வருவனவற்றை ஒர்ந்தமைத்துக் கொள்க.

**மேலும் ஒரு புறனடை**

கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்

கிளந்தவற் றியலான் உணர்ந்தனர் கொளலே - 297

மேற் கிளந்து கூறப் பெற்றவையன்றி வேறு பிறவாக இடைச் சொற்கள் தோன்றிவரினும் மேற்கூறப் பெற்ற இலக்கண நெறியான் அவற்றைத் தெரிந்தமைத்துக் கொள்க.

(எ-டு) ‘‘சொல்லென் தெய்ய நின்னொடு பெயர்ந்தே பணியுமாம் என்றும் பெருமை’’ என்பனவற்றுள் தெய்ய, ஆம் என்பவை அசைநிலையாய் வந்தன.

## இடையியல் - பயிற்சி வினாக்கள்

1. இடைச்சொல் என்பதற்குச் சேனாவரையர் தரும் விளக்கம் யாது?

2. இடைச்சொல்லின் இலக்கணம் யாது?

3.இடைச்சொல் பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றின் பொருளை வெளிப்படுத்தலைச் சான்றுடன் விளக்குக.

4.இடைச்சொல்லின் பாகுபாடுகளைக் குறிப்பிடுக.

5.இடையியலில் விளக்கிக் கூறப்படும் இடைச்சொல் வகைகள் யாவை?

6.இடைச்சொற்கள் நிற்கும் இடங்களைச் சான்றுடன் குறிப்பிடுக.

7.‘மன்’ என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைச் சான்றுடன் குறிப்பிடுக

8. தில்லைச் சொல் உணர்த்தும் பொருள்கள் எத்தனை ? அவை யாவை?

9. ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைக் குறிப்பிடுக.

10. ‘எற்று என் கிளவி இறந்த பொருட்டே விளக்குக.

## உரியியல்

**உரிச்சொல்லின் பொது இலக்கணம்:**

உரிச்சொற் கிளவி விரிக்குங் காலை

இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றிப்

பெயரினும் வினையினும் மெய்தடு மாறி

ஒரு சொல் பலபொருட்கு உரிமை தோன்றினும்

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தித்

தத்தம் மரபின் சென்று நிலை மருங்கின்

எச்சொல் லாயினும் பொருள் வேறு கிளத்தல்…. 298

நான்வகைச் சொற்களும் உரிச்சொற்களை விரித்துணர்த்து இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பொருண்மைக் கண் முகிழ்த்துப் பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தம் வடிவு தடுமாறி ஒரு சொல் பல பொருட்கு உரிமையுடையதாய்த் தோன்றுதற் கண்ணும் பலசொல் 95 பொருட்கு உரிமையுடையவாய்த் தோன்றுதற் கண்ணும் தத்தம் மரபொடு வந்து தனித்தும் பெயர் வினை கட்கு அடையாயும் நிலை பெறுமிடத்து அவை எச்சொல்லாயினும் வழக்கின் கண் பயின்று வராத சொற்களைப் பயின்ற சொற்களோடு சார்த்திப்பொருள் வேறுபாடு தெரியுமாறு கிளந்து கூறுக

**உரிச்சொல் வகை:**

வெளப்படு சொல்லே கிளத்தல் வேண்டா

வெளிப்பட வாரா உரிச்சொல் மேன ….. 299

பன்முறையானும் பரந்துபட்டு வரும் உரிச்சொற்களுள் திரியின்றிப் பொருள்தருபவை கிளத்தல் வேண்டாதன ஆதலின் கிளத்தல் வெளிப்பட வாரா உரிச்சொற்களின் மேலனவாம். அவையாவன உரிச்சொற்களுள் பெயர் வினைகட்கு முதவிலையாகவரினும் தனித்துவரினும் பொருள் வேறுபடாமல் வருபவை வெளிப்படு சொற்களாம். பெயர் விளைகட்கு முதனிலையாக வருங்கால் ஒரு பொருளும் தந்து நிரிவுபடுபவை வெளிப்பட வராத சொற்களாம். (எ-டு) கொள் என்பது குறிப்படியாகத் தோன்றியதொரு நிரம்பிய உரிச்சொல் இதன் பொருள் ஏற்றல், அகப்படுதல், கொள்ளை கொளு முதலிய பெயர்கட்கும் கொண்டான் கொள்ளான் முதலிய வினைகட்கும் முதனிலையாய் நிற்றர் கண்ணும் குறிக்கோள்மாறு கோள் கோள்வல்லார் எனத் தனித்து நிற்றற் கண்ணும் ஒத்த பொருளே தருதலின் இன்னோரன்ன வெளிப்படு சொற்களாம்.

**உறுதவநனி:**

அவைதாம்

உறுதவ நனியென வருஉம் மூன்றும்

மிகுதி செய்யும் பொருள என்ப ---- 300

உறுதவ நனி எனக் குறிப்புரிச் சொல்லாக வரும் மூன்றும் மிகுதியை உணர்த்தும்பொருளின எனக் கூறுவர். (எ-டு) உறு கால் ஒற்ற ஓல்கி ஆம்பல் எனவும் ஈயாது வீயும் உயிர்த்தவப்பலவே எனவும் வந்துநனி வருந்தினை வாழியென் நெஞ்சே எனவும் வரும்.

**உரு, புரை:**

உருவுட் காகும் புரையுயர் பாகும் …. 301

உரு என்னும் குறிப்புரிச் சொல் அச்சம் என்னும் பொருட்கு ஆகி வரும் புரை என்னும் குறிப்புச்சொல் உயர்தல் என்னும் பொருட்கு ஆகிவரும். (எ-டு) உருகெழு கடவுள், உருவம், உருத்தல், உருப்பம், உருத்தான் என வரும்.

**குரு, கெழு:**

குருவும் கெழுவும் நிறனாகும்மே ….. 302

குரு, கெழு என்னும் இவ்விரு பண்புரிச் சொற்களும் நிறம் என்னும் பொருட்காகி வரும். (எ-டு) குரு மணித் தாலி, எனவும் நறுஞ்சாற் தணிந்த கேழ்கிளர் அகலம் எனவும் வரும்.

**செல்லல், இன்னல் இன்னாமை:**

செல்லல் இன்னல் இன்னா மைபே…..303

செல்லல் இன்னல் என்னும் குறிப்புரிச் சொற்கள் இவ்வாமை என்னும் பொருள் பற்றி வரும். (எ-டு) மணங்கமழ் வியன் மார்பு அணங்கிய செல்லல் எனவும், வெயில் புறந்தருடம் இன்னல் இயக்கத்து எனவும் வரும்.

**மல்லல் வளம்:**

மல்லல் வளனே ……. 304

மல்லல் என்னும் குறிப்புச்சொல் வளம் என்னும் பொருள் பற்றி வரும். (எ-டு) மல்லல் மால் வரை இதன் முதனிலையாகிய மல் என்பது மலை, மலி மலர். மல்கு எனப் பெயர் வினைகட்கு முதனிலையாய்வருங்கால் பொருள் வேறுபடும் ஆதலின் இது பெயர்ப் போலியாய் வந்து உரிச்சொல்லாயிற்று.

**ஏ பெற்று**

ஏ பெற்றதாகும்…. 305

ஏ என்னும் குறிப்புச்சொல் பெற்று என்னும் பொருட்டாய் வரும்.

(எ-டு) ஏகல்லடுக்கம் என வரும்

**உகப்பு உயர்வு, உவப்பு உவகை:**

உகப்பே உயர்தல் உவப்பே உவகை….. 306

உகப்பு என்னும் குறிப்புரிச் சொல் உயர்தலாகிய பொருளுணர்த்தி வரும். உவப்பென்னும் குறிப்புரிச்சொல் உவகை என்னும் பொருளுனர்த்தி வரும். (எ-டு) 1)விசும்பு

கந்தாடாது இரை நேர்ந்துண்ணாது என வரும். 2) உவந்து வந்து ஆர்வ நெஞ்சமொடு நலன் என வரும்.

**பயப்பு -பயன்:**

பயப்பே பயனாம்…. 307

பயப்பு என்னும் குறிப்புரிச் சொல் பயன் என்னும் பொருட்டாய் வரும். (எ-டு) ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே என வரும்.

**பசப்பு – நிறம்:**

பசப்பு நிறனாகும்…. 308

பசப்பு என்னும் பண்புரிச்சொல் திறனாகிய பொருட்காகி வரும். (எ-டு) மையில் வாண்முகம் பசப்பூரும்மே என வரும்.

இயைபே புணர்ச்சி…. 309

இயைபென்னும் குறிப்புரிச்சொல் புணர்ச்சியாகிய பொருளுணர்த்தி வரும்.

(எ-டு) இயைந்த கேண்மை இல்லாகியரோ என வரும்.

**இயைபு புணர்ச்சி:**

இசைப்பு இசையாகும்…. 310

இசைப்பு என்னும் இசையுரிச்வொல் இசை பொருட்டாய் வரும்.

(எ-டு) வாயிற்றோன்றி யாழிசையூ உப்புக்கு எனவரும்

**அலமரல் தெருமரல் – சுழற்சி:**

அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி…..311

அலமரல் தெருமரல் என்னும் குறிப்புரிச் சொல்லாகிய அவ்விரண்டும் சுழல்தல் என்னும் பொருள் பற்றி வரும். (எ-டு) அலமரலாயம் எனவும் தெருமரல் உள்ளமொடு அன்னை துஞ்சாள் எனவும் வரும்.

**மழ, குழ – இளமை:**

மழவும் குழவும் இளமைப் பொருள்……312

மழகுழ என்னும் குறிப்புரிச்சொற்கள் இளமை என்னும் பொருட்குரிச் சொற்கள். இளமை என்னும் பொருட்குரியவாய் வரும். (எ-டு) மழகளிறு எனவும். குழக்கன்று எனவும் வரும்.

**சீர்த்தி மிகுபுகழ்:**

சீர்த்தி மிகுபுகழ்….. 313

சீர்த்தி என்னும் குறிப்புரிச்சொல் மிக்கபுகழ் என்னும் பொருளுணர்த்தி வரும்.

(எ-டு) வயக்கஞ்சால் சீர்த்தி என வரும்.

**மாலை இயல்பு:**

மாலை இயல்பே…..314

மாலை என்னும் குறிப்புரிச் சொல் இயற்கை என்னும் பொருள் பற்றி வரும்.

(எ-டு) இரவரன் மாலையன் என வரும்.

மாலை என்னும் குறிப்புரிச்சொல் இயற்கை (தன்மை) என்னும் பொருள்பற்றி வரும்

(எ-டு) இரவரன் மாலையன் எனவரும்.

கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்….. 315

கூர்ப்பு கழிவு என்னும் குறிப்புரிச் சொற்கள் தம்மை அடுத்து நிற்கும் பொருளைச் சிறப்பித்து வரும்.

(எ-டு) துனிகூரெவ்வம் எனவும் ''சினவே காமம் கழிகண்ணோட்டம்' எனவும் வரும்

கதழ்வும் துனைவும் விரைவின் பொருள….. 316

கதழ் துனை என்னும் குறிப்புரிச்சொற்கள் விரைதலாகிய பொருள் உணர்த்தி வரும்.

(எ-டு) கதழ்பரி நெடுந்தேர் எனவும் துணைபரிநிவக்கும் புள்ளிமான்'' எனவும்

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கஞ் செய்யும்….317

அதிர்வு விதிர்ப்பு என்பனை நடுங்குதலாகிய குறிப்புப் பொருளைத் தரும்.

(எ-டு) அதிரவருரதோர் நோய் எனவும் விதிர்ப்புற வறியா ஏமக்காப்பினை

எனவும் வரும்.

**வாழ்தல், போகல், ஒழுகலி:**

வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்

நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள…..318

வார்தல் போகல் ஒழுகல் என்னும் குறிப்புச்சொல் மூன்றும் நேர்தலும் நெடுமையுமாகிய பண்புணர்த்தும் பொருளினவாகும்.

(எ-டு) வார்ந்திலங்கும் வை எயிற்றுச் சின்மொழி அரிவை எனவும் தெள்ளறல் தழிஇய வார்மணலடைகரை எனவும் வரும்.

**தீர்தல், தீர்த்தல்:**

திர்தலும் தீர்த்தலும் விடற் பொருட்டாகும்…..319

தீர்தல் தீர்த்தல் என்னும் இரண்டின் முதனிலையாகிய ‘தீர்’ என்னும் குறிப்புரிச்சொல் விடுதல் என்னும் பொருட்குரித்தாய் வரும்.

(எ-டு) கலையே பிணைவயின் தீர்தலும் அஞ்சி எனவும் வல்லன் எந்தை

பசிதீர்த்தல் என எனவும் வரும்.

**கெடவரல், பண்ணை:**

கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு…..320

கெடவரல் எனவரும். அவ்விரு குறிப்புரிச்சொற்களும் விளையாட்டு என்னும் பொருள் பற்றி வரும்.

(எ-டு) ‘கெடவரலாயமொடு’ எனவும் ‘பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்’ எனவும் வரும்.

**தட, கய, நளி:**

தடவும் கயவும் நளியும் பெருமை….321

தட சுய நளி என்னும் பண்புரிச் சொற்கள் பெருமை என்னும் பொருள் பற்றி வரும்.

(ஈ-டு) வலி துஞ்சு தடக்கை எனவும் கயவாய்ப் பெருங்கைானை எனவும் தனிமலை நாடன் நள்ளி எனவும் வரும். அவற்றுள்

**தட:**

தடவென் கிளவி கோட்டமும் செய்யும். 322

மேற்கூறிய மூன்றனுள் வென்னும் சொல் பண்புணர்த்தலேயன்றி வளைவு என்னும் பண்புணர்த்தியும் வரும். பெருமையாகிய

கயவென் கிளவி மென்மையும் செய்யும். 323

கயவென்னும் உரிச்சொல் பெருமையேயன்றி மென்மைப் பண்புணர்த்தியும் வரும். (எ-டு) கயந்தலை மடப்பிடி என வரும்.

**நளி:**

நளியென் களவி செறிவு மாரும் - 324

நளி என்னும் உரிச்சொல் பெருமைப்பண்பேயன்றிச் செறிவு என்னும் குறிப்புணர்த்தியும் வரும். (எ-டு) நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி என வரும்.

தட முதலாய மூன்றும் பெயரடையாக வந்து உரிச்சொல்லாயின. நளிந்தனை வருதல் உடன்றனளாகி என்பதன் கண் வந்த நளிந்தனை என்பது நளிய என்னும் உவம உருபிடைச் சொல்லடியாகப்பிறந்த வினைச்சொல் என அரிக

**பழுது:**

பழுது பயமின்றே - 325

பழுது என்னும் குறிப்புரிச்சொல் பயனின்மைப் பொருட்டாய் வரும். (எ-டு) பழுது கழி வாணாள் என வரும். இது தனித்துப் பெயர்ப் போலியாய் வரும் உரிச்சொல் ஈண்டு வினைக்குறிப்புப் பொருள் படநின்றது

**சாயல்:**

சாயல் மென்மை - 326

சாயல் என்னும் பண்புரிச்சொல் மென்மைத்தன்மை உணர்த்தி வரும். சாயன் மார்பு நனியலைத் தன்றே என வரும்.

**முழுது:**

முழுது என் கிளவி எஞ்சாப் பொருட்டே - 327

முழுது என்னும் குறிப்புரிச்சொல் எஞ்சாமையாகிய பொருட்குரியதாய் வரும்.

(எ-டு) மண் முழுது ஆண்ட நின் முன்னோர் போல என வரும்.

**வம்பு:**

வம்பு நிலையின்மை - 328

வம்பு என்னும் குறிப்புரிச்சொல் நிலையின்மையாகிய பொருள் குறித்து வரும்.

(எ-டு) வம்பமாரியைக் காரென மதித்தே என வினைப்போலியாய் வரும்.

**மாதர்:**

மாதர் காதல் - 329

(எ-டு) மாதர் கொள் மானோக்கின் மடநல்லாய் என வரும்.

மாதர் என்னும் குறிப்புரிச்சொல் காதல் என்னும் பொருட்டாய் வரும்.

**நம்பு, மேவு:**

நம்பும் மேவும் நசையாகும்மே - 330

நம்பு மே என்னும் குறிப்புரிச்சொற்கள் நசை என்னும் பொருட்குரியவாய் வரும். (எ-டு) நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி வனவும் பேரிசை நவீரம் மேலய் உறையும் என வரும்.

**ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாய்:**

ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்

ஆவையின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்

சாய், ஓய்தல், ஆய்தல், நிழத்தல் என்னும் குறிப்புரிச்சொல்லிடத்தவாகிய நான்கும் தாம் அடுத்து நிற்கும் சொற்பொருளின் நுணுக்கத்தை உணர்த்தி வரும். (எ-டு) வேனில் உழந்த வறிதுயங்கு எனவும் கயலறல் எதிரக் கடும்புனல் சாஅய் எனவும் வரும்.

புலம்பே தனிமை - 332

புலம்பு என்னும் குறிப்புரிச்சொல் தனிமை என்னும் பொருளுணர்த்தி வரும்.

(எ-டு) புலிப்பற்கோத்த புலம்பு மணித்தாலி என வரும்.

**துவன்று:**

துவன்று நிறைவாகும் - 333

துவன்று என்னும் குறிப்புரிச்சொல் நிறைவு என்னும் பொருட்டாகி வரும்.

(எ-டு) ஆரியற் துவன்றிய பேரிசையீமயம் என வரும்.

**முரஞ்சல்:**

முரஞ்சல் முதிர்வே - 334

முரஞ்சு என்னும் குறிப்புரிச்சொல் முதிர்தல் என்னும் பொருள் குறித்து வரும்.

(எ-டு) கோடு பல முரஞ்சிய கோளி ஆலத்து என வினைப் போலியாக வரும்.

**வெம்மை:**

வெம்மை வேண்டல் - 335

வெம்மை என்னும் பண்புரிச்சொல் வேண்டல் என்னும் பொருள் குறித்து வரும்.

(எ-டு) ஏமவெங் காமம் இயைவ தாயினும் இது பெயர்ப் போலியாய் வரும்.

**பொற்பு:**

பொற்பே பொலிவு - 336

பொற்பு என்னும் குறிப்புரிச்சொல் பொலிதல் என்னும் பொருள் பற்றி வரும்.

(எ-டு) பெருவரையடுக்கம் பொற்பச் சூர்மகள் என வரும்.

**வறிது:**

வறிது சிறிதாகும் - 337

வறிது என்னும் குறிப்புரிச்சொல் சிறிது என்னும் பொருட்டாகி வரும்.

(எ-டு) வறிது வடக்கறைஞ்சிய சீர்சால் வெள்ளி என வரும்.

**ஏற்றம் நினைவு:**

ஏற்றம் நினைவும் துணிவுமாகும் - 338

ஏற்றம் என்னும் குறிப்புரிச்சொல் நினைதலும் துணிதலும் ஆகிய பொருள் கட்கு ஆகி வரும்.

(எ-டு) கானலஞ் சேர்ப்பன் கொடுமை ஏற்றி எனவும் ஏற்றமிலாட்டி என்ஏமுற்றாள் எனவும் வரும்.

**பிணை பேண்**:

பிணையும் பேணும் பெட்பின் பொருள - 339

பிணை என்னும் குறிப்புரிச்சொல்லும் பேணு என்னும் குறிப்புரிச்சொல்லும் பெட்பு என்னும் சொல்லுக்குரிய புறந்தருதல், விரும்புதல் என்னும் பொருளிளவாய் வரும்.

(எ-டு) அரும்பிணையகற்றி வேட்ட ஞாட்பினும், எனவும் யானும் பேணி மகிழ்ந எனவும் வரும்.

பணையே பிழைத்தல் பெருப்பு மாகும் - 340

என்னும் குறிப்புரிச்சொல் பிழைத்தலும் பெருத்தலுமாகிய பொருள்கட்காகி வரும் (எ-டு) பணைத்து வீழ் பகழி எனவும் வேய் மருள் பணைத்தோள் எனவும் வரும்.

படரே உள்ளல் செலவு மாகும் - 341

படர் என்னும் குறிப்புரிச்சொல் உள்ளுதலும் செலவும் ஆகிய பொருட்காகி வரும். (எ-டு) வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற்போகி எனவும் வரும்.

**பையுள், சிறுமை:**

பையுளும் சிறுமையும் நோயின் பொருள 342

பையுள் சிறுமை என்னும் குறிப்புரிச்சொற்கள் நோயின் பொருளவாகிய துன்பம் வருத்தம் முதலிய பொருளினவாய் வரும். (எ-டு) படர்சுமந்தெழு தரும் பையுள் மாலை எனவும் மெல்லிய நெஞ்சு பையுள் கூர எனவும் சிறுமையுறுப செய்யறிபலரே எனவும் நசை பழுதாகப் பெருங்கை யற்றவென் சிறுமை எனவும் வரும்.

**எய்யாமை:**

எய்யா மையே அறியா மையே - 343

எய்யாமை என்னும் குறிப்புரிச்சொல் அறியாமை என்னும் பொருள் குறித்து வரும். (எ-டு) நன்றும் எய்யாமையின் ஏதில பற்றி எய்யாமையொடு இளிவு தலைத் தருமென என வரும்.

**நன்று**

நன்று பெரிதாகும் - 344

நன்று என்னும் குறிப்புரிச்சொல் பெரிது என்னும் பொருட்டாய் வரும். (எ-டு) நன்றும் அரிது துற்றணை யாற் பெரும என வரும்.

**தா:**

தாவே வலியும் வருத்தமு மாமும் - 345

தா என்னும் குறிப்புரிச்சொல் வலிதாதலும் வருந்துதலுமாகிய பொருள்கட்காகி வரும். (எ-டு) தாவில் நன் பொன் தைஇய பாவை எனவும் கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றென எனவும் வரும்.

**தெவு:**

தெவுக் கொளற் பொருட்டே - 346

தெவு எனும் குறிப்புரிச்சொல் கொள்ளுதற் பொருட்டாய் வரும்.

(எ-டு) நீர்த்தெவ்வும் நிறைத் தொழுவார்.

**தெவ்வு:**

தெவ்வுப் பகையாகும் - 347

தென் என்னும் குறிப்புரிச்சொல் பகைமை என்னும் பொருட்டாய் வரும்.

**விறப்பு, உறப்பு, வெறுப்பு:**

விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே - 348

விறப்பு உறப்பு வெறுப்பு என்னும் குறிப்புரிச்சொற்கள்செறிவு என்னும் பொருள் பற்றி வரும். (எ-டு) விறந்த காப்பொடு உண்ணின்று வலியுறுத்தும் எனவும், உறந்த இஞ்சி உயர்நிலை மாடத்து எனவும், வெறுந்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன் எனவும் வரும். விறப்பு -வெருஉ

அவற்றுள்

விறப்பே வெருஉப் பொருட்டு மாகும் - 349

மேற்கூறிய மூன்றனுள் விறப்பென்னும் உரிச்சொல் செறிவேயன்றி வெருவுதற் பொருட்டாயும் வரும். (எ-டு) அவலெறி உலக்கை பாடு விறந்தயல என வரும்.

**கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்:**

கம்பலை சும்மை கலியே அழுங்கல்

என்றிவை நான்கும் அரவப் பொருள - 350

கம்பலை, சும்மை, கலி, அழுங்கல் என்று சொல்லப்படும் இவை நான்கு இசையுரிச் சொற்களும் அரவம் என்னும் பொருளினவாம். (எ-டு) கம்பலை முதூர்

எனவும், கலிகொள் சும்மை ஒலி கொள் ஆயம் எனவும், கலி கொள்ளாயம் மலிபுதொகு பெடுத்த எனவும், உயவுப் புணர்ந்தன்றின் வழுங்க லூரே எனவும் வரும்.

**அழுங்கல்:**

அவற்றுள்

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும் - 351

மேற்கூறியவற்றுள் அழுங்கள் என்னும் உரிச்சொல் அரவமேயன்றி இரக்கமும் கேடும் ஆகிய பொருள்கட்கும் ஆகி வரும். (எ-டு) பழங் கண்ணோட்டமும் நலிய அழுங்கினனல்லனோ எனவும் குணனழுங்கக் குற்றம் உழை நின்று கூறும் சிறியவர்கட்கு எனவும் வரும்.

**கழுமு:**

கழுமென் கிளவி மயக்கம் செய்யும் - 352

கழும் என்னும் குறிப்புச்சொல் மயக்கம் என்னும் பொருள் பற்றி வரும்.

(எ-டு) கழுமிய ஞாட்பினுள் என வரும்.

**செழுமை:**

செழுமை வளனும் கொழுப்பு மாகும் - 353

செழுமை என்னும் குறிப்புரிச்சொல் வளனும் கொழுப்புமாகிய பொருள்கட்காகி வரும். (எ-டு) செழும்பல், குன்றம் எனவும், செழுந்தடிதின்ற செந்தாயேற்றை எனவும் வரும்.

**விழுமம்:**

விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் - 354

விழுமம் என்னும் குறிப்புரிச்சொல் சீர்மை, சிறப்பு இடும்பை என்னும் பொருள் பற்றி வரும். (எ-டு) விழுமியோர் கண்டோறும் செய்வர் சிறப்பு எனவும் வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து எனவு நின்னுறு விழுமம் களைந்தோன் எனவும் வரும்.

**கருவி**:

கருவி தொகுதி - 355

கருவி என்னும் குறிப்புரிச்சொல் தொகுதி குறித்து வரும்.

(எ-டு) கருவி வானம் கதழுறை சிநறி வான் என்றது முகிலை.

**கமம்:**

கமம் நிறைந்தியலும் - 356

கமம் என்னும் குறிப்புரிச்சொல் நிறைதற் பொருட்டாய் வரும்.

(எ-டு) கமஞ்சூல் மாமழை என வரும்.

அரியே ஐம்மை - 357

அரி என்னும் குறிப்புரிச்சொல் ஐம்மை என்னும் பொருள் பற்றி வரும்.

(எ-டு) அரிமயிர்த்திரள முன் கை என வரும்.

**கவவு**

கவவு அகத்திடுமே - 358

களவு என்னும் குறிப்புரிச்சொல் அகத்திடுதலாகிய பொருள் பற்றி வரும். (எ-டு) கழுவிளங்காரம் கவை இய மார்பே என வரும்.

**துவைத்தல், நிலைத்தல், இயம்பல், இரங்கல்:**

துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்களும்

இசைப்பொருட் கிளவி என் மனார் புலவர் - 359

துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கள் என்னும் இசையுரிச் சொற்கள் நான்கும் ஓசையும் ஒலியும் ஆகிய அசை குறித்து வரும் உரிச்சொற்கள் எனக் கூறுவர் புலவர். (எ-டு) முரசு கடிப்பிகுப்பவும் வால்வளை துவைப்பவும் எனவும், ஆமா நல்லேறு சிலைப்ப எனவும் கடிமனை இயம்ப எனவும் ஏறிரங் கிருளிடை இரவினிற் பதம்பெறாஅன் எனவும் வரும்.

**இரங்கல்:**

அவற்றுள்

இரங்கல் கழிந்த பொருட்டு மாகும் - 360

மேற்கூறியவற்றுள் இரங்கல் என்பது கழிந்த நிலை உணர்த்துங் குறிப்புரிச் சொல்லாயும் வருதற்காகும். (எ-டு) செய்திரங்காவினைச் சேண் விளங்கும் புகழ் என வரும்.

**இலம்பாடு, ஒற்கம்:**

இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை - 361

இலம்பாடு ஒற்கம் என்னும் குறிப்புரிச் சொற்கள் இரண்டும் வறுமை என்னும் பொருள் குறித்து வரும். (எ-டு) இலம்பாடொக்கற் றலைவற்கோர் கரம்பைச் சீறும் நல்கினனெனவே எனவும் ஒக்கல் ஒற்கம் சொலியத் தன்னூர் எனவும் வரும்.

**ஞெமிர்தல், பாய்தல்:**

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள - 362

ஞெமிர்தல் பாய்தல் என்னும் குறிப்புரிச்சொற்கள் பரவுதலாகிய பொருளினவாய் வரும். (எ-டு) தருமணல் நெமிரிய திருநகர் முற்றத்து எனவும் புண்ணுமிழ்குருதி முகம்பாய்ந்திழி தர எனவும் வரும்.

**கவர்வு:**

கவர்வு விருப்பாகும் - 363

கவர்வு என்னும் குறிப்புரிச் சொல் விரும்புதல் என்னும் பொருட்டாகி வரும். (ஈ-டு) கவர் நடைப் புரவி என வரும்.

**சேர்**

சேரே திரட்சி - 364

சேர் என்னும் குறிப்புரிச்சொல் திரட்சியாகிய பொருள் குறித்து வரும். (எ-டு) சோர்ந்து செறி குறங்கு திரண்டு செறிந்ததுடை என்பது இதன் பொருள்.

**வியல்:**

வியல் என் கிளவி அகலப் பொருட்டே - 365

வியல் என்னும் குறிப்புரிச் சொல் அகலமாகிய பொருள் குறித்து வரும். (எ-டு) வியலுலகம் என வரும்.

**பேம் நாம் உரும்:**

பேம் நாம் உரும் என வருஉம் கிளவி

ஆமுறை மூன்றும் அச்சப்பொருள் - 366

பேம் நாம் உரும் எனக்குறிப்புரிச் சொல்லணய் அம் முறையான் வரும் மூன்றும் அச்சமென்னும் பொருளிளவாம். (எ-டு) மன்ற மராஅத்த பேஎ முதிர் கடவுள் எனவும் நாமநல்லராக்கதிர்பட உமிழ்ந்த எனவும் உருமில் சுற்றமொடு எனவும் வரும்.

**வய**

வய வலியாகும் - 367

வய என்னும் குறிப்புரிச்சொல் வலி என்னும் பொருட்டாய் வரும்.

(எ.டு) துன்னருந்துப்பின் வயமான் என வரும்.

**வாள்:**

வாள் ஒளியாகும் - 368

வாள் என்னும் பண்புரிச்சொல் ஒளி என்னும் பொருட்டாய் வரும். (எ.டு) வாள் முகம் என வரும்.

**துயவு:**

துயவென் கிளவி அறிவின் திரிபே - 369

துய என்னும் குறிப்புரிச்சொல் அறிவு திரிந்தமையாகிய பொருள் குறித்து வரும். (எ.டு) தயவுற்றேம் யாமாக என வரும்.

**உயா:**

உயாவே உயங்கல் - 370

உயா என்னும் குறிப்புரிச்சொல் உயங்குதல் என்னும் பொருள் குறித்து வரும். எ.கா: பருத்திருந்த உயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை என வரும்.

**உசா:**

உசாவே சூழ்ச்சி - 371

உசா என்னும் குறிப்புரிச்சொல் சூழ்தலாகிய பொருள் பற்றி வரும்.

(எ-டு) உசாத்துணை என வரும்

**வயா:**

வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம் - 372

வயா என்னும் குறிப்புரிச்சொல் வேட்கைப் பொருக்கமாகிய பொருள் பற்றி வரும். எ.கா: வயவுறு மகளிர் வயா என்பது செய்யுள் விகாரமாய் வய என நின்றது.

**கறுப்பு, சிவப்பு**:

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள - 373

கறுப்பு சிவப்பு என்னும் இரண்டும் குறிப்புரிச் சொற்கள் அவை வெருளுதற் பொருளினவாய் வரும். (எ-டு) 'நிற் கறுத்தோ ரதம் கடிமுனை யரண்போல்' எனவும் நீ சிவந்திறுந்த நீரழி பாக்கம் எனவும் வரும்.

நிறத்துரு உணர்த்தற்கும் உரிய என்ப – 374

மேற்கூறிய கறுப்பு சிவப்பு என்னும் உரிச்சொற்கள் பண்படியாகத் தோன்றின், நிறமாகிய உரு வுணர்த்தற்கும் உரியவாம் என்று கூறுவர் புலவர்.

(எ-டு) கறுத்த காயா எனவும் சிவந்த காந்தள் எனவும் வரும்.

**நொசிவு, நுழைவு, நுணங்கு:**

நொசிவு நுழைவு நுணங்கு நுண்மை - 375

நொசிவு என்னும் பண்புரிச்சொற்கள் நான்கும் நுண்மையாகிய பொருள் பற்றி வரும். (எ-டு) நொசிமட மருங்குதல் எனவும் நுழை நூற் கலிங்கம் எனவும் நுணங்கு துகில் நுடக்கம் எனவும் வரும்.

**புனிறு:**

புனிறென் கிளவியின் றணிமைப் பொருட்டே - 376

புனிறு என்னும் குறிப்புரிச்சொல் ஈன்ற அணிமை நிலையை உணர்த்தி (எ-டு) புனிற்றாப் பாய்ந்தென கலங்கி என வரும். வரும்.

**நனவு:**

நனவே களனும் அகலமும் செய்யும் 377

நன என்னும் குறிப்புச்சொல் இடமாகிய களத்தையும் அகலப் பரப்பினையும் உணர்த்தி வரும் (எ-டு) நனவுப் புகு விறலியிற் போன்றும் நாடன் எனவும் நனந்தலையுகம் எனவும் வரும்.

**மத:**

மதவே மடனும் வலியு மாகும் - 378

மத என்னும் குறிப்புரிச்சொல் மடலும் வலியுமாகிய பொருட்காகி வரும். (எ-டு) பதவி மேய்ந்த மதவு நடை நல்லான் எனவும் கயிறிடு கதச்சே போல மதமிக்கு எனவும் வரும்.

**மத:**

மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே - 379

மேற்கூறிய மத என்னும் சொல் மிகுதியும் வனப்புமாகிய பொருட்காகி வருதலும் உரியதாகும். (எ-டு) மதவடை எனவும் மாதர் வாண்முகம் மதைஇய நோக்கே எனவும் வரும்.

**யாணர்:**

புதிது படற் பொருட்டே யாணர்க் கிளவி - 380

யாணர் என்னும் குறிப்புச்சொல் புதிய நிலைமையினை உணர்த்தி வரும். இது பெயர் போலியாகத் தனித்து வரும். (எ-டு) மீனொடு பெயரும் யாணர் உளர என வரும்.

**அமர்தல்:**

அமர்தல் மேவல் - 381

அமர்தல் என்னும் குறிப்புரிச்சொல் மேவுதலாகிய பொருள் குறித்து வரும். (எ-டு) அகனமர்ந்து செய்யாள் உறையும்.

**யாண்:**

யாணுக் கவினாம் - 382

யாண் என்னும் குறிப்புரிச்சொல் கவின் என்னும் பொருட்காகி வரும். (எ-டு) யாணது பசலை என வரும்.

**பரவல், பழச்சுதல்:**

பரவும் பழச்சும் வழுத்தின் பொருள - 383

பரவுதல் பழிச்சுதல் என்னும் குறிப்புரிச்சொற்கள் வழுத்தல் என்பதன் பொருளாகிய வழிபடுதல் என்னும் பொருளினவாம். (எ-டு) நெல்லுக்குப் பரவும் கடவுளுமிலவே எனவும் கைதொழுஉப் பழிச்சி எனவும் வரும்.

**கடி என்னும் பல்பொருள் உரிச்சொல்:**

கடியென் கிளவி

வரைவே கூர்மை காப்பே புதுமை

விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே

அச்சம் முன்னேற்று ஆயீரைந்தும்

மெய்படத் தோன்றும் பொருட்டாகும்மே - 384

கடியென்னும் குறிப்புரிச்சொல் வரைவு முதலாகிய தோன்று பொருட்டன்மையுடையதாகும். பத்துப்பொருளாகத்

(எ-டு) கடிந்த கடிந்தாரார் செய்தார்க்கு வரைவு கடி நுணைப் பகழி கூர்மை கடி மரம் தடியுமோசை காப்பு கடவுட் கிட்ட செழுங்குரல் புதுமை, கடுந்தோர் குழித்த ஞெள்ளல் விரைவு. கடும்பகல் ஞாயிறு விளக்கம் கடுங்கால் ஒற்றலின் மிகுதி. கடு நட்பு சிறப்பு. கடியையால் நெடுந்தகை செருவந்தானே அச்சம். கொடுங்கழிப்புகள் தெய்வம் நோக்கிக் கடுஞ்சூள் தருகுவள் நினைக்கே முன்னேற்று. முன்வேற்று முன்னிலையாக வைத்துத் தெளிவித்தார்.

**கழ:**

ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே - 385

மேற்கூறிய கடி என்னும் சொல் ஐயமும் கரிப்பும் ஆகிய பொருட்காகி வருதலும் உரித்தாகும். ஐயம் குறிப்புரிச்சொல் கரிப்பு பண்புரிச்சொல். (எ-டு) கடுத்தனள் அல்லளோ அன்னை எனவும் கடி மிளகு தின்ற கல்லா மந்தி எனவும் வரும்.

ஐ வியப்பாகும் - 386

என்னும் குறிப்புரிச்சொல் வியப்பென்னும் பொருட்காகி வரும்.

(எ-டு) ஐதே காமம் யானே என வரும்.

**ஜவ:**

முனைவு முனிவாகும் - 387

முனைவு என்னும் குறிப்புரிச்சொல் முனிதலென்னும் பொருட்காகி வரும்.

(எ-டு) சேற்று நிலை முனைஇய செங்கட் காரான் என வரும்.

**வை:**

வையே கூர்மை - 388

வை என்னும் குறிப்புரிச்சொல் கூர்மை என்னும் பொருள் பற்றி வரும்.

(எ-டு) வைந்துனைப் பகழி என வரும்.

**எறுழ்:**

எறுழ் வலியாகும் - 389

எறுழ் என்னும் குறிப்புரிச்சொல் வலிமை என்னும் பொருட்காகி வரும்.

(எ-டு) போரெறுழ் திணி தோள் என வரும்.

**உரிச்சொல் பொருளுணர்த்தும் முறை:**

மெய்பெறக் கிளந்த உரிச்சொல்லெல்லாம்

முன்னும் பின்னும் வருபவை நாடி

ஒத்தமொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்

தத்தம் மரபிற் றோன்றுமன் பொருளே - 390

குறிப்பினும் பண்பினும் இசையிலும் தோன்றி நெறிப்படவாராக்குறைச் சொற்கிளவிகளை, எழுத்துக்களைக் கூட்டி முதனிலைச் சொல்லாக வடிவமைத்து இது காறும் கிளந்து ஓதப்பெற்ற உரிச்சொற்கள் எல்லாவற்றையும், கூறுவோன் அவற்றிற்கு முன்னும் பின்னும் வருவனவற்றை ஆராய்ந்து திரிபுபடாத பொருள் தருதற்கு ஒத்த மொழிகளொடு கூட்டி உணர்த்துக. அங்கணம் உணர்த்தின் கேட்போர்க்கு முறையானே தத்தம் பொருள் விளக்கித் தோன்றும்.

**உரிச்சொற்கள் மற பொருள் உணர்த்தல்:**

கூறிய கிளவிப் பொருள் நிலை யல்ல

வேறுபிற தோன்றினும் அவற்றொடுங் கொளலே - 391

உரு என்பது முதலாக எறுழ் என்பதிறாகக் கூறப்பெற்ற உரிச்சொற்களுக்கு ஓதிய பொருள் நிலை அல்லாதனவாய் வேறுபிற பொருள் சான்றோர் வழக்கிற் தோன்றிவரினும் அவற்றையும் கூறப்பட்டனவற்றையும் கொள்க. (எ-டு) புரைதீர் கேள்வி என்புழிப் புரை என்பது குற்றம் என்னும் பொருள் குறித்து நின்றது கழும முடித்த கண் கூடு கூழை என்புழிக் கழுமம் என்பது திரட்சி என்னும் குறிப்புணர்த்தி நின்றது.

கடிநாறு பூத்துணர் என்புழிக் கடி என்பது மணத்தல் என்னும் குறிப்புணர்த்தி நின்றது. கடிமுரசு என்புழி ஆர்த்தல் என்னும் இசைப்பொருள் உணர்த்தி நின்றது.

**உரிச்சொற்களால் பொருள் உணரும்நிலை:**

பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம்பின்றே - 392

நெறிப்பட வாராக் குறைச் சொற்கள் இசை குறிப்பு பண்பு என்னும் அடிப்படையிற்றோன்றிப் பொருட்குறை எழுத்தினம் காட்ட உரிச் சொல்லால் நிரம்பியவழிப் பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி உணர்த்துங்கால் ஓர் உரிச் சொல்லின் பொருளாக உரைக்கப்பெற்ற சொல்லின் பொருள் யாதெனத் தொடர்ந்து ஆராயப்புகின் அவ் ஆராய்ச்சிக்கு வரம்பின்றாம்.

**உரிச்சொற்களின் பொருளை உணர்த்தும் திறன்:**

பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின் - 393

பொருட்குப் பொருள் தெரியும் நிலைமை நேர்வது ஓர் உரிச்சொல்லின் பொருளைப் பிறிதொரு சொல்லால் உணர்த்தியவழிக் கேட்போர்க்கு அதுவும் புலனாகாத போதன்றே? ஆதலின் உணர்த்துவோன் கேட்பவன் உணரும் வாயிலறிந்து உணர்த்தவல்லனாயின் தான் கூறிய சொற்பொருட்குத் திரிபின்றி உணரும் என்றவாறு.

**உரிச்சொற்களின் பொருளை உணரும் திறம்:**

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே - 394

சொற்பொருள் உணர்த்துங்கால் அதனை உணர்வோரது உணரும் வாயில் அவரது அறிவு நிலையை வலியாக உடையதாகும்.

**உரிச்சொற்களின் பொருளை அமைந்த காரணம்:**

மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா - 395

உரிச்சொல்லாகி வரும் மொழியானது பொருட்கு ஓதப்பெற்ற காரணங்கள் கண்கூடாக தோன்றுதல் இலவாகும்.

**உரிச்சொற்கள் மரிக்கமுடியா நிலைமை:**

எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியில் பின்றே - 396

உரிச்சொற்களின் பொருட்காரணங்களை நுணுகி நோக்குமிடத்தும் நெறிப்படவாராக் குறைச்சொற்கிளவிகளின் பொருட்குறை நீக்க எழுத்துகளைக் கூட்டி நிரப்புமிடத்தும் அவை முதனிலையும் இறுதி நிலையுமாக அமைந்து பின்னர்க் கூடி நிற்றலின் அங்ஙனம் இயந்துள்ள முறைமையான் அவை பிரிந்து இசைங்குங்கொல் எனக் கருதற்க உரிச்சொல்லின் கண் நிற்கும் எழுத்துக்கள் முதனிலையும் இறுதி நிலையுமாகப் பிரிந்திசைத்தல் இலக்கண நெறியின்றாம்.

(எ-டு) உறு என்னும் உரிச்சொல் உற் என்னும் குறைச்சொல் உகரம் பெற்று நிரம்பியதாயினும் அது புணரியல் விதிப்படி உற்று என ஆகாமையுணர்க

**உரியியலுக்கு புறனடை:**

அன்ன பிறவும் கிளந்தன அல்ல

பன்முறை யானும் பரந்தன வருஉம்

உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட

இயன்ற மருங்கின் இனைத்தென அறியும்

வரம்புதமக் கின்மையின் வழிநனி கடைப்பிடித்து

ஓம்படை ஆணையிற் கிளந்தவற் றியலான்

பாங்குற உணர்தல் என்மனார் புலவர் - 397

நெறிப்பட வாராக் குறைச் சொற்கள் பொருள் நிரம்புதற்கேற்பப் பிற எழுத்துக்களைக் கூட்டலான் அச்சொற்களின் வடிவமும் பொருளும் நிரம்பி உரிச்சொல்லாக இயலுமிடத்து மேற் கிளந்து கூறிய சொற்கள் அல்லாத பிறவுமாய் பல்வேறு நிலையிற் பரந்து பட்டு வரும். அவ் உரிச் சொற்களெல்லாம் இவ்வொன்றும் இத்தன்மைத்து அறிந்துகொள்ளும் எல்லை தமக்கின்மையான் தொன்னூலார் ஓம்படையாணையாற் கிளந்து கூறிய இசையினும் குறிப்பினும் பண்பினும்

தோன்றுதலும் பெயரினும் வினையினும் மெய்தருமாறுதலும் ஆகிய நெறியினை நன்கு கடைபிடித்து அவ் இலக்கணந்தான் அவற்றின் பாங்கினைப் பொருந்த உணர்ந்து கொள்க எனக் கூறுவர் புலவர்.

**உரியியல் - பயிற்சி வினாக்கள்**

1. உரிச்சொல்லுக்குரிய பாவலரேறு பாலசுந்தரம் தரும் விளக்கங்களைக்

2.உரிச்சொல்லின் பொதுவிலக்கணம் யாது?

3. பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திசான்றுடன் விளக்குக

4.மிகுதி என்னும் ஒரு பொருளைத் தரும் உரிச்சொற்களைச் சான்றுடன் குறிப்பிடுக.

5. உரு. புரை, மல்லல், பசப்பு ஆகிய உரிச்சொற்கள் உணர்த்தும் பொருள்களைச் சான்றுடன் விளக்குக

6. மழவும் குழவும் உணர்த்தும் பொருளைச் சான்றுடன் குறிப்பிடுக.

7. அதிர்வும் விதிர்ப்பும் உலர்த்தும் பொருள் யாது? சான்று தருக.

8. பெருமை என்னும் ஒரு பொருள் உணர்த்தும் பல உரிச்சொற்களைச் சான்றுடன் தருக.

9. உரிச்சொல்லின் பொதுவிலக்கணத்தையும் அதன் வகைகளையும் விளக்கி கட்டுரை வரைக

10. பொற்பு, வறிது, பையும், சிறுமை, எய்யாமை, நன்று. தா என்னும் உரிச்சொற்கள் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.

## (ஆ) எச்சவியல்

### செய்யுள் ஈட்டச் சொற்கள்

இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே - 398

செய்யுளீட்டத்திற்குரிய சொல் இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் எனப்படும். அவ்வளவிற்றேயாம் சொல் என்றது இன ஒருமை அதனான் அனைத்தே என்றார்.

### இயற்சொல்

அவற்றுள்
இயற்சொற் றாமே
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே ...399

மேற் கூறிய செய்யுட் சொல் நான்கனுள் இயற்சொல் எனப்பட்டவை தாம் செந்தமிழ் நிலத்து மக்கள்வழங்கும் வழக்கொடு பொருந்தி ஏனைய நிலத்தும் தம்பொருள் திரியாமல் உணர்த்தும் சொல்லாகும்.

நிலந்தருதிருவிற் பாண்டியன் புரப்ப நூலோர் அவை அமைந்துள்ளது தொல்காப்பியம் அரங்கேறியதும், நல்லிசைப்புலவோர் கூடிச் செந்தமிழ் ஆய்வதும் ஆக்குவதும் நிகழும் நாடாதலின் பாண்டி நாடு செந்தமிழ் நாடு எனப்பட்டது. “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்”,‘தண்பொழில் வரைப்பின் வண்புகழ் மூவர்க்கும்’ (செய்-75) உரியதாய முல்லை முதலாக ஐவகை நிலக் கூறுகளும் அமைந்ததாகலின் அவ்வந்நிலத்துக் கருப்பொருள்களும் இயற்கையமைப்பும் மக்கள் ஒழுகலாறும் ஆட்சி உரிமையும் பற்றித் தமிழகம் பதிமூன்று பகுதிகளாக வழங்குப் பெற்றுள்ளது. அவற்றுள் நல்லிசைப்புலவோர் கூடித் தமிழாராயும் அவையம் (கூடல்-சங்கம்) அமைந்திருந்த சிறப்பான் பாண்டி நாடு செந்தமிழ் நிலம் எனப்பட்டது என்க.

ஏனைய நிலங்களாவன: (1) தென்பாண்டி நாடு (2) குட்ட நாடு (3) குடநாடு (4) கற்கா நாடு (5) வேணாடு (6) பூமிநாடு (7) பன்றிநாடு (8) அருவா நாடு (9) அருவா வடதலை நாடு (10) சீத நாடு (11) மலைநாடு (12) புனல் நாடு என்பனவாம்.

தொல்காப்பியம் அரங்கேறிய நிலந்தருதிருவிற் பாண்டியன் காலத்து அமைந்திருந்தசெந்தமிழ் நிலஞ்சேர்ந்த பன்னிரு நிலங்களை வரைந்தறிதற்கு முழுமையான சான்றுகள் இன்றைக்குக் கிட்டாமையான் மேற்கூறிய விளக்கம் சங்க இலக்கியங்களோடு ஒருவாறு ஒப்பநோக்கிக் கூறப்பட்டது.

இயற்சொல்லுக்கு எடுத்துக்காட்டுக்கள் வருமாறு- நம்பி, நங்கை, புலவர், மக்கள், அன்னை, மகள், வடுகள், நாகன் கண்ணன், நிலம், நீர், மலை, மா, மரம், பறவை, மீன், நாடு, நகர், நாள், காலை, மாலை, வேனில், கண், கால், வாய், கருமை, செம்மை, வட்டம், கோணம், இருத்தல், கிடத்தல் என வரும் பெயர்ச் சொற்களும், உண்டான், சென்றான், சூரியன், பொன்னன், காணும், கேட்கும். வாழ்க, உண்டு, இல்லை எனவரும் வினைச் சொற்களும் அவை போல்வன பிறவுமாம் இடையும் உரியும் பெயர் வினைகளும் அடங்கும் என மேற் கூறிய விளக்கத்தைக் கடைப்பிடிக்க.

இவற்றுள் மாலை என்பது பொழுதையும் அலங்கலையும் குறிக்குங்கால் இயற்சொல்லாம், மயக்கம், இயல்பு முதலியபொருள் குறித்து வருங்கால் திரி

சொல்லாம். இங்ஙனம் சொல்லின்பொருள் வரவிற்கேற்ப இயற்சொல் திரி சொல் என்பவை தம்முள் மயங்குமென அறிக.

**திரிசொல்**

ஒரு பொருள் குறித்த வேறுசொல்லாகியும்

வேறு பொருள் குறித்த ஒருசொல்லாகியும்

இருபாற்றென்ப திரி சொற்கிளவி - 400

அந்நான்கனுள் திரிசொல் எனப்படும் செய்யுட் சொல் ஒரு பொருளைக் குறித்த வேறுவேறு சொல்லாகியும், வேறுவேறு பொருளைக் குறித்த ஒரு சொல்லாகியும் வருதலாகிய இரண்டு பாகுபாட்டினது என்று கூறுவர் ஆசிரியர்.

திரிசொல் என்பது இயற்சொல் என்பதன் மறையாகலின் இயற்சொல்லுக்கு ஓதிய இலக்கணத்தை மறுத்துக்கொள்வது இதன் இலக்கணம் என்பது அப்பெயரானே புலப்படுதலான் இதன்பாகுபாடு மட்டுமே விரித்துக் கூறப்பட்டதென்க. இ∴து உய்த்துணர வைப்பென்னும் உத்தியின்பாற்படும். எனவே, இயற்சொல் போல யாண்டும் ஒரு பொருளேதராமல் ஒருகால் ஒரு பொருளையும் பிறதொருகால் வேறு பொருளையும் இடம் நோக்கித்தந்து அரிதுணர நிற்றல் இதன் இலக்கணம் என்பது புலனாம்.

வெற்பு, விலங்கல், ஓங்கல் என்பவை, மலை என்னும் ஒரு பொருள் குறித்துவந்தன. ஏறு, ஏற்றை, போத்து என்பவை ஆண்பால் என்னும் ஒரு பொருள்குறித்து வந்தது, வண்டு என்பது அறுகாற்சிறுபறவை வளையல், தேர் உருள் முதலிய பல பொருள் குறித்து வந்தது. இவை பெயர்பற்றி வந்ததிரிசொற்கள். பிணித்தான், யாத்தான், வீக்கினான் என்பவை கட்டினான் என்னும் ஒரு பொருள்குறித்து வந்தன. கூரைந்தான் என்பது எழுதினான், மணந்தான். வயைறுத்தான் நீங்கினான் என்னும் பலபொள்குறித்து நின்றது. இவை வினைச் சொல்பற்றி வந்த திரிசொற்கள்.

**திசைச்சொல்**

செந்தமிழ் சேர்ந்த பண்ணிருநிலத்தும்

தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி ... 401

செய்யுட்சொல் நான்கனுள் திசைச் சொல் எனப்பட்ட சொற்களாவன செந்தமிழ்நிலத்தைச் சேர்ந்த ஏனைய பன்னிரண்டு நிலத்துக் தத்தங்குறிப்பினவாய் வழங்குவனவேயாம்.

தென்பாட்டி நாட்டார் ஆவினையும் எருமையையும் 'பெற்றம்' என்றும் குட்டநாட்டார் 'தாயை'த் தள்ளை என்றும் குடநாட்டார் தந்தையை 'அச்சன்' என்றும் கற்கா நாட்டார் வஞ்சரைக், கையர் என்றும் சீத நாட்டார் ஏடா (எல்லா) என்பதனை எலுவன் என்றும் தோழியை இகுளை என்றும். தம்மாமி என்பதனை தந்துவை என்றும், பூமி நாட்டார் நாயினை ஞமலி என்றும் சிறு குளத்தைப் (பாழி) என்றும் அருவா நாட்டார் செய்யைச் செறு வென்றும் சிறுகுளத்தைக் கேணி என்றும், அருவாவடதலையார் குறுணியைக் குட்டை என்றும் வழங்கும். வடசொல்

வடசொற்கிளவி வடவெழத் தொரீஇ

எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே ...402

செய்யுச் சொல் நான்கனுள் வடசொல்லாகி வரும் சொற்களாவன சமஸ்கிருத மொழிக்குரிய எழுத்தொழியின் நீங்கித் தமிழெழுத்திற்குரிய ஒலியொடு புணர்ந்தமையும் சொற்களாகும்.

கூட எழுத்தாவன இரு மொழிக்கும் பொதுவாய் இருபத்தைந்து அல்லாத ஏனைய இருபத் தெட்டுஎழுத்துக்களாகும். அவையாவன: உயிர்நெடுங் கணக்கினுள் ரு, ரூ, லு, லூ, அம், அ∴ என்னும் ஆறும் மெய்வரிசையுள் "கசடதப" என்னும் ஐவகை வருக்கங்களின் இடைநிற்கும் பதினைந்தும், வடமொழிநெடுங் கணக்கினுள் முப்பதாம் எழுத்து முதலாக உள்ள எட்டனுள் ளகர மொழிந்த ஏனைய ஏழுமாகும்.

மணி காலம் காரணம்-சூத்திரம் என்றாற் போல்வன தமிழடிப்படையிற் தோன்றி சமஸ்கிருதத்தில் வழங்குவனவாதலின் தமிழுக்கும் உரியவாயின், இனி, வடமொழி எழுத்தொலிமாறித் தமிழ் எடுத்தொலியொடு புணர்ந்து வருவன வறுமாறு: 2 நகம், 3 நாகம், 4 மேகம். இவை, ககரமாகவும் 2 சலவாதி, 3 விசயம் 4 சருச்சை. இவை

சகரமாகவும் 2 பீடம், 3 சடம், 4 கூடம். இவை டகரமாகவும் 2 தலம் 3 தினம், 4 தரை இவை தகரமாகவும் 2 பலம், 3 பந்தம் 4 பாரம். இவை பகரமாகவும் ஒலிக்கப் பெறும்.

சகரத்தின் மூன்றாம் எழுத்தொலி (ஜ) ஒரோவிடத்து யகரமாகத் திரிதலும் ஏனைய திரிந்து வருமாறும் பின்வரும் சூத்திரத்தாற் கூறுப.

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் ... 403

நேரே தமிழ் எழுத்தொடுபுணராமல் யாதேனுமோர் தமிழ் எழுத்தொலியொடு இயைதற் கொத்தனவாய்ச் சிதைந்து வரினும் அவற்றை நீக்காமல் வடசொற் கிளவியாகத் தழுவிக் கொள்வர் புலவர்.

**செய்யுள் விகாரச் சொற்கள்**

அந்நாற் சொல்லும் தொடுக்குங் காலை

வலிக்கும் வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்

விரிக்கும் வழி விரித்தலும் தொகுக்கும் வழித் தொகுத்தலும்

நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்

நாட்டல் வலிய என்மனார் புலவர்... 404

மேற்கூறிய நால்வகைச் சொற்களும் செய்யுளுறுப்புக்கள் அமையத் தொடுக்கப்படுமிடத்து அச்சொற்களுள் அமைந்துள்ள எழுத்துக்களை வலித்தலும் குறுக்கலும் வேண்டுமிடத்து அங்ஙனம் வேறுபடுத்துச் செய்யுட்கண் நாட்டுதலை வலியாக உடையன என்று கூறுவர் புலவர்.

(எ-டு) தத்தங் கிளவி தம்மகப்பட்ட முத்தை வரூஉங் காலிந் தோன்றின் இதனுள் முந்தை என்பது எதுகை நோக்கி வலிக்கப்பட்ட தண்டையினினக்கிளி கடிவோள் பண்டையலல்லள் மானோக்கினளே இதனுள் தட்டை என்பது எதுகை நோக்கி மெலிக்கப்பட்டது. சிறியிலை வெதிரின் நெல் விளையும்மே இதன்கண் விளையுமே என்பது சீர்நிலையும் ஓசையும் கருதி மகரம் விரிக்கப்பட்டது.

சிறியவிலை என்பது அவ்வாறே சிறியிலை எனத் தொகுக்கப்பட்டது. தீத் தொழிலேகண்றித் திரிதந் தெருவை போற் போத்தறார் புல்லறிவினார் இதன் கண் பொத்தறார் என்பது மோனை நயங் கருதிப் போத்தறார் என நீட்டப்பட்டது. இலங்கிலை வேற்றென்னன் திருத்தார் நன்றென்றேன்தியேன் என்பதன் கண் தீயேன் என்பது வெண்பா இறுதி அசைச்சிராதல் வேண்டித் தியேன் எனக் குறுக்கப்பட்டது.

**நால்வகை பொருள் கோள்**

நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று

அவைநான் கென்ப மொழிபுண ரியல்பே ...405

அந்நாற் சொற்களும் செய்யுட்கண் பொருளியைப் புணரும் இயல்பு, நிரல் நிறையும் சுண்ணமும் அடிமறியும் மொழிமாற்றும் என அவை நான்கு என்று கூறுவர் புலவர்.

**நிரல் நிறைப் பொருள்கோள்**

அவற்றுள்

நிரனிறை தானே வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்

சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல் ... 406

மேற்கூறிய நான்கனுள் நிரல்நிறைப் பொருள்கோள் வினையானும் பெயரானும் தோன்றி முடிக்கப்படும் சொல் ஒருவழி நிற்ப முடிக்குஞ் சொல் ஒருவழி நிற்றலாம்.

(எ-டு) மாசு போகவும் காய்பசி நீங்கவும் கடிபுனல் மூழ்கி அடிசில் கைதொட்டு என்பது நிரலே வினைக்கு வினையே முடிக்குஞ் சொல்லாக வந்த வினை நிரனிறை.கொடிகுவளை கொட்டை நுகப்புண்கண்மேனி மதி பவளம் முத்தம் முகம் வாய் முறுவல் என்பது நிரலே பெயர்க்கும் பெயரே முடிக்குஞ் சொல்லாக வந்த பெயர் நிரனிறை.

ஆடல்வேல் அமர் நோக்கி நின் மகங் கண்டே

உடலும் இரிந்தோடும் ஊழ் மலரும் பார்க்கும்

கடலும் கணையிருளும் ஆம்பலும் பாம்பும்

தடமதியம் ஆமென்று தாம் என்பது

நிரலே முடிப்பன விளையாயும் முடிவன பெயராயும் வந்த பொது நிரனிறை.

**சுண்ணப் பொருள் கோள்**

சுண்ணந் தானே

பட்டாங் கமைந்த ஈரடி எண்சீர்

ஒட்டுவழி யறிந்து துணித்தனர் இயற்றல் ...407

சுண்ணம் என்னும் பொருள்கோளாவது இயல்பாக அமைந்த ஈரடிக் கண் நிற்கும் எட்டுச் சீர்களுள் அமைந்த சொற்களைத் துணித்து ஒட்டும் இடமறிந்து இயைத்துக் கொள்ளுதலாம்.

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு

நலம்புரி கொள்ளைப் புலயிரிந் துறையும் என்பதனைப்

புலம்பிரிந் துறையும் சேவடி படரும்

நலம்புரி கொள்கைச் செம்மல் உள்ளமொடு எனவும்

மாயிதழ் எந்திய மலிந்துவீழ் அரிப்பணி

செவ்விரல் கடைக்கண் சேர்த்திச் சில தெறியா என்பதை

மாஇதழ் வீழ்கண் கடைமலிந் தேந்திய

அரிப்பனி சில செவ்விதழ் சேர்த்தித் தெறியா எனவும் துணித்துக் கூட்டிப் பொருள்கொள வந்தமை கண்டு கொள்க.

**அடிமறிப் பொருள் கோள்**:

அடிமறிச் செய்தி அடிநிலை திரியாது

சீர்நிலை திரிந்து தடுமா றும்மே ….408

அடிமறிச் செய்யுளாவது தன்கண் அமைந்த அடிகளை மாற்றி யமைப்பினும் பொருள்நிலை திரியாது வரும். அதன்கண் சீர்நிலை திரிந்து ஒரோவழித் தடுமாறும் பொருள் கோள் வரும்.

எ.கா. சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

சரால் நாட நீவர லாறே

வாரல் எனினே யானஞ் சுவலே

பொருள்தெரி மருங்கின் ஈற்றடி இருசீர்

எருத்துவயிற் றிரியும் தோற்றமும் வரையார்

அடிமறிச் செய்யுட்கண் வரும் பொருள்கோளை ஆராயுமிடத்து அச்செய்யுளின் ஈற்றடிக்கண் உள்ள இருசீர்கள் ஈற்றயற்கண் சென்றுமாறும் தோற்றமும் வரையார் ஆசிரியர்.

தோற்றம் என்னும் உம்மை சீர்நிலை திரிந்து தடுமாறுதலே யன்றி என்பதைத் தழுவிநிற்றலின் எச்ச உவ்மை எருத்துவயின் எனப் பொதுப்படக் கூறியதனான் எருத்துச்சீரொடு தடுமாறுதலும் கொள்க.

“பொருள் தெரி மருங்கின்

ஈற்றடி இறுசீர் எருந்துவயின் திரியும்

தோற்றமும் வரையார் அடிமறியான”..409

அடிமறிச் செய்யுட்கண் வரும் பொருள்கோளை ஆராயுமிடத்து அச்செய்யுளின் ஈற்றடிக்கண் உள்ள இருசீர்கள் ஈற்றயற்கண் சென்று மாறும் தோற்றமும் வரையார் ஆசிரியர்.

தோற்றமும் என்னும் உம்மை சீர்நிலை திரிந்து தடுமாறுதலே யன்றி என்பதைத் தழுவி நிற்றலின் எச்ச உம்மை எருத்துவயின் எனப் பொதுப்படக் கூறியதனான் எருத்துச்சீரொடு தடுமாறுதலும் கொள்க.

சூரல்பம்பிய என்னும் செய்யுளுள், யானஞ்சுவலே

என்னும் இரண்டு சீர்களும்

சூரல்பம்பிய சிறுகான்யாறு யானஞ்சுவலே

சூரர மகளிர் ஆரணங்கினரே யானஞ்சுவலே

சாரல் நாட நீவரலாறு யானஞ்சுவலே என எருத்தடிகளின் கண் சென்று தோன்றில் பொருள் பயக்குமாறு காண்க.

## மொழி மாற்றுப் பொருள்கோள்

மொழிமாற் றியற்கை

சொன்னிலை மாற்றிப் பொருளெதிரியைய

முன்னும் பின்னும் கொள்வழிக் கொளா அல் ... 410

மொழிமாற்றுப் பொருள் கோளின் இயல்பாவது, சொற்கள் பொருளியைபின்றி நிற்பின் பொருள் எதிர்வந்து பொருந்தும் வண்ணம் சொல் நிலையை முன்னும் பின்னும் மாற்றிப் பொள்கொள்ளுமிடத்துக் கொளுவு கலாம்.

ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்

பாரி பறம்பின்மேற் றண்ணுமை – காரி

விறன் முள்ளூர் வேங்கைவீ தானாணும் தோளாள்

நிறன் உள்ளூர் உள்ள தலர்.

இதனைப் பாரி பறம்பின்மேற் றண்ணுமைதான் நாணும் தோளான், நிறன் காரிவிறன் முள்ளூர் வேங்கைவீ, உள்ளூர் உள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

சுரையாழ அம்மிமிதப்ப - வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப-இதனைச் சுரைமிதப்ப அம்மியாழ யானைக்கு நிலை முயற்கு நீத்து என்ப, எனக்கூட்டுக. இவ்வாறு வருவன பிறவற்றையும் இங்ஙனங் கூட்டிப்பொருள் கொள்க.

**பிரிப்பப் பிரியாக் கிளைப் பெயர்கள்**

தந்து என அவைமுத லாகிய

கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா ... 411

தந்து என்பவை முதல் எழுத்தாகக் கிளைமை குறித் வரும் பெயர்களும் (உம்மையான்) பிற கிளைப்பெயர்களும் முதனிலையும் இறுதிநிலையுமாகப் பிரிப்பின் பொருள் சிதைதலின் பிரியமாட்டா, பிரியாது இணைந்தே வரும் என்றவாறு.

**கிளைநுதற் பெயர்களாவன:-**

தமன் தமள் தமர் தம்மான் தம்மாள் தம்மார்

நமன் நமள் நமர் நம்மான் நம்மாள் நம்மார்

நுமன் நுமள் நுமர் நும்மான் நும்மாள் நும்மார்

எமன் எமள் எமர் எம்மான் எம்மாள் எம்மார் எனவரும்.

**கிளைப்பெயர்களாவன:**

தந்தை நுத்தை எந்தை தந்தாய் நுந்தாய் எந்தாய்

தம்முன் நும்முன் எம்முன் தம்பின் நும்பின் எம்பின்

தங்கை நங்கை எங்கை தவ்வை நுவ்வை எவ்வை - எனவரும்.

**தொகை மொழிகள்**

வேற்றுமைத் தொகையே உவமத் தொகையே

வினையின் தொகையே பண்பின் தொகையே

உம்மைத் தொகையே அன்மொழித் தொகையென்று

அவ்வா றென்ப தொகைமொழி நிலையே ... 412

வேற்றுமைத்தொகை உவமத் தொகை வினைத்தொகை பண்புத்தொகை உம்மைத்தொகை அன்மொழித்தொகை என்று கூறப்படும் அவ் ஆறும் என்று கூறுவர் ஆசிரியர்.

**வேற்றுமைத் தொகை**

அவற்றுள்

வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல ...413

மேற்கூறப்பெற்ற தொகைமொழிகளுள் வேற்றுமைத் தொகையாவது வேற்றுமைபற்றி முன்னார் கூறப்பெற்ற அவ் இலக்கணத்தனவேயாம்.

பழந்தின்னி-ஈர்க்கொல்லி எனவும் வாள்வெட்டு பொற்றொடி எனவும் நெய்வேலி-நோய்மருந்து எனவும் மலையருவி கருவூர்க்கிழக்கு யானைக்கோடு அரசாட்சி எனவும் ஊர்மன்று- மாலைவிளக்கு எனவும் வரும். எனவும்

**உவமத் தொகை**

உவமத்தொகையே உவம வியல ...414

உவமத்தொகையாவது உவமவியலுள் கூறப்பெற்ற இலக்கணத்தனவாகும்.

உவமத்தன்மையைப் புலப்படுத்தும் சொற்களும் அன்னஏய்ப்ப முதலாய உவமச் சொற்களும் மறைந்து நிற்க அவற்றின் பொருள் புலப்படுமாறு உவமும் பொருளுமாக வரும். அச்சொற்கள் தம்முட் பிளவுபடாமல் ஒன்றுட்டு ஒருசொல் நீர்மைத்தாய் வருதல் உவமத்தொகையாம் என்பது தெளிவாம்.

(எ-டு) கிளிமொழி என்பது வினையுவமத்தொகை, மாரி வெண்கோ என்பது பயனுவமத்தொகை, துடியிடை என்பது மெய்யுவமத் தொகை, கார்வண்ணன் என்பது உருவுமத் தொகை இவை விரியுங்கால், கிளிமொழிமானக்கிளக்கும் மொழி எனவும் மாரிவழங்குதல் ஏய்ப்ப ஒடுங்கிய இடை எனவும் கார்முகிலின் நிறத்தைப் போலக் கரிய வண்ணத்தான் எனவும் விரியும்.

**வினைத்தொகை**

வினையின் தொகுதி காலத் தியலும் …415

வினைத்தொகையாவது காலப்பொருளைத்தம்முள் அடக்கிநடைபெறும். என்றது, வேற்றுமைத் தொகை வேற்றுமைப் பொருளையும் உவமத்தொகை உவமப் பொருளையும் தம்முள் அடக்கிக் கொண்டு இயலுமாறு போல வினைத்தொகை வினையாகிய காலப்பொருளைத் தன்னுள் அடக்கிக் கொண்டு இயலும் என்றவாறு.

(எ-டு) ஆடாங்கு-செய் குன்று புணர்பொழுது-அரிவாள் கொல்யானை-செல்செலவு-எனவரும். இவை விரியுங்கால் ஆடின அரங்கு ஆடும் அரங்கு எனவும் செய்த குன்று செய்யும் குன்று எனவும், அரிந்தவாள் அரியும் வாள் எனவும், கொன்றயானை, கொல்லும் யானை எனவும், சென்ற செலவு செல்லும் செலவு என்வும் வரும்.

**பண்புத் தொகை**

வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்று

அன்ன பிறவும் அதன்குணம் நுதலி

இன்ன திதுவென வரூஉம் இயற்கை

என்ன கிளவியும் பண்பின் தொகையே ...416

வண்ணத்தினையுடையதும் வடிவினையுடையதும் அளவினையுடையதும் சுவையினை உடையதும் என்று சொல்லப்படும். அவை போல்வனவாகிய பிற தன்மைகளையுடையனவுமாகிய, பொருளின்கண் கிடக்கும் அதன் குணத்தைச் சுட்டி இப்பொருள் இத்தன்மை உடையது என்று உணரவரும் இயல்பினை உடைய எத்தகைய தொகைமொழியும் பண்பினது தொகையேயாம்.

(எ-டு) கருங்குதிரை- வெண்டிங்கள் (வண்ணம்) எனவும் வட்டப்பலகை-முடத்தெங்கு (வடிவு) எனவும் நெடுமாறன்-குறுந்தொகை(அளவு) எனவும், தீங்கனி-உவர் நீர் (சுவை) எனவும் வரும்.

**உம்மைத் தொகை**

இருபெயர் பல்பெயர் அளவின் பெயரே

எண்ணியற் பெயரே நிறைப்பெயர்க் கிளவி

எண்ணின் பெயரோடு அவ்வறு கிளவியும்

கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே ... 417

உம்மைத்தொகையாவது இருபெயரும் பல்பெயரும் அளவினாகிய பெயரும் நிறைப்பெயராகிய கிளவியும் எண்ணினாகிய பெயரும் ஆகிய அவ்ஆறுவகைச் சொற்களையும் கருதி வரும் நிலைமைத்தாகும்.

உவா அப்பதினான்கு ஆடல்பாடல் (இவை இரு பொயர்த்தொகை) புலிவிற்கயல் ....சேரசோழ பாண்டியர் (இவை பல்பெயர்) தூணிப்பதக்கு கலனே தூணிப்பதக்கு (இவை அளவுப்பெயர்) பன்னிருவர் நூற்றுப் பதினைவர் (இவை எண்ணியற்பெயர்) தொடியரை. நிறைப்பெயர்) பதினைந்து எனவரும். தொடியே க.்.சனா (இவை நூற்றுப் பதின்மூன்று (இவை எண்ணின்பெயர்)

**அன்மொழித் தொகை**

பண்பு தொகவரூஉம் கிளவி யானும்

உம்மை தொக்க பெயர்வயி னானும்

வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்

ஈற்று நின்றியலும் அன்மொழித் தொகையே ... 418

அன்மொழித்தொகையாவது பண்புத்தொகையாதற்குரிய சொற்களின் சார்பானும், உம்மை தொக்கு நிற்பச் செவ்வெண்ணாக வரும் பெயர்கள் சார்பானும் வேற்றுமை உருபுதொக்கு நிற்கும் பெயர்கள் சார்பானும் அவற்றின் ஈற்றின்கண் மறைந்து நின்று நடைபெறும்.

வெள்ளாடை- செங்கோல்- தகரஞாழல்- புலிவிற்கயல்? பொற்கொடி-மணிமேகலை செய்யுளிலக்கணம், கிள்ளிகுடி எனவரும். இவை முறையே வெள்ளாடை வந்தாள் செங்கோல் புரிந்தான் தகரஞாழல் கொணர்ந்தான், புலிவிற்கயல் பறந்தது எனவும், மணிமேகலை சென்றாள், பொற்றொடி பாடினாள், செய்யுளிலக்கணம் வாங்கினான் கிள்ளிகுடி வாழ்ந்தான் எனவும் முடியும்.

**தொகைச் சொற்களில் பொருள் சிறந்து நிற்குமிடங்கள்**

அவைதாம்

முன்மொழி நிலையிலும் பின்மொழி நிலையலும்

இருமொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்

அம்மொழி நிலையாது அன்மொழி நிலையலும்

அந்நான் கென்ப பொருள் நிலை மரபே ... 419

மேற்கூறிய அறுவகைத் தொகை மொழிகள் தாம் விரியுமிடத்து அவற்றின் தொகைப் பொருள் நிற்கும் முறைமையாவது முன்மொழிக்கண் நிற்றலும், பின்மொழிக்கண் நிற்றலும், இரு மொழிக்குள்ளும் அவற்றின் மேற்பட்டும் ஒருங்குஉடன் நிற்றலும், அம்மொழிக்கண் நில்லாது அயல் மொழிக்கண் நிற்றலும் ஆகிய நான்கு என்று கூறுவர் ஆசிரியர்.

(எ-டு) வேங்கைப்பூ-பொற்றொடி எனவரும் வேற்றுமைக் தொகைகளுள் வேற்றுமை கொள்வன பூவும் கொடியுமாகலின் வேற்றுமைக் தொகையுள் முன்மொழிக்கண் தொகைப்பொருள் நிற்கும்.

2) மதிமுகம்-தேமொழி எனவரும் உவமத்தொகைளுள் உவமிக்கப்படுவன முகமும் மொழியுமககிலின் உவமக் தொகையுள் முன்மொழிக்கண் தொகைப் பொருள் நிற்கும்.

3) கொல்யானை-தாழ்குழல் எனவரும் வினைத்தொகைகளுள் காலத்தியல்வன கொல், தாம், என்னும் முதனிலை வினைப்பெயர் களாதலின் வினைத்தொகையுள் பின்மொழிக்கண் தொகைப் பொருள் நிற்கும்.

4) கருங்குதிரை-வெண்டிங்கள் எனவரும் பண்புத் தொகைகளுள் இன்னது இதுவெனப் பண்பு விரிதற்குரியவை குதிரையும், திங்களுமாதலின் பண்புத்தொகைக்கண் முன் மொழிக்கண் தொகைப்பொருள் நிற்கும். வேழக்கரும்பு- ஆயன் சாத்தன் என வரும் இருபெயர் ஒட்டுப் பண்புத்தொகைகள் ஒன்றனை ஒன்று சிறப்பித்து நிற்றலின் இருமொழிக்கண்ணும் தொகைப் பொருள் நிற்கும்.

5) தகர ஞாழல்-புலிவிற்கெண்டை எனவரும் உம்மைத்தொகைகளுள் எண்ணும்பொருள் ஒவ்வொன்றையும் பற்றி விரிதலின் உம்மைத்தொகையுள் இருமொழியினும் பன்மொழியினும் தொகைப் பொருள் ஒருங்குடன் நிற்கும்.

6) பொற்கொடி-சேயிழை எவைரும் அன்மொழித் தொகைகளுள் தொகைச் சொற்கள் இரண்டும் தம் இயற்பொருள் உணர்த்தாமல் நங்கை மங்கை என்றாற் போல பிற சொற்பொருள் உணர்த்தலின் அன்மொழித் தொகைக்கண் அதன் தொகைப் பொருள் அம்மொழி நிலையாது அயல் மொழிக்கண் நிற்கும் என்க.

தொகை மொழிகள் ஒரு சொல் தன்மையன்

எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய ... 420

மேற்கூறிய அறுவகைத் தொகை மொழிகளும், பெயரினாகிய தொகையாக வருவனவும், பிறவுமெல்லாம் ஒருசொற் போன்று நடக்கும் இயல்பினவாம்.

(எ-டு) பொற்றொடி கழன்றது. துடியிடை துவண்டது, தாழ்குழல் அலைந்தது. செந்தாமரை பூத்தது இயலிசை நிகழ்ந்தன. சேர சோழ பாண்டியர் ஆண்டவர்,சேயிழை வந்தான் எனவும் இளம்பெருவழுதி வந்தான் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் வந்தார், கங்கை கொண்டான் வந்தான் எனவும் வரும்.

**உயர்திணை உம்மைத் தொகை**

உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே...421

உயர்திணையிடத்ததாக வரும் உம்மைத்தொகை முடிபு கோடற்கண் பலர்சொல் நடையினது எனக் கூறுவர் புலவர்.

(எ-டு) கபிலபரணர் வந்தார்-சேர சோழ பாண்டியர் வந்தார் தாய் தந்தையர் வாழ்த்தினர், நம்பி, நங்கையர் வந்தனர் என வரும்.

**குறிப்பு மொழிகள்**

வாரா மரபின வரக் கூறுதலும்

என்னா மரபின எனக் கூறுதலும்

அன்னவை எல்லாம் அவற்றவற் றியலான்

இன்ன என்னும் குறிப்புரை யாகும்...422

வாராத மரபினவாய பொருள்களை வருவனவாகக் கூறுதலும் வாயாற் சொல்லற்கியலா மரபினவாயபொருளைச் சொல்லுவனவாகக் கூறுதலும் அவ்வாறு வருவனவாகிய பிறவெல்லாம் அவற்றவற்றினுடைய இயல்பு காரணமாக இத்தன்மைய என்று உணரக்கூறும் குறிப்பு மொழிகளாம்.

(எ-டு) அந்நெறி ஈண்டு வந்து கிடந்து எனவும் அம்மலை அம்மலையொடு சென்று பொருந்திற்று எனவும் அவல் அவல் என்கின்றது நெல் மழை மழை என்கின்றது பைங்கூழ் எனவும் நீலுண் துகிலிகை எனவும் வரும்.

இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று

அவை மூன் றென்ப ஒருசொல் லடுக்கே ... 423

ஒரு சொல் இரண்டு முதலாக அடுக்கி வரும் அடுக்குத்தொடர் இசை நிறையடுக்கு அசைநிலையடுக்கு பொருள்நிலையடுக்கு என்று கூறப்படும் அவை மூன்று என்று கூறுவர் புலவர்.

(எ-க) ஏஏஏஏ அம்பல் மொழிந்தனள் இ.ஃது இசை நிறை அன்றே அன்றே-மற்றோ மற்றோ இவை அசை நிலை. பாம்பு பாம்பு அவன்அவன் வைதேன் வைதேன் விடுவிடு விடு-படை படை உய்யேன் உய்யேன், வருக வருக இவை பொருளொடு

புணர்ந்தன. முறையே இவை விரைவு, துணிவு, உடன்பாடு, வலியுறுத்தல், அச்சம், அவலம், அவா என்னும் குறிப்புப் பொருள்களொடு வந்தன.

**இசைநிறை அடுக்கு**

இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும் ... 424

மேற்கூறிய மூன்றனுள் இசைபற்றி வரும் அடுக்கினது சொல் வரம்பு

(எ-டு) பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோயான் எனவும் ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும் குளக்கொட்டிப் பூவின் நிறம் எனவும் வரும்.

**விரை சொல்லடுக்கிற்கு ஒரு புறனடை**

விரைசொல் லடுக்கே மூன்று வரம்பாகும் ... 425

விரைவு பற்றி வரும் அடுக்குச் சொற்கு வரம்பு மூன்றாகும்.

(எ-டு) பாம்பு பாம்பு பாம்பு எனவும் தீதீதீ எனவும் வரும்.

**அசைநிலை அடுக்கு:**

கண்டீர் என்றா கொண்டீர் என்றா

சென்ற தென்றா போயிற் றென்றா

அன்றி யனைத்தும் வினாவொடு சிவணி

நின்ற வழி அசைக்கும் கிளவி என்ப ... 426

கண்டீர், கொண்டீர். சென்றது, போயிற்று என்னும் அவ்வனைத்துச் சொற்களும் வினாஇடைச் சொல்லொடு பொருந்தி நிற்குமிடத்து அசைப் பொருளாகும் சொற்கள் என்று கூறுவர் புலவர். 19-19)

கண்டீரோ பெண்காள் கடம்பவனத் தீசனார்

பெண்டிர் தமைச் சுமந்த பித்தனார்-எண்டிசைக்கும்

மிக்கான தங்கைக்கு மேலே நெருப்பை யிட்டார்

அக்காளை ஏறினார் ஆம்.

என்னும் பாடலுள் கண்டீரோ என்பது அசை நிலையாகக் கொள்ளுமாறு நிற்கின்றது.

**முன்னிலை வினை**

கேட்டை என்றா நின்றை என்றா

காத்தை என்றா கண்டை என்றா

அன்றி யனைத்தும் முன்னிலை யல்வழி

முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே 427

கேட்டை, நின்றை, காத்தை, கண்டை என்னும் அவ் அனைத்துச் சொற்களும் முன்னிலை வினைப் பொருள் தாராமல் நிற்குமிடத்து மேலைச் சூத்திரத்துட் கூறிய சொற்களை ஒத்த இயல்பினவாகும். அஃதாவது அசைநிலையாக நிற்கும்.

**வினைமுற்றின் பொது இலக்கணம்**

இறப்பின் நிகழ்வின் எதிர்வின் என்றச்

சிறப்புடை மரபின் அம்முக் காலமும்

தன்மை முன்னிலை படர்க்கை என்னும்

அம்மு விடத்தான் வினையினும் குறிப்பினும்

மெய்ம்மை யானும் இவ்விரண் டாகும்

அவ் ஆறு என்ப முற்றியன் மொழியே ... 428

இறப்பு நிகழ்வு எதிர்வு எனக் கூறப்பட்டன வாகிய அச் சிறப்புடைய மரபினானே வரும் மூன்று காலமும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் அம்மூவிடத்தின் கண்ணும் தெரிநிலையாயும் குறிப்பாயும் உயர்திணை அஃறிணை விரவுத்திணை ஆகிய பொருள் தொறும் நிரம்பி வரும் அவ் ஆறுவகைச் சொற்களும் முற்றியல் மொழி எனக் கூறுவர் ஆசிரியர்.

(எ-டு) உண்டான், கரியன், உயர்திணை, உண்டது, கரிது, அஃறிணை, உண்டனை, கரியை விரவுத் திணை என வரும்.

**முற்று இயல்பாய் வரும் வினைச்சொற்கள்**

எவ்வயின் வினையும் அவ்வியல் நிலையும் ....429

பொருள் தொறும் வினையும் குறிப்புமாகத் தன்மை முதலாய இடம்பற்றி நிரம்பி வரும் எல்லாச் சொற்களும் மேற்கூறிய அவ்விலக்கணத்துள் அடங்கும்.

**வினைமுற்றுக்கள் பெயர் கொண்டு முடிதல்**

அவைதாம்

தத்தங் கிளவி அடுக்குந வரினும்

எத்திரத் தானும் பெயர் முடிபினவே... 430

அறுவகையாகி நிகழுமென மேற்கூறப் பெற்ற வினைமுற்றுச் சொற்கள் தம்முன் சில பலவாக அடுக்கி வரினும் தம்முள் முடியாது எத்திறத்தானும் பெயர்சொல்லொடு முடிவனவேயாகும்.

(எ-டு) வந்தான் சாத்தன், கரியன், கொற்றன், என இவை தனித்து வந்தன. தின்றான், ஆடினான், பாடினான் சாத்தன் எனவும், நல்லன், இனியன், செவ்வியன் மன்னன் மகன் எனவும் வரும்.

**பத்து வகை எச்சங்கள்**

பிரிநிலை வினையே பெயரெ ஒழியிசை

எதிர்மறை உம்மை எனவே சொல்லே

குறிப்பே இசையே ஆயீ ரைந்தும்

நெறிப்படத் தோன்றும் எஞ்சு பொருட்கிளவி... 431

இலக்கண நெறிப்படத் தோன்றும் எஞ்சுபொருட்கிளவிகளாவன, பிரிநிலை எச்சமும், வினையெச்சமும், பெயரெச்சமும், ஒழியிசை எச்சமும், எதிர்மறை யெச்சமும், உம்மை யெச்சமும், எனவென் எச்சமும், சொல்லெச்சமும், குறிப்பெச்சமும், இசையெச்சமும் ஆகிய பத்துமாம்.

**பிரிநிலை எச்சம்**

அவற்றுள்

பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின ..432

மேற்கூறியவற்றுள் ஓகாரமும் ஏகாரமும் பற்றி வரும் பிரிநிலை எச்சங்கள் தம்மாற் பிரிக்கப்பட்ட சொற்பொருளை முடிபாக உடையனவாம்.

(எ-டு) அவனோ கொண்டான் அவனே உண்டான் என வரும்.

**வினையெச்சம்**

வினையெஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்

நினையத் தோன்றிய முடிபா கும்மே

ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே ... 433

வாய்பாட்டானும் இறுதியிடைச் சொல்லானும் உடைமை முதலிய பொருளானும் கூறப்பட்டு வரும் வினை எச்சங்கட்கெல்லாம் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் கருதத் தோன்றிய முடிபாக வரும் அவ்விடத்துக் குறிப்பு வினை ஆக்கச் சொல்லொடு நினையத் தோன்றி வரும்.

(எ-டு) உழுது வந்தான் உண்குபு வந்தான் எனவும் கற்று வல்லனாயினான் எனவும் உழுது வந்தவன் அருந்திமகிழ்தல் எனவும் வேங்கையும் காந்தளும் நாறி ஆம்பல் மலரினும் தான் தண்ணியளே எனவும் வரும்.

**பெயரெச்சம்**

பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே... 434

இருவகை வாய்பாட்டானும் வரும் பெயரெச்சங்கள் நில முதலாகிய அறுவகைப் பெயர்களைக் கொண்டு முடியும் ஏ, இசைநிறை.

(எ-டு) இவன் உண்ணும் சாத்தன், இவன் உண்ட சாத்தன் எனவும் இது நல்ல வீடு எனவும் வரும்.

**ஒழியிசை எச்சம்**

ஒழியிசை யெச்சம் ஒழியிசை முடிபின... 435

மன், தின், ஒகாரம் ஆகிய இடைச்சொற்கள் பற்றி வரும் ஒழியிசை எச்சங்கள் ஒழிந்து நின்ற எச்சப் பொருளை முடிபாக உடையனவாம்.

(எ-டு) கூரியதோர் வாள்மன் எனவும், வருகதில் அம்ம எம சேரி சேர எனவும் காணவோ வந்தான் எனவும் வரும்.

**எதிர்மறை எச்சம்**

எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின ... 436

ஓகாரமும், ஏகாரமும், உம்மையும், பற்றி வரும் எதிர்மறை எச்சங்கள் மறுக்கப்பட்ட சொற்பொருளை முடிபாக உடையனவாம்.

(எ-டு) யானோ கொள்வேன் எனவும், யானே வைவேன் எனவும், சாத்தன் வருதற்கும் உரியன் எனவும் வரும்.

**உம்மை எச்சம்**

உம்மை எச்சம் இருவீற் றானும்

தன்வினை ஒன்றிய முடிபா கும்மே ...437

தானும் தன்னாற் றழுவப்படுவதுமாக இருகூற்றான் வரும் உம்மை எச்சத்திற்கு ஒன்றனது வினை ஏனையதன் வினைக்கும் பொந்திய சொல் முடிபாக வரும்.

(எ-டு) அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள் எனவும் உணவும் உண்டான் உடையும் பூண்டான் இனிப் புறப்படும் எனவும் பைம்புதல் வேங்கையும் ஒள்ளிணர்விரிந்தன் நடு வெண்டிகளும் ஊர் கொண்டன்றே எனவும் வரும்.

**உம்மை எச்சத்தில் காலம் மயங்குதல்**

தன்மேற் செஞ்சொல் வரூஉம் காலை

நிகழுங் காலமொடு வாராக் காலமும்

இறந்த காலமொடு வாராக் காலமும்

மயங்குதல் வரையார் முறைநிலை யான ... 438

ஒரு கூற்றான் வரும் உம்மை எச்சத்தின் முன் உம்மையில்லாத செஞ்சொல் வருமிடத்து முரைநிலையானே நிகழ்காலத்தொடு எதிர்காலமும் இரந்த காலத்தொடு எதிர் காலமும் மயங்கி முடிதலை நீக்கார் ஆசிரியர்,

(எ-டு) கனியுண்ணா நின்றான் பாலும் பருகுவன எனவும் கனியுண்டான் பாலும் பருகுவன் எனவும் வரும்.

**என என்னும் எச்சம்**

எனவென் எச்சம் வினையொடு முடிமே ... 439

எனவென்னு இடைச் சொல் பற்றி வரும் எச்சம் வினைச்சொல்லை முடிபாகக் கொண்டு முடியும்.

(எ-டு) வெள்ளென விளர்த்தது, துண்ணெனத் துடித்தது, பொள்ளென ஆங்கே புறம் வேரார் ஒல்லென ஒலித்தது என வரும்.

**ஏனை மூன்று எச்சங்கள்**

எஞ்சிய மூன்றும் மேல்வந்து முடிக்கும்

எஞ்சு பொருட் கிளவி இலவென மொழிப ... 440

இது காறும் கூறியவை போக எஞ்சி நின்ற சொல்லெச்சம். குறிப்பெச்சம், இசையெச்சம் ஆகிய மூன்றும் மேல்வந்து தம்குறை முடிக்கும் எஞ்சுபொருட் கிளவி இல்லாதன எனக் கூறுவர் ஆசிரியர்.

**குறிப்பு எச்சம்**

அவைதாம்

தத்தங் குறிப்பின் எச்சஞ் செப்பும் ... 441

அம்மூன்றும் சொல்லின் முடியும் இலக்கணத்தவாய் நிற்றலின் அவ்விலக்கணத்தான் அவை எச்சப் பொருள் உணர்த்துமென்க. தத்தம் இயல்பாவன: சொல்லெச்சம் என்பது, இயற்சொல் முதலியவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டு பெயரும் வினையுமாக நின்று எச்சப் பொருளாதல். இசையெச்சம் என்பது கூறுவோரது கூற்றினுள் பெற வேண்டிய விளக்கம் நுட்பமாக அமைந்து எச்சப் பொருளாதல். குறிப்பெச்சம் என்பது ஒன்றைக் கூறுவோர் தம் இன்றியமையாத கருத்துக் குறிப்பாக அமைந்து எச்சப் பொருளாதல்,

(எ-டு) யான், என்றேன், என்னுமிடத்து இவை முறையே யார் என்று கேட்டான் யான் என்று சொன்னேன் என விரிதலின் கேட்டான் சொன்னேன் என்பவை சொல்லெச்சமாயின.

நீயிர் பெரிதும் அறிதிர் என்றவழி நீயிர் சிறிதும் அறியீர் என்பது குறிப்பெச்சமாக நின்றது.

வானுயர் தோற்றம் எவன் செய்யும்தன் நெஞ்சம் தானறி குற்றப்படின் என்னுமிடத்து ஒழுக்கத்திற்கு ஒவ்வாத தவவேடம் என்பதும் இசை எச்சமாக நின்றன

**சொல் எச்சம்**

சொல்லெ னெச்சம் முன்னும் பின்னும்

சொல்லள வல்லது எஞ்சுத லின்றே ...442

சொல்லெச்சம் எனப்படும் எச்சம் அச்சொல்லளவிற் பொருள் தோன்றுவதன்றி முன்னோ பின்னோ பிறிதாக எஞ்சி நிற்பதன்று.

(எ-டு) அகர முதல் னகர இறுவாய் முப்ப.்.தென்ப என்பதன் கண் என்ப என்னும் பயனிலை அத் தொடரை முடித்து நின்றது.

அவையல்கிளவி-இடக்கரடக்கல்

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல் ... 443

சான்றோர் அவைக்கண் வழங்குவதல்லாத சொற்களை மறைத்து அப்பொருள் ஒருவாற்றான் புலப்படப்பிற் சொற்களாற் கூறுக.

(எ-டு) கண் கழீஇ வருதும், கால்கழிஇ வருதும் எனவும் ஆள்முன் வரும் ஈகரா பகரம் வாலெயிறு ஊறிய நீர் எனவும் புலிநின்றிறந்த நீரல்லீரத்து எனவும் கருமுகமந்தி செம்பின் ஏற்றை எனவும் வரும்.

வழக்கில் பொருந்தியவற்றை மறைக்க வேண்டா

மறைக்குங் காலை மரீஇயது ஒராஅல் ... 444

அவையல் கிளவியை மறைந்துச் சொல்லுமிடத்து மேற்றொட்டு மரபாகி வருவனவற்றை அங்ஙனம் மறைத்தலைத் தவிர்க என்றது மரபாக வருவவைற்றை மறையாது கூறுக என்றவாறு.

(எ-டு) ''முழெுகும் ஆப்பி கண்கலுழ் நீரானே'' எனவும் ''தலையினிழிந்த மயிர்'' எனவும் வரும்.

**ஈ, தா, கொடு என்னும் சொற்கள்**

ஈ தா கொடு வெனக் கிளக்கும் மூன்றும்

இரவின் கிளவி ஆகிடன் உடைய ... 445

ஈ தா கொடு எனக் கிளக்கப்படும் மூன்று வினைச் சொற்களும் இரத்தற் பொருளுணர்த்தும் கிளவியாக வருமிடனும் உடையவாம்.

**ஈ, தா, கொடு-சொல்**

ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே ...446

தாவென் கிளவி ஒப்போன் கூற்றே ... 447

கொடுவென் கிளவி உயர்ந்தோன்மேற்றே ... 448

சிறிது சோறீ ஓராடை- ஈக, ஒரு நாழி அரிசி தருக ஒருவேல் தருக எனவும் பூணற்குப் பொன்னாடை கொடு மணியலங்கல்லொடு எனவும் வரும்.

**கொடுத்தல்-சொல்**

கொடுவென் கிளவி படர்க்கை யாயினும்

தன்னைப் பிறன் போற் கூறும் குறிப்பான்

தன்னிடத் தியலும் என்மனார் புலவர் ... 449

ஏனையிரண்டும் ஏளையிடத்த என்றதனான் கொடு என்னும் சொல் படர்க்கைக் குரியதாயினும் கூறுவோன் தன்னைப் பிறன்போல வைத்துக் கூறும் குறிப்பானே தன்மைக் கண்ணதாகி இயலும் எனக் கூறுவர் புலவர்.

**இலக்கணம் வரையறுக்கப்படாத சொல் வகைகள்**

பெயர் நிலைக் கிளவியின் ஆஅ குநவும்

திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்

தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்

மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும

மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்

அன்றி அனைத்தும் கடப்பாடிலவே ... 450

பெயர்நிலைக் கிளவியின் ஆகிவருவன முதலாக மந்திப் பொருள் வயின் ஆகிவருவன ஈறாக வரும் அவ்அனைத்துக் குறிப்புச் சொற்களும் எவ்வகையான கடப்பாடுமின்றி வருவனவாகும்.

1. பெயர்நிலைக் கிளவியின் ஆகுந என்றது இயற்சொல்லாக நின்று பொருளுணர்த்துதற்குரிய பெயர்ச் சொற்களினாற் குறிப்புப் பொருள் தோன்றி வருவன என்றவாறு. திருமுகம் என்னும் தொகை மொழி தனது இயற் பொருளைத் தராமல் ஓலை என்னும் பொருள் குறித்து வருதலாம். இதனை இடைக் காலத்தாற் மங்கல வழக்கு என்று கூறுவர்.

2. திசைநிலைக் கிளவியின் ஆகுந என்றது திசைச் சொற்களான் குறிப்புப் பொருள் தோன்றி வருவன என்றவாறு பறிஎன்னும் சொல்தன் இயற்பொருளைத் தராமல் பொன் என்னும் பொருள் குறித்து வருதலும். காரை எனனும் சொல் ஆடைக் குறித்து வருதலும் பிறவுமாம். இதனை இடைக்காலத்தார் குழூஉக் குறி என்பர்.

3. தொன்னெறி மொழிவயின் ஆகுந என்றது தொன்மையான மரபு பற்றிக் கூறும் மொழியினிடத்தனவாய்க் குறிப்புப் பொருள் தோன்றி வருவன என்றவாறு பிறைகவ்வி மலை நடக்கும் என்பது யானையை உணர்த்தி வருதல் போல்வன.

4. மெய்ந் நிலைமயக்கின் ஆகுந என்றது சொற்கள் தம் வடிவு மயங்கி மாறுதலாற் குறிப்புப் பொருள் தோன்றி வருவன என்றவாறு தீத்தீண்டுகையார் என்பது வேம்கை எனப் பொருள் மயங்கி வேங்கை என்னும் மரத்தைக் குறித்து வருதல் போல்வன.

5. மந்திரப் பொருள்வையின் ஆகுந என்றது மந்திரப் பொருளைக் குறித்துக் குறிப்பாக வரும் சொற்கள் என்றவாறு அச்சொற்களும் இயற்பொருள் உணர்த்தாமல் குறிப்பாக நிற்கும் என்பார்.

**செய்யாய் எனும் சொல்**

செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல்

செய்யன் கிளவி ஆகிடன் உடைத்தே ... 451

முன்னிலையில் செய்யாய் என்னும் வாய்பாடு பற்றி வரும் முற்று வினைச்சொல் செய் என்னும் வாய்பாட்டுப் பொருள்பட வருமிடம் உடையதாகும்.

(எ-டு) சாத்தா இ∴து அமிழ்தொக்குமாதலின் உண்ணாய் இறைவா நின்னருள் வேண்டினேன் தாராய் இறைவா நின்னருள் வேண்டினேன் தாராய் சுடர்த் தொடீ கேளாய் என வரும்.

**ஈ, ஏ முன்னிலை வினை ஈறுகள்**

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்

அந்நிலை மரபின் மெய்யூர்ந்த வருமே ... 452

முதனிலையாய் ஏவற்பொருள் குறித்து வரும் முன்னிலை வினைச்சொல்லின் முன்னர் ஈகாரமும் ஏகாரமும் மரபினான் அதனதன் நிலைக்கேற்ற மெய்பினை ஊர்ந்து வரும்.

(எ-டு) சென்றீ பெருமநிற்றகைக்குநர் யாரே எனவும் அட்டிலோலை தொட்டனை நின்மே எனவும் வரும்.

**புதிய சொற்கள்**

கடிசொல் இல்லை காலத்துப் படினே ... 453

அவ்வக்காலத்துச் சான்றோர் வழக்கின்கண் யாதானுமோர் நிமித்தம்பற்றித் தோன்றி வழங்கப்படுமாயின் தொன்று தொட்டனவல்ல என்றானும் இலக்கண வழுவாகும் என்றானும் அவை கடியப்படும் சொற்கள் இல்லை.

(எ-டு) சமன், சமழ்ப்பு, சவட்டுதல், என்பன போலத் தோன்றி வந்தனவும் பிறவுமாம்.

**முதற்குறை இடைக்குறை, கடைக்குறை**

குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி யறிதல்... 454

சீர்நிலை கருதியும் தொடைநயங் கருதியும் அமைத்துக் கொள்ளப்படும் குறுக்கும் வழிக்குறுக்கும் செய்யுள் விகாரமன்றி இரு வகை வழக்கினும் ஒரு சொல்லைக் குறைத்து வழங்குமிடத்து அச்சொல்லின் குறைத்தற்குரிய இடமறிந்து குறைக்க.

(எ-டு) மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி தாமரை என்னும் சொல்லுள் முதல் குறைந்து வந்தது. உளங் கரந்துறையும் உள்ளம் என்னும் சொல் இடைகுளைந்து வந்தது. ஒந்தி-ஓதி என வருதலும் எம்பின், தம்பின் என ஈறு குறைந்து வந்தன.

**குறைச்சொற்கள்**

குறைத்தன வாயினும் நிறைப்பெயரியல் ... 455

மேற் கூறியாங்குக் குறைக்கப் பெற்று வழங்கும் சொற்கள் குறைக்கப் பெற்றன வேனும் பொருள் தருமிடத்து நிறைந்து நின்ற பெயரியல்பினவேயாம்.

**இடைச்சொற்கள்**

இடைச் சொல் லெல்லாம் வேற்றுமைச் சொல்லே ... 456

ஏழுவகைப்படுமென மேற்கூறிய இடைச்சொற்கள் எல்லாம் தாம் சார்ந்து வரும் செற்களின் பொருளை வேறுபடுத்தும் சொற்களேயாம்.

(எ-டு) நம்பி சாத்தன் மரம் என்னும் பெயர்கள் நம்பியின், சாத்தனின் மரத்தின் எனச் சாரியையுற்ற வழி அவை வேறுபடுத்தி நின்றன.

**உரிச்சொற்கள்**

உரிச்சொல் மருங்கனும் உரியவை உரிய ...457

மேற்கூறிய இடைச்சொற்களேயன்றி உரிச்சொற்களின் கண்ணும் வேற்றுமைப் படுத்தும் சொல்லாதற் குரியவை வேற்றுமைப் படுத்தும் சொல் எனற்கு உரியவாம்.

(எ-டு) உறுகால் தவப்பெரியன் கயந்தலை இவை வேறுபடுத்து வந்தன.

**வினையெச்ச சொற்கள்**

வினையெஞ்சு கிளவியும் வேறு பல்குறிய ... 458

வினையியலுள் ஓதப்பெற்ற வினையெஞ்சு கிளவிகளும் வினைமுற்றுக்களும் பெயரெஞ்சு கிளவிகளும் வேறுபட்ட பலகுறியவாம்.

(எ-டு) காக்கை கரைய விருந்து வந்தது என்னும் செய்தென்னெச்சம் காரணப் பொருள் உணர்த்தாது உடனிகழ்ச்சிக் குறிப்பாய் வேறுபட்டு நின்றது.

**தொடர் மொழிகள்**

உரையிடத் தியலும் உடனிலை அறிதல் ... 459

மேற்கூறிய வினை எச்சமும் பெயரெச்சமும் முற்றுமாகிய வினைச் சொற்கள் உரைக்குமிடத்து வடிவத்தான் ஒருங்கு நிற்கும் நிலையினை அறிந்து கொள்க.

(எ-டு) ஆடிய என்னும் சொல் ஆடிய வந்தான் ஆடிய கூத்தன் மயில்கள் ஆடிய என வருதற்கண் செய்யிய என்னும் வினைஎச்சங் குறித்தும் செய்த என்னும் பெயரெச்சம் குறித்தும் செய்தன என்னும் வினைமுற்றுக் குறித்தும் வந்தவாறு கண்டு கொள்க.

**குறிப்பால் உணரும் சொற்கள்**

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே

இன்ன என்னும் சொன் முறையான ... 460

சொல்லும் முறைமையானே இவை இன்ன பொருளின என்னும் வண்ணம் முன்னத்தாற் பொருளுணர வரும் சொற்களும் உள.

குழை கொண்டு கோழி யெறியும் வாழ்க்கையர் எனின் அன்ன பொருஞ் செல்வர் என்பது முன்னம்.

**ஒரு பொருட் பன்மொழி**

ஒரு பொருள் இருசொல் பிரிவில வரையார் .. 461

இரு சொற்கள் தம்முட் பிரிவிலவாய் ஒருபொருள் குறித்து வருதலை மிகையென்று கருதி நீக்கார் ஆசிரிய மரபாகக் கொள்வர் என்றவாறு.

(எ-டு) நிவந்தோங்கு பெருமலை எனவும் உச்சிமீமிசை எனவும் நிலத்துவழி மருங்கிற்றோனறலான எனவும் வரும்.

**ஒருமை பெயர் பன்மைக்கு ஆதல்**

ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி

பன்மைக் காகும் இடனுமா ருண்டே...462

ஒருமை ஈற்றினைச் சுட்டி நிற்கும் பெயர் நிலையாய சொல் பன்மைப்பால் உணர்த்தற்கு ஆகும் இடனும் உண்டு உம்மை சிறு பான்மையை உணர்த்தி நின்றது.

(எ-டு) புலையன் எறிந்த பூசற்றண்ணுமை ஏவலிளையர் தாய் வயிறு கரிப்ப எனவும் அ∴தை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச் சோழர் எனவும் வரும்.

**ஆற்றுப்படையில் ஒருமை பன்மை மயக்கம்**

முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவு

பன்மையொடு முடியினம் வரை நிலையின்றே

ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும் ... 463

முன்னிலை குறித்து நின்ற ஒருமைப்பெயர் பின்னர்ப் பன்மைப் பெயரொடு முடியினும் நீக்கும் நிலைமைத்தன்று இவ்வியல்பினை ஆற்றுப் படுத்து உரைக்குமிடத்துப் போற்றிக் கொள்க.

(எ-டு) கூத்தராற்றுப் படையுள் கலம்பெறு கண்ணுளர் ஒக்கற்றலைவ என விளியற்று நின்ற ஒருமைச் சொல், பின்னர் இரும்பே ரொக்கலொடு பதமிகப்பெறுகுவிர் எனப் பன்மைச் சொல்லொடு முடிந்தவாறு காண்க.

**சொல்லதிகாரத்திற்குப் புறனடை**

செய்யுற் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்

மெய்பெறக் கிளந்த கிளவி யெல்லாம்

பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது

சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல் ... 464

செய்யுளிடத்தனவாயும் வழக்கிடத்தனவாயும் பொருள்பெறக் கிளக்கப்பெற்ற சொற்களையெல்லாம் பல்வேறு பட்ட செய்கைகளான் எழுத்திலக்கண முறைமை

பிறழாமல் உரைப்போர் அச்சொற்களை வரையறைப்படுத்து உணருமாறு அவற்றின் இலக்கணக் கூறுகளை வகைபடப் பிரித்து எடுத்துக் காட்டுக.

(எ-டு) யானும் நீயும் செல்வேம், யானும்நீயும் அவனும் செல்வேம் எனவும், நீயும் அவனும் சென்மின் எனவும் இடம் விரவித் தன்மையினும் முன்னிலையினும் முடிந்தன. இவை வழக்கியல் மரபாயின.

**எச்சவியல் - பயிற்சி வினாக்கள்**

1. எச்சவியல் பெயர்க்காரணம் கூறுக.
2. இயற்சொல் என்றால் என்ன ? சான்று தருக.
3. திரிசொல் எத்தனை வகைப்படும் ? அவை யாவை?
4. மலை என்னும் ஒரு பொருள் குறித்த பல சொற்களையும் எகினம் என்னும் ஒருசொல் குறித்த பல பொருள்களையும் குறிப்பிடுக.
5. திசைச்சொல் என்றால் என்ன?
6. ‘சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்’- இந்நூற்பாவை விளக்குக.

7. செய்யுள் விகாரங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

8. பொருள்கோள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

9. கொடி குவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி-இதில் காணப்படும் பொருள்கோள் யாது ? எனக் கூறி விளக்குக.

## தொகுப்புரை :

- சொல்லின் வகைகள் இரண்டு. ஒன்று பெயர் மற்றொன்று வினை ஆகும். அவற்றின் வழியே இடைச்சொல் உரிச்சொல் ஆகியவை தோன்றும். எச்சவியல் என்ற பகுப்பில் தொல்காப்பியர் பல பொது இலக்கணங்களைப் பற்றிப் பேசியுள்ளார்.
- சொல்லுக்கு முன்னும் பின்னும் வரும் மொழியோடு இணைத்துப் பார்த்தால் உரிச்சொல்லின் பொருள் விளங்கும். உரிச்சொல்லைப் பிரித்துத் தனியே சொல்லக்கூடாது.
- இடைச்சொல்லுக்கு என்று தனி இயல்பு இல்லை. சொற்கள் புணரும்போது அவற்றிற்கு இடையே நின்று அவற்றின் பொருளை உணர்ந்துகொள்ள உதவும்.
- தொல்காப்பியர் உரிச்சொற்களை பல சொல் ஒரு பொருட்கு உரிமையாகத் தோன்றுபவை, ஒரு சொல் பல பொருட்கு உரிமையாகத் தேனர்றுபவை எனப் பாகுபடுத்திப் பேசியுள்ளார்.
- தொல்காப்பிய எச்சவியலில் செய்யுள் ஈட்டசொல், செய்யுளில் தொடர் அமைதி, இலக்கணத்தில் கட்டுப்படாத மொழி குறித்து விளக்கப்பட்டுள்ளது.

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

**அருஞ்சொற்பொருள் விளக்கம் :**

தெவ்வு - பகை

சிறுமை – நோய்

எய்யாமை - அறியாமை

தா – வலிமை

சாயல் - மென்மை

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1.அச்சம், காலம், பெருமை உள்ளிட்ட பொருள்களைக் குறிக்கும் இடைச்சொல்?

அ) கொல் ஆ) கொண் இ) கொள் ஈ) கொன்

2. சாயல் எனும் உரிச்சொல் எதனைக் குறிக்கிறது?

அ) தூய்மை ஆ) தாய்மை இ) மென்மை ஈ) வன்மை

3. "வினையின் தொகுதி ................. இயலும்"

அ) பாட்டினுள் ஆ) காலத்து இ) பெயரினுள் ஈ) மந்திரத்து

4. கொல் எனும் இடைச்சொல்லின் பொருள் என்ன?

அ) ஐயம் ஆ) நாடகம் இ) துன்பம் ஈ) மகிழ்ச்சி

5. "கெடவரல், பண்ணை ஆயிரண்டும் .............."

அ) விளையாட்டு ஆ) உணவுகள் இ) மரங்கள் ஈ) கதை

**விடைகள்**

1.ஈ) கொன்

2. இ) மென்மை

3. ஆ) காலத்து

4. அ) ஐயம்

5. அ) விளையாட்டு

**குறுவினாக்கள்**

**1.** ஒருசொல் பல பொருட்கு உரிமையாகத் தோன்றுபவை குறித்து எழுதுக.

**2.** செய்யுளில் தொடர் அமைதி குறித்து விளக்குக.

3. இடைச்சொற்களின் இயல்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை?

4. தொல்காப்பியர் கூறும் உரிச்சொல்லிற்கான இலக்கணத்தைக் கூறுக.

5. இலக்கியத்தின் நான்குவகைச் சொற்களைப் பற்றி எடுத்துரைக்க.

**நெடுவினாக்கள்**

1. தொல்காப்பிய இடையியலில் இடம்பெறுகின்ற செய்திகளைக் கட்டுரைக்க.
2. தொல்காப்பிய உரியியல் முன்வைக்கும் கருத்துகளைத் தொகுத்துரைக்க.
3. எச்சவியலில் இடம்பெறுகின்ற இலக்கணச் செய்திகளை விவரிக்க.

**பாடம் தொடர்பான புத்தகங்கள்**

1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் பாவலரேறு பாலசுந்தரனார் உரை, பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம் 11, 2012

**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள் :**

- Tamil Heritage Foundation – www. Tamilheritage.org <http:// – www. Tamilheritage.org>
- Project Madurai – www. Project Madurai.org
- Tamil Universal Digital Library – www.ulib.prg<http: www.ulib.prg>
- Tamil E – Books Dwonloads – tamilebooksdownloads.blogspot.com
- Chennailibrary – www.chennailibrary.com<http: www.chennailibrary.com>

## அலகு –5

## அலகில் இடம்பெறுபவை :

தொல்காப்பியம் - நன்னூல் வினையியல் ஒப்பீடு

## நோக்கங்கள் :

- உலக மொழிகளின் இலக்கண வரலாற்றில் தனித்தன்மை வாய்ந்ததாக விளங்கும் தமிழ்மொழியின் கட்டமைப்பை விளக்குதல்.
- வினைச் சொற்களின் இலக்கணங்களின்வழி மொழியியல் கருத்துகளைக் கற்பித்தல்.
- வினைச்சொற்கள் உயர்திணை மற்றும் அ.்.றிணையில் அமைந்து வருகின்ற முறைமையினைத தொல்காப்பியம் நன்னூல்வழி தெளிவுபட எடுத்துரைத்தல்.
- தொல்காப்பியரும் பவணந்தி முனிவரும் வினையியலைப் பற்றிப் பேசுகையில் வேறுபடும் இடங்களும் ஒத்த கருத்தினை வலியுறுத்த வருகின்ற இடங்களையும் கற்பித்தல்.

## தொல்காப்பியம் - நன்னூல் ( வினையியல்)

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் ஆகிய ஒன்பது இயல்களில் 456 நூற்பாக்களும் நன்னூல் சொல்லதிகாரத்தில் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், பொதுவியல் ஆகிய ஐந்து இயல்களில் 205 நூற்பாக்களும் உள்ளன.

வினையென்பது பலபொரு ளொருசொல்லாய்த் தொழிற் பண்பினையும் அதன் காரியமாகிய வினை நிகழ்ச்சியையும் உணர்த்தும். தொழிற்பண்பை உணர்த்தும் சொல்லை உரிச் சொல்லெனவும் அதன் காரியமாகிய வினைநிகழ்ச்சியை யுணர்த்துஞ் சொல்லை வினைச் சொல்லெனவும் கூறுதல் மரபு. வினைச் சொல்லாவது வேற்றுமையுருபு ஏலாது வெளிப்படை யாகவும் குறிப்பாகவும் காலமுணர்த்தி நிற்பதாகும். இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூன்றாம். இறந்தகாலம் என்பது தொழில் முற்றுப்பெற்ற நிலை. நிகழ்காலம் என்பது தொழில் தொடங்கி முடிவுபெறாது தொடர்ந்து நிகழும் நிலை. எதிர்காலம் என்பது தொழிலே

தொடங்கப் பெறாத நிலை. இம்மூவகைக் காலங்களுள் ஒன்றை வெளிப்படையாகக் காட்டுஞ் சொற்களை வினை என்றும், இக்காலங்களைக் குறிப்பாக உணர்த்துஞ் சொற்களைக் குறிப்பு என்றும் கூறுவர் தொல்காப்பியர். இவற்றை முறையே தெரிநிலைவினையென்றும் குறிப்புவினை யென்றும் வழங்குவர் பிற்கால ஆசிரியர்கள் இவ் வினைச் சொற்கள் முற்று,வினையெச்சம், பெயரெச்சம் என மூவகைப்படும். பாலுணர்த்தும் ஈறுகளாகிய விகுதிகளோடு கூடிப்பொருள் முற்றி (நிறைந்து) நிற்குஞ் சொற்கள் வினைமுற்றுக் களாகும். ஐம்பாலாகிய வினை முதலை யுணர்த்தும் விகுதியுறுப்புக் குறைந்த குறைச்சொற்களாய் மற்றொரு வினைச் சொல்லோடல்லது முற்றுப்பெறாது நிற்பன வினையெச்சங் களாகும். பாலுணர்த்தும் விகுதியின்றிக் குறைந்த குறைச்சொற்களாய்ப் பெயரை எச்சமாகவுடைய வினைச் சொற்கள் பெயரெச்சம் எனப்படும். இம்மூவகை வினைச்சொற்களின் இலக்கணமுணர்த்தினமையால் இது வினையியலென்னும் பெயர்த்தாயிற்று.

இவ்வியலிலுள்ள சூத்திரங்களை 49-ஆக இளம்பூரணரும் 51-ஆகச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 54-ஆகத் தெய்வச் சிலையாரும் பகுத்து உரை வரைந்துள்ளார்கள். எச்சவியலிலுள்ள ‘இறப்பின் நிகழ்வின்’ எவ்வயின்வினையும், “அவைதாம். தத்தங்கிளவி,’ எனவரும் மூன்று சூத்திரங்களையும் வினையிலக் கணமாத லொப்புமை பற்றி இவ்வியலின் இறுதியில் தெய்வர் சிலையார் சேர்த்துரைத்தமையால் அவர் கருத்துப்படி இவ்வியலின் சூத்திரங்கள் 54 - ஆயின. வினைச் சொற்கள் எல்லா வற்றையும் உயர்திணைக் குரியன, அஃறிணைக் குரியன, இருதிணைக்குமுரியன என மூன்று வகையாகத் தொல்காப்பியர் இவ்வியலிற் பகுத்துணர்த்துகின்றார்.

108. வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது

நினையுங் காலைக் காலமொடு தோன்றும்

இது, வினைச் சொற்கெல்லாம் பொதுவிலக்கணம் உணர்த்துகின்றது.

(இ-ள்) வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது ஆராயுங்காற் காலத்தொடு புலப்படும். என்றவாறு.

இங்கு வேற்றுமை என்றது, வேற்றுமையுருபினை.

(உ-ம்) உண்டான், கரியன் என வேற்றுமை கொளாது காலமொடு தோன்றியவாறு கண்டு கொள்க. ‘வேற்றுமை கொள்ளாது’ என்னாது ‘காலமொடு தோன்றும்’ என்பதே கூறின். வினையாலணையும் பெயரும் தொழிற்பெயரும் வினைச் சொல் எனக் கொள்ளநேரும். ‘காலமொடு தோன்றும்’ என்னாது ‘வேற்றுமை கொள்ளாது’ என்று மட்டும் கூறின், இடைச்சொல்லும் உரிச்சொல்லும் விவைச்சொல் எனக் கொள்ள வேண்டி வரும். ஆதலால் இவ்விருதிறமும் நீக்குதற்கு வேற்றுமை கொளாது காலமொடு தோன்றும் என்றார். வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள. அவையும் ஆராயுங்கால் காலமுடையன என்றற்கு நினையுங்காலை என்றார். இவ்வாறு பின்னுணர்த்தப்படும் வினைச்சொற்கெல்லாம் பொதுவிலக்கணம் உணர்த்தினார் என்பர் சேனாவரையர்.

வினையென்றது, உண், தின், கரு, செய் எனவரும் முதனிலையை எனவும். இ∴து ஆகுபெயராய்த் தன்னாற் பிறக்கின்ற சொல்லையுணர்த்திற்று எனவும், உண்டல், இன்றல், கருமை, செம்மை என்பன அம்முதனிலையாற் பிறந்த வினைப்பெயர் எனவும், உண்டான், தின்றான், கரியன், செய்யன் என்பன அம் முதனிலையிற் பிறந்த வினைச்சொல் எனவும் கூறுவர் நச்சினார்க்கினியர்.

‘‘வினை என்பது தொழில் உணர்த்தும் சொல்லாதலின் அது வேற்றுமை கொண்டு நிற்பதும் ஒருதிலை உண்டு. அந்நிலை யொழியக் காலத்தோடு பொருத்தி நிற்குமது நம்மால் வினைச் சொல் என வேண்டப்பட்டது’’ என்பது இச்சூத்திரத்தின் கருத்தாக விளக்குவர் தெய்வச்சிலையார்.

இங்ஙனம் வேற்றுமை கொள்ளாமையும் காலமொடு தோன்றுதலும் வினைச்சொற்கே யிலக்கணமாதலை நன்னூலார் தொழில்ல காலந்தோற்றா, வேற்றுமைக் கிடனாய்’(நன்னூல்-274) எனப் பெயரிலக்கணம் உணர்த்தும்வழி எதிர்மறை முகத்தால் உணரக் கூறியுள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.

வினைச் சொல்லாவது இதுவெனவுணர்த்துவது.

319. செய்பவன் கருவி நிலஞ்செயல் காலஞ்

செய்பொரு ளாறுந் தருவது வினையே. - எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

‘‘கருத்தாவும் கருவியும் நிலனும் தொழிலும் காலமும் செயப்படுபொருளும் என்னும் ஆறுபொருளையும் தருவது வினைச் சொல்லாகும்’’ என்பது இதன்பொருள்.

வினை என்றது, ஆகுபெயராய் வினைச்சொல்லை யுணர்த்திற்று. செய்பவன் கருத்தா: ஒருபாலமேல் வைத்தோதி வாரேனும் ஐம்பாலும் கொள்க. இயற்றுதற்கருத்தா, ஏவுதற் கருத்தா என்னும் இரண்டனையும் செய்பவன் என்றும், முதற்காரணம், துணைக் காரணம் என்னும் இரண்டனையும் கருவி என்றும் பொதுப்படக் கூறினார்.

(உ-ம்) வனைந்தான் என்றவழிக் குலாலனாகிய இயற்றுதற் கருத்தாவும், மண்ணாகிய முதற்காரணமும் தண்டசக்கர முதலிய துணைக்காரணங்களும், வளையும் இடமும், வனைதற்குச் செயலும், இறந்தகாலமும், குடம் முதலிய செயப்படு பொருளும் என ஆறும் தோன்றுதல் காண்க. ஆறும் என்னும் முற்றும்மையை எச்சமாக்கி இத்தொகையிற் சில குறைந்து வரவும் பெறும் எனப் பொருளுரைப்பர் ‘கொடி யாடிற்று’என்புழிச் செயப்படு பொருளும், ‘கொடிதுஞ்சும்’ என்புழிச் செயப்படு பொருளோடு கருவியும் குறைத்து வந்தன.

இனி,‘ஆறும்’ என்னும் உம்மையை உயர்வு சிறப்பும்மை யாகக் கொண்டு ‘‘இழிந்தன சிலவுள’ அவையும் வேண்டுமேற் கொள்க’’ எனப் பொருளுரைப்பர். வனைந்தான் என்புழிக் குடத்தைத் தனக்கு வனைத்தான் அல்லது பிறர்க்கு வனைந்தான் என ‘இன்னதற்கு’ என்பதும், அறம் முதலிய பயன் கருதி வனைந்தான் என ‘இதுபயன்’ என்பதும் தோன்றுதல் கொள்ளப்படும். இன்னதற்கு, இது பயன் என்னும் இரண்டும் ஏதுவின்பாற் பட்டுக் கருவியுள் அடங்குதலின் இச்சூத்திரத்துள் விதந்து எண்ணப் படாவாயின.

முற்று வினைகளுள் பகுதியாற் செயலும், விகுதியாற் கருத்தாவும், இடைநிலை முதலியவற்றாற் காலமும், பெயரெச்ச வினையெச்சங்களில் இம்முறையே செயலும் காலமும் வெளிப்படத் தோன்றுவன. ஏனையவை குறிப்பிற்றோன்றுவன. செய்பவன் முதலிய இவை ஆறுங் காரணமாகக் கூடுங் கூட்டத்து இவற்றுள் செயல் என்னும் முதற்காரணத்தினின்றும் வினையாகிய காரியம் ஒன்று நிகழுமாதலின், இவை ஆறு காரணத்தையும் புலப்படுத்தும் காரியமாசிய வினையின் தொழிலை ஒற்றுமை நயங்கருதி அதன் சொல்மேலேற்றி ‘ஆறும் தருவது வினையே’ என்றார்.

காரணத்தைக் காரியம் தரும் என்பது. புகையாகிய காரியம் தனக்குக் காரணமாகிய தீயுண்மையைக் காட்டுதல் போல்வதாம்.

102. காலத் தாமே மூன்றென மொழிய

இது முற்கூறிய காலம் இனைத்தென்கின்றது.

(இ-ள்) மேற்கூறப்பட்ட காலம் மூன்றென்று சொல்லுவர் புலவர். என்றவாறு.

தாம் என்பது கட்டுரைச் சுவைபட நின்றது

200. இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா

அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு

மெய்ந்நிலை யுடைய தோன்றலாறே.

இது, முற்குறித்த காலத்தின் வகையும் அதுதான் குறிப்பிற்கும் உண்டென்பதும் உணர்த்துகின்றது.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட காலத்தின் பாகுபாடாகிய இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று சொல்லப்படும் அம்மூன்று காலமும் குறிப்பொடும் பொருந்தும் பொருள் நிலைமையையுடையன: வினைச்சொல்லானவை தோன்று நெறிக்கண். என்றவாறு.

எனவே, காலம் மூன்றாவன இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பதூஉம், வெளிப்படக் காலம் விளங்காதன குறிப்புவிலை என்பதூஉம் பெற்றாம்.

(உ-ம்) உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என்பன முறையே மூன்று காலமுந் தோன்ற நின்றன. கரியன், செய்யன் என்பன வினைக்குறிப்பு.

இறப்பாவது, தொழிலது கழிவு : நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை : எதிர்வாவது தொழில் பிறவாமை

தொழில் என்பது பொருளினது புடைபெயர்ச்சியாகலின் அஃது ஒரு கணம் நிற்பதல்லது இரண்டு கணம் நீடித்து நில்லாமையின், நிகழ்ச்சி யென்பதொன்று அதற்கில்லை. எனினும், உண்டல் தின்றல் எனப் பலதொழிற் றொகுதியை ஒரு

தொழிலாகக் கொள்ளுதலின், உண்ணாநின்றான், வாரா நின்றான் என நிகழ்ச்சியும் உடைத்தாயிற்று என்பர் சேனாவரையர்.

வினைக்குறிப்புக் காலமொடு தோன்றுங்கால், பண்டு கரியன், இது பொழுது கரியன் என இறந்த காலமும் நிகழ் காலமும் முறையே தோன்ற வருதலும், நாளைக் கரியனாம் என எதிர் காலத்து ஆக்கமொடு வருதலும் அறிக.

இங்குக் கூறப்பட்ட காலத்தின் பெயரும் முறையும் தொகையும் ஆகியவற்றை

381. இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலம் மூன்றே - எனவரும் சூத்திரத்தாற் குறிப்பிடுவர் பவணந்திமுனிவர்.

யாதொரு பொருளும், தோன்றமளவிற் றோன்றி, வளரு மளவின் வளர்த்து, முதிருமளவின் முதிர்ந்து அழியுமளவின் அழியுமன்றி, உயிர்கள் வேண்டியவாறு ஆகாமையின், அவற்றை அவ்வளவின் அவ்வாறு இயற்றுவது காலம் என்னும் அருவப் பொருளாமெனவும், அதனால் இயலும் பொருள்களின் தொழில் இறந்ததும் எதிர்வதும் நிகழ்வதுமாதலின் அவ்வாறு இயற்றுங் காலமும் இறப்பு, எதிர்வு, நிகழ்வு என் மூன்று கூற்றதாம் எனவும் உய்த்துணர்த்துரைப்பார், காலம் இன்றென்றும் இரண்டென்றும் கூறுவார் கூற்றை விலக்கிக் “காலம் மூன்றே’ எனத் தெளிந்துரைத்தார்

201. குறிப்பினும் வினையிலும் நெறிப்படத் தோன்றிக்
காலமொடு வரூஉம் வினைச்சொ லெல்லாம்
உயர்தினைக் குரிமையும் அஃறிணைக் குரிமையும்
ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்
அம்மூ வுருபின தோன்ற வாறே

இது, வினைச்சொற்களது பாகுபாடு கூறுகின்றது.

(இ-ள்) குறிப்புப் பொருண்மைக்கண்ணும் தொழிற் பொருண்மைக் கண்ணுந் தோன்றிக் காலத்தொடு வகும் எல்லா வினைச்சொல்லும், உயர்திணைக் குரியனவும், அஃறிணைக் குரியனவும் அவ்விரண்டு திணைக்கும் ஒப்பவுரியனவும் என மூன்று பகுதியனவாம்: அவை தோன்றும் நெறிக்கண். என்றவாறு,

கரியன், செய்யன் என்புழித் தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலின் 'குறிப்பு' என்றார்.

(உ-ம்) உண்டான், கரியன் எனவும், சென்றது, செய்யது எனவும், வந்தனை, வெளியை எனவும் மூவகை வினையும் முறையே வத்தன.

"குறிப்பொடுங் கொள்ளும்" என மேலைச் சூத்திரத்துக் குறிப்பு இயைபுபட்டு நிற்றலின் 'குறிப்பினும் வினையினும்' என்றார். பின்னர் ஈறுபற்றி உணர்த்தப்படும் வினைச்சொற்களை, இ∴து இறந்த காலத்திற் குரியது. இது நிகழ்காலத்திற் குரியது, இ∴து எதிர்காலத்திற்குரியது என வழக்கு நோக்கி உணர்ந்து கொள்க என அறிவுறுத்துவார்,'காலமொடு வரூஉம் வினைச்சொல்' என்றார். வினைச்சொல் காலம் உணர்த்துங்கால் சில நெறிப் பாடுடையன என்பதுணர்த்துவார் நெறிப்படத் தோன்றி' என்றார். நெறிப்பாடாவது ஈற்றுமிசை (விகுதியின்மேல்) நிற்கும் எழுத்து வேறுபாடு. அவை முற்றுவுணர்த்தலாகாமையின் தொல்காப் பியத்தில் விரித்துரைக்கப் படாவாயின. எனினும் தொல்காப்பிய வுரையாசிரியர்கள் ஆங்காங்கே யுணர்த்திச் செல்வர்.

மேல் தெரிநிலை குறிப்பு எனத் தொகுத்துணர்ந்திய வினைச் சொற்கள் முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூவகையாகித் திணை பால் இடங்களில் ஒன்றற்கு உரியனவாகவும் பொதுவாய் நிற்பனவாகவும் வருதலை,

321. அவைதாம்,

முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி

ஒன்றற் குரியவும் பொதுவு மாகும்.

என்னும் சூத்திரத்தால் உணர்த்தினார் நன்னூலார்.

202. அவைதாம்,

அம்மா மெம்மே மென்னுங் கிளவியும்

உம்மொடு வருடங் கடதற வென்னும்

அந்நாற் கிளவியொ டாயெண் கிளவியும்

பன்மை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

நிறுந்த முறையானே உயர்திணை வினையாமாறு உணர்த்த எடுத்துக் கொண்ட ஆசிரியர், உயர்திணைக்குரிய தன்மைவிளையும் படர்க் கைவினையுமாகிய இருவகையுள் தன்மைவினையைக் கூறத் தொடங்கி இச்ருத்திரத்தால் பன்மைத் தன்மை உணர்த்துகின்றார்.

(இ-ன்) மேல் மூவகைய எனப்பட்ட வினைச்சொல், தாம். அம். ஆம், எம், ஏம் என்னும் இறுதியையுடைய சொல்லும், உம்மொடு வரூஉங் கடதறவாகிய கும் டும் தும் றும் என்னும் இறுதியையுடைய சொல்லும் என அவை எட்டும் பன்மை யுணர்த்தும் தன்மைச் சொல்லாம். என்றவாறு.

உம்பொடு வரூஉங் கடதற உம் ஊர்ந்து வரும் ககர, டகர நகர, றகர வொற்றுக்கள்: அவையாவன கும், டும். தும், றும் என்பன.

தன்மையிடத்திற் சொல் நிகழ்த்துவானாகிய தனக்கு ஒருமையல்லது இன்மையால், தன்மைப் பன்மையாவது தன்னொடு பிறரை உளப்படுத்ததேயாகும். பேசுவோன் தன்னைக் குறித்துக் கூறும் ஒருமைத் தன்மையைத் தனித்தன்மை யென்றும் படர்க்கை யாரையும் முன்னிலையாரையும் அவ்விரு திறத்தாரையும் தன்னொடு உளப்படுத்திக்கூறும் பன்மைத் தன்மையை உளப்பாட்டுத்தன்மை என்றும் வழங்குதல் மரபு. அம், ஆம் என்பன முன்னின்றாரை உளப்படுக்கும். தமராய வழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும். எம். எம். என்பன படர்க்கையாரை உளப்படுக்கும்.

உம்மொடு வரூஉங் கடதறவாகியகும். டும். தும், றும் என்பன அவ்விரு வகையாரையும் ஒருங்கு உளப்படுத்தலும் தனித்தனி உளப்படுத்தலும் உடையன என்பர் இளம்பூரணரும் சேனா வரையரும். இவ்வுரைக் குறிப்பிளை அடியொற்றி யமைந்தது.

531. அம்மா மென்பன முன்னிலை யாரையும்

எம்மே மோமிவை படர்க்கை யாரையும்

உம்மூர் கடதற விருபா லாரையும்

தன்னொடு படுக்குத் தன்மைப் பன்மை.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

''அம் ஆம் என்னும் இவ்விரு விகுதியினையும் இறுதியாக வுடைய சொற்கள் முன்னிலையிடத்தாரையும், எம், ஏம், ஓம் என்னும் இம்மூன்று விகுதியினையும் இறுதியாகவுடைய சொற்கள் படர்க்கையிடத்தாரையும், கும், டும், தும், றும் என்னும் இந்நான்கு விகுதியினையும் இறுதியாகவுடைய சொற்கள் முன்னிலை படர்க்கையென்னும் ஈரிடத்தாரையும் தன்னுடன் கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்று மாகும்'' என்பது இதன்பொருள். ஓம் விகுதி புதியன புகுதலாக ஈண்டுக் கொள்ளப்பட்டமை காண்க. ''ஓம் விகுதியையும் வழக்குண்மையிற் கொண்டார்'' என்பர் மயிலைநாதர்.

(உ-ம்) உண்டனம், உண்ணாநின்றனம், உண்பம், நாரினம்.

உண்பாம். தாரினாம் உண்டாம், உண்ணா நின்றாம் யானும் நீயும் எனவும், உண்டனெம், உண்ணாநின்றனெம், உண்பெம், உண்டேம் தாரினெம், உண்ணாநின்றேம், உண்பேம், தாரினேம், உண்டோம். உண்ணாநின்றோம். உண்போம், தாரினோம் யானும் அவனும் எனவும், உண்கும், உண்டும், வந்தும் வருதும் சென்றும் சேறும் யானும் அவனும் நீயும் எனயும், முன்னிலை யாரையும் படர்க்கை யாரையும் இருபாலாரையும் முறையே உளப்படுத்தி வந்தமை காண்க

இச்சூத்திரத்தில் முன்னிலையாரையும் படர்க்கையாரையும், என்னும் எண்ணும்மைகளையும், இருபாலாரையும் என்னும் முற்றும்மையினையும் இறந்தது தழீஇய எச்சவும்மைகளாகக் கொண்டு இவ்விகுதிகள் யாவும் தன்னிலையில் நின்று தனித் தன்மைப் பன்மையினை யுணர்த்துமென வுரைப்பர் சிவஞான முனிவர்.

(உ-ம்) உண்டனம், உண்டாம். உண்டனெம், உண்டேம் உண்டோம். தாரிவோம் யாம் எனவரும்.

'மேற் காலமொடு வரூஉம் வினைச்சொல்' என்று ஓதிய தொல்காப்பியர், அம் ஆம் எம் ஏம்' எனவரும் இச்சூத்திர முதலாகப் பாலுணர்த்தும் சொற்களை ஓதிமையால், தொழில் உணர்த்தலும், காலங்காட்டலும், பால்காட்டலும் என

வினைச் சொல் மூன்று கூறுகளையுடையன என்பது கொள்ளப்படும் என்பர் தெய்வச்சிலையர்.

‘‘உண்டளம், உண்கின்றனம், உண்பம் என்றவழி உண் என்பது தொழில் உணர்த்திற்று. டு, இன்று, பு என்பல காலங் காட்டின. அன் சாரியையாகி நின்றது. அம் பாலுணர்த்திற்று’’ என்பது அவர்தரும் விளக்கமாகும்..

இங்ஙனம் வினைச்சொற்கள் தொழிலும் காலமும் பாலும் உணர்த்தும் மூவகை உறுப்புக்களையுடையவாகத் தொல்காப் பியனார் குறிப்பாகப் புலப்படவைத்தாராயினும் பாலுணர்த்தும் எழுத்துக்களாகிய விகுதிகளை எடுத்துரைத்தாற் போன்ற கால முணர்த்தும் எழுத்துக்களைத் தனியே எடுத்துரையாது வழக்கும் செய்யுளுமாகிய இலக்கியங்கண்டு உய்த்துணர வைத்துள்ளார்.

காலமுணர்த்தும் எழுத்துப்பற்றிச் சேனாவரையர் கூறுவன இங்கு நோக்கத்தக்களவாகும்.

‘‘அம், ஆம், எம், ஏம் என்பன மூன்று காலமும் பற்றி வரும். உம்மொடு வருடங் கடதற எதிர்காலம் பற்றிவரும். முன்னின்ற நான்கீறும் இறந்தகாலம் பற்றி வருங்கால், அம்மும் எம்மும் கடதற என்னும் நான்கன்முன் அன் (சாரியை) பெற்றுவரும். ஏம் அன் (சாரியை) பெற்றும் பெறாதும் வரும். ஆம் அவ் (சாரியை) பெறாதுவரும்.

(உ-ம்) நக்கனம், நக்கனெம்’ உண்டனம், உண்டனெம். உரைத்தனம், உரைத்தனெம்’ தின்றனம். இன்றனெம் எனவும்: நக்கவேம், நக்கேம்’ உண்டனேம், உண்டேம், உரைத்தனேம், உரைத்தேம், தின்றனேம், தின்றேம் எனவும், தக்காம், உண்டாம், உரைத்தாம், தின்றாம் எனவும் வரும். (அம் ஆம் எம் ஏம் என்னும்) அந்நாள்கீறும் (கடதற வல்லாத) ஏனையெழுத்தின்முன் ரகாரமும் முகாரமும் ஒழித்து இன்பெற்றுவரும்.

(உ-ம்) அஞ்சினம், அஞ்சினாம், அஞ்சினெம், அஞ்சினேம், உரிஞினம், உரிஞினாம், உரிஞினெம், உரிஞினேம் எனவரும். பிறவெழுத்தோடும் ஒட்டிக்கொள்க கலக்கினம், தெருட்டினம் என்னுத் தொடக்கத்தன குற்றுகரவிறாகலாள் அதுவும் ஏனை யெழுத்தேயாம்’’ என்பது இறந்தகால எழுத்துக்களைக் குறித்துச் சேனாவரையர் தரும் விளக்கமாகும்.

இறந்தகால வினைச் சொற்களாக இங்கு எடுத்துக்காட்டிய உதாரணங்களைக் கூர்ந்து நோக்குங்கால் நகு + ஆம் நக்காம் என்றாங்கு உகரவீற்றுக் குறிலிணைப் பகுதி யிரட்டித்து இறந்த காலம் உணர்த்துதலும், உரைத்தேம். உண்டேம், தின்றேம் எனவும் உரிஞினேம் எளவும் த,ட,ற என்னும் ஒற்றுக்களும் இன் என்பதும் இறந்த காலங்காட்டும் இடைநிலைகளாதலும், நக்கனெம், உண்டனெம் என்புழிக் கால எழுத்தையடுத்துப் பாலுணர்த்தும் ஈறாகிய விருதியைச் சார்ந்துவரும் அன் என்பது சாரியையாதலும், உரைத்தேம் என்புழி உரை என்னும் முதனிலையையடுத்து நிற்கும் தகரவொற்றுக் காலவெழுத்தாகிய தசுரம் பகுதியொடு கூடியவழித் தோன்றிய சந்தி எழுத்தென்பதும், நில் + ற் + ஏம் = நின்றேம்

எனவரும்வழி பகுதியாகிய லகரவொற்று முன்வரும் கால எழுத்தாகிய நகரத்திற்கு இமைாய னகரவொற்றாகத் திரிந்தமை விகாரமாதலும் இனிது புலனாம். இவ்வாறு தனிமொழியின் அமைப்பினைக் கூர்ந்துணர்ந்த பவணந்தியார் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறுறுப்பினுள்ளும் சொற் பொருளமைப் புக்கு ஏற்பனவற்றைக் ககுதிக்கூட்டி முடிப்ப எவ்வகைப்பட்ட பகுபதங்களும் முடியும் என்பதனை,

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும் (133)

எனவரும் சூத்திரத்தாற் பகுபதவுறுப்புணர்த்தி,

141. தடறவொற் றின்னே யைம்பால் மூலிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை

எனவரும் சூத்திரத்தால் இறந்தகால இடைநிலை இவையென வரையறுத்துணர்த்தியுள்ளார். "தகர டகர றகர மெய்களும், இன் என்னுங் குற்றொற்றும் ஐம்பால் மூவிடத்தும் இறந்த காலத்தை யுணர்த்தும் வினையிடை நிலைகளாம்" என்பது இதன் பொருளாகும்.

‘‘இனி, அவை (அம். ஆம்: எம். ஏம் என்பன) நிகழ் காலம் பற்றிவருங்கால் நில், கின்று என்பனவற்றோடு வரும். நில் என்பது வகாரம் வகாரமாய் நகாரம் பெற்று நிற்கும்.’’

(உ-ம்) உண்ணாநின்றனம், உண்கின்றனம்: உண்ணா நின்றாம். உண்கின்றாம்’ உண்ணாநின்றளெம், உண்கின்றனெம்: உண்ணா தின்றேம், உண்கின்றேம்’ உண்ணாநின்றனேம், உண்கின்றனேம். ஈண்டு அன் (சாரியை) பெற்ற விகற்பம் இறந்தகாலத்தற் கூறியவாறே கொள்க’’ என நிகழ்கால முணர்த்தும் எழுத்துக்களை உதாரணங் காட்டி விளக்குவர் சேனாவரையர், அவர் காட்டிய எடுத்துக் காட்டுக்களில் நிகழ் காலமுணர்த்தும் ‘நில்’ என்பது நின்ற’ என நில்லாது முதற் கண் ஆகாரமும் ஈற்றின்கண் உகரமும் பெற்று ‘ஆ நின்று’ என நிற்றலையும் ‘கின்று’ என்பதில் இடைநின்ற னகரவொற்றுக் கெட்டுக் ‘சிறு’ என நின்று ‘உண்கிறான்’ என வழங்குதலையும் கண்ட பவணந்தியார்.

142. ஆநின்று கின்று கிறு மூவிடத்தின்

ஐம்பா னிகழ்பொழு தறைவினை யிடைநிலை.

எனச் சூத்திரஞ் செய்தார். ‘‘ஆதின்று, இன்று, கிறு என்பன ஐம்பால் மூவிடத்தும் நிகழ்காலத்தையுணர்ந்தும் வினையிடை நிலைகளாம்’’ என்பது இதன் பொருள்.

‘‘உண்ணா கிடந்தனம், உண்ணாவிருந்தனம் எனக் கிட இரு என்பனவும் சிறுபான்மை நிகழ்காலத்து வரும்’’ என்பர் சேனாவரையர். உண் என்னும் பகுதியை நோக்கும்வழி ஆகிட, ஆவிரு என்பனவே காலமுணர்த்தும் இடைநிலையெனக் கொள்ள வேண்டியுளது. இவற்றைப் பவணந்தியார் நிகழ்கால இடைநிலைகளாக எடுத்தாளாமை நினைத்தற்குரியதாகும்.

‘‘அவை (அம், ஆம், எம், ஏம் என்பன) எதிர்காலம் பற்றி வருங்காற் பகரமும் வகரமும் பெற்றுவரும். வகரம் ஏற்புழிக் குகரமும் உகரமும் (ஆகிய சாரியைகள்) அடுத்து நிற்கும்.

(உ-ம்) உரைப்பம், செல்வம்' உண்குவம், உரிலுவம் எனவரும். ஒழிந்தவிற்றொடும் ஓட்டிக்கொள்க. பாடுகம். செல்கம் என ஏற்புழிச் சிறுபான்மை சுசுரவொற்றுப் பெறுதலும் கொள்க''என எதிர்கால முணர்த்தும் எழுத்துக்களை உதாரணங் காட்டி விளக்குவர் சேனாவரையர். அவர் கருத்துப்படி பகரமும் வசுரமும் ககரமும் எதிர்காலம் உணர்த்தும் வினையிடைநிலைகளாயினும் அவற்றுட் பகரமும் வஈரமுமே எதிர்கால இடைநிலைகளெனத் தெளிவாகக் கொள்ளத்தக்கன.

13. பவ்வ மூவிடத் தைப்பா வெதிர்பொழு

திசைவினை யிடைநிலை யாமிவை சிவவில

எனச் சூத்திரஞ்செய்தார் நன்னூலார்.

''பகரவொற்றும் வகரவொற்றும் ஐம்பால் மூவிடத்தும் எதிர்காலத்தைத்தரும் வினையிடை நிலைகளாம். இங்குக் கூறிய முக்கால இடைநிலைகள் சிலமுற்றுவினை எச்சவினைகட்கு இலவாம்'' என்பது இதன்பொருள்.

''இனி,'இனி சில இல' எனவே, காலத்தை இறுதிநிலை தருமென்பதூஉம், முதனிலை தருமென்பதூஉம் பிறவிடைநிலை

தருமென்பதூஉம் பெற்றாம். இவ்விகற்பமெல்லாம் (''றவ்வொ டுகரவும்மை'' என) வருஞ் குத்திரத்தாற் கூறுப'' என்பர் சிவஞானமுனிவர்,

''உம்மொடு வருடங் கடதற உண்கும். உண்டும் வருதும், சேறும் எனவும், உரிஞுதிதும், திருமுதும் என ஏற்றவழி உகரம் (சாரியை) பெற்றும் வரும். இவை எதிர்காலம் பற்றிவரும்'' என்பர் இளம்பூரணர்.

''கும்மீறு வினைகொண்டு முடிதலின் ஒழிந்த உம்மீற்றின் வேறெனவேபடும். ட,த,ற என்பன எதிர்காலத்திற்குரிய எழுத்து அன்மையாற் பாலுணர்த்தும் இடைச்சொற்கு (உம் என்னும் விகுதிக்கு) உறுப்பாய் வந்தன எனவேபடும். படவே அவற்றை உறுப்பாக உடைய ஈறு மூன்றாம். அதனான் உம் என ஓர் ஈறாக அடக்கலாகாமையின் அந்தாற்கிளவியொடு என்றார்'' எனக் கும் டும் தும் றும் என்னும் காலங்காட்டும் விகுதிகளைப்பற்றி விளக்கந்தருவர் சேனாவரையர், இவ்வாறே கடதற

என்னும் நான்கு மெய்யையூர்ந்து வரும் உகரத்தை யீறாகவுடைய குடுதுறு என்னும் குற்றுகரம் நான்கும் அல் என்பதும் எதிர்காலம் பற்றிவரும் என்றார் சேனாவரையர்.

காலங்காட்டுவனவாக உரையாசிரியர்கள் குறிந்த கும்,டும், தும், றும், கு. டு. து, று என்னும் விகுதிகளோடு மின், ஏவல், வியங்கோள், இ. மார், ப, உம் என்னும் விகுதிகளையும் எதிர்மறை ஆகார விகுதியையும் சேர்த்துக் காலங்காட்டும் விகுதிகளாக,

144. றவ்வொ டுகர வும்ளமதிகழ் பல்லவும்

தவ்வொ டிருப்பு மெதிர்வும் டவ்வொடு

கழிவுங் கவ்வோ டெதிரிவுமின் னேவல்

வியங்கோ ஸம்யா ரெதிர்வும் பாந்தஞ்

செலவொடு வரவுஞ் செய்யுநிகழ் பெதிர்வும்

எதிர்மறை மும்மையும் ஏற்கு மீங்கே.

எனவரும் சூத்திரத்தில் எடுத்தோதினார் பவணந்தியார்.

‘‘றகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறும் ஆகிய று, றும் என்பன இறந்தகாலமும் எதிர்காலமும், தகரத்தோடு கூடிய உகரவீறும் உம்மீறும் ஆகிய டு, டும் என்பன இறந்த காலமும் எதிர்காலமும், சுகரத்தோடு கூடிய உசுரவிறும் உம்மீறும் ஆகிய கு, கும் என்பன எதிர்காலமும், மின் ஈறும் ஏனை ஏவலின்வரும் எல்லாவீறும் வியங் கோளீறாகிய இய, இயர் என்பனவும். இகரவீறும் மாரீறும் எதிர்காலமும், பகரவீறு இறந்தகாலமும் எதிர்காலமும் செய்யும் என்னும் வாய்ப்பாட்டு முற்றிறு நிகழ் காலமும் எதிர்காலமும், முற்றுவிகுதி எச்சவிகுதிகளோடு புணர்தற்குரிய எதிர்மறை ஆகாரவீறு மூன்றுகாலமும் ஏற்கும்’ மேலைச் சூத்திரந்து இவை சிலவில என்றவற்றுள்’’ என்பது இதன் பொருளாகும்.

(உ-ம்) சென்று, சென்றும்: சேறு, சேறும் எனவும், வந்து, வந்தும்: வகுது, வகுதும் எனவும், உண்டு. உண்டும், உண்கு, உண்கும். உண்மின்: உண்ணாய்: உண்க, வாழிய வாழியர்’ சேறி: உண்மார்: உண்ப: உண்ணும்’ எனவும், உண்ணான் எனயும் வரும்.

என்றிசினோர், என்மர், என்மனார் என்பவற்றுள் எடுத்தோதாத இசின், ம், மன் என்னும் பிறவிடைநிலைகள் வந்து முன்னையது ஒன்றும் இறந்தகாலமும், பின்னைய இரண்டும் எதிர்காலமும் காட்டின.

20. கட தற வென்னும்

அந்நான் கூர்ந்த குன்றிய லுகரமோ

டென்னே எல்லென வரூஉ மேழுந்

தன்வினை யுரைக்குந் தன்மைச் சொல்லே.

இது, தனித்தன்மை வினைச்சொல் இவை என்பது உணர்ந்து கின்றது.

(இ-ள்) க ட தற என்னும் நான்கு மெய்யையூர்ந்து வரும் குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லும், என், ஏன், அல் என்னும் ஈற்றவாகிய சொல்லும் என அவ்வேழும் தன் வினையைத் தானேயுரைக்கும் தன்மை யொருமைச் சொல்லாம். என்றவாறு.

''குற்றுகரம் நான்கும், அல்லும் எதிர்காலம்பற்றி வரும். குற்றுகரம் காலவெழுத்துப் பெறுங்கால் உம்மீற்றோடு ஒக்கும். அல்லீறு பகரமும் வகரமும் (அகிய காலவெழுத்துப்) பெற்று வரும். என், ஏன் என்பன மூன்றுகாலமும் பற்றி (க்கால வெழுத்துப் பெற்று) வரும். காலவெழுத்து அடுத்தற்கண் எம் மீற்றோடு என்னீறும், ஏமீற்றோடு, ஏவீறும் ஒக்கும். ஆண்டுக் கூறிய விகற்பமெல்லாம் அறிந்து ஒட்டிக் கொள்க'' என விளக்கம் தருவர் சேனாவரையர்.

(உ-ம்) உண்கு, உண்டு, வருது, சேறு எனவும், உரிஞுகு, திருமுகு எனவும் உண்டளெல், உண்ணாநின்றவென், உண்கு வென் எனவும், உண்டேன், உண்ணாநின்றேன், உண்பேன் எனவும் உண்பல், வருவல் எனவும் வரும். உயர்திணைக்குரிய தனித்தன்மையொருமை விகுதிகளாகிய இவ்வேழுடன் புதியன புகுதலாக வந்த அன்விகுதியையும் கூட்டி.

330. குடுதுறு வென்னுங் குன்றிய லுகரமோ

டல்லன் வென்னே னாகு மீற்ற

இருதிணை முக்கூற் றொருமைத் தன்மை.

எனச் சூத்திரஞ் செய்தார் நன்னூலார்.

'கு, டு, து, று, அல், அன், என். ஏன் என்னும் இவை எட்டினையும் இறுதியாகவுடைய சொற்கள் உயர்திணை ஆணொருமை பெண்ணொகுமை, அஃறிணையொருமையாகிய முக்கூற்றொருமைத் தன்மை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாம்' என்பது இதன்பொருள்.

''துறக்கப்படாத வுடலைத்துறந்து வெந் தூதுவரோ

யுரப்பன் இரந்தால் இருவிகம் பேறுவன் ப-4-13-2

என அன்னீறு தன்மையொருமைக்கண் புதியனபுகுதலாகப் பயின்று வருதலால் அதனையும் தன்மையொருமை விகுதியாகக் கொண்டார் பவணந்தியார். 204. அவற்றுள்,

செய்கென் கிளவி வினையொடு முடியிலும்

அவ்விய பிரியா தென்மனார் புலவர்.

இது மேற்கூறியவற்றுள் குவ்வீற்றிற்கு முடிபு வேற்றுமை கூறுகின்றது.

(இ-ள்) முற்கூறிய ஒருமைத்தன்மை வினையேழனுள் செய்கு என்னும் வாய்பாட்டு முற்றுச்சொல் பெயரொடு முடிதலேயன்றி வினையொடு முடியினும், முற்றுச்சொல்லாம் அத்தன்மையில் திரியாதென்று கூறுவர் புலவர் என்றவாறு.

செய்கு என்பது வினைமுதல் வினையல்லது பிறளிவை கொள்ளாமையின் தன்மை யொருமையுணர்த்தும் முற்றுச் சொல்லாம் தன்மையில் திரியாது நின்றதெனவே கொள்ளப்படும் என்பார் அவ்வியல் திரியாது என்றார்.

(உ-ம்) காண்கு வந்தேன் எனவரும்.

'காண்கு யான்'எனப் பெயரொடு முடிதல் இலக்கணம் என்று கொள்க'' என்பர் தெய்வச்சிலையார்.

எதிர்காலம் பற்றி உலகவழக்கிற் பெருகப்பயிலாத குடுதுறு என்னும் விகுதிகளைப் பிற்கூறாது மூன்று காலமும் பற்றி உலக வழக்கிற் பெருக வழங்கும் என் ஏன் என்பவற்றின் முன் கும் டும்தும். றும் என்னும் விகுதிகளுடன் இயைய வைத்தது ‘செய்கு’ என்பது போவர் ‘செய்கும்’ என்பதும் ‘காண்கும் வந்தேம்’ என வினை கொண்டு முடியும் என்பது அறிவித்தற்கு என்பர் சேனாவரையர்,‘‘செய்கென் கிளவி வினையொடு முடியினும் அமைக எனவே செய்கும் என் கிளவியும் வினையொடு முடியினும் அமைக என்பது போந்ததாம்’’ என்பர் இளம்பூரணர் இவ்விதியினை,

332. செய்கெ னொருமையுஞ் செய்குமென் பன்மையும்

வினையொடு முடியிலும் விளம்பிய முற்றே

எனவரும் சூத்திரத்தால் விளக்கினார் நன்னூலார்.

‘‘செய்கு என்னும் தன்மையொருமை முற்றும் செய்கும் என்னும் தன்மைப்பன்மை முற்றும் பெயர்கொண்டு முடிதலே யன்றி வினைகொண்டு முடியினும் மேற்கூறிய முற்றுச் சொல்லேயாம்’ என்பது இதன் பொருளாகும்.

‘‘எச்சங்களைப் போலாது வினைமுதலைத்தரும் விகுதியுறுப் போடுகூடி முற்றி நிற்றலின் முற்றெனப் பட்டதன்றிப் பயனிலை கொண்டு முற்றலின் முற்றெனப்பட்டதன்று என்பார், பெயரே யன்றி வினையொடு முடியினும் விளம்பிய முற்றே யென்றார்’’ என்பர் சிவஞானமுனிவர்.

‘‘முற்றுச் சொற்கும் வினையொடு முடியிலும்

முற்றுச் சொவென்னும் முறைமையிற் நிசியா’’

எனவரும் பிற்கால அகத்தியச் சூத்திரம் இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும்.

205. அன் ஆன் அன் ஆள் என்னும் நான்கும்

ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இஃது உயர்திணைப் படர்க்கை வினைச்சொல் உணர்த்துகின்றது.

(இ-ள்) அன், ஆன், அள், ஆள் என்னும் ஈற்றையுடைய நான்கு சொல்லும் உயர்திணை ஆணொருமையும் பெண்ணொரு மையும் உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். என்றவாறு.

அன் ஆன் என்பன உயர்திணை ஆனொருமையும், அள் ஆள் என்பன உயர்திணைப் பெண்ணொருமையும் உணர்த்துவனவாகும். இவை நான்கீறும் மூன்று காலமும்பற்றி வரும்.

“காலத்துக்கேற்ற எழுத்துப் பெறுங்கால், அன்னும் அள்ளும் அம்மீற்றோடும். ஆனும் ஆளும் ஆமீற்றோடும் ஒக்கும். அவ்வேறு பாடறிந்து ஒட்டிக் கொள்க” என்பர் சேனாவரையர்.

(உ-ம்) உண்டனன், உண்ணாநின்றனன், உண்பன் எனவும், உண்டான். உண்ணாநின்றான், உண்பான் எனவும், உண்டனள், உண்ணாநின்றனள், உண்பள் எனவும், உண்டாள், உண்ண நின்றாள், உண்பாள் எனவும் வரும்.

இச் சூத்திரப்பொருளை,

324. அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை

எனவும்.

325. அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை.

எனவும் இரண்டு சூத்திரங்களாற் பகுத்தோதினார் நன்னூலாசிரியர்.

206. அர் ஆர்ப வகு மூன்றும்

பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.

இஃது உயர்திணைப் பன்மை வினைச்சொல் இவையென்பது உணர்த்துகின்றது.

(இ-ள்) அர், ஆர், ப என்னும் ஈற்றையுடையவாய் வரும் மூன்று சொல்லும் பல்லோரையுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். என்றவாறு.

ரகரவீறு இரண்டும் மூன்று காலமும் பற்றிவரும். அன்னீற்றிற்குரிய காலவெழுத்து அர் ஈற்றிற்கும், ஆனிற்றிற்குரிய கால வெழுத்து ஆர் ஈற்றிற்கும் உரியன. பகரவீறு எதிர்கால முணர்த்தும். பகரவீறு உரிஞதிப என உகரச்சாரியை பெற்றும் உண்ப எனச் சாரியை பெறாதும், உண்குப எனச் சிறுபான்மை குகரச் சாரியை பெற்றும் வரும்.

(உ-ம்) உண்ணடனர், உண்ணாநின்றனர், உண்பர் எனவும். உண்டார், உண்ணாநின்றார், உண்பார் எனவும் வரும்.

207. மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை

காலக் கிளவியொடு முடியு மென்ப

இதுவும் உயர்திணைப் பன்மைக்குரிய ஈறும் அதன் முடிபு வேற்றுமையுங் கூறுகின்றது.

(இ-ள்) முன்னையனவேயன்றி மார்ற்றுச் சொல்லும் பல்லோர் படர்க்கையையுணர்த்தும். அஃது அவைபோலப் பெயர் கொள்ளாது வினைகொண்டு முடியும். என்றவாறு.

மார் விகுதி எதிர்காலம் உணர்த்தும். அது உகரச்சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்) எள்ளுமார் வந்தார், கொண்மார் வந்தார் எனவரும்.

இளி, பாடன்மார் எபரே, காணன்மார் எமரே எனப் பெயர் கொண்டு முடிவன, பாடுவார், காண்பார் என்னும் ஆரீற்று முற்றுச் சொல்லின் எதிர்மறையாய், ஒருமொழிப் புணர்ச்சியால் மகரம் பெற்று நின்றன எனவும், அவை மாரிறாயின் பாடா தொழிவார். காணாதொழிவார் என ஏவற்பொருண்மையை யுணர்த்து மாறில்லை யெனவும் விளக்கந்தருவர் சேனாவரையர்.

மேற்குறித்த உயர்திணைப் பன்மைக்குரிய ஈறுணர்த்தும் இரு குத்திரப் பொருள்களையும் ஒருங்கே தொகுத்துரைக்கும் முறையில் அமைந்தது.

326. அர் ஆர் பல்வூரசர மாரீற்ற

பல்லோர் படர்க்கை மார் வினையொடு முடிமே

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

‘‘அர், ஆர், ப, மார் என்னும் நான்கு விகுதியினையும் இறுதியாகவுடைய மொழிகள் உயர்திணைப் பன்மைப் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு முற்றுமாகும். இவற்றுள் மார் வினை கொண்டு முடிவதாம்’’என்பது இதன்பொருள். இதன்கள் ‘வினையொடு முடிமே’ என்புழி வினையொடும் என உம்மை விரித்துப் பொதுவிதியாற் பெயரொடு முடிதலேயன்றி வினை யுடனும் முடியும் எனப் பொருளுரைப்பர் சிவஞானமுனிவர். மாரீற்று வினைமுற்றிற்குப் பெயர்போல வினையும் இயைந்து வருதலின் முற்று எச்சமாயின்தன்று, முற்றேயாமென்பர் இந்துட்பம்,

‘‘காலமொடு கருத வரினு மாரை

மேலைக் கிளவியொடு வேறு பாடின்றே’’

ஏன வரும் பிற்கால அகத்தியச் சூத்திரத்திலும் இடம் பெற்றுள்ளமை

208. பன்மையு மொருமையும் பாலறிவந்த

அந்தா வைந்து மூன்றுதலை யிட்ட

முன்னுறக் கிளந்த வுயர்திணை யவ்வே.

இது, மேல் உயர்திணைக் குரியவாக விரித்தோதிய வற்றை யெல்லாம் தொகுத்துணர்த்துகின்றது.

(இ-ள்) பன்மையும் ஒருமையுமாகிய பாலுணரவந்த இருபத்து மூன்றீற்று வினைச்சொல்லும் முன்னுறக்கிளக்கப்பட்ட உயர்திணையிடத்தன. என்றவாறு.

மூன்று தலையிட்ட அத்தாலைத்தும் என இயையும். இருபந்துமூன்றுமாவன: அம், ஆம், எம், ஏம், கும், டும், தும் றும், கு. டு.து.அ. என், ஏன், அல், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப மார் என்பன. ஈண்டுக் கூறியன கிளவியாக்கத்துட் கூறப்பட்ட படர்க்கைவினையே வேறல்ல என்பார் முன்னுறக் கிளந்த என்றார். பாலுணர்த்தும் இடைச் சொற்பற்றி உயர்திணைப் படர்க்கை வினையுணர்த்துதல் ஈண்டுக் கூறியதனாற் பயன் எனவும், வழுக்காத்தற்கு இவற்றைத் தொகுத்து இலக்கண

வழக்குணர்த் துதல் ஆண்டுக் கூறிய தனாற் பயன் எனவும் விளக்கந்தருவர் சேனாவரையர்.

209. அவற்றுள்,

பண்மை யுரைக்குத் தன்மைக் கிளவி

யெண்ணியன் மருங்கிற றிரிபவை யுளவே.

இ∴து உளப்பாட்டுத் தன்மைக்கண் வருவதோர் திரிபு உணர்த்து கின்றது.

(இ-ள்) கூறப்பட்ட இருபத்துமூன்று சொற்களுள், பன்மை யுணர்த்தும் தன்மைச்சொல், எண் இயலும்வழி அ∴றிணையை யுளப்படுத்துத் திரிவன உள என்றவாறு.

(உ-ம்) யானும் என் எ∴கமும் சாறும் எனவரும்.

"தன்மைப் பன்மை வினைச்சொல் உயர்திணையாகலின் உயர்திணையே உளப்படுத்தற்பாலன: அ∴றிணையை உளப் படுத்தல் வழுவாயினும் அமைக என்பார், திரிபவையுள் என்றார். அதனான் இச்சூத்திரத்தை முன்னுறக்கிளந்த உயர் திணையவ்வே"

என்னுஞ்சூத்திரத்தின் பின் வைத்தார். திரியும் என்னாது, திரியவையுளவே என்றதனான், எல்லாந்திரியா, சிலவேதிரிவன" என்பர் சேனாவரையர்.

210. யாஅ ரென்னும் வினாவின் கிளவி

யத்திணை மருங்கின் முப்பாற்கு முரித்தே.

இ∴து உயர்திணை வினைக்குறிப்பினுள் ஒன்று கூறுகின்றது.

(இ-ள்) யார் என்னும் வினாப்பொருளை யுணர்த்துஞ் சொல் உயர்திணை மருங்கின் மூன்றுபாற்கும் உரித்து,

(உ-ம்) அவன் யார், அவள் யார், அவர் யார் எனவரும். இது விளைக்குறிப்பாயினும் பல்லோர் படர்க்கையை யுணர்த்தும் ரகர ஈற்றாய் மூன்று பாலையும் உணர்த்தும் வேறுபாடுடைமையின் மார் முதலிய ஈறுகளோடு வையாது வேறு கூறினார். இச்சூத்திரப் பொருளை விளக்குவது.

345. யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

"வினாப் பொருண்மையின் வரும் யார் என்னும் வினைக் குறிப்புச்சொல் உயர்திணை மூன்றுபாற்கும் பொது வினையாம்" என்பது இதன் பொருள்.

'வண்டுநாள் யார்' என அ.்றிணைக்கண் வருதல் வழு வமைதியெனப்படும்.

271. பாலறி மரபின் அம்மூ வீற்றும்

ஆவோ வாகுஞ் செய்யு ளுள்ளே.

இ.்து, உயர்திணைப் பாற்குப் படுவதோர் செய்யுள் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) மேல் உணர்த்திப் போந்த உயர்திணைக்கண் பால் விளங்கவரும் இயல்புடைய ஆன், ஆன், ஆர் என்னும் அம் மூன்றீற்றின் கண்ணும் உள்ள ஆகாரம் செய்யுளுள் ஓகார மாசுத்திரியும். என்றவாறு.

(உ.ம்) வினவி நிற்றந்தான் என்பது 'வினவி நிற்றந்தோன்' அகம். 481

நகூஉப் பெயர்ந்தாள் என்பது 'நகூஉப் பெயர்ந்தோன்" (அகம் 248)

சென்றா ரன்பிலர் என்பது,'சென்றோ ரன்பிர்' (அகம் 31) எனவும்,

செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்தவாறு கா

வத்தோம், சென்றோம் என வழக்கினுள் வருவன ஏமீற்றின் சிதைவென்பர் சேனாவரையர்.

22. ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்,

இது, விரவுவிவைச் சொல்லீறு செய்யுளுள் திரியுமாறு கூறுகின்றது

(இ-ள்) முன்னிலையிற்றுள் ஆய் என்னும் ஈனும் மேற் கூறப் பட்டனபோலச் செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரியும். என்றவாறு.

(உ-ம்) வந்தாய் மன்ற நண்சுடற் சேர்ப்ப என்பது ‘வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப (அகம். 80) எனச் செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்து வந்தது. ‘‘கூறப்பட்ட நாள்கீற்றுத் தொழிற் பெயரும் ஆகாரம் ஓகாரமாதல் பெயரியலுட் கொள்ளப் படும்’’ என்பர் சேனாவரையர்.

இவ்வாறு ள,ன,ர,ய என நான்கீற்று வினைச்சொற்களும் பெயர்களும் செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரிந்து வரவும்: பெறும் என்னும் இவ்விதிகளைத் தொகுத்துரைக்கும் முறையில மைந்தது.

332 பெயர்வினை விடத்து வனரய வீற்றயல்

ஆவோ வாகலுஞ் செய்யுளு ளூரித்தே.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

‘‘பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் வகார, ளகார, ரகார, யகார வீறுகளின் அயல்நின்ற விகுதிமுதல் ஆகாரம் ஓகார மாதலும் செய்யுளிடத்து உரியதாகும்’’ என்பது இதன் பொருள்.

உம்மையை எதிர்மறை யும்மையாகக் கொண்டு, வில்லான், வில்லோன் என ஓகாரமாகத் திரிதலும் திரியாமையும், செக்காள், வண்ணான் எனத் திரியாதியல்பாதலும், ஆக்கவும்மையாகக் கொண்டு ‘பழமுதிர்சோலை மலைகிழவோன்’ என விகுதி அகரம் ஆகாரமாக நீண்டு ஓகாரமாதலும் கொள்வர் சிவஞானமுனிவர்.

213. அதுச்சொல் வேற்றுமை யுடைமை யானும்

சுண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்

ஒப்பினானும் பண்பி னானு மென்

றப்பாற் காலங் குறிப்பொடு தோன்றும்.

இ∴து உயர்திணை வினைக்குறிப்பு உணர்த்துகின்றது.

(இ-ள்) ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட் கண்ணும் ஏழாம் வேற்றுமையது நிலப் பொருட்கண்ணும் ஒப்பின் கண்ணும் பண்பின்கண்ணும் அப்பகுதிக்காலம் குறிப்பால் தோன்றும். என்றவாறு.

அப்பகுதிக் காலமாவது அப்பொருட்பகுதி பற்றி வரும் சொல்லடித்துக் காலமாம். அப்பகுதிக்காலம் குறிப்பால் தோன்று மெனவே. அப்பொருள்பற்றி வினைக்குறிப்பு வரும் என்பதாம்.

அதுச் சொல்வேற்றுமை - ஆறாம் வேற்றுமை. உடைமை என்பது, உடைமைத் தன்மையையும் உடைமைப் பொருளையும் குறிக்கும். ‘இதனை இ∴து உடைத்து’ என்பதுபட வரும் எல்லா வாய்பாடும் தழுவுதற்கு அதுச்சொல் வேற்றுமை யுடைமையானும் என்றார். கண்ணென் வேற்றுமை நிலத்தினானும் என்ற தொடர்க்கும் இவ்விலக்கம் பொருந்தும்.

(உ-ம்) கச்சினன், கழலினன் எனவும், இல்லத்தன், புறத்தன் எனவும், பொன்னன்னன், புலிபோல்வன் எனவும், கரியன், செய்யன் எனவும் வரும்.

வனைந்தான் என்னும் தெரிநிலை வினைமுற்றுச்சொல், செய்தாள் என்னுங் காரியத்தினை நிகழ்த்துங் காரணங்கள் எட்டிவையும் உள்ளடக்கி வினைமுதலோடு அமைந்து மாறி நின்று, அவாய்நிலை தோன்றிய காலத்துச் செயப்படு பொருள் முதலிய ஏழினையும் விரித்து திற்குமாறு போல, உடையன் என்னும் வினைக்குறிப்பு முற்றுச் சொல்லும், உடையனா யிருந்தான் என விரிந்துழி உணரப்படுங் காரியத்தினை நிகழ்த்துங் காரணங்கள் எட்டினையும் உள்ளடக்கு வினைமுதலோடு மாறி நின்று, அவாய் நிலை தோன்றிய காலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழினையும் விரித்து நிற்குமாதலான், உடையன் என்பதனுள் அடங்கி நின்ற செயப்படுபொருள் தோன்றக் குழையை என உருபை விரித்தல் அதற்கு இயல்பென்று உணர்க. இத்தெரி நிலையுங் குறிப்பும் இங்ஙனம் உருபை விரித்து நிற்றலினன்றே ஆசிரியர் ‘‘ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி எவ்வழி வரினும் வினையே விளைக்குறிப்பு அவ்விரு முதலிற் றோன்று மதுவே’’ என்றது. தெரிநிலைவினைத் தொழிற் பெயர் காலத்தோன்றி நின்றாற்போலக் கச்சினான் இல்லத்தான்

என்றாற்போலுங் குறிப்புப் பெயரும் காலந்தோன்றி நிற்கும்'' என்பர் நச்சினார்க்கினியார்.

தன்னின் முடித்தல் என்பதனால், ஐயாட்டையன், துணங்கையன் எனச் சிறுபான்மை காலமும் வினைசெய்யிடமும் பற்றி வினைக் குறிப்பு வருதலுங் கொள்க.

காலம் குறிப்பொடு தோன்றலாவது,'இவன் திருவுடையன்' என்றவழிச் சொல்வான் குறிப்புத் தொன்றுதொட்டுத் திருவுடையன் என்பதாயின், இறந்தகாலம் காட்டும். இப்பொழுது என்பதாயின் நிகழ்காலம் காட்டும். இனி என்பதாயின் எதிர்காலம் காட்டும்'' என விளக்குவர் தெய்வச்சிலையார்.

24. அண்மையினின்மையி னுண்மையின் வன்மையின்

அன்ன பிறவுங் குறிப்பொடு கொள்ளும்

என்ன கிளவியுங் குறிப்பே காலம்.

இதுவும் அது.

(இ-ள்) அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும் அவைபோல்வன பிறவுமாய்க் குறிப்புப் பொருண்மையொடு பொருந்தும் எல்லாச் சொல்லும் காலம் குறிப்பால் உணரப்படும் சொல்லாம். என்றவாறு.

காலம் குறிப்பால் உணரப்படும் எனவே இவையும் வினைக் குறிப்பாம் என்றவாறு.

(உ-ம்) அல்லன். அல்லன், அவ்லர் எனவும், இவன், இவள், இவர் எனவும். உளன், உளள், உளர் எனவும். வல்லன், வல்லன், வல்லர் எனவும் வரும்.

இவை ஒருவாய்பாடேபற்றிப் பிறத்தலின் வேறு கூறினார். அன்ன பிறவும் என்றதனால், நல்லன், நல்லன், நல்லர்' தீயன், தீயன், தீயர்' உடையன், உடையம், உடையர் என்னும் தொடக்கத் தனவும் கொள்க.

வினைக்குறிப்புச் சொற்கள் ஒப்புணர்த்தியும் பண்புணர்த்தி யும் குறிப்புணர்த்தியும் உடைமைக்கு மாறாயும் வருவன. ஒப்பாவது வினை பயன் மெய் உரு என்பனவற்றால் ஒன்றனை யொன்று ஒத்தல், பண்பாவது ஒரு பொருள் தோன்றுங் காலத்து உடன் தோன்றி அது கெடுமளவும் நிற்பது. உண்மையாவது ஒரு

பொருட்குக் கேடு பிறந்தாலும் தனக்குக் கேடின்றித் நான் ஒன்றேயாய்ப் பலவகைப்பட்ட பொருள்தோறும் நிற்பது. குறிப்பாவது பொருட்குப் பின் தோன்றிச் சிறிது பொழுது நிகழ்வது.

வினைக்குறிப்பு இன்ன பொருள் பற்றி வரும் என இவ்விரு குத்திரங்களாலும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறியதளை யுளங் கொண்ட பவணந்தியார்,

320. பொருண்முத லாறிலுந் தோற்றிமுன் முறனுள்

வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே.

எனவரும் குத்திரத்தால் குறிப்புவிளைச் சொல்லினது பொது விலக்கணம் உணர்த்தினார்.

“பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயரும் முதனிலையாக அவற்றின்கண் தோன்றி, மேல் கருத்தா முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைப் பொருள்களும், கருத்தா ஒன்றையுமே விளக்குதல் வினைக் குறிப்புச் சொல்லினது இலக்கணமாம்” என்பது இதன்பொருள்.

(உ-ம்) குழையினன், அகத்தினன், ஆதிரையான், குறுந்தாளன், கரியன், கடுநடையன் எனவரும்.

இவை பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பவற்றால் ஒரு பொருளை வழங்குதற்குவரும் பெயராய் நில்லாது. இவன் குழையை யுடையனாயினான் என ஆறாம் வேற்றுமையது உடைமைப்பொருட்கண்ணும், அகத்தின்கண் இருந்தனன் என ஏழாம் வேற்றுமையது இடப்பொருட்கண்ணும், ஆதிரை நாளிற் பிறந்தான் என அவ்வேழாம் வேற்றுமையது காலப் பொருட்கண்ணும், குறுந்தாளையுடையன் என ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும், கருவண்ண மாயிருப்பன் எனப் பஸ்பின்கண்ணும், கடுநடையாக நடப்பான் எனத் தொழிற் பண்பின்கண்ணும் வருதலின் வினைக்குறிப்புச் சொல்லாயின. இவை முன்பு வினைக்குறிப்பாய்ப் பின்பு பொருள் களை வழங்குதற்கு வரும் பெயராய் வரின், குறிப்பு வினையால ணையும் பெயராம்.

26 பன்மையு மொருமையும் பாவறி வந்த

அன்ன மரபிற் குறிப்பொடு வருஉங்

காலக் கிளவி யுயர்திணை மருங்கின்

மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே.

இது, முற்கூறிய வினைக்குறிப்பிற்கு ஈறாமாறு கூறுகின்றது.

(இ-ள்) பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறியவந்த அத்தன்மைத்தாகிய குறிப்புப் பொருண்மை யுடையவாய் வரும் வினைச்சொல், உயர்திணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினையோடு வேறுபாடின்றி ஒப்பன. என்றவாறு.

தெரிநிலை வினையொடு ஒத்தலாவது, உயர்திணைத் தெரிநிலை வினைக்கு ஓதிய ஈறுகளுள் தமக்கு ஏற்பனவற்றோடு வினைக் குறிப்பு வந்தவழி, அவ்வவ் விற்றால் அவ்வப்பாலும் இடமும் விளக்குதல். மேல், வினைக்குறிப்பு இன்ன பொருள்பற்றி வரும் என்றதல்லது இன்ன ஈற்றால் இன்னபால் விளக்கும் எனக் கூறாமையின் அதனை இங்குக் கூறினார் ஆசிரியர்.

தன்மையும் படர்க்கையும் உணர்த்தும் தெரிநிலைவினை வீறுகளுள் குறிப்புவினைக்கு ஏற்பன - அம், ஆம், எம், ஏம், என், ஏன் என்னும் தன்மையீறு ஆறும் அன், ஆன், அள், ஆள், அர், ஆர் என்னும் படர்க்கையின் ஆறும் எனப் பன்னிரண்டாம்

(உ-ம்) கரியம். கரியாம். கரியெம், சுரியேம், சுரியென், கரியேன், எ-ம். கரியன், கரியான், கரியன், கரியாள், கரியர், கரியார் எ-ம். அவ்வவ்வீறு அவ்வய் இடமும் பாலும் விளக்கிய வாறறிக ஒழிந்த பொருட்கண்ணும் ஒட்டுக

'ஆன், ஆள், ஆரி, என்பன நிலப் பொருண்மைக்கண் அல்லது பிறபொருட்கண் பயின்று வாரா. வந்தனன் எனத் தெரிநிலைவினை. தொழின்மை மேற்படத் தொழிலுடைப் பொருள் கீழ்ப்பட முற்றாய் நின்றுணர்த்தியவாறு போல, உடையன் எனக் குறிப்புவிளையும் உடைமை மேற்பட உடையான் கீழ்ப்பட முற்றாய் நின்றுணர்த்து தலுங் கொள்க. வந்தான். உடையான் எனப் பெயராயவழித் தொழிலுடைப் பொருளும் உடையானும் மேற்பட்டுத் தோன்று மாறறிக இ.்.து, ''அ.்.றிணை மருங்கின் மேலைக் கிளவியொடு வேறுபாடிலவே'' என்பதற்கும் ஒக்கும்.

26 அஆ வான வரூஉ மிறுதி

அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை

இது, முறையானே அ∴றிணைத் தெரிநிலைவினையுள் பன்மை வினை கூறுகின்றது.

(இ-ள்) அகரமும் ஆகாரமும் வகர வுயிர்மெய்யுமாகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்றுசொல்லும் அ∴றிணைப் பன்மைப் படர்க்கை வினையாம்.

''அகரம் மூன்று காலமும் பற்றிவரும். ஆகாரம், எதிர் மறை வினையாய் மூன்று காலத்திற்கும் உரித்தாயினும், எதிர் காலத்துப் பயின்றுவரும். அகரம், இறந்தகாலம் பற்றி வருங்கால் கடதற என்னும் (காலவெழுத்து) நான்கன்முன் அன் (சாரியை) பெற்றும், பெறாதும் வரும் ஏனை எழுத்தின்முன் சிறுபான்மை இன்ளேயன்றி அன்பெற்றும் பெறாதும் வரும். நிகழ்காலத்தின்கண் நில் இன்று என்பவற்றோடு அன் (சாரியை) பெற்றும் பெறாதும் வரும். எதிர்காலத்தின்கண் பகர வகரத்தோடு அன் (சாரியை) பெற்றும் பெறாதும் வரும்'' என்பர் சேனாவரையர். இங்குக் கூறப்பட்ட காலவெழுத்துப் பற்றிய விளக்கமும் அவை பற்றிய நன்னூலார் விளக்கமும் முன்னர்க் கூறப்பட்டன.

(உ-ம்) தொக்கன, தொக்க, உண்டன, உண்ட வந்தன, வந்த சென்றன, சென்ற. எ-ம். அஞ்சின எ-ம். போயின, போயன, போய எ-ம், உண்ணாநின்றன, உண்ணாநின்ற: உண்கின்றன. உண்கின்ற. எ-ம். உண்பன, உண்ப' வருவன, வருவ, எ-ம், வரும். வரிநுவன வரினவ என உகரத்தோடு ஏனையெழுத்துப் பேறும் ஏற்றவழிக் கொள்க.

வருவ, செல்வ என்னுத் தொடக்கத்தன அகரவீறாதலும் வகரவீறாதலும் உடைய, ஆகாரம் காலவெழுத்துப் பெறாது. உண்ணா, கின்னா எனவரும்.வகரம், உண்குவ, இன்குவ என எதிர்காலத்திற் குரித்தாய்க் குகரச்சாரியை பெற்றும். ஓடுவ. பாடுவ எனக் குகரம் பெறாதும் வரும். உரிதுவ, திருமுவ என உகரச் சாரியை பெறுதலும் ஏற்றவழிக் கொள்க. ஒழிந்த எழுத்தோடும் இவ்வாறே ஒட்டுக. இச்சூத்திரத்தினை அடி யொற்றியமைந்தது.

328. அஆ விற்ற பலவின் படர்க்கை

ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்.

எனவரும் நன்னூற் குத்திரமாகும்.

''அ.ஆ என்னும் இவ்விரு விகுதியினையும் இறுதியாக வுடைய மொழிகள் அ.ஃறிணைப் பன்மைப் படர்க்கை வினை முற்றும் குறிப்பு முற்றுமாகும். இவற்றுள் ஆகாரம் எதிர்மறை வினைக்கண் வரும்' (உடம்பாட்டுவினைக்கண் வாராது)'' என்பது இதன் பொருளாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் அ.ஃறிணைப் பலவின்பாற் குரியனவாகக் கூறிய அ, ஆ, வ என்னும் மூன்றீறுகளுள் வகர வீற்றினை அகரவீற்றுள் அடக்கினார் நன்னூலார். ''வவ்வீறு அகர வீறாயடங்குதலானும், கள்ளீறு நானே நின்று ஒருவினைக் கீறாய் வாராமையானும் ஈண்டுக் கொண்டிலரென்சு'' என மயிலைநாதர் கூறும் விளக்கம் இங்கு நோக்கத்தகுவதாகும்.

212. ஒன்றன் படர்க்கை தடை வூர்ந்த

குன்றிய லுகரத் திறுதி யாகும்.

இ.ஃது அ.ஃறிணை ஒருமைவினை கூறுகின்றது.

(இ-ள்) ஒன்றனையுணர்த்தும் படர்க்கை வினையாவது, ட என்னும் மெய்களையூர்ந்து நின்ற குற்றியலுகரத்தை ஈறாக வுடைய சொல்லாம். என்றவாறு,

தகரவுகரம் மூன்றுகால வினைக்கண்ணும், றகரவுகரம் இறந்தகால வினைக்கண்ணும், டகரவுகரம் தெரிநிலை வினைக்கண் வாராது வினைக்குறிப்பின்கண்ணும் வருதலின் அம்முறையே வைக்கப்பட்டன.

தகர வுகரம் இறந்தகால வினைக்கண் வருங்கால், புக்கது, உண்டது, வந்தது, சென்றது, போயது, உரிஞியது எனக் (கால எழுத்துக்களாய) கடதறவும் யசுரமுமாகிய உயிர் மெய்ப்பின் வரும் (போனது என வகர வுயிர்மெய்ப்பின் வருதல் சிதை வெனப்படும்.) நிகழ் காலத்தின்கண் நடவா நின்றது, நடக்கின்றது. உண்ணா நின்றது. உண்கின்றது என நில். இன்று என்பனவற்றோடு (சாரியை) அகரம் பெற்றுவரும். எதிர்காலத்திள்கண் உண்பது. (செல்வது எனப் பசுரமும் வசுரமும் பெற்றுவரும்.

றகரவுகரம், புக்கன்று, உண்டன்று, வந்தன்று, சென்றன்று எனக் (காலவெழுத்துக்களாகிய) கடநற என்பன வற்றின்முன் அன் (சாரியை) பெற்று வரும். கூயின்று, கூயிற்று' போயின்று, போயிற்று என ஏனையெழுத்தின்முன் இன்பெற்று வரும். ஆண்டு இன்னின் னகரம் திரிந்தும் திரியாதும் வருதல் கொள்க.

'வந்தின்று' என்பது. எதிர்மறுத்தலையுணர்த்துதற்கு வந்த இல்லினது வகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறை வினையாம். அ்.து எதிர்மறையாதல், வந்தில, வந்திலன், வந்திலன், வந்திலர் எனவரும் ஏனைப்பாற் சொல்லால் அறியப்படும் என்பர் சேனாவரையர்.

டகரவுகரம், குண்டு கட்டு, குறுந்தாட்டு எனவரும்.

இங்குக் கூறப்பட்ட அ்.றிணை ஒன்றன்பாற் படர்க்கை வினையிளையுணர்த்துவது.

327. துறுடுக் குற்றிய லுகர வீற்ற

ஒன்றன் படர்க்கை டுக் குறிப்பினாகும்.

எனவரும் நன்னூற் சூத்திரமாகும்.

"து, று, டு, என்னும் இம்மூன்று குற்றியலுகர வீற்று விகுதி களையும் இறுதியாகவுடைய மொழிகள் அ்.றிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்புமுற்றுமாகும். இவற்றுள் டுவ்விகுதி குறிப்பின்கணன்றித் தெரிநிலைக்கண் வாராது" என்பது இதன் பொருள்.

துவ்விகுதி தன்முன்னின்ற எழுத்துநோக்கி றுவ்விகுதி யாகவும் டுவ்விகுதியாகவும் திரிந்ததெனினும் அமையுமாதலின் அவ் விகுதியும் டுவ்விகுதியும் துவ்விகுதியின்பிற் கூறப்பட்டன.

"குற்றியலுகர வீற்ற" என்றமையான் எற்று என்றாற் போல ஏது. யாது என்பனவுங் காரணப் பெயராமன்றி வினைக் குறிப்புமாம் என்பதூஉம், அங்ஙனமாகவே "ஒருமொழி யொழி தன்னினங் கொளற் குரித்தே" என்பதனான் அது இது என்றற்றொடக்கத்து முற்றுகரவீற்றவும் வினைக்குறிப்பாம் என்பதூஉம் பெற்றாம்" என்பர் சிவஞானமுனிவர்.

218. பன்மையு மொருமையும் பாவறி வந்த

அம்மு விரண்டு ம.்.றிணை யல்வே

இது, விரிந்தது தொகுத்துணர்த்துகின்றது.

(இ-ள்) பன்மையும் ஒருமையுமாகிய பாலறிய வந்த அவ் ஆறீற்றுச் சொல்லும் அ.்.றிணையனவாம். என்றவாறு

அ,ஆ,வ,து,று,டு என்னும் ஆற்றுகளே அ.்.றிணைக் கண் ஒருமையும் பன்மையும் உணர்த்துவன. இவையன்றிப் பிறிதில்லை என இச்சூத்திரத்தால் வரையறை செய்தவாறு.

219. அத்திணை மருங்கி விருபாற் கிளவிக்கும்

ஒக்கு மென்ப எவனென் வினாவே

இ.்.து அ.்.றிணை இருபாற்கும் உரியதோர் வினைக்குறிப்புக் கூறுகின்றது.

(இ-ள்) எவன் என்னும் வினாச்சொல் மேற்கூறப்பட்ட அ.்.றிணை இரண்டு பாற்கும் ஒப்பவுரியது என்று சொல்லுவர் ஆசிரியர். என்றவாறு.

(உ-ம்) அ.்.தெவன், அவையெவன் எனவரும்.

‘‘னகரவீறாய் இரண்டுபாற்கும் பொதுவாய் வருதலின், இதனை வேறுகூறினார். எவன் என்பதோர் பெயரும் உண்டு. அ.்.து இக்காலத்து ‘என்’ என்றும். ‘என்னை’ என்றும் நிற்கும் ஈண்டுக் கூறப்பட்டது வினைக்குறிப்பு முற்று’’ என்பர் சேனாவரையர். எவன் என்பது பெயராயிற் படுத்த லோசையாற் கூறப்படும்.

349. எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.

என்பது நன்னூல்

‘‘வினாப் பொருண்மையைத் தரும் எவனென்னும் வினைக் குறிப்புமுற்று. அ.்.றிணையிருபாற்கும் பொது வினையாம்’’ என்பது இதன் பொருள்.

220. இன்றிய வுடைய வென்னுங் கிளவியும்

அன்றுடைத் தல்ல வென்னுங் கிளவியும்

பண்புகொள் கிளவியும் உளவென் கிளவியும்

பண்பி னாகிய சினைமுதற் கிளவியும்

ஒப்பொடு வருடங் கிளவியொடு தொகைஇ

அப்பாற் பத்துங் குறிப்பொடு கொள்ளும்.

இ.்.து அ.்.றிணை வினைக்குறிப்புக் கூறுகின்றது.

(இ-ள்) இன்று, இல, உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள எனச் சொற்பற்றிவரும் ஏழும், பண்புகொள் கிளவி, பண்பினாகிய சினைமுதற் கிளவி, ஒப்பொடு வருஉங் கிளவி எனப் பொருள்பற்றி வரும் மூன்றும் ஆகப் பத்தும் வினைக்குறிப்புச் சொல்லாம். என்றவாறு.

இவற்றுள் பண்புகொள் கிளவி என்பது நிறமுதலிய பண்புணர்த்துஞ் சொல்லைத் தனக்கு முதனிலையாகக் கொண்டது. பண்பினாகிய சினைமுதற்கிளவி என்பது, மேற்குறித்த பண்பொடு பொருத்திய சினையொடு முதலையுணர்த்துஞ் சொல். ஒப்பொடு வருடங் கிளவி என்பது, உவமப் பொருள்பற்றி வரும் சொல்.

இன்று - கோடின்று,

இல - கோடில

மேற்குறித்தவற்றுள் இன்று. இல' உடைத்து, உடைய: அன்று, அல்ல, உள என்பன ஒருமையும் பன்மையுமாகிய சொல்நிலையை யுணர்த்தின. அல்லன பொருள் நிலையை யுணர்த்தின. உள என்னும் பன்மைக்கு இல என்னும் பன்மை எதிர் மறையாம். இதற்கு ‘உளது’ என்னும் ஒருமையீறு சிறுபான்மையாதலிற் கூறிற்றிலர். ‘உடைத்து’ என்னும் ஒருமையும் ‘உடைய’ என்னும் பன்மையும் பெரும்பான்மை உறுப்பின் கிழமையும் பிறிதின் கிழமையும் பற்றி வரும். இன்று, இல என்பன இவ்வுடைமைக்கு மறுதலையாய் நிற்கும். அன்று, அல்ல என்பன முறையே ஒருமையும் பன்மையும் உணர்த்தும். ஒன்றென முடித்தலான் நன்று. தீது. நல்ல, தீய என்பனவுங் கொள்சு என்பர் நச்சினார்க்கினியர்.

221. பண்மையு மொருமையும் பாலறி வந்த

அன்ன மரபிற் குறிப்பொடு வருடங்

காலக் கிளவி ய.ஂறிணை மருங்கின்

மேலைக் கிளவியொடு வேறுபா டிலவே

இ.ஂது அவ் வினைக்குறிப்பிற்கு ஈறாமாறு கூறுகின்றது

(இ-ள்) பன்மையும் ஒருமையுமாகிய பால்களை அறிய வந்த அத்தன்மைத்தாகிய இலக்கணமுடைய வினைக்குறிப்புச் சொற்கள். அ.ஂறிணையிடத்து மேற்கூறிய தெரிநிலை வினையின் ஈறுகளோடு ஈறு வேறுபாடு இல. என்றவாறு.

வேறுபாடில என்றது, அ.ஂறிணையிடத்துத் தெரிநிலை வினைக்கோதிய ஈற்றுட் பொருந்துவன விளைக்குறிப்பின் கண்ணும் வருங்கால் அவ்வவ்ளீற்றால் இடமும் பாலும் உணர்த்துதலில் வேறுபாடில் எனத் தெளிவித்தவாறாம்

அகரவீறும்,து,று என்னும் ஈறுகளும் அவ்வீறு பற்றிப் பாலும் இடமும் உணர்த்துதல் முற்காட்டியவற்றுட் காண்க. ஆகாரவீறு ‘இம்மணி பொல்லா’’ என எதிர்மறைக்கண் வந்தது. ‘கதவ’ (சதத்தினையுடைய) என வகரவீறு பன்மைப் பாலுணர்த்தியது.

222. முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி

இன்மை செப்பல் வேறென் கிளவி

செய்ம்மன செய்யுஞ் செய்த வென்னும்

அம்முறை நின்ற ஆயெண் கிளவியும்

பிரிவு வேறுபடுஉஞ் செய்திய வாகி

இருதிணைச் சொற்கும் ஓரன்ன வுரிமைய.

இ∴து இருதிணைக்கும் உரிய வினைச் சொற்களின் பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

(இ-ள்) முள்ளிலை முதலாகச் செய்த என்பது ஈறாகக் கூறிய முறையால் நின்ற எண்வகைச் சொல்லும், (பொதுமையிற்) பிரிந்து (ஒருகால் உயர்திணையுணர்த்தியும் ஒருகால் அ∴றிணை யுணர்த்தியும்) வேறுபடுந் தொழிலையுடையவாய், இருதிணைச் சொல்லாதற்கும் ஒந்த வுரிமையுடையன. என்றவாறு.

முன்னிலை வினைச்சொல்லாவது முன்னின்றான் தொழி லுணர்த்துவது. வியங்கோள் என்பது ஏவற்பொருளதாய் வருவது. வியம் - ஏவல். வியங்கோள் ஏவற்பொருளைக் கொண்ட வினைச்சொல். வாழ்த்துதல் முதலிய பிற பொருளு முளவேனும் மிகுதிபற்றி வியங்கோள் எனப் பெயர்பெற்றது. வினையெஞ்சு கிளவி என்பது, வினைச்சொல்லை எச்சமாகவுடைய வினைச் சொல். இன்மை செப்பல், இல்லை இல் என வரும் வினைச் சொற்கள். வேறு என் கிளவி – வேறு என்னும் சொல், செய்ம்மன என்பது மனவீற்று முற்றாய் எதிர்கால முணர்த்தும் வினைச் சொற்களைக் குறிக்கும் வாய்பாடு, செய்யும் என்பது, முற்றும் எச்சமும் ஆகிய இருநிலைமையு முடைத்தாய் உம்மீற்றான் நிகழ்கால முணர்த்தும் வினைச்சொல் வாய்பாடு, செய்த என்பது அகரவீற்றுப் பெயரெச்சமாய் இறந்தகால முணர்த்தும். வினைச் சொல் வாய்பாடு, செய்ம்மன, செய்யும். செய்த என்னும் இம் மூன்று வாய்பாட்டானும், அவ்வீறுகளை யுடையனவாய்க் கால முணர்த்தும் உண்மன, உண்ணும், உண்ட என்னும் தொடக்கத்தன எல்லாம் தழுவப்பட்டன. எல்லாத் தொழிலும் செய்தல் வகையா யடங்குமாதலின் செய் என்னும் பொதுவாய்பாடு எல்லாத் தொழில்களையும் அகப்படுத்து நிற்கும் எனவே செய் என்னும் பொதுவாய்பாட்டால் நட, வா முதலிய எல்லாவீற்று வினைப்பகுதிகளும் தழுவப்படுவனவாயின.

இருதிணைப் பொதுவினைகளாகத் தொல்காப்பியனார் கூறிய இவற்றுடன் தன்மை வினைச்சொல்லையும் என்னும் அ∴றிணைப் பன்மையினோடொத்த ஒருமை வினையாகிய உண்டு என்பதனையும் சேர்த்து,

329. தன்மை முன்னிலை வியங்கோள் வேறிலை

உண்டி ரெச்ச மிருதிணைப் பொதுவினை.

எனச் சூத்திரஞ் செய்தார் நன்னூலார்.

''தன்மைவினை வினைக்குறிப்பு முற்றும், முன்னிலை வினை வினைக்குறிப்பு முற்றும், வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று வினைக்குறிப்பு முற்றும், பெயரெச்சவினை வினைக்குறிப்பும், விளை யெச்சவினை வினைக்குறிப்பும் இருதிணைக்கும் பொது வினையாம்'' என்பது இதன் பொருள்.

பெயரெச்சமாயும் முற்றாயும் வரும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைச்சொல் 'ஈரெச்சம்' என்பதனுள் பெயரெச்ச மாயடங்குதலானும், செய்ம்மன என்னும் வாய்பாட்டு வினைச் சொல் தம் காலத்துப் பெருகவழங்காமையானும் அவ்விரு வாய்பாடுகளையும் பவணந்தியார் இச்சூத்திரத்து எடுத்தோ தாராயினார்.

223. அவற்றுள்,

முன்னிலைக்கிளவி இ ஐ ஆயென வரூஉ மூன்றும்

ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.

இது, முன்னிலையொருமைச் சொற்கள் இருதிணைப் பால்களுக்கு உரியவாமாறு கூறுகின்றது.

(இ-ள்) கூறப்பட்ட விரவு வினைகளுள் முன்னிலை வினைச் சொல்லாவது இசுரவீறும் ஐகாரவீறும் ஆயிறுமாகிய மூன்றுமாம்: (அவை உயர்திணையுள்) ஒருவனுக்கும் ஒருத்திக்கும் (அஃறிணை யுள்) ஒன்றற்கும் ஒப்பவுரியன. என்றவாறு.

இசுரம் தடற வூர்த்து எதிர்காலம் பற்றிவரும். ஐகாரம் அம்மீற்றிற்குரியனவாக முற்கூறிய எழுத்துப்பெற்றும், ஆயீறு ஆமீற்றிற் குரியனவாக முற்கூறிய எழுத்துப் பெற்றும் மூன்று காலமும் பற்றி வரும்.

(உ-ம்) உரைத்தி, உண்டி, தின்றி, எ-ம். உண்டனை, உண்ணா நின்றனை, உண்டை எ-ம். உண்டாய் உண்ணா நின்றாய், உண்பாய். எ-ம். வரும். ஒழிந்த எழுத்தோடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க. 'ஐய சிறிதென்னை ஊக்கி'' என இகரம் சிறுபான்மை ககரம் பெற்று வந்தது.

“இனி, ஒரு காலத்திற்கேயேற்கும் இகரம் முற்கூறிளமையின், உண். இன். இட, நட வா, போ என்னுத் தொடக்கத்தன கொள்க” என்றார் இளம்பூரணர். இவ்வுரைக் குறிப்பினைக் கூர்ந்து நோக்குங் கால் நட வா, போ எனவரும் வினைப் பகுதிகளே இ, ஐ. ஆய் முதலிய விகுதி வேண்டாது முன்னிலை யொருமையை யுணர்த்தி நிற்கும் என்பது இளம்பூரணர் கருத்தெனக் கொள்ள வேண்டியுளது. உண்ணாய், இன்றாய், நடவாய். கிடவாய், என ஆய் என்னும் ஒருமை விகுதியொடு புணர்ந்து நின்று ஒருமையுணர்த்தி யனவே ஆய் விகுதி கெட, உண், தின், நட, கிட, என நின்றன என்பது.

“ செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொல்

செய்யென் கிளவி யாகிட னுடைத்தே” (54)

எனவரும் எச்சவியற் சூத்திரத்தாற் பெறப்படும் என்பது சேனாவரையர் கருத்தாகும். இவ்விருவேறு கருத்துக்களுள் இளம்பூரணர் கருத்தைத் தழுவியமைந்தது.

334. ஐயா யிகர வீற்ற மூன்றும்

ஏவலின் வரூஉம் எல்லா விற்றவும்

முப்பா லொருமை முன்னிலை மொழியே.

எனவரம் நன்னூற் சூத்திரமாகும்.

“ஐ. ஆய், இ என்னும் இம்மூன்று விகுதியீற்றனவான முற்றுவினைகளும், ஏவற்பொருளில்வரும் இருபத்து மூன்றீற்றன வான வினைச்சொற்களும் (ஒருவன், ஒருத்தி, ஒன்று என்னும்) முப்பாலொகுமைகளையும் உணர்த்தும் முன்னிலை வினைச் சொற்களாம்” என்பது இதன் பொருளாகும்.

இதன்கண் ‘எவலின்வரூஉம் எல்லாவிற்றவும்’ என்றது, நட என்பது முதல் அ.ஃகு என்பதுவரை இருபத்துமூன்று ஈற்றனவாக முன் விரித்துரைக்கப்பட்ட செய்யென்னும் வாய்பாட்டு ஏவல்வினைப் பகுதிகளை, இந்நுட்பம்

136. நட வா மடி சீ விடுகூ வேவை

நொப் போ வெள வுரிஞ் உண்பொருந் திரும்தின்

தேய் பார் செல் வவ் வாழ்கேள் அ.்.கு என்று

செய்யெ னேவல் வினைப்பகாப் பதமே.

எனவரும் நன்னூற் சூத்திரத்தால் நன்கு புலனாதல் காணலாம். இவ்விரு குத்திரங்களையும் ஒருங்கு வைத்துணருங்கால் நட, வா, உண், தின் என்றற்றொடக்கத்து முதனிலைகளே ஆய் முதலிய விகுதியோடு புணராது தனித்து நின்று ஓசை வேறுபாட்டால் முன்னிலை யேவலொருமை யெதிர்கால வினை முற்றுப் பொருண்மையுணர்த்துவன என்பது பவணந்தியார் கொள்கை யாதல் நன்கு விளங்கும். ‘‘இம்மூன்று விகுதியிற்றனவான முற்றும். ஏவலின் வரும் இருபத்து மூன்றிற்றவான மொழிகளும் ஒருமை முப்பாலையும் உணர்த்தும் முன்னிலை வினைக்குறிப்பு முற்றுக்களாம்’’ எனவரும் மயிலைநாதர் உரையினால் நன்னூலார் கொள்கை தெற்றெனப் புலனாதல் காணலாம்.

224. இர் ஈர் மின் என வருஉ மூன்றும்

பல்லோர் மருங்கிலும் பலவற்று மருங்கிலுஞ்

சொல்லோ ரணைய வென்மனார் புலவர்.

இது, முன்னிலைப் பன்மை வினைச்சொல் இவையென்று உணர்த்துகின்றது.

(இ-ள்) இர்,ஈர்,மின் என்னும் ஈற்றையுடைய மூன்று சொல்லும் பல்லோர்கண்ணும் பலவற்றின்கண்ணும் சொல்லுதற்கண் ஒத்தவுரிமைய என்பர் ஆசிரியர். என்றவாறு.

‘‘இர் ஈறு அரி ஈற்றிற்குரிய எழுத்துப் பெற்றும் ஈஆர் ஆற்றிற்குரிய எழுத்துப் பெற்றும் மூன்று காலமும் பற்றிவரும். மின் ஈறு பிறவெழுத்துப் பெறாது ஏற்றவழி உகரம் (சாரியை) பெற்று எதிர்காலம் பற்றிவரும்’’ என்பர் சேனாவரையர்,

(உ-ம்) உண்டனிர், உண்ணா நின்றனீர், உண்குவிர், எ-ம். உண்டீர், உண்ணாநின்றீர், உண்குவீர் எ-ம். உண்மின், தின்மின், உரிஞுதிமின் எ-ம். வரும்.

முன்னிலை வினைக்குறிப்பு, உயர்திணை விளைக் குறிப்பிற்கு ஓதிய பொருள் பற்றி ஐ, ஆய், இர், ஈர் என்னும் நான்கீற்றவாய் வரும்.

(ஒ-ம்) கழலினை, கழலினாய், கழலினிர், கழலினீர் என வரும். ஏனையவற்றோடும் இவ்வாறேயொட்டிக் கொள்க. இகர வீறு குறிப்புவினைக்கு வாராது.

முன்னிலைப் பன்மைவினையும் வினைக்குறிப்புமாகிய இவற்றை

336. இர் ஈ ரீற்ற விரண்டு மிருதிணைப்

பன்மை முன்னிலை மின்னவற் றேவல்

எனவரும் சூத்திரத்தித்தாற் குறிப்பிடுவர் நன்னூலார்.

''மின் அவற்று ஏவல்'' என்றமையான் உண்ணும், தின்னும் நீர்'என உம் ஈற்றவாய் வரும் பன்மையேவல் புதியன என்பதூஉம். அவை 'புதியன புகுதலும் வழுவல'' என்பதனான் அமையு மென்பதூஉம் பெற்றாம்'' என்பர் சிவஞானமுனிவர்.

225. எஞ்சிய கிளவி விடந்தொடு சிவணி

ஐம்பாற்கு முரிய தோன்ற வாறே.

இது, முற்குறித்த விரவுவினைகளுள், முன்னிலை யொழித்து ஒழிந்தவற்றின் இலக்கணங் கூறுகின்றது.

(இ-ள்) முன்னிலை வினையொழித்து ஒழிந்த ஏழு வினைச் சொல்லும் மூன்றிடத்தொடும் பொருந்தி ஐந்து பாலுக்கும் உரியனவாம்: தத்தம் பொருட்கண் தோன்றுமிடத்து. என்றவாறு.

இவ்வாறு பொதுவகையான் எல்லாவிடத்தோடும் எல்லாப் பாற்கும் உரியவாதலெய்தினும் பின்னர் விலக்கப்படுவன ஒழித்து ஒழிந்த இடமும் பாலும் கொள்க

(உ-ம்) அவள் செல்க, அவள் செல்க, அவர் செல்க, அது செல்க, அவைசெல்க எ-ம். உண்டு வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வத்தன, வந்தேன், வந்தேம் எ-ம். அவன் இல்லை. அவள் இல்லை, அவர் இல்லை, அ∴து இல்லை. அவை இல்லை, யான் இல்லை, யாம் இல்லை, நீ இல்லை, நீயிர் இல்லை எ-ம். அவன் வேறு, அவன் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு, யான் வேறு. யாம் வேறு, நீ வேறு, தீயிர் வேறு எ-ம். அவன் உண்மன. அவள் உண்மன, அவர்

உண்மன, அ∴து உண்மன, அவை உண்மன, யான் உண்மன, யாம் உண்மன, நீ உண்மன, நீயிர் உண்மன எ-ம். அவன் உண்ணும் உணவு, அவள் உண்ணும் உணவு, அவர் உண்ணும் உணவு, அ∴து உண்ணும் உணவு, அவை உண்ணும் உணவு, நீ உண்ணும் உணவு, நீயிர் உண்ணும் உணவு, எ-ம். அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும் எ-ம். அவன் உண்ட உணவு, அவள் உண்ட உணவு, அவர் உண்ட உணவு, அ∴து உண்ட உணவு, அவை உண்ட உணவு, யான் உண்ட உணவு, யாம் உண்ட உணவு, நீ உண்ட உணவு, நீயிர் உண்ட உணவு எ-ம். வரும்.

தொல்காப்பியனார் குறித்த விரவு விலைக்குறிப்பாகிய வேறு இல்லை என்பவற்றுடன் உண்டு என்னும் வினைக் குறிப்பினையும்

சேர்த்து,

538. வேறில்லை யுண்டைய பால் மூவிடத்தன.

என இவை மூன்றும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியனவாகச் சூத்திரஞ்செய்தார் நன்னூலார். இவற்றுள் ‘உண்டு’ என்பது அ∴றிணை யொருமைக்கேயுரியதாயினும் தம் காலத்தில் பொது வினையாக வழங்குதல் கண்ட பவணந்திமுனிவர் அதனை ஈண்டுப் புதியன புகுதலாகக் கொண்டுரைத்தார்.

225. அவற்றுள்.

முன்னிலை தன்மை யாயீ ரீடத்தொடும்

மன்னா தாகும் வியங்கோட் கிளவி

இந்து எய்தியது. விலக்கிற்று.

(இ-ள்) மேல் எஞ்சிய கிளவி எனப்பட்ட ஏழனுள் வியங்கோள்வினை, முன்னிலையும் நன்மையுமாகிய இரண்டிடத் தோடு நிலைபெறாதாகும். என்றவாறு.

“மன்னுதல் என்றது. பெரும்பான்மையும் நிகழுதல்” எனக் கொண்டு, முன்னிலை தன்மை என்னும் இரண்டிடத்தும் செல்வன வாகிய வியங்கோள் வினைச்சொல் சிறுவரவில” என்பர் இளம்பூரணர்.

(உ-ம்) நீர் செல்க, நீ செல்க யான் செல்க எனவரும்.

இவ்வாறு தன்மை முன்னிலையிடங்களில் சிறு வரவின எனக் குறித்த வியங்கோள் வினை, தம் காலத்துப் பெருவரவினவாய் வழங்குதல் கண்ட பவணந்தி முனிவர்,

337. கயவொடு ரவ்வொற் நீற்ற வியங்கோள்

இயலு மிடம்பா லெங்கு மென்ப. - எனச் சூத்திரஞ் செய்தார்.

வரும். அவள் வரும். அது வரும். அவை வரும் எ-ம். அவன் உண்ட உணவு, அவள் உண்ட உணவு, அவர் உண்ட உணவு, அ∴து உண்ட உணவு, அவை உண்ட உணவு, யான் உண்ட உணவு. யாம் உண்ட உணவு, நீ உண்ட உணவு, நீயிர் உண்ட உணவு எ-ம். வரும்.

தொல்காப்பியனார் குறித்த விரவு வினைக்குறிப்பாகிய வேறு இல்லை என்பவற்றுடன் உண்டு என்னும் வினைக் குறிப்பினையும்

சேர்த்து,

338. வேறில்லை யுண்டைம் பால் மூவிடத்தன.

என இவை மூன்றும் ஐம்பால் மூவிடத்திற்கும் உரியளவாகச் சூத்திரஞ்செய்தார் நன்னூலார். இவற்றுள் ‘உண்டு’ என்பது அ∴றிணை யொருமைக்கேயுரியநாயினும் தம் காலத்தில் பொது வினையாக வழங்குதல் கண்ட பவணந்திமுனிவர் அதனை ஈண்டுப் புதியன புகுதலாகக் கொண்டுரைத்தார்.

226. அவற்றுள்.

முன்னிலை தன்லை யாயீ ரிடத்தொடும்

மன்னா தாகும் வியங்கோட் கிளவி.

இ∴து எய்தியது. விலக்கிற்று.

(இ-ள்) மேல் எஞ்சிய கிளவி எனப்பட்ட ஏழனுள், வியங்கோள்வினை, முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டிடத் தோடு நிலைபெறாதாகும். என்றவாறு.

''மன்னுதல் என்றது. பெரும்பான்மையும் நிகழுதல்'' எனக் கொண்டு, முள்ளிலை தன்மை என்னும் இரண்டிடத்தும் செல்வன வாசிய வியங்கோள் வினைச்சொல் சிறுவரவின'' என்பர் இளம்பூரணார்.

(உ-ம்) நீர் செல்க, நீ செல்க, யான் செல்க எனவரும்.

இவ்வாறு தன்மை முன்னிலையிடங்களில் சிறு வரவின எனக் குறித்த வியங்கோள் வினை, தம் காலத்துப் பெருவரவினவாய் வழங்குதல் கண்ட பவணந்தி முனிவர்,

337. கயவொடு ஏவ்வொற் றீற்ற வியங்கோள்

இயலு மிடம்பா லெங்கு மென்பட - எனச் சூத்திரஞ் செய்தார்.

''கயவென்னும் இரண்டு உயிர்மெய்யினையும் ஏகர வொற்றினையும் இறுதியாகவுடையன வியங்கோள் விளை முற்றாம். அவை மூவிடத்தினும் ஐம்பாலினும் ஆக எங்கும் செல்லுமென்று கூறுவர் புலவர்'' என்பது இதன் பொருளாகும்.

வியம் -ஏவல், வியங்கோள் ஏவற் பொருண்மையைக் கொண்ட வினை. 'ஆ வாழ்க' என வாழ்த்துதற் பொருளிலும் 'யானும் நின்னோடு உடனுறைக' என வேண்டிக் கோடற் பொருளிலும் வரும்! தொல்காப்பியர் வியங்கோளிறு இளையென விளங்க எடுத்துரையாராயினும், ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்'' (தொல் – எழுத்து) என அகரவீறும் 'சொல் வரைந் தறியப் பிரித்தனர் காட்டல்'' என அல்லினும், ''மறைக்குங்காலை மரிஇய தொரால்'' என ஆலீறும் வியங்கோள் விகுதிகளாக உடம்பொடு புணர்த்துக் கூறியுள்ளமை காணலாம். எனினும், பவணந்திமுனிவர் காலத்து வியங்கோள் விருதிகளாகப் பெருக வழங்கிய க, இய, இயர்

என்பனவாதலின் ‘கயவொடு ரவ்வொற் றிற்ற வியங்கோள்’என இம்மூன்றையுமே வியங்கோள் விகுதிகளாகக் குறித்துள்ளார்.

227. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை

யவ்வயின் மூன்று நிகழுங் காலத்துச்

செய்யுமென்னுங் கிளவியொடு கொள்ளா.

இதுவும் அது.

(இ-ன்) பல்லோர் படர்க்கையும், முன்னிலையும், தன்மையுமாகிய அப்பொருட்கண் வரும் மூன்றும் நிகழ்காலத்து வரும் செய்யும் என்னும் முற்றுச் சொல்லொடு பொருந்தா. என்றவாறு,

எனவே படர்க்கையில் உயர்திணை ஆணொருமை பெண்ணொருமை, அ.்.றிணை ஒருமை பன்மை என்னும் நான்கு பால்களினும் வரும் என்பதாம். நிகழுங்காலத்துச் செய்யும் என்னும் கிளவி என அச்சொல்லால் தோன்றும் காலம் உணர்த்தியவாறு.

செய்யுமென்னும் முற்றுச்சொல் உயர்திணைப் பன்மைப் படர்க்கையிடத்தும் முன்னிலையிடத்தும் தன்மையிடத்தும் வருதலில்லை என்னும் இவ்விதியினை,

347. பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்

செல்லா தாகுஞ் செய்யுமென் முற்றே.

எனவரும் சூத்திரத்தால் உணர்த்தினார் பவணந்திமுனிவர்.

228. செய்து செய்யூச் செய்பு செய்தெனச்

செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென

அவ்வகை மொன்பதும் வினையெஞ்சு கிளவி.

இது வினையெச்ச வாய்பாடுகளைத் தொகுத்துக் கூறுகின்றது.

(இ-ள்) செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என ஈற்றால் வகைப்படுத்தப்பட்ட அவ் ஒன்பது வாய்பாடுகளும் வினையெச்சச் சொல்லாம் என்றவாறு.

அவ்வகை ஒன்பதும் என்றது, உ, ஊ, பு, என, இயர், இய, இன், அ. என இறுதிநின்ற இடைச்சொல்லால் வேறுபட்ட ஒன்பது வாய்பாடுகளம் என்றவாறு. வினையெச்சமாவது வினையை ஒழிபாகவுடைய சொல்' அது மற்றொரு வினைச் சொல்லோடல்லது முற்றுப் பெறாது நிற்கும் வினைச்சொல்லாதலிற் பாலுணர்த்தாது காலங்காட்டி நிற்கும்.

'செய்து' என்னும் வாய்பாட்டில் வினையெச்ச விகுதியாகிய உகரம், நக்கு, உண்டு, வந்து, சென்று எனக் கடதற ஊர்ந்து இயல்பாயும். எஞ்சி, உரிஞி, ஓடி என ஏனையெழுத்தூர்ந்து இகரமாய்த் திரித்தும், ஆய், போய் என நெடிலீற்று முதனிலை முன்னர் யகரம் வரத் தான்கெட்டும் இறந்த காலம் பற்றி வரும். உகரம் ஒன்றாய் நின்று கடதறவூர்ந்து உடன்பாட்டு வினைக்கண் பயின்று வருதலானும், எதிர்மறை யெச்சமெல்லாம் பெரும் பான்மையும் உகரவீறாயல்லது வாராமையானும் உகரவீறே இயல்பெனவும் இசுரமும் யகரமும் அதன் திரிபெனவும் விளக்குவர் சேனாவரையர்.

'செய்யூ' என்னும் வாய்பாட்டில் ஊகாரம், உண்ணுஉ வந்தான், தின்னூஉ வந்தான் எனப் பின்வருந் தொழிற்கு இடையின்றி, முன்வருந் தொழில்மேல் இறந்தகாலம் பற்றி வரும். ''செய்யாவென்னும் வினையெஞ்சு கிளவியும்'' என எழுத்ததிகாரத்திற் கூறப்படும் 'செய்யா' என்னும் ஆகாரவீற்று வினை யெச்சமும் செய்யூ' என்னும் இவ்வாய்பாட்டில் அடங்கும். அது, உண்ணா வந்தான் என இறந்தகாலம் பற்றி வரும்.

'செய்பு'' என்னும் வாய்பாட்டில் பகரவுகரம் 'நகுபு வந்தான் என நிகழ்காலம் பற்றி வரும். நகுபு வந்தான் நகரநின்று வந்தான் என்பது பொருள்.

'செய்தென' என்னும் வாய்பாட்டில், எனவென்பது கடதற ஆர்ந்து, முடிக்குஞ் சொல்லால் உணர்த்தப்படுத் தொழிற்குத் தான் காரணம் என்பதுபட இறந்தகாலம் பற்றி வரும்.

(உ-ம்) சோலை புக்கென வெப்பம் நீங்கிற்று: உண்டெனப் பசி கெட்டது: உரைத்தென உணர்ந்தான் மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று எனவரும்.

'செய்யியர்,' 'செய்யிய என்னும் வாய்பாடுகளில் இயர், இய என்பன உண்ணியர் வத்தான், உண்ணிய வந்தான் என எதிர்காலம் பற்றி வரும். போகியர் போகிய என இவ்விகுதிகள் சிலவிடங்களில் ககரம் (சாரியை) பெற்று வருதலும் கொள்ளப்படும்.

'செயின்' என்னும் வாய்பாட்டில் இன் என்பது மழை பெய்யிற் குள நிறையும்' என எதிர்காலம் பற்றிக் காரணப் பொருட்டாய் வரும். நடப்பின் உரைப்பின் என ஏற்ற வழிப் பகரம் பெற்றுவருதலும் கொள்க.

'செய்' என்னும் வாய்பாட்டில் அகரம்,'மழை பெய்யக் குளம் நிறைந்தது' என இறந்த காலமும்,'ஞாயிறு பட வத்தான்' என நிகழ்காலமும்,'உண்ணவந்தாள்' என எதிர் காலமும் ஆகிய மூன்று காலமும் பற்றி வரும். உரைப்ப உரைக்க என ஏற்றவழிப் பகரமும் ககரமும் பெறுதல் கொள்க

'செயற்கு' என்னும் வாய்பாட்டில் குகரம் உணற்கு வந்தான்' என எதிர்காலம் பற்றிவரும். 'செயற்கு' என்னும் இவ்வினையெச்சம் செயல் + கு = செயற்கு என உருபேற்று நின்ற தொழிற்பெயரோடு ஒப்புமை யுடைத்தாயினும் பெயரும் உருபும் பருப்பப் பிளவு பட்டிசைத்தல் போன்று பிளவுபடாது ஒன்றுபட்டி சைத்தலால் உருபேற்ற தொழிற்பெயர் வேறெனவே கொள்ளப்படும்.

செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய என்னும் வினையெச்ச வாய்பாடுகள் ஐந்தும் இக்காலத்து வழக்கினும் வாராவாயினும் சான்றோர் செய்யுளுன் அவற்றது வேற்றுமை யெல்லாம் கண்டுணர்ந்து கொள்ளலாம்.

229. பின்முன் கால்கடை வழியிடத் தென்னும்

அன்ன மரபிற் காலங் கண்ணிய

என்ன கிளவியு மவற்றியல் பினவே.

இதுவும் ஒருசார் வினையெச்ச வாய்பாடு உணர்த்துகின்றது.

(இ-ள்) பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் ஈற்றினையுடையவாய் வருவனவும், அவைபோலக் காலமுணர்த்தி வருவன பிறவும் வினையெச்ச வினைச்சொற்களாம். என்றவாறு.

(உ-ம்) 'நீயிர் பொய் கூறியபின் மெய்கூறுவார் யார்' என இறந்தகாலம் பற்றியும்,'நீ இவ்வாறு கூறுகின்றபின் உரைப்ப துண்டோ' என எதிர்காலம் பற்றியும் பின்னீறு வரும். 'மருந்து தின்னாமுன் நோய் தீர்ந்தது' என் முன்னீறு இறந்தகாலம் பற்றிவரும். காலீறு 'விடுத்தக்கால்' என இறந்த காலமும்,'நாடுங் கால்' என நிகழ்காலமும் எதிர்காலமும் ஆகிய மூன்றுகாலமும் பற்றிவரும். 'தூவாமை வந்தக்கடை' எனக் கடையீறு இறந்தகாலம் பற்றிவரும் 'உரைத்தவழி' 'உரைத்தவிடத்து' என இறந்தகாலமும்,'உரைக்கும் வழி''உரைக்குமிடத்து' என நிகழ்காலமும் எதிர்காலமுமாகிய மூன்றுகாலமும் பற்றி வழியீறும் இடத்தீறும் வரும்.

இங்குக் கூறப்பட்ட பின் முன் முதலாயின் காலங் கண்ணிய வினைச் சொல்லீறுகளாய்ப் பிளவுபடாது ஒன்று பட்டிசைத்த வழியே இவை வினையெச்ச வாய்பாடுகளாகக் கொள்ளப்படும். கூதிர் போய வின் வந்தான்,' எனவும் 'நின்ற விடத்து நின்றான்' எனவும் இவை பிளவுபட்டிசைந்த வழிப் பெயரெச்சத் தொடர்களாகக் கொள்ளப்படும். 'அள்ள மரபிற் காலங்கண்ணிய என்ன கிளவியும்' என்றதனால் உண்பாக்கு, வேபாக்கு எனவரும் பாக்கீறும் உண்பான், வருவான் எனவரும் ஆவீறும், 'நடக்கலும்' எனவரும் உம்மீறும் 'அற்றால்' எனவரும் ஆலீறும், 'அவா வுண்டேல்' எனவரும் ஏறும்,'கூறாமல்' எனவரும் மல்லீறும், 'கூறாமை' எனவரும் மையீறும் வினையெச்ச விகுதிகளாகக் கொள்ளப்படும்.

'என்ன கிளவியும்' என்றதனால், அன்றி, இன்றி, அல்லது, அல்லால் எனவரும் குறிப்பு வினையெச்சமும் கொள்க என்பர் சேனாவரையர்.

வினையெச்சமாவது இதுவென உணர்த்தப்போந்த நன்னூலார்.

341. தொழிலுங் காலமுத் தோன்றிப் பால்வினை

ஒழிய நிற்பது வினையெச் சம்மே.

என்றார். ‘‘செயலையும் காலத்தையும் காட்டிப் பால் தோன்றாது வினையெஞ்ச நிற்பது வினையெச்சமாம்.’’ என்பது இதன் பொருள். தொல்காப்பியனார் முதற்கண்குறித்த விளை யெச்ச வாய்பாடுகள் ஒன்பதுள் செய்யூ என்பதனுள் அடங்கிய செய்யா என்பதனைத் தவி வாய்பாடாகக் கொண்டும், அவர் குறித்த செயற்கு என்னும் வாய்பாட்டினையும் பின்முன் முதலிய பிற வாய்பாடுகளும், இன்ன என்பதனால் அடக்கியும், அவர் கூறாத வான், பான், பாக்கு என்பனவற்றைச் சேர்த்தும்,

342. செய்து செய்யு செய்யாச் செய்யூச்

செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்

வான்பான் பாக்கின வினையெச் சம்பிற

ஐந்தொன் தாறுமுக் காலமு முறைதரும் எனச் சூத்திரஞ் செய்தார் பவணந்தி முனிவர்.

‘‘செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென, செய, செயின், செய்யிய, செய்யியர் எனவரும் ஒன்பது வாய்பாடுகளும் வான், பான், பாக்கு என்பவற்றை ஈறாகவுடைய வினைப்பகுதிகளும் இவை போல்வன பிறவும் வினையெச்ச வினைகளாம். இவற்றுள் செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென என்னும் ஐந்தும் இறந்தகாலமும், செய என்னும் வாய்பாடு ஒன்றும் நிகழ்காலமும், எஞ்சிய ஆறும் எதிர்காலமும் காட்டுவனவாம்’’ என்பது இதன் பொருளாகும்.

‘‘பிறவென்ற மிகையானே செயவென்பது நிகழ்காலமே யன்றி எதிர்காலமுங் காட்டுமெனக் கொள்க’’ என்பர் மயிலைநாதர்.

230. அவற்றுள்

முதனிலை மூன்றும் வினைமுதன் முடிபின.

இது, வினையெச்ச வாய்பாடுகளுள் முதல் நின்ற மூன்றற்கும் முடிபு கூறுகின்றது.

(இ-ள்) மேற் சொல்லப்பட்ட பதினைந்து வினை யெச்சத்துள் முதற்கண் கின்ற செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் தன் கருத்தாவின் வினையால் முடியும். என்றவாறு.

வினைமுதல் - கருத்தா. 'விளைமுதல் முடிபின' என்றது. இம் மூன்றும் வாய்பாட்டு வினையெச்சங்களும் தம் தொழிலுக்குரிய வினைமுதலாகிய தன் கருந்தாவின் வினையைக் கொண்டே முடிவன என்பதாம்.

(உ-ம்) உண்டு வந்தான் உண்ணு வந்தான், உண்குபு வந்தாள் எனவரும். ''உண்ணு வந்தான் என்பது இப்பொழுது வழக்கினுள் 'உண்ணா வந்தான்' என நடக்கும்'' என்பர் இளம்பூரணர்,

231. அம்முக் கிளவியுஞ் சினைவினை தோன்றிற்
சினையொடு முடியா முதலொடு முடியிலும்
வினையோ ரனைய வென்மனார் புலவர்.

இதுவும், அம்மூன்றற்கும் முடிபு வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்) 'வினைமுதல் முடிபின' எனக் கூறப்பட்ட அம் மூன்று வாய்பாடும். சினை விளையாக நின்று சினைவினையோடு முடியாது முதல் வினையோடு முடியினும் விளையால் ஒரு தன்மைய என்று கூறுவர் ஆசிரியர். என்றவாறு.

வினையால் ஒரு தன்மைய என்றது முதல்வினையோடு முடியினும் முதலொடு சினைக்கு ஒற்றுமையுண்மையால் பிற கருத்தாவின் வினையைக் கொண்டனவாகா: தன் கருத்தாவின் வினையைக் கொண்டனவேயாம் என்றவாறு.

(உ-ம்) கையிற்று வீழ்ந்தாள், கையிறூ வீழ்த்தால், கையிறுபு வீழ்ந்தான் எனவரும். ஈண்டு இறுதல் கையாகிய சினையின் தோழில் வீழ்தல் கையினையுடையானாகிய முதலின் தொழிலாம்.

மேற்காணும் இலக்கணச் சிந்தனைகளைச் தொல்காப்பியரும் நன்னூலாரும் காலத்திற்கேற்ற மொழிமாற்றத்திற்கு ஏற்ற முறையில் முன்வைக்கின்றனர்.

## தொகுப்புரை :

- தமிழ் மொழியில் அமைந்துள்ள வினைச்சொற்களை விளக்குவது வினையியல் ஆகும். தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் ஆறாவது இயலாக இடம்பெற்றுள்ளது.
- தொல்காப்பிய வினையியலில் வினையின் செயல், உயர்திணை, அ∴றிணை சார்ந்த இலக்கணச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.
- நன்னூல் வினையியலில் 32 நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. வினைச்சொல், முற்றுவினை, இருதிணைப் பொதுவினை, பெயரெச்சம், வினையெச்சம் உள்ளிட்ட கருத்துகள் இடம்பெற்றுள்ளன.
- வினைச்சொல்லானது வேற்றுமை கொள்ளாது மற்றும் காலங்காட்டும் தன்மை உடையனவாய் உள்ளன.
- உயர்திணை மற்றும் அ∴றிணையில் வினையின் செயல்பாடுகளை இவ்வியல் விரிவாகப் பேசியிருக்கிறது.

## தன்மதிப்பீட்டு வினாக்கள்

**அருஞ்சொற்பொருள் விளக்கம் :**

கண் - இடத்தின் பெயரைக் குறித்து நிற்கும்

குன்றுதல் - குறைதல்

ஈறு - இறுதி

கிளவி – சொல்

எஞ்சிய – மிஞ்சிய

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தொல்காப்பிய நன்னூல் சொல்லதிகார நூலின் ஆசிரியர்?

அ) செ.வை. சண்முகம் ஆ) தமிழண்ணல்

இ) மு.வ. ஈ) க. வெள்ளைவாரணன்

2. தொல்காப்பியம் பொருளிலக்கணம் தொடர்பான உரைவளப் பதிப்புகளை வெளிக்கொண்டு வந்தவர்

அ) செ.வை. சண்முகம் ஆ) தமிழண்ணல்

இ) மு.வ. ஈ) க. வெள்ளைவாரணன்

3. "பூமலி அசோகின்... எனத் தொடங்கும் கடவுள் வாழ்த்து எந்நூலுக்குரியது?

அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) நேமிநாதம் ஈ) தொன்னூல்

4. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை?

அ) 496 ஆ)686 இ) 489 ஈ) 456

5. நன்னூல் சொல்லதிகாரத்தில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை?

அ) 305 ஆ) 205 இ) 405 ஈ) 505

**விடைகள்**

**1.**ஈ) க. வெள்ளைவாரணன்

**2.**ஈ) க. வெள்ளைவாரணன்

**3.** அ) நன்னூல்

**4.** ஈ) 456

**5.** ஆ) 205

**குறுவினாக்கள்**

1.தொல்காப்பிய நன்னூல் சொல்லதிகார இயல் பகுப்பு முறைகளை விளக்குக.

2.வினையின் செயல்பாடாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

**நெடுவினாக்கள்**

**1.**தொல்காப்பியம் - நன்னூல் வினையியல் ஒப்பீடு குறித்து விவரித்தெழுதுக.

2. நன்னூல் முன்வைக்கும் வினையியல் செய்திகளைத் தொகுத்துரைக்க.

**பாடம் தொடர்பான புத்தகங்கள்**

1. தொல்காப்பியம் - சொல்லதிகாரம் பாவலரேறு பாலசுந்தரனார் உரை, பெரியார் பல்கலைக்கழக வெளியீடு, சேலம் 11, 2012

2. தொல்காப்பியம் நன்னூல் சொல்லதிகாரம், 1984. க. வெள்ளைவாரணன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், சிதம்பரம்

**பாடம் தொடர்பான இணைய இணைப்புகள் :**

- Tamil Heritage Foundation – www. Tamilheritage.org <http:// – www. Tamilheritage.org>
- Project Madurai – www. Project Madurai.org
- Tamil Universal Digital Library – www.ulib.prg<http: www.ulib.prg>
- Tamil E – Books Dwonloads – tamilebooksdownloads.blogspot.com
- Chennailibrary – www.chennailibrary.com<http: www.chennailibrary.com>